உ

சிவமயம்.

# திருக்குதிரிசியவிவேகம்

## மூலமும்-உரையும்.

இவை

திருத்துருத்தி இந்திரபீடம்

கரபாத்திரசுவாமிகள்

ஆதீனம்

பிறைசை அருணசல சுவாமிகள்

மாணாக்கர் ஈசூர்

சச்சிதானந்தசுவாமிகள்

அவர்களால்

இயற்றப்பட்டு,

ஷை சுவாமிகளது

தருமபரிபாலனசபையின் காரியதரிசி

ப. முத்துகிருஷ்ணரெட்டியாரவர்களால்

சென்னை:

மதராசு ரிப்பன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

(இரண்டாம் பதிப்பு)

1899.

*Registered Copy-right.*

# புத்தகவிளம்பரம்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| பிரபுலிங்கலீலை உரையுடன் ... ... ... | 2 | 8 |
| கைவல்லிய நவநீத விருத்தியுரை ... ... | 1 | 4 |
| வேதாந்த சூளாமணி விருத்தியுரை (2-வது பதிப்பு) ... | 1 | 4 |
| ஷை. திக்காகிதம் ... ஷை ... | 1 | 8 |
| தத்துவநிஜானுபோகசாரம் ... ... ... | 1 | 0 |
| வாசுதேவமனனம் ... ... ... ... | 0 | 14 |
| சர்வமதசித்தாந்த விளக்க வினாவிடை ... ... | 0 | 12 |
| திருக்குதிருசிய விவேகம் உரையுடன் (நூலாசிரியரது சரித்திரமும் படமுஞ்சேர்ந்தது) ... ... | 0 | 14 |
| ஷை திக் ஷை ... ... | 1 | 4 |
| உத்தமவாதம் ... ... ... ... | 0 | 10 |
| ஷை காலிகோ பயிண்டு ... ... ... | 0 | 12 |
| பிரத்தியட்சானுபூதிவிளக்கம் ... ... ... | 0 | 8 |
| ஷை காலிகோ பயிண்டு ... ... ... | 0 | 10 |
| வேதாந்த இலக்கணம் ... ... ... | 0 | 8 |
| சசிவன்னபோதம் உரையுடன் ... ... ... | 0 | 8 |
| தசகாரியமகாவாக்கியம் உரையுடன் (2-வது பதிப்பு)... | 0 | 8 |
| ஜீவகாருண்ய விளக்கம், சுவானுபூதிவிளக்கம் ... | 0 | 6 |
| சொரூபசாரம் உரையுடன் ... ... ... | 0 | 6 |
| சத்தப்பிரகரணம் ... ... ... ... | 0 | 6 |
| உபநிடத விருத்தியுரை ... ... ... | 0 | 5 |
| எதார்த்தவாதம் ... ... ... ... | 0 | 4 |
| ஞானவாசிட்டத்திரட்டு ... ... ... | 0 | 3 |
| சுகர் கைவல்லியம் ... ... ... ... | 0 | 2 |

☞ இப்புத்தகங்களும் இன்னும் இதர புத்தகங்களும் சென்னைமுத்தியாலுப்பேட்டைத் தம்புசெட்டி வீதி மதராசு ரிப்பன் அச்சியந்திரசாலையில் விற்கப்படுகின்றன.

ஓம்.

# ஸ்ரீசச்சிதாநந்த சுவாமிகள் சரித்திரம்.

சுருதிஸ்மிருதி புராணாதிகளான சதுர்தசவித்தைகள் வழங்கிவரும் வைதிக புண்ணிய பூமியாகிய இப்பரதகண்டத்தின் தென் பாகமான சென்னை ராஜதானியிலே தொண்டவள நாட்டிலே சதுரென்னும் திருப்பதியிலே வேட்கோவர் மரபிலே நற்குண நற்செய்கையுள்ள கப்பாராயப்பிள்ளை யென்பவரும், அவரது கற்புடைய மனைவியார் முனியம்மாள் என்பவரும் இல்லறம் வழுவாது நடத்தி வாழ்ந்திருந்தார்கள். அவ்வாறு வாழுநாளில் கலியுகம் சககை -க்குச் சரியான யுவ வருஷத்தில் இத்தமிழ் நாட்டில் சாதன சதுஷ்டய மிருக்குள்ள உத்தம ஞானபரிபாகிகள் செய்த தவப்பேறென்றுரைக்கும் வண்ணமும், வேதமுடிவான சித்தாந்த போதக மகாவாக்கிய லட்சியார்த்தப்பொருளே திரண்டு ஒரு மானிடச் சட்டைசாத்தி வந்ததென்று சொல்லும் விதமுமாய் அவர்களுக்குச் "சச்சிதாநந்தம்" என்னும் பெயரிய ஓர் சற்புத்திரர் அவதரித்தனர். அவர் அவதரித்தமூன்றுமாதக்குழந்தைப் பருவத்தில் சென்னைக்கடுத்த ராயப்பேட்டையென வழங்கும் சண்முகராயபுரத்தில் மாதாபிதாக்களால் கொண்டுவரப்பட்டார். அவர்மாட்டு இளமைப் பருவத்திலேயே பொறுமை அடக்கம் அன்பு வாய்மை பயனில்பாராட்டாமை முதலிய நற்குண நற்செய்கைகளெல்லாம் அமைந்திருந்தன. அக்காலத்தில் சென்னையில் மிகப் பூஜ்ஜியராய் எழுந்தருளி

---

* மாசம் தேதி தெரியவில்லை.

யிருந்த "தோப்பாப் பரதேசி" என்னும் ஓர் மகானது திருவருள் நோக்கம் பெற்று வாழ்ந்துவந்தனர். அவ்விளம் பருவத்திலே ஷை சண்முக ஞான புரத்தில் மகா வித்துவசிரோமணியாயிருந்த விசாகப்பெருமாளையரது சகோதரர் சரவணப்பெருமாளையரவர்களிடத்தில் கல்வி கற்று இலக்கிய இலக்கணங்களில் மிகத் தேர்ச்சி பெற்றவராய்த் தமது குலவொழுக்கத்தின்படி சிவலிங்க தாரணஞ் செய்துகொண்டு, தாம் உபாசனு மூர்த்தமாய்க்கொண்ட சிவ சுப்பிரமணியக் கடவுளைத் திரிகாலமும் உபாசித்துவந்தார்.

இத் தருணத்தில் ஸ்ரீ சங்கரபகவத் பாதாசாரிய சுவாமிகளா லேற்படுத்தப்பட்டு விளங்காநின்ற பீடம் நான்கனுள், சோழவளநாட்டில் காவேரியாற்றின் தீரத்தில் திருத்துருத்தியென்னுந் திவ்விய ஸ்தலத்தி லிருக்கும் இந்திர பீடத்தில் பிராம்மணோத்தம குலத்தில் அவதரித்துப் பரமஅம்ச சந்நியாசியாய் எழுந்தருளியிருந்து, பலமாணாக்கர்களுக்குத் திவ்விய ஞானோபதேசஞ் செய்து சகஜ ஞானவான்க ளாக்கிய ஸ்ரீகரபாத்திர சுவாமிகளின் பரம்பரையில்வந்த தத்தாத்ரேய சுவாமிகளென்னும் மகானினது பூரணானுக்கிரகம் பெற்ற செங்கமலசுவாமிகள் மரபினராய் நாகபட்டணத்தி லெழுந்தருளியிருந்த அருணாசல சுவாமிகளின் மாணாக்கரும், சத்தப்பிரகரணம் தசகாரியமகாவாக்கியம் சிவஞானபோதம் ஞானவாசிட்டம் முதலிய வேதாந்த நூல்களுக்கு உரை யாசிரியருமான பிறைசை அருணாசல சுவாமிகளவர்கள் ஷை சண்முக ஞானபுரத்தி லெழுந்தருளியபோது, ஷை சரவணப் பெருமாளையரது குறிப்பின்படி அவரை யடைந்து, அவரையே ஞானாசிரியராய்க் கொண்டு நித்தியாநித்தியவஸ்து விவேகம் முதலிய சாதனசதுஷ்டயங்களைப்பெற்று, ஆப்தமாகி குருபணிவிடைசெய்து, அந்தஞானாசிரியது பூரணானுக்கிரகம்பெற்று,

அவரது சந்நிதானத்தில் சிரவண மநந நிதித்தியானம் புரிந்து, அபரோக்ஷ சாட்சாத்கார நிலையைப் பெற்று, பாஹிய திருஷ்டியின்றிச் சதா அந்தர்முக திருஷ்டியுள்ளவராய்ச் சித்திர தீபம்போலவும், சித்திரப் பதுமைபோலவும் நிர்விகற்ப சகஜ நிஷ்டாநுபவ நிரதிசயாநந்த வாழ்வி லிருந்து விளங்கினார். அக்காலத்தில் அவரைப் பார்ப்பவரெல்லாம் ப்ரம்மம் போகிறது, ப்ரம்மம்போகிறது என்று சொல்லுவார்கள். இதனால் அவர் கலங்காநிலைமையுள்ள சித்தத்தைப் பெற்றவரென்றும், தற்சொரூபத்திலேயே அழுந்தி விளங்கினாரென்றும் அறியப்படுகின்றன.

அவர், அபரோக்ஷ ஞாநாநந்த சுவாநுபூதியினைத் தாம் அனுபவிப்பதோடு தம்மை வந்தடுத்த சாதன சதுஷ்டயமுள்ளமுமுட்சுக்களது அஞ்ஞாநாந்தகாரத்தை நீக்குதற்கு ஓர் ஞான சூரியராயும் நின்று, நியாயம் சோதனை பொருத்தமுற வேதாந்தப் பிரசங்கம் புரிந்து, அதனால் அவர்களது சந்தேகங்களை யெல்லாம் ஒழித்து, மகாவாக்கிய ஞானோபதேசம் புரிந்து பகிர்முக திருட்டியை நிவர்த்தித்து, அந்தர்முக திருஷ்டியுள்ளவர்களாக்குவித்து, நிர்விகற்ப ஞாநாநந்த வாரிதியில் மூழ்கச்செய்தனர். இத்தகைய ஞானப்பிரசங்கஞ் செய்கையில் துவித பேத வாதத்தைப் பூர்வபட்சஞ் செய்து அத்துவித அபேத வாதத்தைச் சித்தாந்தம் செய்யுமாறு தர்க்கம் புரிய நேருஞ் சமயத்தும், தாம் தமது அந்தர்முக திருக்காகார நிலையிற் பிறழாது நின்று பேசுவ தல்லது, பகிர் முக திருசிய ஆகாரப் பிறழ்ச்சியில் நின்று பேசுதலின்று. அவர் செய்யும் ஞானப் பிரசங்கத்தோடு அப்போதப்போது தமது சகஜ ஞான நிஷ்டையிலுதித்த சுவாநுபவங்களையும், "ஏகமேவாத்விதீயம்" என்னும் சுருதி வாக்கியத்திற்கு மாறுபடும் அஞ்ஞான காரியமாயும் துக்காதாரமாயு

முள்ள துவித பேதங்களை நிராகரித்தலையும் அமைத்து, "திருக்குதிரியம்" முதலிய பல நூல்களருளி, அந்தர்முக நாட்டத்தை விரும்பும் சாதன சதுஷ்டயமுள்ள பரிபாகிகளு க்கு உபகரித்தனர்; அதோடு "கைவல்லியம்" முதலிய நூல்க ளுக்கு விருத்தி யுரையும் அருளி யுள்ளார். தமது கிரகத் திலேனும் இன்னும் வேறு எவ்விடத்திலேனும் வேதாந்த நூலுணர்ச்சி யில்லாரிடத்தில் பேச அவர் மிக அருவருப் புடையரா யிருந்தனர். தக்க பரிபாகிகளேனும் அல்லது ஞானநுபூதி யுடையவரேனும் நேரிட்டு விட்டாலோ அவ ருள்ள முவக்குமாறு நியாயத்தாலும் பரீக்ஷையினாலும் பொருத்தத்தினாலும் கடல்போன்ற தமது துரியாதீத சுவாநு பவங்களை யெடுத்துச் சொரிந்து ப்ரம்மாநந்த சமுத்திரத்தில் அவரை மூழ்கச் செய்வார். அத்துவைதத்திற்குத் துவைதம் சாதகமெனக் கூறாது அதுவே சித்தாந்தமெனக் கூறுதலைக் கேட்டல் அவர்க்குக் கர்ண கடூரமாயிருக்கும்! இலவுகிகமான வார்த்தைகளைப் பேசுங் காலத்தும், மற்ற இலவுகிக சந்தர் ப்பத்தும் அந்தர்முக திருஷ்டியிலேயே நின்று விவகாரஞ் செய்வா ரென்பது பரிபாகிகளும் அந்தர்முக திருஷ்டி யுள்ள பிறரும் அறிந்த விஷயமேயாம். அவர் எச்சமயத்தி லும் ஞாயம், சோதனை, பொருத்தம் இவற்றினுக் கியைய ப் பிரபல சுருதி சம்பந்தமான அத்வைத விசாரம் செய் வதே யன்றி, அற்ப சுருதி சம்பந்த மான கர்ம்மாதி களைப்பற்றி விசாரஞ் செய்வதேயில்லை; அன்றிச் சமயம் நேரிட்டபோது பிரபல சுருதி விசாரத்துக்குரிய முமூட்சுக் களின் முன்னர் அவைகளை மறுத்தும் பிரசங்கம் புரிவர். இதனால் சத்தாதி விஷய ஆகாரத்தில் பிரியப்படும் பரிபா கிக எல்லாத அமுமூட்சுக்களிற் சிலர் வெறுப்புற்று அவரை யிகழ்ந்துவந்தனர். இது இக்காலத்தில் மாத்திரமன்று, எக் காலத்தும் இயல்பேயாம். அதுபற்றி யார் என்ன இகழ்ந்தா

னும் என்ன பேசினும் அதை அவர்பொருட் செய்வதில்லை. இவ்வாறு இம்மகான் ஏறக்குறைய முப்பது வருஷம் வரையில் வேதாந்தப் பிரசங்கம் புரிந்து, இனித் தமது தேகம் நில்லாது விதேக முத்தியடையுங் காலஞ் சமீபித்ததெனவுணர்ந்து பார்த்திபவருஷம் கார்த்திகைமாசத்தின் ஆதிவாரமொன்றில் வழக்கம்போல் பிரசங்கஞ் செய்து, பிரசங்க முடிந்தவுடன், அங்கிருந்த மாணுக்கர்களை மிகக் கருணையோடு நோக்கி, அவரவர்களும் அடுத்த தைமாசத்துத் தைப் பூசத்திற்குள்ளாக இடை விடாது வந்து இன்னுந் தெரிந்துகோடற்கியைந்த அரிய ரகசியங்களையெல்லாம் சந்தேக விபரீதமறத் தெரிந்துகொள்ளுங்களென ஆஞ்ஞை புரிந்து, அன்று தொடங்கி இடைநடுவில் பாக்கியாயிருந்த சில மாணுக்கர்களுக்கு ஞானோபதேசம் புரிந்து, குறிப்பிட்ட நாள்களுக்குள் தனியே அபரோக்ஷ சாக்ஷாத்காரமான பரிபூரண சீவன் முத்தியிலிருந்து, ௧அ௮௬-ம் வருஷம் ஜனவரி மாசம் ௨௪-க்குச் சரியான பார்த்திப வருஷம் தை மாசம் ௧௦உ குருவாரம் இரவு ௧௦-மணிக்கு ஆயில்லிய நக்ஷத்திரத்தில் பிராரத்துவ அந்திய தநுவைவிட்டுத் துரியாதீத விதேக கைவல்லியமுத்தியடைந்து பரிபூரண ப்ரம்மசொரூபரானார். அவரது திருமேனி அவர் வாசஞ் செய்திருந்த ஷ சண்முக ஞானபுரம் கந்தசாமிகோவில் வீதியிலிருந்த அவரது கிரகத்தின் பின்பக்கத்திலே சமாதி செய்யப்பட்டது. அச்சமாதிக்கு நித்திய நைமித்திக பூஜை நடந்து வருகின்றது. இம்மகான் இல்லறத்திலிருந்து உள்ளத் துறவறம் பெற்று முத்தி பெற்றவர்.

# ஸ்ரீ சச்சிதாநந்த சுவாமிகள் சரித்திரம்.

## அவர் செய்த நூல்களாவன:—

திருக்கு திரிசியவிவேகம் உரையுடன்
பிரத்தியக்ஷாநுபூதிவிளக்கம்
உத்தமவாதம்
சிவகாருணிய விளக்கம்
சுவாநுபூதிவிளக்கம்
எதார்த்தவாதம்
வேந்தாந்த இலக்கணம் (சிலபாகம் உரையுடன்)
சர்வமத சித்தாந்த விளக்க வினாவிடை
சுவாநுபூதி விநோத நான்மணிமாலை.

## உரை யியற்றிய நூல்கள்:—

கைவல்லியநவநீதம் விருத்தியுரை
வேதாந்தசூளாமணி விருத்தியுரை
பிரபுலிங்கலீலை விருத்தியுரை
சொரூபசார விருத்தியுரை
உபநிடத விருத்தியுரை
பகவத்கீதை விருத்தியுரை (இது இன்னும் அச்சுக்குவரவில்லை)

## ஷை ஸ்ரீ சச்சிதாநந்த சுவாமிகள் மரபின் வரலாறு:—

ஸ்ரீபகவத் பாதாசாரியரான சங்கராசாரியாரால் ஏற்படுத்தப் பட்ட பீடம் நான்கனுள் இந்திரபீடம் கரபாத்திரசுவாமிகள் மரபில் வந்தவர்

தத்தாத்திரேய சுவாமிகள்,
அவரது மாணாக்கர் செங்கமலசுவாமிகள்,
அவரது மாணாக்கர் மூத்தையசுவாமிகள்,
அவரது மாணாக்கர் சுப்பிரமணியசுவாமிகள்,
அவரது மாணாக்கர் நாகை-அருணாசலசுவாமிகள்,
அவரது மாணாக்கர் பிறைசை-அருணாசலசுவாமிகள்,
அவரது மாணாக்கர் சச்சிதாநந்தசுவாமிகள்.

# சாற்றுக்கவிகள்.

வியாசர்பாடியிலெழுந்தருளிவிளங்கும்

## ஸ்ரீ இராமாநுஜயதீசுவரரால்

இயற்றப்பட்டது

ஶ்லோக:॥

𑌸𑌚𑍍𑌚𑌿𑌦𑌾𑌨𑌨𑍍𑌦𑌰𑍂𑌪𑍇𑌣 𑌪𑍁𑌰𑍁𑌷𑍇𑌣 𑌕𑍃𑌤𑌂 𑌪𑌰𑌮𑍍 ।
𑌦𑍃𑌗𑍍𑌦𑍃𑌶𑍍𑌯𑌵𑌿𑌵𑍇𑌕𑌾𑌖𑍍𑌯𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌤𑌤𑍍𑌪𑌰𑌮𑌾𑌦𑍍𑌭𑍁𑌤𑌮𑍍 ।
𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌤𑍃𑌪𑍍𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌸𑌹𑌸𑌾 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌯𑌤𑌿𑌃 𑌸𑍍𑌵𑌯𑌮𑍍 ।
𑌵𑍍𑌯𑌾𑌸𑌪𑍁𑌰𑍍𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌯𑌾𑌂 𑌨𑌿𑌵𑌸𑌨𑍍𑌨𑌿𑌹 𑌨𑌿𑌤𑍍𑌯𑌶𑌃 ॥

ஸச்சிதாநந்தரூபேண புருஷேணக்ருதம்பரம்
த்ருக்த்ருஸ்யப்ரவிவேகாக்யம்சாஸ்த்ரம்தத்பரமாத்புதம்
ஶ்ருத்வாத்ருப்தோஸ்மிஸஹஸா ராமாநுஜயதிஸ்வயம்
வ்யாஸபுர்யாம்ப்ரஸித்தாயாம் நிவஸன்னிஹ நித்யசஃ.

## ஸ்ரீ தத்தாத்திரேய குருபரம்பராப்தி

## சந்திரோதயராகிய

காளம்ராசு அப்பன்னயோகீந்திரரது

மாணாக்கரிலொருவராகிய

திருவல்லிக்கேணி வரதப்பமுதலியா ரியற்றியது.

சச்சிதா னந்தவுண்மை தானே யெனத்தோன்றச்
சச்சிதா னந்தனெனத் தான்பிறந்திங்—கச்சமறப்
பன்னுமிந் நூ லுண்மையது பார்க்கிற் றிருக்கென்னு
மின்னறிவ தாக்கு மியைந்து.

திருமூலர்மரபில் சுப்பிரமண்ணியசுவாமிகள் மாணுக்கர் சதாசிவப்ரம்ம யோகீசுவரர் மாணுக்கராகிய

## தே. சுப்பராயமுதலியாரவர்களா

லியற்றப்பட்டது.

ஐம்புலத்தோற்ற மறிவின்மயக்கென்
றிம்பரின்விளக்கி யேகமிரண்டழித்
தொருதாணுக்கு மொப்பில்சங்கரா
சிரியர்நாட்டிய தேசிற்சிறந்த
பீடநான்கதனுட் பெருமிதவிந்திர
பீடத்தரசாம் பெருங்கரபாத்திர
தேசிகனடியன் றெத்தாத்திரய
தேசிகனடியன் செங்கமலன்றாள்
போற்றுமடியன் புரையில்முத்தையன்
றேற்றியவடியன் சிவசுப்பிரமண்ய
னேயனுகை நிகழருணசல
தாயனடியன் சொப்பிரகாசன்
பிறைசைப்பதியிற் பிறங்கருணசல
னிறையருள்பெற்று நீணிலமதனிற்
றிருக்குதிரிசியஞ் செப்புமிந்நூலை
யுரையுடன்கோடற் குலகமலையாமை
தன்னேட்டதனிற் றன்னனுபவமிகத்
தன்னூற்றதுவே தான்சுரந்தளிக்க
மொழிந்தனன்வியந்து முதனூலிலாது
கழிந்தனதத்துவங் கண்டொருக்குவோன்
றத்தமதியாற் றர்க்கசமயிகள்
சித்தங்கலங்கச் சென்றுவாதிக்கினு
மூடாநிழல்போன் முந்திமேனிற்போன்
றேடாவரும்பொருள் சிந்தைவேறற்றோன்
சுருதியுத்திச் சுவானுபவத்தைத்
திருகறப்புகட்டுந் திறத்திற்சிறந்தோன்
மெச்சியசுகுண மேலோன்
சச்சிதாநந்தத் தகும்பெயரோனே.

# அகராதி.


| கவி. | பக்கம். |
|---|---|
| **அ.** | |
| அகம்புறமாக்கா | ௧௬௮ |
| அகம்புறமாநின் | ௨௪௧ |
| அஞ்ஞான | ௯௧ |
| அணுக்கூட்டம் | ௧0௭ |
| அணுமகத்தை | ௧௬௩ |
| அணுவுக்கணுவா | ௨௧௯ |
| அதுநாளு | ௧௪0 |
| அதுவுமிய் | ௨௩0 |
| அந்தந்த-காட்சி | ௨00 |
| அந்தந்த-நாமா | ௧௫௬ |
| அந்தர்முக | ௧௩0 |
| அவத்தைமய | ௧௬௫ |
| அறமிரண்டிற் | ௧௬ |
| அறம்பொரு | ௧௫ |
| அறிதற் | ௨௨௪ |
| அறியுடலை | ௧௨௬ |
| அறிவளவோ | ௨௬0 |
| அறிவன்றி | ௫௧ |
| அறிவாமக | ௧௫௩ |
| அறிவாணறி | ௧௨௫ |
| அறிவின்பமா | ௩௫ |
| அறிவின்விக | ௨௯ |
| அறிவுரைகத் | ௩0 |
| அறிவுருவ | ௧௭௧ |
| அறிவேதிருக்கிங் | ௨௭௧ |
| அறிவேநன | ௧௪0 |
| அறிவேநா | ௭௮ |
| அறிவேயறி | ௮௮ |
| அறிவேயுல | ௧௯௨ |
| அறிவொன்றேத் | ௪௩ |
| அறிவோடறி | ௨௪ |
| அனந்தமாக் | ௨௧௬ |
| அனைத்துந்தா | ௧௭௬ |
| அனைத்துமறி | ௧௬௯ |
| அனைத்துளொன் | ௧௭௫ |
| **ஆ.** | |
| ஆகாயம் | ௧௭ |
| ஆடியெலா | ௨௭ |
| ஆதலா | ௧௯௫ |
| ஆதார | ௮௫ |
| ஆராய்ச்சி | ௯ |
| ஆறைலஞ் | ௮௯ |
| ஆன்மாப் | ௧௯௫ |
| **இ.** | |
| இக்குணங்கள்போலி | ௫௨ |
| இக்குணங்கள்வெவ் | ௫0 |
| இடையிலெனக் | ௮௭ |
| இந்தநான் | ௨௬௬ |
| இப்பிலைதான் | ௧௮௧ |

| கவி. | பக்கம். |
|---|---|
| இந்திரிய | உஅ |
| இப்பிறவிநாம | ரு |
| இப்பிறவிமுன் | கஅஅ |
| இப்பிறவியெப் | ரு |
| இப்போதெங்கே | அரு |
| இம்முயற்சி | கசஎ |
| இயற்கைசில | சகூஉ |
| இவ்வாறு | உகஎ |
| இவ்விரண்டு | கஅகூ |
| **உ.** | |
| உடம்பெல்லா | கஉஉ |
| உடலாதி | உகூச |
| உடலிலக்கா | ககூஎ |
| உடலேபுணர் | கசா0 |
| உடல்பின்னு | உருச |
| உடனேறு | சஉஉ |
| உபாதிகுண | கஎஅ |
| உபாதிநாட் | உசரு |
| உருவமெனின் | ச0எ |
| உருவருவங் | கூசா |
| உருவருவமாறு | கக0 |
| உருவருவமேனே | கசாச |
| உருவாக | உஉகூ |
| உலகத்தோ | கருக |
| உற்றுநின்று | உ0சா |
| **எ.** | |
| எங்கெங்கே | உருஉ |
| எங்ஙனே | கசஅ |
| எண்ணளவைஞா | கரு |
| எண்ணளவையா | உசாசா |
| எந்தாயருண் | அகூ |
| எந்தெந்தயோனி | உருஅ |
| எந்தெந்தலத்தை | உ0க |
| எப்படிதான் | ககூரு |
| எப்போதுங் | அக |
| எல்லாஞ் | கஅரு |
| எல்லாமா | ருசா |
| எல்லாமிலை | உசாக |
| எல்லையிலா | எ |
| எவ்வுயிருமெத் | உரு0 |
| எவ்வுயிரும்வே | உ0சா |
| எவ்வெவ்விகா | உசஅ |
| எவ்வெவ்வுபா | கூகூ |
| என்றுன் | உகூகூ |
| என்று | உகஅ |
| **ஐ** | |
| ஐயமெலா | சஅஎ |
| ஐபுணர்வுக் | உச0 |
| **ஒ.** | |
| ஒன்றுபத்து | உ0எ |
| **க.** | |
| கடபடத்தை | கூக |
| கடவுளே | உருசா |
| கண்டவற்றை | அ0 |
| கண்டவிட | சா0 |
| கண்ணன்றி | க0அ |
| கண்ணுடி | உகூ |
| கண்ணுங்கருத்துங் | உசாரு |
| கண்ணே | க0கூ |
| கற்பவற்றைக் | உஎ0 |
| கற்பனைநா | ககஅ |
| **கா.** | |
| காண்பவற்றை | கஙசா |
| காரணங்கள்ற | சாஅ |

| கவி. | பக்கம். |
|---|---|
| காரணத்தைத் | எஎ |
| காரணம்போற் | அசா |
| காலநிலை | சஅ |
| காலம்வெளி | கூக |
| **கு.** | |
| குணமேபத | அரு |
| குயிலெலருமை | கசா |
| குறியெல்லாங் | எ |
| **கூ.** | |
| கூத்தொழிந்த | உகூஎ |
| **கே.** | |
| கேள்வியுறிற் | உகூகூ |
| **ச.** | |
| சங்கற்பமன்றிச்சக | சுரு |
| சங்கற்பமன்றியொன்றை | கூசா |
| சங்கற்பமென்றதெது | சுகூ |
| சங்கற்பமேபந்தஞ் | உகஉ |
| சங்கற்பவேட்கை | உசாகூ |
| சச்சிதானந்தமித்த | ஙஉ |
| சச்சிதானந்தமெனு | உஎஉ |
| சடவாசனை | அ0 |
| சத்தசித் | ஙசு |
| சத்தமுதலைந்திற்குச் | க0ங |
| சத்தமுதலைந்தும் | கஙசு |
| சரட்டின் | சுங |
| சரியைகிரி | கரு |
| சலியாது | கஅசு |
| **சி.** | |
| சிதாகாய | உ0க |
| சித்தக்கல | உக0 |
| சித்திடமல் | கூசு |
| சித்திரநாட் | கஉசா |
| சித்தின் | கசரு |
| சித்தாந் | கஉகூ |
| சித்தேசட | க0உ |
| சிந்தனையே | உசஎ |
| **சீ.** | |
| சீவச்செய | உகரு |
| சீவனென | உருக |
| **சு.** | |
| சுட்டற்ற | ருஉ |
| சுட்டுசுட்ட | ககச |
| **செ.** | |
| செம்மை | எசா |
| **ஞா.** | |
| ஞாபகம்வே | சச |
| ஞாயத்தைமு | கச |
| ஞானமிரண் | உஙஉ |
| ஞானமுறை | உஉங |
| ஞானேயம | கூ0 |
| **த.** | |
| தக்கவினை | சா |
| தள்ளினு | உருரு |
| தனக்கணிய | சா |
| தனுமூன்று | ககூகூ |
| தன்னிலனை | ககசு |
| தன்னைத்தான் | கஉக |
| **தா.** | |
| தானந்தவங் | கூஅ |
| தானல்லவற்றை | உஎ0 |
| தானறிவானந்தமதாற் | உசஉ |
| தானறிவானந்தமெனல் | கஉச |
| தானேகும்பூ | உஙசா |
| தானேயினோர் | கஉகூ |

| கவி. | பக்கம். |
|---|---|
| தானேதா | ௪௦௧ |
| தான்மாத் | ௧௫௨ |
| தான்றெரிவே | ௪௦௦ |
| **தி.** | |
| திரிபுடியாய | ௨௬௬ |
| திரிபுடியின் | ௧௨௮ |
| **து.** | |
| துணைக்கருவி | ௨௯௨ |
| துவிதமுதன் | ௧௫௫ |
| **தூ.** | |
| தூங்குவார் | ௯௨ |
| தூலநம | ௨௧௬ |
| தூலமாய்ச் | ௨௬௮ |
| தூலவுல | ௪௦௨ |
| **தெ.** | |
| தெரிதலுள | ௧௯௨ |
| தெரிதலையே | ௧௯௧ |
| தெரிதன்மய | ௧௪௦ |
| தெரிவன்றி | ௨௮ |
| தெரிவுமயமாகி-யின் | ௧௧௯ |
| தெரிவுமயமாகி-னினி | ௮௬ |
| தெரிவெங்குந் | ௧௯௭ |
| தெரிவேயுரு | ௧௬௭ |
| **தே.** | |
| தேகநர் | ௯௪ |
| தேகாதி | ௧௬௫ |
| **தோ.** | |
| தோற்றளவுஞ் | ௧௨௯ |
| தோன்றி | ௬௭ |
| **ந.** | |
| நம்மைச் | ௧௯௯ |
| நனவு | ௧௨௭ |
| **நா.** | |
| நானலா | ௪௬௧ |
| நாருறை | ௧௪௬ |
| நாளியல | ௪௫௮ |
| நாவென்ப | ௨௫௬ |
| நாவினையகை | ௨௪௬ |
| **நி.** | |
| நிலைப்பு | ௬ |
| நிலைவன்றி | ௪௬௬ |
| நிலைவாவ | ௧௪௪ |
| நிலையின்ன | ௪௬௮ |
| நிலைவுகள | ௨௨௨ |
| நிலைவொன்மை | ௧௬௪ |
| **நீ.** | |
| நீகாட்டக் | ௨௬௫ |
| நீயாருந் | ௨௦௫ |
| நீயாயு | ௨௨௦ |
| நீயோசார | ௨௪௫ |
| நீர்விழுக்கு | ௧௪௬ |
| **ப.** | |
| பருக்கப் | ௮௭ |
| பசுபதி | ௨௦௬ |
| பசையி | ௭ |
| படைப்பவர | ௧௪௦ |
| பக்கும் | ௧௮௨ |
| பரிச்சின்ன | ௪௭ |
| பழுதையாம் | ௪௧ |
| பழுதைமுன் | ௬௨ |
| **பா.** | |
| பார்வைக்கு | ௧௦௪ |
| **பு.** | |
| புகழ்பெருமை | ௧௪ |

| கவி. | பக்கம். | கவி. | பக்கம். |
|---|---|---|---|
| **போ.** | | **மு.** | |
| பொய்யகல நிறுப் | ௪௨௧ | முதற்கருவி | ௬எ |
| பொருட்செய்வை | ௪௩௩ | முறைமையை | ௪௯ |
| பொருளிராகனே | எ | முன்பிறப்புண் | ௧அ.அ |
| போசரிப்புமட | ௨௫௯ | **மூ.** | |
| போற்றுமெய்ம்மாலினை | ௪௯ | மூன்றாந்தேசமாந்தி | ௪எ௦ |
| போற்றுமெய்யுரைவுரும் | ௪௫ | மூன்றாந்கேசுநாது | உ௧௫ |
| போற்றுவிடைராவே | ௪௪௨ | **வி.** | |
| **ப.** | | விகவாதி | ௪௫௧ |
| ப்ரசுத்தரைவியாபித்த | ௪௭௭ | விதிமிலவிள்ளின் | [illegible] ௪௯ |
| ப்ரசுத்தரைப்புமய | [illegible] | விழுதுபோ | அ |
| **ம.** | | வியாபித்துநின்னல் | ௪௮௫ |
| மன்னுமுறுபுலை | ௪[illegible]௦ | வியாபித்துநின்ற | ௪௩அ |
| மன்னுமிடைமுடி | ௪[illegible] | விழித்தப்பா | ௨௭ |
| மா[illegible] | ௨௯ | விழிபுழுவாக் | ௪௦௫ |
| மலருமிழுதுது | ௪௦ | விளைவார | ௫ |
| மனமாடமுடக் | உ௩௪ | விளைதுரவை | ௪௯௯ |
| **மா.** | | **வே.** | |
| மா[illegible] | ௨௨௭ | வேளிமயமா | ௪௯௯ |
| | | வேளிவெளிய | ௪௦௪ |

# பிழைதிருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| ரு | கக | பிறயோடு | பிறவியோடு |
| ௬0 | ௨0 | எங்ஙன | எங்ஙனம் |
| ௩௪ | க௮ | ஆரதர | ஆதார |
| ௪0 | எ | நித்தியத்துவயம் | நித்தியத்துவம் |
| ருசா | சா | லட்சியதார்த்த | லட்சியார்த்த |
| கூசா | ௨0 | ஆன்மாவுத் | ஆன்மாவுந் |
| சாகூ | எ | பிரமெமன்றதும் | பிரமமென்றதும் |
| ௮எ | ௨ | பற்றியம் | பற்றியும் |
| கூ௮ | க | | அ-கை-இ- |
| க0சா | ௨௨ | பிரமாணம | பிரமாணம் |
| ககக | க௨ | வநத | வந்த |
| க௩௮ | கக | விள்க்க | விளக்க |
| கருக | க௮ | இவ்வி | இவ்விர |
| ௨0ரு | க0 | ஒயாமல் | ஓயாமல் |
| ௨கரு | க௪ | தாவ | தாவு |
| ௨௨0 | கரு | ஒதிடுசு | ஓதிடுக |
| ௨௩0 | க௮ | அவரவா | அவரவர் |
| ௨ருக | க௨ | இமையிற்றுனே | இம்மையிற்றுனே |

உ

சிவமயம்.

# திருக்குறிரியவிவேகம்.

## சிறப்புப்பாயிரம்.

---

### சொருபவணக்கம்.

எல்லையன்றி வேறல்லான் யானவனின் வேறல்லேன்
உள்ளரிய சித்தேசத் தொன்றுதலில் — அன்னியமாய்ப்
போற்றுவா ரெற்பான் புகல்வசன மாத்திரமாஞ்
சாற்றுமிலே தோத்திரமே தான். (க)

### குருவணக்கம்.

தனைக்கனிய மெய்ப்பரவெலாந் தானாகக் காணை
வெனக்குரிய வுண்மைகிலே யீதென் — றெனக்களித்தான்
சீமான் பெருமைச் சிறந்தவரு ளாசலப்பேர்
கோமான் குருபரன்றி சொல். (உ)

### மகாசாரியர்வணக்கம்.

தன்னிலக்க ணங்கள்யா தாமன் னியங்கற்றார்
என்றுவா ரென்கண்ணுக் கிப்புவ — யின்றோர்
தமைநத்தரும்பொன் றென்றுவன்யான் றக்கோரடிகள்
எமக்குமுடி வேநென் றிலே. (௩)

## அவையடக்கம்.

அறிவோ டறிவனவு மன்றிவே றில்லை
யறிவனவும் வேறன் றறிவுக்—கிறையாணை
யென்றுரைக்கு மென்செருக்கை யிந்நூல் வெளியாக்கும்
நன்றுணர்ந்த ஞானி நக. (௪)

சேட்டையெலா மற்றிருக்கச் சிந்திக்கும் வேட்கையருக்
கூட்டத் தொழிலொழிவை யுள்ளுணர்ந்து—நாட்டுமிதை
யெக்கலையுஞ் சிக்கறுப்பார்க் கேலாமற் சொன்னவெனைத்
தக்கவனென் றெண்ணுவரோ தான். (௫)

## நூற்பெயர்.

திருக்கு திரிசியத்தைச் செப்புவதா லிந்நூற்
றரிக்குமே யப்பெயரைத் தானே—யொருப்படா
எம்மதத் தோர்களு மிரியப் பொருளுண்மைச்
சம்மதிக்கச் செய்வதிது தான். (௬)

## பிறர்தம்மதமேற்கொண்டுகளைதல்.

எல்லாமா யல்லவுமா யிங்கிருத்தல் யானென்பன்
அல்லவே றென்றுரைப்ப ராய்ந்துணர்ந்த—வல்லார்
அறிவாந் தமைத்தள்ளி யற்பமுந்தாங் காட்டின்
நெறியாகு முத்தி நிலம். (௭)

## பிறிதோடுபடாஅன்றன்மதங்கோளல்.

அறியாத் தகையா லயலறிவ தாகா
தறிவா லயலதனை யாயி—லறிவன்றிக்
காணே மயலாகக் காட்டுவன்யா னிப்புதுமை
காணா ரென்மு னவின்று. (௮)

எட்டைப் படித்திங் கிருமாப்பா லென்னபயன்
நாட்டம் படித்தன்றோ நாமறுப்பம்— வாட்டமெலாம்
எச்சனனத் தேனு மிரும்பொருளை நாடாத
எச்சத்தா லன்றோ இவை. (௯)

அ-கை.
இந்நூற்கதிகாரியாவார் இணையரெனல்.

தன்னிழலைத் தானளந்து தாண்டிப் புறம்போக்கித்
தன்னுருவ மாக்கவல்லார் தாமாவ—ரிந்நூற்
கதிகாரி வேறல்ல ராவார்போற் காண்பர்
மதிநுட்ப மில்லார் மகிழ்ந்து. (௧0)

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

---

# பொதுப்பாயிரம்.

## அவதாரிகை.

கற்பனையின்றிச் சதோதயமாக விளங்கும் பிரமத்திற் றோற்று வன வனைத்துங் ககனாரவிந்தம்போல் நிலையற்றனவா மெனத் தெரி விப்பான்வேண்டி, இக்கவியிற் பிரமத்தையும் அதிற் கற்பிதமாகத் தோற்றுந் தேசம் பட்டணம் ஓர்புருட னென்பவற்றையுங் கூறல்.

நினைப்புமறப் போர்நான்கு மில்லாத தொன்றில்
தனக்கென் றுருவில் சகமுன்—டனைத்தொருபால்
அத்தியாச தேசத் தபாவமெனும் பட்டணத்தில்
மித்தையனென் றுண்டுயர்வின் மிக்கு.

(என்பது) எல்லாவிபரீதங்கட்குங் காரணமாகிய அசுத்த சகல கேவலங்களுஞ் சுத்த சகல கேவலங்களுமாகிய இந்நான்கும் இன்ன திசையெனத் தலைகாட்டப்படாதொளிரும் ஒப்பற்ற பிரமமாகிய ஏக

சைதன்னிய வியாபகத்தில் தனக்கெனச் சொரூபமொன்றில்லாத உலகமென்பதொன்றுண்டு; அந்நிலையதான சகத்தினது ஓர் மூலைக்கண் ஆத்தியாசமென்னும் பெயருள்ள தேசமொன்றுண்டு; அத்தேசத்தின்கண் அபாவமென்னும் பெயருள்ள பட்டணமொன்றுண்டு; அப்பட்டணத்தில் மித்தையனென்னும் பெயருடைய சீமானொருவன் அதிக கீர்த்தியோடு வாழ்ந்திருந்தான்—என்றவாறு. (க)

அ-கை.

அப்புருடனது மனைவி புத்திரரையும் அப்புத்திரனது திறம் விசாரமென்பவற்றையும் உணர்த்தல்.

பசையி லெலும்பிற் பசப்பியவன் றேவிக் [பொன்
கசத்தனெனும் புத்திரனுண் டன்னோன்—நிசப்படிப்
றில்லாப் படிப்பி லிவனேமிக் கானெனினும்
நில்லாமைக் கேயழுவ னின்று.

(எ-து.) பசையற்ற எலும்புபோலும் மினுக்கத்தக்க பசப்பியென்னும் நாமத்தை யுடையவள் அவன்மனைவி; அவளுக்கு அசத்தனென்னும் பெயருள்ள புத்திர னொருவனுண்டு; அப்புத்திரன் நிசப்படிப்பென்பதொன்று மில்லாப் படிப்பில் எல்லாரினும் இவனே மிக்கானெனத் திறத்தனாயினன்; ஆயினும் இவனுக்கோர் குறையுண்டு; அதாவது இங்ஙனம் நின்ற நமதுவாழ்வு எப்போதும் இப்படி நிலையாதென்பது. இந்நிலையாமைக்கே அல்லும் பகலுந் திகைத்து நின்று மிக்க துயரத்தோடு அழுதுகொண்டிருப்பான்—எ-று. (உ)

அ-கை.

இதுமுதல் எட்டுக்கவியானும் அவ்விசாரத்தால் தனக்குண் டாகுஞ் சிந்தனைகளையும், அச்சிந்தனை யேலீட்டால் நேரிட்ட சாதனை சதுஷ்டயங்களையும், அச்சாதன சதுஷ்டய மேலீட்டால் எதிருற்ற ஆசிரியரையும், அவ்வாசிரியரைப்பணிந்து தனக்கு வேண்டிய திரந்து கேட்டலையும் உணர்த்தல்.

இப்பிறவி யெப்போது மிப்படியே நில்லாதே
யிப்பிறவி யோடொழியு மென்றாலோ—இப்பிறவி
மண்ணாதி யாதலினான் மாளோ முடனாமும்
எண்ணுமறி வாதலினா லின்று.

(எ-து) இருவினைக்குத் தக்கவா றிவ்வாழ்வு மாறினும் இப்பிறவி யாவ தெப்போதும் இப்படியே நிற்குமென்றாலோ, இதுவும் நில்லாதே. நிலையல்லனவற்றை நிலையனவென் றுணரும் புல்லறிவே மாகிய யாமும் இப்பிறவியோ டொழியு மென்றாலோ. இப்பிறவி மண்முதலிய பஞ்சபூதங்களா லாகிய சட மாதலினாலும், புத்தாபுத்தம் இதுவெனப் பகுத்துணரத்தக்க உணர்வு வடிவம் நாமாதலினாலும் எங்ஙனம் இப்பிறவியோடு மாள்வம்—எ-று. (௫)

அ-கை. இதுவுமது.

இப்பிறவி நாமன்று மிங்கிருந்து நாமானோம்
எப்பிறப்பு நாமாவோ மிப்படியே—தப்பாமல்
ஆனால் விலகி யனாதிமுற நிற்பதெங்ஙன்
ஏனோ பிறப்புவந்த தின்று.

(எ-து.) இப்பிறவி நாமல்லாததாக இங்கிருக்கும் இது ஆதார மானோம்; இப்படியே யெப்பிறப்பும் நாமல்லாததாகவிருக்கினும் நாம் அது அது ஆதாரமாகத் தப்பாமல் ஆவோ மென்பதற்கு ஐய மில்லை. இங்ஙனமாயின் இனியாவது எப்போதும் பிறவிச்சம்பந்த மற்றிருக்கும் வகை யெங்ஙனே தெரிகிலம். அதுநிற்க; இங்ஙனமுள்ள பிறவி நமக் கெப்போது இங்கு என் வந்ததோ—எ-று. (௬)

அ-கை. இ-து.

வினைநா ரணைமேல் வினைவருவ தேனே
தனுபோகம் வேண்டி யதனாற் றானேற்—றனுபோகம்
வேண்டுவது யாரெனிலோ வேறில்லை நாமாகும்
ஈண்டிதற் கென்செய்வோ மினி.

(எ-று.) வினைகாரணமாக வென்றால் வினை வருவதற்கே தென்னையோ? தனுபோகங்களை வேண்டுவதனாலென்றால் தனுபோகங்களை வேண்டுவது யாரெனிலோ? வேறில்லை; நாமே யாதலால் இனியிதற்கு இங்கு என்னசெய்வோம்—எ-று. (௫)

அ-கை. இ-று.

தனக்கனிய மல்லாத் தனுபோக முண்டாந்
தனக்கனிய முண்டதனாற் றானே—நினைத்ததனை
வேண்டிச்செய் வோமாயின் வேண்டுவினை தான்கொடுக்கும்
யாண்டுமிதற் கையமொன் றுமில்.

(எ-று.) தனக்கு அன்னியமான தனுபோக முண்டா யிருப்பதனால் தனக்கன்னிய மல்லாத தனுபோக முண்டா யிருக்கவேண்டும். தனக்கன்னியமானதை வேண்டிச் செய்ததுபோலத் தனக்கன்னிய மல்லாததை வேண்டிச் செய்வோ மாயின், இங்ஙனம் வேண்டிச் செய்த வினையே அதற்குரிய பலனைக் கொடுத்தேதீரும். எவ்விடத்தும் எப்போதும் இதற்குச் சந்தேகமென்ப தொன்றுமில்லை—எ-று. (௬)

அ-கை. இ-று.

தக்கவினை யாதென்ற சந்தேகந் தோன்றியக்கால்
அக்கணத்திற் சாதனைநான் காங்குதித்தே—யக்குருவாம்
என்னைநான் காண்பனெனு மித்துயர மேலிட்டான்
அன்னவனைக் காணு தலைந்து.

(எ-று.) இதற்குத்தக்க முயற்சி யாதோவென் றையந் தோன்றிய விடத்து அக்கணத்திற்றானே சித்தசுத்தி யுண்டாய் அச்சித்த சுத்தியாற் சாதன சதுட்டயம் அங்குண்டாயிற்று. அச்சாதன சதுட்டயத்தால் எந்தச் சற்குருவினால் என்னை யுள்ளபடி யான் காண்பேனென்கிற இப்படிப்பட்ட துயரத்தில் மேலிட்டாயினேன். அப்படிப்பட்ட ஆசிரியரைப் பலதிசைக்கண்ணும் அலைந்து காணாமல்—எ-று. ய

அ-கை. இ-ரு.

எல்லையிலாப் பாலைக் கிடையிற் கதலிவனம்
மெல்லக் கிடைத்தென்ன மீகாம — னெல்லைகரை
காணுத் திசைக்குங்காற் கண்டாற்போ னேரிட்டான்
கோணு தறிவளிக்குங் கோன்.

(இ-ள்.) சோர்வுற்றிருக்குங் காலத்து இவனுக்கு எல்லையின்றிக் கொடுமையுள்ள பாலைவனத்தில் நடந்து இளைப்புற்றுத் தவிப்போனுக்கு அப்பாலை வனத்திடையில் மெல்லக் கதலிவனம் அருகில் நேரிட்டாற்போலவும், கப்பலோட்டு மீகாமன் எல்லைக்கரை காணாது கடற்கிடையிற் றிசைதப்பித் திகைத்து அலையுங் காலத்து அவனுக்குத் தெய்வகதியாய் ஓர் தீவு காண நேரிட்டாற்போலவும் காணப்பட்டான். உறுதி புத்தி மனுடர்களுக்கு மாறுதல் கோணாமல் அறிவு வடிவமாகிய தன்னைக் கொடுக்கத்தக்க ஞானாசாரியன் — எ-று. (அ)

அ-கை. இ-ரு.

குறியெல்லாங் கண்டான் குருக்கோலங் காணத்
தறிபோ லெதிர்வீழ்ந்து தாழ்ந்து — குறையெல்லாஞ்
சொல்லியழு தான்மிக்குத் தாக்கப் படேலென்றான்
எல்லையிலா னந்தத் தளிக்கு.

(இ-ள்.) சற்குருநாதனைக் கண்ட அளவில் மாணாக்கனுக்குக் காணத்தக்க மெய்சிலிர்ப்பு, புளகாங்கிதம், மனக்களிப்பு, ஆராமை முதலிய குறிகள் யாவுந் தன்பாற் றோன்றக் கண்டனனாகி, அடியற்ற பனையைப்போல் எதிரில் அங்கமுழுவதும் நிலத்திற்பட விழுந்து வணங்கி, தன் குறையெல்லாஞ் சொல்லி மிகவுங் கோவித்தழுதான்; அங்ஙனம் அழுதானை நோக்கித் தடையற்ற ஆனந்த சொரூபியாகிய ஆசிரியன் துக்கப்படாதேயென்று சொல்லினன் — எ-று. (கூ)

அ-கை. இ-ரு.

பொய்தானே யின்பப் பொருளாகத் தோன்றுவதான்
மெய்தா னுருக்கொண்ட மெய்யனே — பொய்தான்

அகலுமுறை யெல்லா மறிவித்திங் காள்வை
யிகலிலா தென்று ணிரங்து.

(எ-து.) சகமுதலியவாகத் தோற்றப்படுவன அனைத்தும் மித்தை யாதலால் அம்மித்தை வடிவந்தானே சுகசொரூபமாகத் தோன்று கின்றது. வேதாகம இதிகாசங்களாற் கொண்டாடத் தக்க மெய்ப் பொருளே மானிட ரூபங்கொண்டாற்போலும் விளங்குகின்ற மெய் யனே! அந்தப் பொய்யானது அடியேனை விட்டகலத்தக்க மார்க்க மனைத்தும் புலப்படுமா றுணர்த்தி, இங்ஙனே யடிமைகொள்ளுதி; அஞ் ஞான சத்துருவென்ப தில்லாமற் போகும்படியென் றிரந்துங் கேட்ட னன்—எ-று. (கo)

அ-கை.

அதற் காசிரியர் யான் பூர்வபட்சப் படுத்தப்படு மவற்றி னுகாரங் தவிர்ந்து, சித்தாந்தப் படுத்தப்படு மவற்றினுகாரமாகுதியேற் கூறுவே னெனல்.

வித்தைபோ லன்றாகும் வித்தைக்கு வித்தையிது
மித்தையெனக் காட்டவற்றின் மேவாது—சத்தெனக்
காட்டவற்றிற் றங்கிக் கலங்காது நிற்குதியேல்
காட்டுவன்யா னுண்மைதனை நன்கு.

(எ-து ) யானுனக்குச் சொல்லப்புகுவ தெண்ணிறந்த வித்தை போல்வதன்று; அந்த வித்தைக் கெல்லாம் வித்தையாகு மாதலால் இதனில் யான் மித்தையென அங்கங்கே காட்டப்படு மவற்றில் அந் தந்த ஆகாரமாதலைவிட்டு அங்கங்கே சத்து இதுவெனக் காட்டப்படு மவற்றில் அந்தந்த ஆகாரமாகி முன்போலக் கலங்காது நிற்க வல்லை யாயின் யதார்த்தமெனப்படுவ தியாதோ அதனைச் செவ்விதாக காட்டு வன்—எ-று.

எங்கெங்கே யதைப் பூர்வபட்சப்படுத்துகின்றேனோ, அந்தந்த ஆகாரந்தவிர்ந்து நில்லாவிடத்து எனது சித்தாந்தமெல்லாம் விவர்த்த

மாகு மென்பது கருத்து. இலட்சியார்த்த மாதலின் வித்தை போல்வ தன்றெனவும், ஞானஞ்ஞான மாக நின்றதெதுவோ அதனைப்படிக்கும் படிப்பாதலின் வித்தைக்கு வித்தை இதுவெனவுங் கூறினார். (கக)

அ-ளக.

யுத்திக்கொத்துச் சொல்லாதாரிடத்தில் அணுகாதிருப்பாயெனல்.

ஆராய்ச்சி செய்யா ரநுபவமும் பக்குவமும்
வாராத் தெரியாது வாய்மூடும்—போராட்டம்
என்பாருக் கிக்கொவ்வா திவ்வருத்த மேனென்றால்
என்பாலிம் மூடபிரா தென்.

(எ-து) கருதி யுத்தி யநுபவத்துக் கொத்து விசாரித்துத் தெளியார், தம்மைத் தாமே ஞானாசாரியரென மதித்தற்குரிய புரளி செய்து அப்புரளியைப் புரளியென அறியா திவருண்மையான ஞானாசிரியரென நம்பி வரும் புண்ணியிற் சபையைத் தம்பால் வந்தடைப்பாரு ளொருவன், ஐயனே! இச்செய்யுளில் இவ்வருத்தம் யுத்திக் கொத்து வராமல் மூடுவானேனெனத் தம்மைக் கேட்கில், அதற்குத் தக்க விடை கொடுக்கத் தெரியாது அதற்குப் பதிலாக இதனை யுணரத் தக்க அநுபவமும் பக்குவமும் வந்தாற் றெரியுமன்றி வராவிடத்துத் தெரியாது; போதும் வாய்மூடு; இது என்ன போராட்டமெனச் சலித்துக்கொள்ளுவார்போற் காட்டிச் சலித்துக்கொள்ளுவார்கள். இவ்வாறான மூடத்தன்மை யுள்ளவிடத்தில் இராதென் றெண்ணுதி— எ-று.

எனவே, கேட்கவேண்டியவை அனைத்தும் அஞ்சாமற் கேளுதி; கேட்கத் தெரியாதவைகளையும் நீ யென்னைக் கேட்கக் கற்பிப்பன்; அங்ஙனம் வினவும் வினவுகளுக் கெல்லாம் விடை தவறாமல் என்னிடத்திற் காணுதி யென்றவாறாயிற்று. (கஉ)

அ-ளக.

இந்நூலில் வாதிப்பது அபேதவாதமா மெனல்.

மறைவிதித்த காண்டங்கள் வாதமிரண் டேற்கும்
நிறைஞானப் பாகமதா னீங்கா—இறையேனும்
வாதத்த தைந்தின் வகையேயிந் நூன்முழுதும்
வேதத்தின் சம்மதமும் வேறு.

(எ-து.) இருக்குமுதலிய நான்கு வேதங்களும் விதித்துள்ள கர்மகாண்டம், பக்திகாண்டம், ஞானகாண்டமென்பன மூன்றும் பேதம் அபேதமென்னும் இரண்டு வாதத்தையும் ஏற்கும். இங்ஙன நிற்க; இந்நூல் ஞானபாகத்தையே யுணர்த்துவதாற் சிறிதும் பேதி யாத அபேதவாதம் ஐந்தின் வகையே யிந்நூலில் முழுதுமாம். ஆயினும் வேதத்தின் சம்மதமும் இஃதன்று; வேறென்றுணர்தி—எ-று.

எனவே, கர்மகாண்டங் கர்த்துருத்துவபோக்துருத்துவத்தையும், பத்தி காண்டம் ஆண்டான் அடிமையையும் உணர்த்துதலால் பேதவா தம் ஆறையும், ஞானகாண்டங் கூடத்தபிரமாயிக்கத்தை யுணர்த்து லான் அபேதவாதம் ஐந்தையும் உணர்த்து மென்பது பெற்றாம்.

வாதம் இரண்டினுள் பேதவாதம் ஆறுவன: ஆர்த்தவாதம், உபாச னாபரவாதம், துதிபரவாதம், உபசாரிகவாதம், சகுண சாதுரியவாதம், சாதிவியத்திவாதமென்பன. அவற்றுள் ஆர்த்தவாதம்: மிக்க ஆன்பால் ஓர் மலர் கொண்டு பரம சிவத்தை அர்ச்சிக்கில் அருவன சுவர்க்க பலம் என்றாற்போல்வது. உபாசனாபரவாதம்: யாதொரு விக்கிரக ரூபத்தைப் பரமசிவமாகப் பாவித்து அதினிடத்தில் தனது மனப் பிரியத்தைவைத்துப் பூசித்துவர அவ்வுபாசனையே தனதிஷ்டதேவதா ரூபமாகத் தன்பாலெழுந்தருளிவந்து, தன்கருத்தை நிறைவேற்றுவது போல்வது. துதிபரவாதம்: ஓர் மாணிடனை யிந்திரனென்னத் துதித்தல்போலச் சிவமூர்த்தங்களைச் சிவமாகத் துதித்தலாலாய பய னுறுவதுபோல்வது. உபசாரிகவாதம்: அடிமையை ஆசானென்றாற் போலச் சிவனடியார்களைச் சிவமாக உபசரித்தலாலாய பயனுறுவது போல்வது. சகுணசாதுரியவாதம்: பிரமசாரியை யக்கினி யென்றாற்

போலச் சிவனையுஞ் சகத்தையும் பிரமமாகக் காண்டலாலாய பயனு டைத்து போல்வது. சாதிவிவர்த்தவாதம்: அலைநாடி முதலிய அவயவங் கள் சேர்வின் வடிவமாக விளங்குமாறுபோன்று சிவேசுராதி கற்பிதங் கள் சிவத்தின் அவயவமாகக் காண்டலாலாய பயனுடைத்துபோல்வது.

அபேதவாதங்களாவன:- காரணகாரியவாதம், குணகுணிவாதம், அம்சாம்சிவாதம், பிம்பப்பிரதிபிம்ப வாதம், விகாரவாத மென்பன. அவற்றுள் காரணகாரியவாதம்: ஓர் காரியத்திற்கமைய முதற்காரணம் துணைக்காரணம் நிமித்தகாரணமென்னும் மூன்றனுள் அபேதமாய் நிற்கும் முதற்காரண காரியமாகிய மட்கடம், நூற்படம், பொற்பணி யென்றாற்போல்வது. குணகுணிவாதம்: செந்தாமரை, கருங்குயில், சிவந்தபல மென்றாற் போல்வது. அம்சாம்சிவாதம்: கடற்றிரை, நீர்க்குமிழியென்றாற் போல்வது. பிம்பப் பிரதிபிம்ப வாதம்: ஆடிநிழல், நீர்மதியென்றாற்போல்வது. விகாரவாதம்: பால் தயிர், ஆலாங் கட்டி, மருந்தெண்ணெ யென்றாற்போல்வது.

இங்ஙனங்கூறிய, சிவத்தின் சம்பந்தமும் வேறு என்றதனால் இவ் விருவாதமும் ஒருவாறு உடன்பாடன்றெனப்படுகின்றது. எங்ஙன மெனின் பேதவாதம் அதனுள் அநேகவிதங்களும் வஸ்துவைத் தனக் கன்னியமாகக் கருதி கன்மாதிய வேடம் பலகொண்டு அர்ச்சித்தல் முதலாகவும், அதனையும் நிர்விகாரமாகவும் விளங்கும் வஸ்துவை த் தனக் கன்னியமாகவும் விகார வடிவமாகவுங் கருதித் தானே யோர் வடிவங் கற்பித்து அதனை மெய்ப்பொருளாக உபாசித்துத் தொழுதல் பேதவாதமாகவும், அதனையும் நிர்விகாரமாகவும் நிர்க்குணமாக வும் விளங்கும் வஸ்துவைத் தனக் கன்னியமாகவும் விகார வடிவாக வுஞ் சகுண மூர்த்தமாகவுங் கருதி, அங்ஙனஞ் சங்கற்பித்த மூர்த்தத் தின் மேற் சக்கிரசந்த முதலிய இலக்கணங்களைத்துப் புகழ்தல் அபேதவாதமும், அதனையும் நிர்விகாரமாகவும் நிர்க்குணமாகவுந் தாழ்வு உயர் வின்றாகவும் விளங்கும் வஸ்துவைத் தனக்கு அன்னியமாகவும் விகார வடிவமாகவுஞ் சகுண மூர்த்தமாகவும் உயர்வு தாழ்வுள்ளதாக

வுங் கருதி, அதுவாக முயலும் ஆன்மாக்களை அதுவாக உபசரித்தல் உபசாரிக வாதமும், உருவகப்படாத வஸ்துவை யுருவகிக்கப்படு வதாகக் கருதி அதற்குரிய குணஞ் சத்திகளுஞ் செயலுக்கு முரி யதெனல் "இயற்கை குணஞ் சோதித்து முன்னே பின்னே யா வையுமாம் பிரம நீ" என்றும், "இல்லதன் றுண்டல்லவுழி யில்லா வுருவி லறிவுருவம் அல்ல வான்ம வுருவுமல வயலன் றுலகம்" என்றும் வருவதாகிய சகுணசாதுரிசிய வாதமும், நிரவயவமான வஸ்துவைச் சாவயவமாகக் கருதிச் சக சிவ பரங்களைத் தனக்கு அங்கமுடைய தாகக் கோடல் சாதிவியத்தி வாதமுமாம். அபேதவாதத்துள் ஆதார ஆதேயங் கடந்த வஸ்துவை யாதார ஆதேய முடையதாகக் கோடல் காரணகாரியவாதமும், குண குணி ரகிதமான வஸ்துவைக் குணகுணி யுடையதாகக் கோடல் குணகுணி வாதமும், ஒன்றே பல வெனப்படுங் கற்பனை கடந்த வஸ்துவை யக்கற்பனையை யுடைய தாகக் கோடல் அம்சாம்சிக வாதமும், யதார்த்த கற்பித ரகிதமான வஸ்துவை அஃதுஉடையதாகக் கோடல் பிம்பப் பிரதிபிம்ப வாத மும், ஒன்றுதிரிந் தொன்றாகக்காணுங் கற்பித ரகிதமானவஸ்துவை யஃதுடையதாகக் கோடல் விகாரவாதமுமாம். ஆயினும் பேதத்தை நீக்க அபேதங் கற்பித்ததேயன்றி இதுவும் யதார்த்தம் அன்றென்பது வேதத்தின் கருத்து.

வினா: பேதவாதத்தையும் பிரதிவாதிப்பது வேதமன்றோ?

விடை: ஆம்.

வினா: அவ்வேதம் பின்னர் அதனை விலக்க அபேதவாதத்தைப் பிரதிவாதிப்பானேன்?

விடை: நாஸ்திகத்தை விலக்கற்குப் பேதவாதங் கற்பித்ததே யன்றி அதுவே சித்தாந்த மாகா தென்றற்கென்க. ([illegible])

அ-கை.

ஞானகதப்பிரத்தியட்சமென்பது இன்றெனவும் அஃதுண்டெ- ணில் அதனையுடையார் இன்றெனவுஞ் சாதிப்பவர்போலாகாதிருப்பா

[illegible]

(௭-ஆ.) [illegible]

அறம்.

[illegible]

[illegible]

(௭-ஆ.) [illegible]

வுங் கருதி, அதுவாக முயலும் ஆன்மாக்களை அதுவாக உபசரித்தல் உபசாரிக வாதமும், உருவகப்படாத வஸ்துவை யுருவகிக்கப்படு வதாகக் கருதி அதற்குரிய குணஞ் சகத்திற்குஞ் சிவனுக்கு முரி யதெனல் “இயற்கை குணஞ் சோதித்து முன்னே பின்னே யா வையுமாம் பிரம நீ” என்றும், “இல்லதன் றுண்டல்லவுழி வில்லா வுருவி லறிவுருவம் அல்ல வான்ம வுருவுமல வயலன் றுலகம்” என்றும் வருவதாகிய சகுணசாதுரிசிய வாதமும், நிரவயவமான வஸ்துவைச் சாவயவமாகக் கருதிச் சக சிவ பரங்களைத் தனக்கு அங்கமுடைய தாகக் கோடல் சாதிவியத்தி வாதமு மாம். அபேதவாத மைம்தனுள் ஆதார ஆதேயங் கடந்த வஸ்துவை யாதார ஆதேய முடையதாகக் கோடல் காரணகாரியவாதமும், குண குணி ரகிதமான வஸ்துவைக் குணகுணி யுடையதாகக் கோடல் குணகுணி வாதமும், ஒன்றே பல வெனப்படுங் கற்பனை கடந்த வஸ்துவை யக்கற்பனையை யுடைய தாகக் கோடல் அம்சாம்சிக வாதமும், யதார்த்த கற்பித ரகிதமான வஸ்துவை அஃதுஉடையதாகக் கோடல் பிம்பப் பிரதிபிம்ப வாத மும், ஒன்றுதிரிந் தொன்றாகக்காணுங் கற்பித ரகிதமானவஸ்துவை யஃதுடையதாகக் கோடல் விகாரவாதமுமாம். ஆயினும் பேதத்தை நீக்க அபேதங் கற்பித்ததேயன்றி இதுவும் யதார்த்தம் அன்றென்பது வேதத்தின் கருத்து.

வினா: பேதவாதத்தையும் பிரதிவாதிப்பது வேதமன்றோ?

விடை: ஆம்.

வினா: அவ்வேதம் பின்னர் அதனை விலக்க அபேதவாதத்தைப் பிரதிவாதிப்பானேன்?

விடை: நாஸ்திகத்தை விலக்கற்குப் பேதவாதங் கற்பித்ததே யன்றி அதுவே சித்தாந்த மாகா தென்றற்கென்க. (கக)

அ-கை.

ஞானகதப்பிரத்தியட்சமென்பது இன்றெனவும் அஃதுண்டே னில் அதனையுடையார் இன்றெனவுந் தூஷிப்பவர்போ லாகாதிருப்பா யெனல்.

பொருளல் லவற்றைப் பொருளாகக் காணேல்
பொருளைப் பொருளாகப் புத்தி—மருணீக்கிக்
காணிற் றுயரகலுங் கண்டாரைத் தூஷிக்கேல்
ஆணவத்தார் போல வறி.

(எ-று.) மெய்ப் பொரு ளல்லவற்றை மெய்ப் பொருளாகக் காண்பதை விட்டுவிடு; இனி மெய்ப்பொருளாவ தியாதென்று ஐயந் திரிபற விசாரித்துப் புத்தி மயக்கத்தை நீக்கிப் பொருளைப் பொருளாகக் காணவல்லையாயின் அக்கணமே ஜனன மரண துயரம் நின்னை விட்டகன்றொழியும். இவ்வாறுள்ள அனுபவம் நினக்கு வாய்க்காவிடத்தும் பொருளைப் பொருளாகக் கண்ட மகான்களுக்கு ஞானகதப் பிரத்தியட்ச மில்லவெயில்லை. உண்டெனில் தனக்கில்லாமைபோல் அவரையுங்கருதிக் கள்வெறி மிக்க துஷ்டரைப்போல் இனியாத வார்த்தைகளால் தூஷித்து ஒருவர்பாலும் அடங்கி மெய்ப்பொருளைக் கேட்டறியாத அகங்காரிகளைப்போலத் தூஷிக்காமல் நிற்றி; அங்ஙனம் நின்றவிடத்து இவ்வுறுதிமொழிகளை யறிவை—எ-று. (கச)

அ-கை.

நின்சேட்டையற்று இதனைக் கேட்பாயெனல்.

எண்ணளவை ஞாய மிதிகாச வாதமிவை
கண்ணெனத் தெளிந்தாரு காட்டுதற்குக்—கண்ணளிக்கத்
தக்கமுறை யெல்லாந் தகுந்தபடி சொல்வதைக்கேள்
மிக்கதுயர் போக விரைந்து.

(எ-று.) பிரத்தியட்சம் அனுமான முதலிய அஷ்டவிதப் பிரமாணங்களும், ஞாயவாதமும், இதிகாசமும், பேதவாதமும், அபேதவாதமுமாகிய இவற்றை மனதாரவுணர்ந்தி, சுருதியுத்திக்கொத்து விசாரித்துத் தெளிந்தோருஞ் சர்வமுஞ் சின்மயமாகக் காண்டற்கு ஞானக்கண் அளிக்கத் தக்க நெறியாவன அனைத்தையும் அந்தந்த நிலைக்குத் தகுந்தபடி யான் சொல்லும் அனுபவநிலைகளை நினது மிக்க சனன

மரண துக்கம் நின்னைவிட்டகன்று போமாறு விரைந்து கேளுதி— (கரு)
எ-று.

அ-கை.

பூர்வபட்சமுஞ் சித்தாந்தமு ஞாயத்தா லாதலால் அந்தஞாயத்தி னது மகிமை தோன்றக் கூறல்.

ஞாயத்தை முன்னிட்டு நாட்டுவது மேற்பதுவுந்
ஞாயத்துக் கொவ்வாதேல் நம்பாதே—ஞாயந்தான்
பொய்யைப்பொய் யாக்கிப் பொருளைப் பொருளாக்கி
மெய்யாக்கு நம்பினரை மேல்.

(எ-து.) ஒருவ ரொன்றை நாட்டுவதும், அதனை மற்றொருவர் அங்கீகரிப்பதும் ஞாயத்தைமுன்னிட்டாதலால், யாதொன்றைச் சொல்வது ஞாயத்துக்கு விரோதமாக விருக்கில் அதனை யங்கீகரியாதே; ஏனெனில் ஞாயமானது பொய்யைப் பொய்யெனவும், மெய்யை மெய்யெனவு மாக்கி, தன்னை நம்பினவரை மேலான மெய்ப் பொருளாக்கி விடும்—எ-று. (கசு)

அ-கை.

முன்கவியில் நாட்டுவதும் ஏற்பதுவு மென்றதனால் நாட்டுபவர் ஆசிரியரும், நாட்டத் தகாதவர் அநாசிரியரும், ஏற்பவர் மாணாக்கரும், ஏற்றற்கு அபாத்திரர் மாணாக்கரல்லருமெனப் பொருள்படுதலால் இக் கவிமுதல் மூன்று கவியானும் ஞானாசிரியராவா ரிவரெனல்.

புகழ்பெருமை செல்வம் பொறுமைகுடி கர்வம்
இகழ்வாதி யின்றி யெவர்க்குந்—தகும்விடையிற்
கன்னன் மலையாழி காருக்கள் ளியமுறைமு
யன்னவன்கா ணாசிரிய னாம்.

(எ-து.) யாவருந் தன்னை யின்னனென மதிக்கவேண்டுமென் னும் புகழும், தன்னைத் தானே மெச்சிக்கொள்ளும் பெருமையும், போதித்தல் காரணமாக நமக்கு மென்மேலும் பெருகவேண்டுமென

கருதுஞ் செல்வமும், மாறுக்கண் அரும்பொருளை மென்மேலும் அறி சூக்குமமாய் விரைவிற் கவர்வதாற்பமும் பொறுமையும், சுயபோதை யின்றிப் பிறபோதைகட்கு ஆங்காங்கு அடித்தலும், தன்னை யொப்பா ரில்லையென்னுங் கர்வமும், களவிற்செய்யுங் காமக்குரோதாதி யிழி குணமும், இதுபோலன்ற பிறவுந் தன்பால் இயற்கையாயின்றி ஐயமுற் றதை யெல்லாங் கேட்கப்புகுந்த வெவர்க்கும் அவரவர் விழைவுக்குத் தக்கபடி கொடுக்கும் விடையிற் கன்னனும், ஐயந்திரிபில்லாமையால் மலையும், சுகாநந்த வெள்ளத்தாற் சமுத்திரமும், வெறுக்கத்தகுவதை விலக்கி யேற்கத் தகுவதைத் தருதலான் மேகமும், இருளை யகற்றுத லாற் சூரியனும், சிறந்தபொரு ளிருத்தலாற் சேயமுழையும்போன்று விளங்குபவனே நூலாசிரியனெனப் படுவோனும்—எ-று. (கஎ)

அ-கை. இ-று.

சரியைகிரி யாயோகந் தன்மயமா ஞான
மொருகான்கின் காட்சி யொருங்கே—மருவினுந்தான்
ஞானமே மேவிட்டு நற்சுகவாழ் விற்பிறழா
தானவனே யாசிரிய னாம்.

(எ-று.) சரியைமுதலிய நான்குநிலையும் ஓர் பிறவிக்கண்ணே யொருங்கு வாய்க்கினுஞ் சமஸ்தத்தையுஞ் சின்மாத்திரமாக்கிக்காணும் ஞானகப் பிரத்தியட்சமே யதிக்கிரமித்து அதனை அறிந்து எங்கணுந் தன்மயமாக மூடிக்கொள்ளும் நிதிசயாநந்த வாழ்வை விட்டகலாது நின்று, பின்னர் அது ஆகாரமானவனே நூலாசிரியனெனப் படுவோ னாம்—எ-று. (கஅ)

அ-கை. இ-று.

அறம்பொரு ளின்பம்வீ டாயவோர் நான்கின்
திறந்தெரிக்கு மென்னூற்கிச் சிந்தை—கறங்வென்னா
வாடாது நிற்றற் கருநெறியெல் லாமுறைமையிற்
கோடா தளிப்போன் குரு.

(எ-து.) தர்மார்த்த காமமோட்சமெனப்படும்நான்கி னுண்மை நிலை இஃதென்று ஐயமின்றித் தேர்ந்து அப்பொருணான்கும் ஒன்று பட வோர் மொழியதாக்கி, அடுத்தார் சிந்தை காற்றுடிபோற் சலி யாது சித்திரதீபம்போல் நிற்றற்குக் கணித்தற்கரிய முத்திமார்க்கமனை த்தையும் ஒன்றன்பின் னொன்று சம்பிரதாய முறைமைப்படி கூறி, சுருதி யுத்தி யனுபவத்துக்கு முரணாது தன்னைக் கொடுப்பவனே ஞானாசிரிய னெனப்படுவோனும்—எ-று.

தன்னெறியினின்று தன்னை யளிப்பதே யறமும், தன்னைப் பொருளாகப் பெறுவதே பொருளும், தன்னைத் தான் சுகிப்பதே யின் பமும், தானல்லாத அனைத்தையுந் தானல்லவென விடுவதே வீடு மெனப் பொருள் கோடற்கு அமையப் பெற்றது தானொரு மொழி யொன்றாதலால் 'ஒன்றாக்கி' யென்றார். (கக)

அ-கை.

*நிறுத்தமுறையால் ஆசிரியராவா ரினையரெனல்.*

அறமிரண்டிற் கோணி யறிவுதனைக் காணாப்
புறவிடயப் பித்துமிகப் பொங்கி—நெறிபோல
வேடத்தாற் சொல்லால் வியன்ஞானி போற்காட்டும்
நாடகத்தா னல்லகுரு நாடு.

(எ-து.) இல்லறந் துறவற மென்னும் இரண்டின் நெறிக்கு மாறாகவழுவி, அங்ஙனம் வழுவினுந் தத்துவ ஆராய்ச்சிக்கண் காரண காரியங்கள் கடந்து நின்ற சுயஞ் சைதன்னியத்தை யேனுங் காணு வகையறியாது, பகிர்முகத்தில் விடயமே பலரூபமாகக் காணும் பித்தே தலைக்கொண்டு, முறைதவறாததுபோலத் துறவறவேடத்தாலும் அநு பவரசம்போன்ற மொழியாலும் பரிபூரண ஞானிகளைப்போலத் தம் மைப் பகட்டிக் காட்டுகின்ற நடிப்புடையோன் ஞானாசிரிய னல்ல னெனக் காணுதி—எ-று. (உ0)

௮-மை.

## நிறுத்தமுறையான் மாணுக்கராவார் இனையரெனல்.

ஆகாயம் வன்னி யடல்வீரன் றெய்வத்தி
மீகாமன் சொற்கடவாள் வேய்க்கூத்தன் — நீகாய்
பலன்மந் திரியன்னம் பாற்பசுவை யொப்பான்
அவனேமா ணுக்கனென்ப ரும்.

(எ-று.) தேகாதி பிரபஞ்சங்களோடு கலப்புற்று நிற்பினும் அவற்றிற்குரிய நயாநட்டந் தனக்கில்லாமையால் நான்கு பூதங்களோடு கலப்புற்று நிற்பினும் அவற்றிற்குரிய நயாநட்டந் தனக்கில்லாத ஆகாயமும், இசுமுத்தார்த்த பலபோகங்கள் தன்பா லெய்தினும் வெறுப்பால் அவற்றைச் சேருதலிற் றகனமாகத் தக்கவைகள் தன்பா லெய்தினும் அவற்றைச் சேதிவிடன் றெரிக்கு மக்கினியும், தான் அவாவியது கிருதியராகத் பெறுதலின் அதனையேயடைய மோகமுதிய சத்துருக்களை வெல்லு முயற்சியிற் பின்னிடையாததுபற்றித் தானவாவியது வீரசொர்க்கப் பெறுதலின் அதனையே யடைய அமர்க்களத்து எதிர்த்தோரைப் புறங்கொடாது வெல்லும் அடல்வீரனும், கருதியுத்திசாதனமில்லாவிடத்துங் குருவினது அருணோக்கம் பட்ட அக்கணத் திற்றுனே ஞானப் பிரகாச முண்டாதலின் சக்கி நீப சாதனமில்லாவிடத்துந் தேய்த்தமாத்திரத்தில் இக்கென்றெரியுந் தேய்வத்தியும், மனஞ்சென்றவழிச் செல்லாமல் அதனைத் தன்வயப்படுத்திச் செலுத்தலாற் கப்பல்சென்றவழிச் செல்லாமல் அதனைத் தன்வயப்படுத்திச் செலுத்து மாலுமியும், எக்கெத்த அவசரத்திலும் ஆசிரியன் பணியைக் கடவாமையால் எக்கெத்த அவசரத்திலுமிம் நாயகன்பணியை மறுத்து நடவாத கற்புடையாளும், சித்தஞ் சலங்கத்தக்க ஆசிரியபணி மேலிட்டக் கண்ணும் நகுசெனச் சிந்தை மேனிற்றலாற் சித்தஞ் கலங்கத்தக்க கழைக்கூத்தாடு கோத்தும் எங்ஙனம் ஆனி கேரிடு

கின்றதோ வென்று உயிர்மேற் சிந்தைநிற்கும் வேழம்பனும், ஆசிரியர் நம்மேற் பட்சமா யிருக்கின்றாரெனக் கருதித் தோழமைகொள்ள நெருங்கிற் சீறுதலும் அச்சீறுதலுக் கஞ்சி வெறுப்புற்று அவரைவிட் டகன்றே விடலாமெனக் கருதின் இவ்வாறு சுருதி யுக்தி யனுபவத்து க் கொத்து ஞாயத்தால் விளக்கிவிப்பவர் எங்கணு மில்லவே யில்லை; இல்லாமற்போயினும் அவர்பால் அணுகாமல் நிற்பமெனவரும்; வரின் ஐயந்திரிபருக் கலக்கஞ் சகிக்கப்படாது வாட்டும் வாட்டமும் நேரிடு தலின் குளிரை யகற்றுதலால் நெருங்கின் சுடுகையும் அச்சுடுகை பற்றி யழலைவிட்டகலின் குளிருமெனக் கண்டு அழல் காய்பவனும், எண்ணத்தின் வழித்தாய் நோக்குச்சேறலின் அந்நோக்கின் அவசர நிலையைக்கண்டு ஆசிரியர் கருத்தை நிறைவேற்றலின் அரசனேக்கின் அவசர நிலையைக்கண்டு அவன் கருத்தை நிறைவேற்றும் மந்திரியும், எல்லாமாய் அல்லவுமா யிருக்குந் தன்னை விலட்சண சலட்சணங்களி னின்று வேறாக்கித் தானாய்ச் சுகித்தலின் வேறுபடுத்தப்படாது மிசி ரிம்பித்துள்ள பாலையு நீரையும் வேறுபிரித்துப் பாலைமாத்திரம் உண் ணும் அன்னமும், சிவாநந்தவெள்ளந் ததும்பி ஆசிரியர் வாக்கிலெழும் அனுபவரசமொழிப் பெருக்கை அக்கணத்திற்றனே யவையனைத்தை யும் அவ்வாவேசந்தணிதற்கு முன்னரே மிக்க விரைவிற் கிரகித்துப் பின்னர் உடனே யேகாந்தத்திற் சென்று அம்மொழி ரசங்களையெல் லாம் ஒவ்வொன்றாகச் சிந்தித்துச் சிந்தித்துத் தனித்தனி யையந் திரி பற்றுத் தெளிதலின் நெற்பயிர் மிக்குவிளைந்துள்ள வொருவன் வய லில் களவிற்சென்று அவன்வருதற்கு முன்னரே பயந்து விரைவில் அப் பயிரை யொன்றுபாதியாக விரைவிற் கறித்துக்கறித்து வயிறார விழு ங்கிப் பின்னர் உடனே யேகாந்தத்திற்சென் றுட்கொண்டு அவை களையெல்லாம் ஒவ்வொன்றாக வெதுப்பி வெதுப்பி மென்றுமென்று ருசிபார்த்து விழுங்கும் பசுவும்போன்றிருப்பவன் எவனே அவனே மாணாக்கனெனப் படுவோனும்—எ-று.

(உக)

அ-கை.

*நிறுத்தமுறையான் மாணாக்கரல்லர் இனையரெனல்.*

குயிலெருமை யில்லிக் குடமுணிபன் னாடை
வயல்கதலி யேனமசு மந்தி—வயிறுபுலி
பாச்சியுடல் பீப்பாய் பதருடன்வெள் ளாட்டியொப்பார்
சீச்சீமா ணாக்கரோ செப்பு.

(எ-து.) வஞ்சித்தலாற் குயிலையும், மட்டித்தனத்தால் எருமையையும், சிறுபான்மை நழுவ விடுதலாற் சில்லிக் குடத்தையும், சாரமல்லாததைக் கிரகித்தலான் உணியையும், பெரும்பான்மை சோர விடுதலாற் பன்னாடையையும், முயற்சி யளவு பலத்தைத் தருதலான் வயலையும், தன்னைத் தகிக்கத்தக்கதின் வெம்மை தன்பால் உதவாமையான் வாழைக்கனியையும், தகாததை நுகர்தலாற் பன்றியையும், ஓரிடத்திற்றானே அமைதிசெய்துகொள்ளாததால் ஆட்டையும், இமைப்பொழுதுஞ் சலனமற்று நில்லாமையாற் குரங்கையும், ஓர்பொழுதிற்றானே யமைதிபெறாது பலகால் வருத்துவதால் வயிற்றையும், மூர்க்கமே மேலிட்டு நிற்றலான் வியாக்கிரமத்தையும், ஒதுக்கியக்கண்ணும் அக்கணத்திற்றானே மீண்டும் மூடிக்கோடலாற் பாச்சியையும், சுத்தமாக்கியக்கண்ணும் மீண்டும் உடனே யசுத்தமாதலால் தேகத்தையும், மிக்குத் திடம்பெற அமிழ்த்தியக்கண்ணும் அக்கணத்திற்றானே விசையாகப் புறம்புகுதலாற் பீப்பாயையும், அகற்றத்தக்கதாதலாற் பதரையும், எத்தனைபுத்தி சொல்லினுந் தன்புத்தியே மேற்கோடலான் வெள்ளாட்டியையும்போன்ற நடையை யுடையார் சீச்சீ மாணாக்கரெனப் படுவரோ நீயே சொல்லுதி—எ-று.

தன்னை அவயங்காத்து வளர்த்தெடுத்த அன்னையாகிய காகத்தைச் சிறகுவந்தவுடன் வஞ்சித்துப் பறந்து ஓடிப்போகுமாறுபோன்று சிரவணாதிகளால் ஐயந் திரிபறத் தன்னைத் தாணக்கிய ஞானசாரியனை

வஞ்சித்து அவருக்கு வெறுப்புவர நடத்தலாற் சூரிலையும், நீரைத் தெளிவுபெறவுண்ணாது சேறும் நீருமாகக் கலக்கி யுண்ணல்போன்று ஆசிரியருளமகிழ்வித்து ஞானாமிர்தத்தைத் தெளிவுபெற உண்ணாது அவர் சித்தத்தைத் தனது விபரீத வினைவாற் கலக்கி ஞானாமிர்தத்தை யையந் திரிபறு துண்ணலால் எருமையையும், தன்பால் நிறையவிடும் நீரையெல்லாந் தனது சில கதிர்ச் சில்லிகளால் ஒழுகவிடல்போன்று ஆசிரியர் தன்பால் நிறையப் புகட்டும் ஞானாமிர்தத்தையெல்லாஞ் சில விடயப் பிரியத்தால் மறந்துவிடுதலால் இல்லிக்குடத்தையும், எருமையின் முலைக்காம்பின் பால்வரும் ரந்தனத்திற் கடித்துச் சுத்தமான அப்பாலை யந்நெறியாற் கவர வகையறியாது அசுத்தமாயும், துர்க்கந்தமாயுமிருக்கின்ற உதிரத்தைக் கவர்ந்து அகமகிழுமாறுபோன்று ஆசிரியர் வாக்கியத்தின் ஞானாமிர்தஞ் சுரந்து பெருகிவரத்தக்க அர்த்தத்தி லழுந்திச்சுத்தமான அவ்வமிர்தத்தையந்நெறியாற்கவரவகையறியாது அசத்து சட துக்கமாயுள்ள அனர்த்த ரசத்தைக் கவர்ந்து அகமகிழ்தலால் உண்ணியையும், இடைவிடாது நீரைக் குடங்கொண்டு தன்பாற் பலர் பெய்யினும் பெய்யும்போதே துளியேனுந் தன்பால் தங்கா தொழுகவிடல் போன்று ஆசிரியர் இடைவிடாது அகோராத்திரியும் பலவுமாக ஞானாமிர்தத்தைப் பலதிருட்டாந்த தாட்டாந்தங்களைக்கொண்டு பலகாற் புகட்டினும் புகட்டும் அக்கணத்திற் றானே யோர் மொழி ரசமேனுந் தன்பால் தங்காது மறந்து விடுதலாற் பன்னாடையையும், பயிரிடுவோன் முயற்சிக்குத்தக்க பலன்கொடுக்குமே யன்றி யதிகங் கொடுக்காவாறு போன்று ஆசிரியர் போதித்த அளவுக்கன்றி மேலிடுஞ் சுரப்பின்மையான் வயலையும், சமஸ்தத்தையுந் தகிக்கத்தக்க அழலின் உட்டண சத்திக்குத் தான் அபாத்திர மானவாறு போன்று அவித்தை மாயை முதலிய கற்பனைவடிவங்க ளனைத்தையும் ஒருங்கு நீறுபடுத்தத்தக்க ஞானாக்கினிக்குத் தான் அபாத்திரனுமாகிய வாழைக் கனியையும், முக்கனி ரசங்கலந்த பாற்சோறு வயிறார வுண்ணச்செய்யினும் அமேத்தியத்தை மறக்காவாறுபோன்று ஆசிரியர் கருத்து யுத்தி

யனுபவத்துக்கொத்த ரசங் கலந்த ஞானாமிர்தத்தை மாணாக்கன் அறிவார அனுபவிக்கச்செய்யினும் விடயபோகத்தை மறக்காததினாற் பன்றியையும், தக்கவோர் மாத்திரத்தானே வயிறார மேயவகை யறியாது பல செடிக்கண்ணும் அலைந்து திரியுமாறு போன்று தக்க ஞானாசாரியனொருவனிடத்திற்றானே யையந்திரிபற விசாரித்துத் தெளிய வகை யறியாது பலர்பாலும் அலைந்து திரிதலால் ஆட்டையும், கணப்போதேனும் ஓரிடத்தும் நிலையாது குதித்து அலையுமாறு போன்று ஓர் விடயத்திலுந் தங்கி அதனைத் திரவிசாரித்துத் தெளியாமுன்னரே பற்பல விடயம் பாய்தலால் நிலையாது விசாரித்தலாற் குரங்கையும், உணவிடுவோனுக்கு ஓயாது அலைச்சலையே தந்து திருத்தி செய்யாததுபோன்று ஞானாமிர்த மிடுவோனுக்கு விபரீதபுத்தி மேலீட்டாற் பலகாற் போதிக்க வேண்டுவதாகிய அலைச்சலையே யோயாது தந்து மனவருத்த முண்டாக்குதலால் வயிற்றையும், மூர்க்க மேலீட்டால் நன்று செய்யினும் பதிற் கொடுமை செய்யுமாறு போன்று விபரீத மேலீட்டால் நன்மொழி புகட்டினுந் தீமொழியாகப் பாவித்துச் சிந்தையைக் கலக்குதலான் வியாக்கிரமத்தையும், நீரினின்று தன்னை யொதுக்கினும் ஒதுங்கிய அக்கணமே முன்போல் மீண்டும் மூடிக்கொள்ளுமாறுபோன்று ஆசிரியர் மாணாக்கன் அகம் பாவத்தைக் கருதியாதி முன்னிட் டொதுக்கினும் அக்கணத்திற்றானே மீண்டும் முன்போலவே யறிவை மூடிக்கொள்ளலாற் பாசியையும், எத்தனை தரம் நீரால் தன்னைக் கழுவினும் மீண்டும் வேர்வையாதிகளாற் றுர்க்கந்தம் வீசுமாறுபோன்று ஆசிரியர் மாணாக்கன் அறிவை ஞானதீர்த்தத்தால் எத்தனை தரஞ் சுத்தமாக்கினும் மீண்டும் மும்மலாதிகளால் விடயதுர்க்கந்தம் வீசலின் உடலையும், பலபேர் ஒருங்குகூடித் தன்னை நிலைநிறுத்தினும் அவர்களை மீறி யதிகவிசையில் அக்கணத்திற்றானே யருகிற் புறம்புகுமாறுபோன்று ஆசிரியன் மாணாக்கன் அறிவைப் பல வேதுக்களால் ஞானைகத்தொன்றத் தடுத்தினும் அவ்வேதுக்களையுங் கடந்து அக்கணத்திற் றானே விடய இச்சையால் விசையிற் பகிர்முகத்திற்

சேறலாற் பீப்பாயையும், தன்னைக் காற்றிற்றூற்றிப் புறம்பகற்றுமாறு போன்று ஞானானுட்டானத்துக்கு அபாத்திரனாய் நின்ற மாணாக்கனைச் சரிதாதிக ளியற்ற ஆகற்றலிற் பதரையும், நற்குணங்களை யெவர்கள் புகட்டினும் அவைகளைக் குமட்டித் தன் அவிசாரிபுத்தியே மேலிட்டு நிற்குமாறுபோன்று ஆசிரியர் எவ்வெவ் வநுபவாசங்களைப் புகட்டினும் அவற்றில் வெறுப்புற்றுத் தன் விபரீதார்த்த அநுபவாசமே மேலிட்டு நிற்றலால் வெள்ளாட்டியையும் உவமை கூறியவாறாயிற்று. (உஉ.)

பொதுப்பாயிரம் முற்றிற்று.

உ

சிவமயம்.

# திருக்குதிரிசியவிவேகம்

## மூலமும் உரையும்.

அ-ரை.

இந்நூல் இருக்குவேத மகாவாக்கியத்தை நிரூபித்தலெனல்.

ப்ரக்ஞானம் ப்ரம்மமெனல் பேரறிவே பேரின்பம்
ப்ரக்ஞான மன்றியிலை ப்ரம்மந்தான் — ப்ரக்ஞான
மன்றிச் சகமாதி யற்பமும்வே றில்லையெனில்
என்றதையே செப்புமைய னிங்கு.

(எ-து.) எச்சமயத்திலுஞ் சிறந்த ஆரியரது வேதம் நான்கனுள் இருக்குவேத மகாவாக்கியமாகிய ப்ரக்ஞானம்பிரம மெனப்படுவது பேரறிவேபேரின்பமெனப்பொருடரத்தகுவது; பிரக்ஞானமன்றிச் சகசீவ பரமாதிய வற்றுள் அற்பமும் அன்னியமன்று யிருக்குமாயின் பிரக்ஞானமன்றிப் பிரமமென்பதும் வேறன்று யிருக்குமென்று அதையே யிந்நூலிற் பிரதிவாதிப்பன் —எ-று.

எனவே, பிரக்ஞையன்றி யசத்து சட துக்கம் அநித்தியங் கண்டம் வேறுண்டாமெனின், சத்து சித்து ஆநந்தம் நித்தியம் அகண்டம் வேறுண்டாம். இரண்டெனில் ஒன்றுமென்பது பெற்றாம். சகசீவ பரமாதிய விடயங்கள் பிரக்ஞானத்தையன்றி யில்லவே யில்லை யென்பதை முன்னர் நியாயவசத்தாற் விளக்கி, பின்னர்ப் பிரக்ஞானத்தையன்றிப் பிரமமென்பது இல்லவே யில்லை யென்பதைப் பின்னர் விளக்குதமென்பது கருத்து.

அ-கை.

யதார்த்தம் தோற்றமெனக் கிடந்த அறிவறியாமை யபேதமாயி னும் உண்மை விளங்குமாறு அதனைப் பகுத்துக் கூறுவேனெனல்.

அறிவோ டறிவனவு மாமிரண்டு நான்காம்
பிறிவாகா வொன்றாகா பேதித்—தறிவிக்கக்
கூடா தெனினுமிதைக் கூறிட்டுக் கூறிடுவன்
நாடாமற் பொய்யெங்கு நான்.

(எ-து.) திருக்கெனவுந் திரிசியமெனவுங் கூறப்படுவனவாகிய இவ்விரண்டும் ஒவ்வொன்று இரண்டிரண்டாகக் காணப்படுவதால் நான்காகும். இங்ஙனங் காணப்படுந் திருக்கு திரிசியம் சிலாக் கனங் கம்போல் அபேதமாக நிற்றலின் வேறுபடாவாம். அங்ஙனம் வேறு படாததுபற்றி யேகமெனக்கொள்ளின் கனங்கம் மதியெனப்படாது; படாததினால் ஏகமெனப் படாவாம். இவ்வாறு நின்றுள்ள திருக்கு திரிசியத்தைச் சத்துக்கள் தவிர மற்றைய யாவரேனும் பகுத்தறி விக்கக்கூடாது. கூடாததாயினும் யான் இதைப் பகுத்துக் கூறுதற்கு வல்லனாயினன். யாதுக்காக வெனின் தோற்றமெனப்படுங் கற்பனை வடிவமாகிய பொய்கள் எத்திசையினுந் தலைகாட்டாது ஒழிக்க— எ-று.

அறிவோடுஅறிவனவுமாம் இரண்டென்றது தனக்கெனப் பொரு ளொன்றிலாத உலகைப் பொருளதாகக் கருதி, அதற்கு அநாதித்தி யத்துவங் கற்பித்து, அது காரணமாக அதனை யாக்குதற்கு நிமித்த காரணன் ஒருவனிருக்கவேண்டுமென்று அநுமானிக்குந்தன்மையன் மன னெனவும், அவனிடுவதை யேற்று அநுபவிக்குந்தன்மையன் சீவனென வும் அறியாமையாற் கொள்ளும் மயக்கம் அறுத்தற்கும்; நான் என்னென் றது அறிவும் அறியப்படுவனவு மாகிய இரண்டினுள் அறிவுக்கு என் வவத்தைக்கண்ணுங் காணப்படுவனவாகிய திரிசியம் பொருளல்லப் பொருளாகவும், பொருள் பொருளாகவும் பிரத்தியட்சப்படுதலின் அத் திரிசியத்தை தயிரண்டெனவும், அங்ஙனம் பிரத்தியட்சப்படுவது அறிவு

க்காதலின் அவ்வறிவு தனக்குப் புலப்படும் பொருளல்லாப் பொருளைப் பொருளெனச் சத்தியமாகப் பார்க்கும் மயக்கத்தினால் அஞ்ஞானமாகவும், பொருளைப் பொருளென்று ஐயந் திரிபறப் பார்க்குந் தெளிவினால் ஞானமாகவும் விளங்கலின் அத்திருக்குவை யிரண்டெனவுங் கோடற்கும்; பிறிவாகா வொன்றாகா வென்றது பொருளல்லாததைப் பொருளெனக் கொண்டது எவ்வறிவோ அவ்வறிவே பொருளைப்பொருளாகக் கோடலினாலும், அறிவையன்றி யறியாமைக்கு வேறுபொருளின்றாதலினாலும் அறி வறியாமையென் றிரண்டு படாது; இரண்டு படாதாயின் அறியாமைபோல் அறிவும் அசத்து சடந் துக்கமெனப் படும். படவே, சத்சித்தானந்த மென்பது சொன்மாத்திரமாய் முடியும். முடியவே, வேதாகமவிதிகளும் அதுகாரணமாகச் செய்யுஞ் சாதனங்களும் பயனின்றி யமையும். அமையவே, ஆன்மாக்கட்கு நித்திய திருத்தி யில்லாமற்போகும்; ஆகலின் ஒன்றாகாது. இங்ஙனம் ஒன்றாகவும் இரண்டாகவுங் காணப்படுவது தானதனைக் குறிப்பித்தற்குமாமென்க.

வினா: சத்துக்கள் தவிர மற்றைய யாவராலேனும் அறிவறியாமைகளைப் பகுத்துக் கூறக்கூடாதென்றது என்னை?

விடை: அறியாமையையே அறிவெனக் கொண்டிருத்தல்பற்றி யென்க.

வினா: எங்ஙனம்?

விடை: பாவனையாகவேனும் ஆலமாகவேனும் வாசனையாகவேனுங் காணப்படுவனவற்றை மெய்யெனக்கண்டு களிக்கும் அறிவையே ஞானமென்பர். பொருளைப் பொருளாகக் காணுமிடத்து இது ஞானமாகாது.

வினா: சுஃபித் திறத்திலும் பஞ்சபூத பரிசோதனையிலும் அப்பரிசோதனைத் தெளிவின் புத்திக்கு அகோசரமான அதிருஷ்ட காரியங்களியற்றுவதிலும் மிகத் தேர்ந்தோர் அறிவையும் அங்ஙனங் கூறலாமோ?

விடை: சமஸ்தத்தையுங் கற்றுணர்ந்த அறிவைக் கல்லாத இரு அங்ஙனங் கூறலாம்.

வினா: அறிவு, தன்னைப் படிப்பதென்பதுமுண்டா?

விடை: ஞானநூலனைத்தும் யாதுக்காக வென்க.

வினா: ஞானநூலை வாசித்தவர்களெல்லாம் அறிவைப்படித்தார்க ளானால் "ஞானநூல் கற்றலும் நற்றவம் பூண்டாலும் போனமை முயன்றலும்" பயனின்றெனக் கூறுவானேன்?

விடை: ஞான விலக்கணங்களை யந்நூலிற் சொன்னபடி தன் னிடத்திற் காணா விடத்துப் பயனின்றென்க.

வினா: அவ்வாறு தன்னைக் கண்டவிடத்தாயினும் அறிவறியாமை யைப் பகுத்துணர்த்தத்தகுமோ?

விடை: உண்மையைக் கண்டவிடத்துப் பொய் பொய்யாகவே காணுமாதலாற் றகும்.

வினா: திருக்கு திரியங்களைப் பகுத்து அவற்றிற்குரிய இலக்க ணங்களை நியாயத்தாற் சுருதி யுத்திகொண்டு விசாரித்துத் தெரிந்து வாச்சியார்த்த மெனவும், அவ்வாச்சியார்த்தத்தால் மெய்யிது பொய் யிதுவெனத் தேறுந்தேற்றம்வரும். அத்தேற்றத்தால் மெய்யனுபவிக்கு விப்பானைத்தேடி அவனால் அதனையுள்ளபடி காணுங் காட்சிக்கு லட்சி யார்த்தமெனவுங் கூறுவர். இங்ஙனமிருக்க லட்சியார்த்தத்திற்குப் பின்னர்த்தான் அவற்றைப் பகுக்கக் கூடுமென்ற தென்னை?

விடை: முன்னர்ப் பகுத்தது சான்றோரனைவரானும், பின்னர்ப் பகுப்பது ஞானகுருப்பிரத்தியட்சத்தாலுமாதலிற் சண்முகச் சண்முகப் ப்பதே மெய்யாமென்றற் கென்க.

அ-ைக. (உ)

கற்பிதமான திரிசிய பேதத்தால் யதார்த்தமான திருக்கு பலவா றுறற்போற் றோற்றலேயன்றி யுண்மையாக

ஆடியெலா மொன்றாகு மாடிக்கு வேறுமேல்
ஆடிதனிற் காண்பவைக ளாங்காங்கே—யாடி
நிறைவாமே லொன்றாகா நீயங்கா இங்கு
மொழியுவமை கண்டேனே மூன்று.

(எ-று.) அங்கங்கே ஆடிதோறுங் காணப்படுவனவாகிய சாயா வடிவங்கள் அவ்வாடிக்கு வேறாமாயின் ஆடியெனப்படுவனவனைத் தும் ஒன்றேயாம். ஆடியே நிறைவாமாயின் ஆடி பலவாமெனக் கூறி யதில் நீயங்காயல் இவ்வுவமையையிற் கேற்றற்பாலது வேறதன்று ஐயமின் றிருக்கு நிரியமேயெனக்கண்டு இதனைத்தெளிய நின்றுன் விராந்து மூன்று இ—எ-று.

அவித்தைக மாயையென்றும் அறியாமையும் அவைகாரணமாகச் சமஷ்டி வியஷ்டியாகத் தோற்றுஞ் சகல கற்பிதங்களும் அநித்த சட துக்கமெனவும் அவற்றிற்கு ஆதாரமாகிய சைதன்னியஞ் சத்தியாநந்த மெனவும் ஆராய்ந்து தெளிந்தவிடத்துச் சைதன்னியத்திற்கு அவை யன்னியமாக முடியும். அங்ஙனம் முடியுமாயின் உபாதிபேதத்தாற் பல வேறுவகைப்பட்டுக் காணுஞ் சைதன்னியமனைத்தும் பலபேதமிறந்தும் ஒன்றாகவே விளங்குமென்பது தோன்ற ஆடியெலாமொன்றாகும், ஆடிக் குவேறுமேல் ஆடிதனிற் காண்பவைகள் ஆங்காங்கேயெனவும், கற் பிதங்கள் சைதன்னியத்திற்கு அன்னியமாகக் காணப்படாமையாற் சைதன்னியமே பலவெனக் கொள்ளிற் சைதன்னியம் பலவாக வேண்டுமென்பது தோன்ற ஆடிநிறைவாமேல் ஒன்றாகாவெனவும், சை தன்னியத்தையன்றிக் கற்பிதங்கட்குப் பொருளுண்டாமென் றே சைதன்னியம் பலவாகவேண்டுமெனத் தெளிந்தவிடத்தின்மையால் 'நீயங்காது' எனவுங் கூறியவாறு காண்க. (உ௬)

அ-லை.

சித்தையன்றிச் சத்தில்லை.

தெரிவன்றி யில்லை செகத்தோற்ற முண்டேற்
றெரிவன்றிக் காட்டுதியேற் றீர்வாங்—தெரிவென்றால்
என்னபொரு ளெவ்விடந்தா னெக்காலத் தென்னகுணம்
என்னபடி செய்யு மிசை.

(எ-நு.) சகத்தானது தெரிவைத் தவிர இல்லையென்னில்லை; உன்டென்னில் தெரிவைத் தள்ளிக் காட்ட வல்லையாயின் அதுவே தீர்ப்பாம். காட்டுவ திருக்கட்டும், தெரிவென்று சொன்னை அஃது தென்வகைப்பட்டபொருள் ? அதற்கிடமெங்கே ? எக்காலத்திருப்பது ? எவ்வண்ணமாயது ? அசேதனமும் அவையவமு மில்லாத இஃது எக்கருமங்களையும் எவ்வாறுயின் றியற்றுஞ் சொல்லுதி—எ-று. (உ௪)

அ-ரை௩.

அஃதின்னவகையாலெனல்.

இந்திரிய முண்டே யிருக்குஞ் செகத்தோற்றம்
இந்திரிய மின்றே லிலதாகும்—இந்திரியம்
உண்டா மனதுண்டே லுண்டா மதுவவன்
உண்டேலெங் காதார மோது.

(எ-நு.) பஞ்சேந்திரியமென்னுந் தெரிவு இருக்குமாயின் சகத்தோற்ற முண்டாயிருக்கும் ; அவ் விந்திரியத் தெரிவு இல்லையாயின் சகத் தோற்றமும் இல்லையாம் ; அவ் விந்திரியமும் மனதுண்டாயின் உண்டாயிருக்கும் ; அம்மனமுஞ் சீவனுண்டாயின் உண்டாயிருக்கும் இங்ஙனம் இருக்க, இப்போது சகத்துக்கு ஆதாரம் எங்கேயென நீயே சொல்லுதி—எ-று.
(உ௫)

அ ரை௪.

அங்ஙன மாயினுஞ் சத்தியமா யிருக்குஞ் சகத்தைத் தோற்றமென்ற தென்னையெனின், இருஷ்டி பேதத்தாலன்றி யுண்மையாகாதெனல்.

கண்ணாடி போலறிவு காண்பார்க்கெங் கேயுலகங்
கண்ணாடி மெய்யன்றிக் காணுமோ—வுண்ணாடிற்
பிம்ப மிடமறிவே பேர்த்துப் பிறிதென்னும்
வம்பமதப் பித்தரைப்போல் வாய்.

(எ-து.) கண்ணாடிநோட்டம் பார்ப்போர்க்கு அக்கண்ணாடியிற் றோற்றும் பிரதிபிம்பங் காணுமாறுபோல, அறிவுநோட்டம் பெற்றோர்க்கு அவ்வறிவிற் றோற்றும் பிரதிபிம்ப சகத்து எங்ஙனங் காணப்படும்? ஆகலின் கண்ணாடியைப்போலப் பிரதிபிம்பங்களை மெய்ப்பொருளாகக் காணுமாறுபோல் அறியப்படும்பொருளை யறிவைப்போல மெய்ப்பொருளாகக் கண்டிலம். சுருதி யுத்தி யநுபவத்தால் அகத்திற் சித்திக்குமிடத்தில் அக்கண்ணாடி யிடமாகவும் பிம்பம் வேறாகவும் பெற்ற பிரதிபிம்பம் போலாது பிரதிபிம்ப வுலகத்திற்கு அறிவே பிம்பமும் இடமுமாமென நியாயத்தாற் கூறுதுமன்றிப் பித்தரைப் போல ஒழுங்கின்றி வாதிக்கும் வம்பர்களாகிய சமயவான்களைப் போல மூடவாதத்தால இதற்கு மாறாகச் சகத்து வேறென வாயாற் பிறழ்ந்தும் கூறேம் ஈதறி—எ-று.

சாக்கிர கற்பித உலகமும் சொப்பன கற்பித உலகமும் அறிவை யன்றி யின்றாகலின் பிம்ப மிட மறிவே யென்றார். (உ௩)

அ-ரை.

அறிவே பிம்பமும் இடமுமா மென்ற தெங்ஙனமெனின்.

அறிவின் விகற்ப மனைத்துலக மாகி
யறிவி லுதித்தொடுங்கு மாங்கே—யறிவுதனைக்
காணி னிலைவிகற்பங் காணா விடத்துண்டாம்
பூணின் விகற்பங்கள் போல்.

(எ-து.) அறிவானது தனது சச்சிதாநந்த இலக்கணங்களை மறந்த விகற்பமே சகல புவனங்களாயும் அவ்விகற்பவுலகங்கள் உதித் தொடுங்குதற்குத் தானே யிடமாயு மிருக்கும்; இங்ஙனம் இருப்பதை

யறியவேண்டுமாயின் எவ்வாறு விரிவுற்றதோ, அவ்வாறு ஒன்றினொன்றை யடக்கி அவ்வறிவைக்காணின் விகற்பமென்பதின்றித் தான் மாத்திரமாய் விளங்கும். இங்ஙனங் காணாவிடத்து அறிவின் விகற்பம் நீங்காவாம். அது நீங்காவளவுங் கற்பனை உலகங்கள் உண்மையாகக் காணப்படும். பொன்னைப் பொன்னாகப் பணிக்கோடாதுங் காணுமிடத்துப் பொன்னே பலவேறு விகற்பப் பணிப்பதில்லையாகக் காணுமாறு போன்று—எ-று. (௨௯)

௩௦-தை.

அறிவின் விகற்பமே சகத்தாமென்றதை யேற்கின் அதனாலுண்டாந் தடைகளை நீத்தற் குபாயங் கூறல்.

அறிவு சகத்தாயி னசத்துசட மாகா
தறிவுக்கு வேறெனினு மாகா—தறிவென்றி
என்றா லறிவி னிலக்கணங்கண் டந்நெறியில்
நின்றாலப் போதறிவை நீ.

(எ-து.) அறிவே சகத்தாகப் பரிணமித்ததெனின், அசத்து சடதுக்கரூபமான சகத்துக்கு முதற்காரணமாயுள்ள அறிவும் அசத்து சட துக்க ரூபமாகவேண்டுமெனவரும்; வரின் எக்காலத்தும் இருந்து அறிவதாதலின் அங்ஙனமாகாது. ஆகாவிடத்து அறிவுக்குச் சகத்து வேறாகவேண்டுமெனவரும்; வரினும் அறிவு அபரிச்சின்னமாதலின் அங்ஙன மாகாதெனக்கூறின் யான் உய்யுமாறுதான் எங்ஙனம்? அறிவினது இலக்கணத்தைச் சந்தேக விபரீதமறவிசாரித் துணர்ந்து அந்நெறிக்கண் நிற்பையாயின் யான் மறுத் துரைப்ப தினொத்தையும் அப்போதறிவை—எ-று.

அறிவினிலக்கணத்தை யறியாது அறிந்தார்போற்கூறின் அதனாலுண்டாங் குற்றங்கள் இவையெனக் கூறுங்கோறும் யாதொருவரினும் மறுக்கின்றாரென்னும் வருத்த முண்டாமென்பதையறிந்து அதனைத் தணிப்பான் வேண்டி அப்போது அறிவை நீயெனக் கூறலாயிற்று. (௩௦)

அ-௩௧.

அறிவினை யிலக்கணாங் கூறுவான்வேண்டிச் சகத்துக்கு அபேதமா யுள்ள அறிவைப் பேதமாக்கிக் கூறிடினும் பேதப்படாதெனல்.

கடபடத்தைப் போலறிவு காணுலகை யென்பார்
கடபடத்தி னுண்மைதனைக் காட்டக்—கடபடத்தை
வேறுபடக் காட்டுதல்போல் வேறுபடக் காட்டுகினு
மாறுபடா தென்றே மதி.

(எ-து.) மண்ணுங் கடமும்போலும் நூலும் வஸ்திரமும்போலும் அறிவும் பிரத்தியட்சமாகக் காணப்படுஞ் சகத்தும் இருக்குமென்று அறிஞர் சொல்லுவர். அங்ஙன மிருக்கக் கட படத்தில் உண்மையா யுள்ளவை மண்ணும் நூலுமாதலால் அவற்றின் உண்மையை யெடுத்துக்காட்ட வேறுபடுத்தக்கூடாத அவ்வவற்றின் காரியமாகிய கடபடங்களை வேறுபடுத்திக் கூறுமாறுபோல் அறிவு சகத்தென்பவற்றில் உண்மையா யுள்ளது அறிவாதலால் அவ்வறிவி னுண்மையையெடுத்துக்காட்ட அஞ்ஞானத்தால் வேறுபடுத்தக்கூடாத அறிவினது காரியமாகிய சகத்தை ஞானத்தால் வேறுபடுத்திக் கூறிடினும் அக்கடபடங்கள் அவற்றின் காரணங்களுக்கு வேறுபடாவாறுபோலச் சகத்தானது தனக்குக் காரணமாயுள்ள அறிவினின்றும் வேறுபடாதென நீ மதித்தறிவாய்—எ-று.

சகத்துங் கடவுளும் விவர்த்தகாரண காரியமெனத் தெரிந்தார் போற்கூறுஞ் சமயவாதிகளை மறுத்து அறிவுஞ் சகத்தும் முதற்காரண காரியமென நியாயத்தால் நிச்சயித்ததென் றுணர்த்தக் கடபடத்தைப்போல் அறிவு காணுலகை யென்றவாறாயிற்று. என்னை? கடவுளுக்குச் சகத்து வேறிட்டதாமெனிற் பரிபூரணத்திற்குத் தோஷமும், கடவுளுக்குச் சகத்தெனிற் சுத்தன் நிர்விகாரி யென்றவற்றிற்குத் தோஷமும், பார்த்தவிடமெல்லாம் பரமன்காணென்பதனால் அவரே சகத்தெனிற் சகத்து சடமாதலின் ஞான சொரூபி யென்றதற்குத் தோஷமும் வருமாதலினென்க. (௩௧)

அ-கை.

நீர் கூறியதன்மையாயினுஞ் சித்து சடங்களின் இலக்கணம் அறியாது அவற்றின் உண்மையை யானுணர்தற்கரிதாமாதலின் அவ் விரண்டினுள் முன்னர்ச் சித்திலக்கணங் கூறவேண்டுமெனின் அச் சித்திலக்கணம் ஐந்தனுட் சத்திலக்கணங்கூறல்.

சச்சிதா நந்தநித்தந் தானகண்ட மாமறிவு
சச்சிதா நந்தமுதற் சாற்றுங்கொ—ழுச்சிதமாம்
பந்தமுத்தி முன்பினிடை பார்த்திருப்ப தாய்சத்தே
அந்தமற்ற வவ்வறிவுக் காம்.

(எ-நு.) சத்து சித்து ஆநந்தம் நித்தியம் அகண்டமென்னும் இவ்வைந்திலக்கணங்களையுமுடையது அறிவாம் இச்சச்சிதாநந்த முதலிய ஐந்திலக்கணங்களையும் யான் மொழியக்கேட்டி. மேற்கூறிய ஐந்தனுள் அந்தந்தக்காலத்து அதிசயமாகக் காணப்படும் பந்தமுத்தி யென்னும் இவ்விரண்டிற்கு முன்னும் பின்னும் இடையினும் பந்த முத்தியாகாது; அவற்றைச் சாட்சியாகப் பார்த்துக்கொண்டிருக்குந் தன்மையாதலால் அதுவே சத்தாம் நின்மலமின்றென்று சொலித் தற்கரிய அவ்வறிவுக்கு—எ-று.

வாலமதி பூகமதி யென்னும் இரண்டும் ஓர் பூமடிக்கண்ணே தோன்றி மறையினும் அவற்றோடவன் தோன்றி மறையாதவாறுபோல அஞ்ஞானமும் ஞானமும் அறிவின்கட் டோன்றி மறையினும் அவற் றோடு அவ்வறிவு தோன்றி மறையாததலினாலும் அவ்விரண்டு மதி களுக்கு முன்னும் பின்னும் இடையினும் பூமடமிருப்பான்போல அ ஞானஞ்ஞானங்கட்கு முன்னும் பின்னும் இடையினும் அறிவிருப்ப தாதலினாலும் பந்தம் முத்தி முன் பின் இடை பார்த்திருப்பதாய் சத் தேயெனப்பட்டது. இதனாற் பந்த முத்தி கற்பிதமெனவும் அறிவே யதார்த்தமெனவுங் கொள்க. பந்தமுத்தி கற்பிதமென்றதற்கு உதா ரணம்.

ஞானவாசிட்டம்.

"அந்த மற்றொன்றாய் விகற்பமற் றறிவா யழிவிலாப் பரம்பொரு ளிருக்கப், பந்தமுற் றவரார் வீடுபெற் றவரார் பாவனை விகற்பமா மனைத்தும்"

என்றதனாலும்,

சொரூபசாரம்.

"என்னையே யல்லாமல் யான்பெற்ற தேதுமிலை, யென்னைநான் பெற்றிருந்த தெப்போது - மென்னையன்றிப், பந்தமுத்தி யில்லையாம் பார்க்கிலிவை யாராயுந், சிந்தனையு மில்லாத தே."

என்றதனாலு முணர்க. (௬௰)

அ-௬௧.

சித்திலக்கணங் கூறல்.

எவ்வெவ் வுபாதிகட் டெங்கெங்கே தோற்றுகினும்
அவ்வவ் வுபாதிகளை யாங்காங்கே—யவ்வவற்றாய்
ஆயுமா காதுணரு மத்திமத்த தாற்சித்தே
நீயறிவுக் கென்றுணர்ந்து நில்.

(எ-று.) ப்ரதிபிம்போபாதி, அவிச்சின்னோபாதி, அத்தியாசோபாதி யெனக்கூறுமவற்றுள் எக்கெந்த வுபாதி தனது வியாபகத்தில் எங்கெங்கே தோற்றி மறையினும் அந்தந்த வுபாதிகளை யாங்காங்கே தான் அந்தந்த உபாதியாகாரமாயும் ஆகாதுணர்ந்துநிற்குந் தன்மையதாதலால் அதுவே யறிவுக்குச் சித்திலக்கணமா மென்றுணர்ந்து நீ யவ்வறிவின் னெறியில் நில்—எ-று.

எனவே, அவ்விதத்தன்மையது அறிவிற்கே யன்றி மற்றவைகளிற் கில்லெனக் கருதி யுத்தி யனுபவத்தாற் பெற்றாம். (௬௧)

அ-௬௨.

ஆனந்தலக்கணங்கூறல்.

சத்துசித் தொத்தவிடந் தானறிவா கந்தமெனல்
உத்தி யனுபவத்தா லுண்மையே—ஒத்தவையும்
உண்டே லறிவன்றி யுண்டாம் பிறிதின்பம்
கண்டார்க் கெஃதுண்மை காண்.

(எ-து.) சத்திலக்கணமுஞ் சித்திலக்கணமும் மாறுபாடின்றி ஒத்துநிற்குமிடம் அறிவாதலால் அதுவே யாநந்தமென வேதாந்திகள் கூறுதல் உண்மையோ, அன்றேல் வெறு மனைமுதலியவற்றுள் அவ் திரிபின்றிச் சோதிக்குமிடத்து அஃதுண்மையே; இதில் ஐயமில்லை; ஐய முளதேல் அறிவின்பாற் காணப்படும் பொருள்களனைத்தையும் அறி வன்றி யுண்டா யிருக்குமாயின் இன்பப்பொருள்களும் அறிவன்றி யுண் டாயிருக்கும். ஆதலால் நின்போலன்றி யாதார ஆதேயங்களை யொரு ங்கு காணவல்லோருக்கு இங்ஙனங் கூறியவற்றுள் எது உண்மை நீ கண்டறிதி—எ-று.

சத்து சித்து ஒத்தவிடமென்றது சத்தே சித்தும் சித்தே சத்து மான அவ்வவசரநிலையை. ஆதாரங் கண்டவிடத்து ஆதேயமின்றாக லும் ஆதேயங் கண்டவிடத்து ஆதாரமின்றாகலும் வாய்க்கும் வாய்க் கின் அறிவே சகத்தெனவும் ஆநந்தமெனவும் கணித்தல்கூடாதாம். ஆத லின் ஆதார ஆதேயங்களை யொருங்கு காண்போர்க்கென விசேடித் துரைகொண்டாம். சத்து சித்து ஒத்த விடந்தான் அறிவாநந்தமென லென்றதற்குதாரணம்

கைவல்லியநவநீதம்.

"சத்தே சித்தாகு மயலெனி லசத்தா மசத்தனுஞ் சடத்தொடொக் கே, சித்தே சத்தாகு மயலெனிற் சடமாஞ் சடங்களுக்குஞ் சித்தி மில்லை, யொத்தே தோன்றியசத்துஞ் சித்துமல்ல தானந்த முணர்ந்து நோக் கோர், வித்தே யன்னியமாகிற் சடமசத்தாஞ் சுகானுபவம் விளங் கிடாதே"

என்பதுணர்த்தாரென்க. சாக்கிரமுதலிய ஐந்தவத்தைகளும் அவ்வவற்றிற் றோற்றுங் காட்சிகளும் அவற்றாலுண்டாம் பிரியப்பகுதிகளும் அறிவின் வியாபகத்திலாதலால் அன்னிய மின்றென்பதாயிற்று. (௩௪)

அ-கை. இ-து.

அறிவின்ப மாகி னயலின்பம் வேண்டா
தறிவே வடிவாகி னாக—அறிவெங்ஙனிற்
சோதிமய மாய்வெளிய சொர்ணப் பணிபோலாம்
ஏதறிவுக் கன்னியமென் றென்.

(இ-ள்.) அறிவே யின்பவடிவாயின் தனக்கு அன்னியமாயுள்ள இன்பப்பகுதிகளைவேண்டுமோ, வேண்டாது. இங்ஙனமிருக்க வேண்டுகின்றதே யெனின், அறிவு தனது விகற்பவடிவாய் நில்லாது யதார்த்தவடிவாய் நிற்குமாயின் முன்போலத் தான் திணை பால் இடங்களாய் விகற்பிக்கவும் அன்னிய இன்பங்களாய்ச் சனிக்கவும் ஆகாது. அங்ஙனமாயின் அறிவினது யதார்த்தவடிவந்தான் யாதோவெனின், சோதிமயமாய் விளங்குஞ் சிதாகாசமே யெனவும், பொன் பல பணி பேதங்களாய்த் தோற்றுமாறுபோலச் சிதாகாசமே சகசீவ பரமாகத் தோற்று மெனவும், இங்ஙனமிருத்தலின் அறிவுக்கு அன்னியமென்பது ஏது எனவும் நிச்சயித்துணர்தி—எ-று.

எவ்வுயிரும் அறிவு வடிவாதலால் அவ்வுயிர் அறிவு வடிவாய் நில்லாது விகற்பித்து நிற்குமாதலின் அவ்விகற்ப வடிவே யானெனதெனக் காணப்படும். அங்ஙனங் காணப்படுவனவே பிரிய வடிவா மன்றி வேறின்மையால் அந்நிலைக்காட்சி யுடையோனு மினனும் அறிவின்பமாயின் அயலின்பம் வேண்டாதென விளைவிளைவென்க. (௩௫)

அ-கை.

நித்தியவிலக்கணங் கூறல்.

எல்லாமா யல்லவுமா யேற்குமறி வுக்கிலைதாம்
இல்லாமுன் பின்னிடையி லெப்போதும் — நல்லாய்கேள்
வந்திமகன் கானலென வாயா லறிவென்று
தந்தமுத லற்றிருப்ப தால்.

(எ-து.) சகல சராசரங்களாயும் அல்லாததாயுமிருக்குந் தன்மையை யேற்பதுபோலேற்கும் அறிவுக்குச் சகல பேதங்கள் முன்னும் பின்னும் இப்போதும் எப்போதும் இல்லையாம். நன்மார்க்கமுடையவனே. யான்சொல்லுவதைக் கேள், அறியப்படுவதுபோன்ற அறிவானது தன்னை யெக்காலத்தும் வாயால் வந்தியாபுத்திரன் கானல்நீர் என்றுவமித்தற் குடன்படாது. அஃது யாதிருக்கின்ற ஆதியந்தமின்றிச் சதோதயமாய் விளங்கி நிற்பதுபற்றி—எ-று.

உண்மையாயுள்ள அறிவைக் கருதிச் சகல பேதங்களை நோக்குங்காற் சொன்மாத்திரமாயுந் தோற்றன் மாத்திரமாயும் அவ்வறிவைக்கருதாது அவற்றை நோக்குங்கால் உண்மையாயு மிருக்குமாயினுங் கடவுபாதிக்கு முன்னும் பின்னும் இடையினும் எப்போதும் முன்னை மண்ணுக்கு நித்தியத்துவமென்றாற்போல ஆத்தும தத்துவம், வித்தியாதத்துவம், சிவதத்துவ மென்பவற்றிற்கு முன்னும் பின்னும் இடையினும் எப்போதுமுள்ள அறிவுக்கே நித்தியத்துவ மென்பது தோன்ற இவை தாமில்லா முன் பின் னிடையி லெப்போதும் என்னப்பட்டது.

வினா: முன் பின் எப்போது மென்றது உண்மையே யாயினும் இப்போது சகத்து உளதா யிருக்க இல்லையெனவும், உள்ளது அறிவே யெனவுங் கூறியது எங்ஙனம்?

விடை: கடவுபாதி யிருக்கையினும் மண்ணேயன்றிக் கடமென்பதற்குப் பொருள் சொல்மாத்திரமுந் தோற்றன்மாத்திரமும் ஆமாற்போலச் சகத்து இருக்கையிலும் அறிவையன்றிச் சகத்தென்பதற்குப் பொருள் சொல்மாத்திரமுந் தோற்றன்மாத்திரமுமா மென்பது வென்க.

வினா: என்னை?

விடை: மண்ணையன்றிக் கடமுளதாயின் அறிவையன்றிச்சகத்து முளதாம். அன்றெனின் மண்ணையன்றிக் கடம் இன்றாதல்போல அறிவையன்றிச் சகத் தின்றாமென வறிக. இதனால் எப்போதும் உள்ளது அறிவென்பதாயிற்று.

வினா: சகத்துக்கு முதற்காரணம் அறிவாயின் மாயை முதற் காரணமெனக் கருதி கூறுவது என்னை?

விடை: அறிவை யுருவாகப்பெற்ற அபக்குவர்க்குத் திரிசியமா யுள்ளவை காரண காரியமாதலினென்க.

வினா: அறிவை யகத்தாகப்பெற்ற வேதாந்திக்கு மாயை யுடன் பாடன்றோ?

விடை: உடன் பாடுபோற் கூறுவரன்றி யுடன்பாடுடையரன்று.

வினா: அஃதெங்ஙனம்?

விடை: பழுதையிற் பாம்பும், கானலில் நீரும், இளிஞ்சலில் வெள்ளியும் இல்லா திருந்தும் உளவாகத் தோற்றுமாறுபோல, அறிவின்கண் சகமில்லா திருந்தும் உளவாகத் தோற்றுந் தோற்றமே மாயையெனப் புறம்பிற் கூறுவரன்றி அவரைப்போல் இவருக்கு அகத்தின் மயக்கின்றென உணர்க. (௩௯)

அ-ரை.

௪௰. சீவ யாம் நித்தியமன்றோவெனின் அன்றென மறுத்தல்.

தோன்றி மறைவதுவன் றொல்லறிவோ தத்துவமோ
ஆன்றவறி வெள்ளறிவை யோர்கண்டார்—மூன்றவத்தைக்
கண்டுருப்ப தெதறிவோ கண்டா யநாதித்தம்
அண்டர்முத லெவ்வுயிர்க்கு ளாம்.

(ஏ-று.) இங்கே தோன்றிமறைவது அறிவோ, தத்துவக்கூட்ட மாயுள்ள அறியும்பொருளோ என்னுஞ் சங்கைக்குச் சிறந்த அறிவே

எல்லாமா யல்லவுமா யேற்குமறி வுக்கிவைதாம்
இல்லாமுன் பின்னிடையி லெப்போதும்—நல்லாய்கேள்
வந்திமகன் கானலென வாயா லறிவென்று
தந்தமுத லற்றிருப்ப தால்.

(எ-து.) சகல சராசரங்களாயும் அல்லாததாயுமிருக்குந் தன்மையை யேற்பதுபோலேற்கும் அறிவுக்குச் சகல கேவலங்கள் முன்னும் பின்னும் இப்போதும் எப்போதும் இல்லாவாம். நன்மார்க்கமுடையவனே. யான்சொல்லுவதைக் கேள், அறியப்படுவனபோலன்று அறிவானது தன்னை யெக்காலத்தும் வாயால் வந்தியாபுத்திரன் கானல்நீர் என்றுவமித்தற் குடன்படாது. அஃது யாதிருமெனின் ஆதியந்தமின்றிச் சதோதயமாய் விளங்கி நிற்பதுபற்றி—எ-று.

உண்மையாயுள்ள அறிவைக் கருதிச் சகல கேவலங்களை நோக்குங்காற் சொன்மாத்திரமாயுந் தோற்றன் மாத்திரமாயும் அவ்வறிவைக்கருதாது அவற்றை நோக்குங்கால் உண்மையாயு மிருக்குமாயினுங் கடவுபாதிக்கு முன்னும் பின்னும் இடையினும் எப்போது முள்ள மண்ணுக்கு நித்தியத்துவமென்றாற்போல ஆத்தும தத்துவம், வித்தியாதத்துவம், சிவதத்துவ மென்பவற்றிற்கு முன்னும் பின்னும் இடையினும் எப்போதுமுள்ள அறிவுக்கே நித்தியத்துவ மென்பது தோன்ற இவை தாமில்லா முன் பின் னிடையி லெப்போதும் என்னப்பட்டது.

வினா: முன் பின் எப்போது மென்றது உண்மையே யாயினும் இப்போது சகத்து உளதா யிருக்க இல்லையெனவும், உள்ளது அறிவே யெனவுங் கூறியது எங்ஙனம்?

விடை: கடவுபாதி யிருக்கையினும் மண்ணையன்றிக் கடமென் பதற்குப் பொருள் சொல்மாத்திரமுந் தோற்றன்மாத்திரமும் ஆனாற் போலச் சகத்து இருக்கையினும் அறிவையன்றிச் சகத்தென்பதற்குப் பொருள் சொல்மாத்திரமுந் தோற்றன்மாத்திரமுமா மென்பதுணர லென்க.

வினா: என்னை?

விடை: மண்ணையன்றிக் கடமுளதாயின் அறிவையன்றிச்சகத்து முளதாம். அன்றெனின் மண்ணையன்றிக் கடம் இன்றாதல்போல அறிவையன்றிச் சகத் தின்றாமெனவறிக. இதனால் எப்போதும் உள்ளது அறிவென்பதாயிற்று.

வினா: சகத்துக்கு முதற்காரணம் அறிவாயின் மாயை முதற் காரணமெனக் கருதி கூறுவது என்னை?

விடை: அறிவை யறிவாகப்பெற்ற அபக்குவர்க்குத் திரிசியமா யுள்ளவை காரண காரியமாதலினென்க.

வினா: அறிவை யகத்தாகப்பெற்ற வேதாந்திக்கு மாயை யுடன் பாடன்றோ?

விடை: உடன் பாடுபோற் கூறுவரன்றி யுடன்பாடுடையரன்று.

வினா: அஃதெங்ஙனம்?

விடை: பழுதையிற் பாம்பும், கானலில் நீரும், கிளிஞ்சலில் வெள்ளியும் இல்லா திருந்தும் உளவாகத் தோற்றுமாறுபோல, அறிவின்கண் சகமில்லாதிருந்தும் உளவாகத் தோற்றுந் தோற்றமே மாயையெனப் புறம்பிற் கூறுவரன்றி அவரைப்போல் இவருக்கு அதனிற் பயனின்றென உணர்க. (௧௬)

அ-டை ௩.

சகமிவ்வாறு நித்தியமன்றோவெனின் அன்றென மறுத்தல்.

தோன்றி மறைவதிவண் டொல்லறிவோ தத்துவமோ
ஆன்றவறி வென்னிலவை யார்கண்டார்—மூன்றவத்தைக்
கண்டிருப்ப தேதறிவேற் கண்டா யநுசிதம்
உண்டா முதலெவ்வுயிர்க்கு ளாம்.

(எ-து.) இங்கே தோன்றிமறைவது அறிவோ, தத்துவக்கூட்ட மாயுள்ள அறியும்பொருளோ என்னுஞ் சங்கைக்குச் சிறந்த அறிவே

யெனக் கூறின் எங்கே எவர் அறிவைக் கண்டார்? அன்றியும் அறிவு தோன்றி மறையு மாயின் மூன்றவத்தைகளையும் அவற்றின் காட்சிகளையும் அவற்றால் உண்டாகும் சுக துக்கங்களையும் அங்ஙங்கே சாட்சியாய் நின்றுணர்ந்து, பின்னர் அறிவுறுத்துவது யாதெனவினவ அதற்கு மாணாக்கன் தோன்றி மறைவது திரிசியமெனவும், எப்போதும் இருந்தபடியே யிருந்தறிவது அறிவே யெனவும் உணர்ந்தோனெனக்கூற, அறிவாயின் அவ்வறிவே பிரமமுதற் பிபீலிகாந்தமா யாயுள்ள சகல உயிர்களுள்ளும் நித்தியமாமென்று இவ்வுத்தியாற் காணுதி —எ-று.

வினா: ஆயின் சகசிவ பரம் அநாதி நித்தியத்துவமெனச் சுருதி சம்மதித்த தென்னை?

விடை: தன்மை முன்னிலை மயக்க மமுற்ற அபக்குவர்க்காக வென்க.

வினா: அவரது மயக்கத்தைப் போக்காது அதில் ஆழ்த்துதல் நன்றோ?

விடை: யார்க்கு எது பிரியமோ, அஃது அவர்க்கு நியாயமாகத் தோற்றலினாலும், அதை மறுப்பது அவர்க்குப் பகையாமாதலினாலும், அப்பகைமை பாராது இடித்துச் சொல்லினும் வெறுப்பாமாதலினாலும் அவ்வெறுப்பால் மனன முதலியவை செயற்பாலதன்றாக லானும், செய்யா விடத்துச் சொல்லினும் வீணாமாதலினாலும் என்க.

வினா: ஆயின் அவன் உய்யுமாறுதான் எங்ஙனமோ?

விடை: அவரவர் வழியே யவரவரை விடுத்து மீட்கவேண்டு மென்க.

வினா: அவர் மீள்வரென்பதற்கு இடம் என்னை?

விடை: பிறப்பிறப்பு மாறுதலினாற் பிறந்துபிறந் தின்பதுன்பங் களில் மொத்துண்ணுந்தோறும் எய்ப்பு வரும்; அது வருந்தோறும்

துன்பம் எப்போதும் வாராது தடுக்கத்தக்க புண்ணிய கருமம் யாதென விசாரிக்கும் விசாரம் வரும்; அவ்விசாரத்தாற் புண்ணிய கருமம் இயற்றி அப்புண்ணிய பலத்தில் சிறப்புறிச் செல்வச் செருக்காற் றன்னை மறந்து தீவினை யெவ்வாறேனுஞ் செய்யவேண்டி வரும்; வரின் அந்த வினைக்குத் தக்க தனுகரண புவனபோகம் வரும்; இப்படியே நல்வினை தீவினை மாறிமாறிச் செய்துகொண்டிருக்குந்தோறும் புண்ணிய பாவங்கள் மாறிமாறி வந்துகொண்டேயிருக்கும். ஆதலால் இவ்விரண்டு கன்மங்களினாலுந் துன்பமேயன்றி யெட்டுணையுஞ் சுகமின்றென வெறுப்புவரும். அப்போது இவ்விரண்டு மல்லாத கன்மம் யாது புரியின் சுகதுக்க நீங்குமென விசாரம் வரும்; வரின் ஆத்தும விசாரம் பண்ணவேண்டுமென்னும் புத்திவரும் ஆகையால் அதுவே மீள்வதென்பதற்குத் திடமென்றறிக. (௧௭)

அ-கை. இ-ரு.

காலம் வெளிநித்தங் காணுமவுந் தன்விகற்புக்
கேதுவறி வென்றுரைக்கி னென்னபிழை—சாலப்
படித்தோ ரிதையுன்னிப் பாராது கேட்கில்
அடித்தலமில் லாச்சுவரி னாம்.

(எ-று.) அறிவுக்கே நித்தியத்துவ மென்றதை வைப்புறுத்துவான்வேண்டித் தத்துமக்குரிய விகற்பங்களுக்குக் காலம் வெளியென்னும் இரண்டும் நித்தியத்துவமாகக் காணுமாயின் அறிவுந் தனது விகற்பங்களுக்குத் தானே நித்தியத்துவமாகக் காணுமென் றுரைக்கின் அதனாலுண்டாங் குற்றமென்னை? மிதமின்றிக் கற்றுணர்ந்த மாணாக்கனே இவ்வுறுதி மொழிகளைச் சிந்தித்துப் பாராது வீணிற் சங்கிப்பையாயின் அஸ்திவார மில்லாச் சுவர்போல் அம்மொழிகள் பயன்படாவாம்—எ-று.

கணம், நாழிகை, முகூர்த்தம், சாமம், இரா, பகல், நாள், மாதம், பருவம், வருடம், யுகம், கற்பமுதலிய கால விகற்பங்களும் அவ

ற்றுளுண்டாம் பயன்களும் மாறிமாறி வரினும் அதற்கு முதற்காரண மாயுள்ள காலம் அங்ஙனமாகாது நித்தியமா யிருத்தலினாலும், மேல் கீழ் என்பவற்றோடு கிழக்கு முதலிய பத்துத் திக்குகளும் பேதிக்கி னும் அவற்றிற்கு முதற்காரணமா யுள்ள வெளி யானது அங்ங னமாகாது நித்தியமா யிருத்தலினாலும் இவ்விரண்டையும் ஆவிக்கு உவமை கூறியவா றாயிற்று.

வினா: நித்தியத்துவம் வாய்த்தலின் இவ்விரண்டையும் ஆவியெ ன்றாற் றோடமென்னை?

விடை: சித்திலக்கணம் இன்றாதலினாலும் அறியப்படும் பொரு ளாதலினாலுங் கூடாதென்க.

வினா: ஆயின் காலப்பிரமவாதிகள் காலத்தைப் பிரமமென்றது என்னை?

விடை: சகல சீவ பரம் காலத்திற் றோன்றி மறையினும் தான் அங்ஙனம் ஆகாது சதோதயமா யிருத்தலினா லென்க.

வினா: நீர் அதனை மறுப்பது என்னை?

விடை: பிரக்ஞைக்கு முன்னும் பின்னும் இன்றாதலினாலும், சட மாதலினாலும், சர்வக்ஞத்துவமுதலிய குணங்கள் இல்லாமையினாலு மென்க.

வினா: இதன்றியுஞ் சூனியப்பிரமவாதிகள் பாழியத்திற் சூனிய மாயுள்ள வெளியைப் பிரமமாகப் பிரதிவாதிப்பது என்னை?

விடை: மண், நீர், அனல், காலென்னும் நான்கு பூதங்களும் அவற்றாலாய பூமி, சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள், கிரகங்கள் முதலியனவும், இவைபோல்வன பிறவும், மரங்கள் முதலிய அநேகத் தோற்ற வடிவங்களும், பரமாணுக்களா யுள்ள நுட்ப வடிவங்களு மாகிய இவை நிற்றற் காதாரமாயும் இவற்றிற்கு அகத்தும் புறத்தும்

பரிபூரணமாயும் இவையனைத்துந் தனது விகாரவடிவாயும் இவை யுருப்பட்டபின்னுந் தான் அங்ஙன மாகாது இருந்தவண்ண மிருக்குந் தன்மைய தாதலினானும், தேவர்முதலிய நாற்கதிகளுந் தனதிடத்த தாதலினானும், அக்கல் முதலிய பஞ்சகிருத்தியங்களுந் தன்பால் நிகழ்வ தாதலினானும், யாவராலுந் தன்னை யின்னவடிவினதெனக் கணித்தற் கரிதாமாதலினானும், எக்காலங்களுந் தன்கண்ணதாதலினானும், இதுகாறும் பிறந்திறந்தன யாவும் வெற்றவெளியாயினவென்று உலக வசனமிருத்தலினானும், இப்போது பிறந்திருக்கின்றன யாவும் இனிப் பிறக்கப்போகின்ற யாவும் வெற்றவெளியாமென்பதற்கு ஐயமின்றாதலினானும், எவ்வெவ்வே தோன்றினும் அங்கங்கே வெளிநிறைவாயிருக்கின்றமையானும், புறம்பேயுள்ள ஆகாயம் வந்ததெனில் அவ்வாகாயங் குறையா திருக்கின்றமையற்றி யாவும் வெளிமயமே யன்றி அன்னிய மொன்றில்லாமையினானும், உள்ளது வெளியாதலால் வெளியல்லா இடமும் பொருளு மில்லையாதலினானும் பந்தநீங்கி முத்திபெறவேண்டினோர் எக்காலுமெப்போது மிவ்வெளிநாட்டமேகண்ணுறுமின் அண்ட முதலிய உருவ பேதங்களும் இட பேதங்களுங் கால பேதங்களுந் தோற்றவே தோற்றுவாம்· அச்சாதனை முதிர்ந்தவரின் ஆணவம், மாயை, கர்மம் நீங்கும்; அது நீங்க யான் எனதென்னும் அகம்பாவம் நீங்கும்; நீங்கவே, நிராதிசயானந்த முண்டாம்; அந்நிராதிசயானந்தமே முத்தியாமென்க. இதற்குப் பிரமாணம்:—

"அண்டமென் டிக்கெங் கண்ணுமடங்கச்சூ னியமதாகக், கண்டு
கொண் டிருக்கக்கண்ட கருத்தையு மறவே விட்டால், அண்டமென்
டிக்கெங் கண்ணு மாய்நின்ற வானந் தத்தைக், கண்டுகொண் டிருக்கும்
வண்ணங் கணத்தில்வந் துதிக்கு மன்றே." (௯௮)

அ–௯௧.

பரிபூரண விலக்கணங் கூறல்.

தூங்குவார்க் கின்றாகித் தூங்காதார்க் குண்டெனும்
ஈங்கதுவாய் நின்றறிவுக் கென்றுரைப்பாம் — ஆங்கதனுங்
காதார மாமறிவுக் காதேய மெங்குண்டாம்
ஆதாரம் பூரணமே யாம்.

(எ-று.) தோற்றமும் மறைப்புஞ் சகத்துக்கென்கைத் [illegible] னின் எவ்வுயிருக்கும் ஒருங்கே தோன்றி மறையவில்லை; அங்ஙன மாகாது உறங்குவோர்க்குக் காணப்படாதும் உறங்காதோர்க்கு அக் கணத்திற்றானே காணப்பட்டு மிருக்குமா? இல்லை. இத்தன்மைத்தி யிவ்விரு தன்மையுஞ் சகத்துக் கன்று. இங்ஙே [illegible] எங்கெங்கே பரிணமித்ததோ, அங்கங்கே யுளதாயும், [illegible] மித்த தில்லையோ, அங்கங்கே யிலதாயும் இருக்குமல்லவா? [illegible] யறிவுக்கேயெனக் கூறும். அங்ஙனங் கூறப்படும் அறிவு [illegible] தற்கும் அவிச்சின்னமாதற்கும் ஆதாரமாயுள்ள [illegible] பவற்றுள் சமவறி வெனப்படும்; அச் சமவறிவுக்கு [illegible] முபாதிகள் எங்ஙன முண்டாம்? உண்டாகா [illegible] அறிவே பரிபூரணமா மென்றறிதி — எ-று.

அறிவானது தனது வியாபகத்தை மறந்து [illegible] மெனவும், அவ்வேகதேசமே யுபாதித்திரமெனவும், [illegible] யம் அறிவன்றித் தானொரு முதலாகாதெனவும், [illegible] தோற்றம் மறப்பென்பவற்றை யேற்குமெனவும் பெறும்.

வினா: இங்ஙனமாயின் முன்னர்ச் சகத்துக்குத் தோற்றம் மறைப் பென்றது என்னை?

விடை: சகத்து ஒரு முதலெனக்கொண்டு அதற்கு [illegible] யத்துவங் கற்பிப்பாரை மறுத்தற் கென்க. (௬௩)

அ-ணக. வெ-ரு.

அறிவொன்றே தப் பூரணைத்தா மூகா தனைத்தும்
அறிவுக் குபாதிகளை மாகா — அறிவெல்லாம்
ஒன்றாகப் பற்றி யுரைத்தா மகண்டமெனல்
அன்றேறற் றவிடையோன்ன வாம்.

(வெ-ரு.) தன்போல் அறிவென்ப தொன்றுமின்றித் தான்மாத்திரம் இருத்தலின் அவ்வறிவு பரிபூரண லக்ஷண முடையதுதான். அங்ஙனமாகவும் அறிவு பலவா யிருத்தலின் அவ்விலக்கணங் குறைவுடைய தென்பாராயின் மெய்யே. உபாதி குணங்களைப்பற்றி யறிவு பலவாகக் காணும், அவனின் அறிவின் இலக்கணத்திற்கு மாசு மாதலினாலும், அறிவொன்று கைப்பற்றிக் கிடப்பினும் அது கலைவா காதலினாலும், அவ்வுபாதி குணங் கொண்டிருக்கின்ற அறிவாகாமையும் இதனால் உபாதி குணங்களிலின்றும் அறிவினைத் தனித்தெடுக்கலாகாமையின் ஒன்றுமாதலால் அது பற்றி யகண்டமென்றும் இலக்கணத்தை யறியக்கடவென்றுரைத்தனம். கடாவெதிர் மறுமையாயின் அந்நாளில் கூறுவதா னுண்டாங் குற்றமென்னை நீ கூறுதி — எ-று.

கடங்கட்டாறு நிறைவயுள்ள வெளி அக்கடதேர்க்காற் பலவாறாகத் தோற்றுமாறுபோலத் தலத்துக்குமாகாரணமென்றுமுபாதித்திரய சேர்க்கால் அவற்றின்கண் நிறைவா யுள்ள அறிவென்றுந் திரயாசம் பலவாறாகத் தோற்றுமாதலால் அறிவு அநந்த மெனவும், கடகோசங்கள்விட்டு அவற்றின்கண் நிறைவாயுள்ள வெளிகாட்டம் பெறுமாராயின் அக்காட்டத்தாற் கடபேதங்கள் நீங்கி அவ்வெளி யாவும் ஒன்றாகக் காணுமாறுபோல உபாதித்திரய நோக்கை விட்டு அவற்றின்கண் நிறைவாயுள்ள சிதாகாசகாட்டம் பெறுவாராயின் அக்காட்டத்தாற் பலவாறுயுள்ள உபாதித்திரயங்கள் நீங்கி அச்சிதாகாசம் யாவும் ஒன்றாகக் காணுமாதலால் அறிவெல்லா மொன்றாதல் பற்றி யெனவுங் கூறலாயினர். இதனால் அறிவைப்போல் அறிவில்லாமையால் அறிவுக்குக் காரண மின்றென்பதாயிற்று.

வினா: சுசாதிக மின்றாயின்தேக போக கன்மம் அபிமானம் வெவ்வேறா யிருப்பானேன்?

விடை: தன்னைத் தான் விசாரித்தறாத் தெளியாமையாலெனக.

வினா: தெளிந்தார்க்கும் உண்டா யிருப்பானேன்?

விடை: சொரூப நாசம் அரூபநாசம் என்பவற்றுள் அரூப நாசம் வாராமையாலெனக.

வினா: சொரூபநாச மாவது என்னை?

விடை: சிற்பிரகாசத்தால் தனக்கன்னியமாகக் காண்பவற்றை யெல்லாம் நீக்கித் தானாகக் காணல்.

வினா: அரூபநாசமாவது என்னை?

விடை: ஊணுறக்கமின்றித் தானே தானாதலெனக.

வினா: யோகமும் இங்ஙனம் இருப்பதன்றோ?

விடை: இருக்கினும் அவித்தை யறாததால் அன்றெனை மறுக்க.

வினா: அறிவுக்குச் சுசாதிகமின்றெனக் கண்டோரும் அறிவை யாண்டான் அடிமையாகப் பகுத்துப் பிரலாபிப்பது என்னை?

விடை: தமக்கன்று; முன்னர்த் தாம் இந்நெறியில் நின்று உய்ந்தாற்போல ஏனையோரும் நின்று உய்தற் பொருட்டெனக. (சO)

அ-கை. இ-நு.

ஞாபகம்வே றாகிலெதிர் நண்ணும் பொருள்காணா
ஞாபகந்தா னாகிலெதிர் நண்ணுமோ—ஞாபகந்தான்
இல்லா விடமில்லை யில்லாப் பொருளில்லை
எல்லா மதுநிறைவென் றெண்.

(எ-து) ஞாபகம் வேறா யிருக்குமாயின் எதிரேயுள்ள பொருள்கள் காணுமா? காணாவே. அதுபோல ஞாபகமானது சிரவணமுதலிய வற்றால் ஐயந்திரிபின்றித் தானேதானா யிருக்குமாயின், தனக்குவெளி

ருக்தமா யொன்றுளதாகக் காணுமா? காணுதே. இஃதன்றியும் ஞாபக மில்லாத இடங்களுமில்லை; ஞாபகமில்லாத பொருள்களுமில்லை. ஆதலின் எல்லாம் அதுவே பிறைவா யிருக்கின்றதெனச் சிந்தித்தறிதி— எ-று.

இதனுல் ஞாபகத்தையன்றி வேறில்லாமையால் விசாதிகம் இன்றென்ப தாயிற்று. ஞாபகமானது ததாகாரமாகுங்கால் தஸ்மரணை யெனவும், இதராகாரமாகுங்கால் விஸ்மரணையெனவுமா மென்று சத்துக்கள் சொல்லுவார்கள்.

வினு: விசாதிகமென்ருல் என்னை?

விடை: மரத்துக்குக் கல் வேறுசாதியென்பது.

வினு: அறிபடுபொருளும் அறிவாமோ?

விடை: மரநாட்டத்தால் யானைவாகனம் மரமாகக் காணுமாறு போல அறிவு நாட்டத்தால் இரிசிய மனைத்தும் அறிவாய் விளங்குமென்க. (சக)

அ-கை. இ-து.

பொருளல் லவற்றைப் பொருளென் றுணரும்
மருளே பிறப்பிறப்பா மன்னும்—தெருளில்லாச்
சொப்பனமே சாக்கிரமாத் தோற்றுமறி வைக்காணின்
எப்பிரமை யெங்குண் டிசை.

(எ-து.) கானலை நீரெனவுங் கிளிஞ்சலை வெள்ளி யெனவுங் கருதித் துணிந்தாற்போல அறிவானது தானல்லாதனவற்றைத் தானெனக்கருதித் துணியுமயக்கமே சனனமரணங்களாகவுந் தன்னை யுள்ளவாருகக் காணுந் தெளிவின்றியசொப்பனமே சாக்கிரமாகவுந் தோற்றுமாதலால் அம்மயக்க மறவேண்டினேர் அவ்வறிவை அகம்புறமின்றிக் காணுங்கால் எந்தமயக்கம் எங்கேயுண்டு நீ சொல்லுதி—எ-று.

மன்னுந் தோற்றுமென்ற பெயரெச்சங்கட்கு அறிவை முடிக்குஞ்சொல் லாக்குக. எவ்வகைத் தோற்றங்களும் அறிவின் விகற்ப

மென்றுணர்ந்து அவற்றை அறிவாகக் காண வல்லராயின் அன்னியமொன்றின்றித் தானாய்விளங்குமாதலால் அதுவே பரிபூரணமாமெனக்கொள்க.

வினா: சுவகதபேதமாவது என்னை?

விடை: ஓர்மரத்தின்கண் தளிர், இலை, அரும்பு, பூ, பிஞ்சு, காய், கனி, கொம்பு, கிளை, சாகை, வேர் முதலியவை யடங்கியின்றாற்போல, சித்து சடபேதங்களாயுள்ளவைகள் எவ்வளவோ அவ்வளவும் அறிவின்கண் தங்கி நிற்பதெனவறிக.

வினா: இக்கவியில் இச்சுவகதபேதப் பொருளை விளக்குவது எங்ஙனே?

விடை: பொருளல்லவற்றைப் பொருளென்றுணரு மருளே பிறப்பிறப்பா மென்னுந் தெருளில்லாச் சொப்பனமே சாக்கிரமாதலோற்று மறிவென்பதின்கண்ணெனவறிக.

வினா: சுவகதபேத முண்டாயிருக்க, அறிவுக்கு அஃது இன்றென்பதெங்ஙனம்?

விடை: அறிவை அறிவாய் எங்ஙனுங் காணின் இன்றுமெனவறிக.

வினா: சாக்கிரத்தைச் சொப்பன மென்றது என்னை?

விடை: சொப்பனத்திற் பஞ்சபூத பௌதிகமல்லாத பொருளை யப்பஞ்சபூத பௌதிகப் பொருளெனவும், ஆண் பெண் அலியல்லாதனவற்றை யாண் பெண் அலியெனவும், கர்த்தா போக்தா வல்லாதவற்றைக் கர்த்தா போக்தாவெனவும், தன்மை முன்னிலை யல்லாதவற்றைத் தன்மை முன்னிலை யெனவும், சுகதுக்க மல்லாதவைகளைச் சுகதுக்கமெனவும் அப்போது உண்மையாகக் காணுமாறுபோல, சகசீவபரமல்லாத அறிவைச் சகசீவபரமாகக் கண்டு இருமாக்கத் தக்கது சாக்கிர மாதலால் அதனைச் சொப்பனத்துக்கு உவமை கூறியவாறாயிற்றென்க.

விஞ: ஆயின் சாக்கிரமாவது என்னை?

விடை: எக்காலுந் தோற்றி மறைவனவாகிய ஞானஞ்ஞானப் பகுதிகளா யுள்ளவற்றை அவற்றிற்குச் சாட்சியாயும் விலட்சண மாயும் ஆங்காங்கே நிறைவாயும் எப்போதும் இருந்தவண்ணம் இருந் தபடியும் அறிவே வடிவா யிருப்பதென வறிக.

விஞ: பொருளல்லவற்றைப் பொருளென்றுணரும் மருளே பிற ப்பிறப்பா மென்னு மென்பதற்குப் பிரமாணமுண்டோ?

திருக்குறள்.

விடை: "பொருளல் லவற்றைப் பொருளென் றுணரு
மருளானு மாணாப் பிறப்பு"

என்பதனாலும்,

"நானலா தொன்றுதன்னைத் தானெனக் கருதிக்கொண்டே
யானெலாஞ் செய்தேனென்னும் ஞானமஞ் ஞானமத்தா
லீனமாம் வினையிரண்டா மிருவினையா லுடம்பாம்
ஊனமாருடம்பா லூழா மூழினா லாகாதுண்டோ"

என்பதனாலு முணர்க. (௬௨)

அ-கை.

சுசாதி விசாதி சுகத பேத மென்னும் வஸ்துபரிச்சேத மின்றாயி னும் தேசபரிச்சேதமாயினும் அறிவுக் கின்றேவெளி லின்றெனல்.

பரிச்சின்ன மில்லாப் பரிபூரணத்தாக்
கிருப்பிடந்தா னேதென் றியம்பின்—இருப்பிடந்தான்
உண்டேல் வெளிக்கிங் குரைப்பா மறிவுக்கும்
அண்டா தெனிலொப்ப தாம்

(எ-று.) முன்னர்க் கூறிய சுசாதிகம் விசாதிகம் சுவகதபேதமெ ன்னும் வஸ்து பரிச்சேதமின்றிய பரிபூரண அறிவுக் கிருப்பிடந்தான் யாதோவெனக் கேட்பையாயின் மெய்யே யெங்குமாய் நிறைந்துள்ள

வெளிக்கு இருப்பிடமுண்டாயின் அறிவுக்கும் இருப்பிடமுண்டாகக் கூறுதும்; மனவாக்குக் காயத்தால் இடங் கணித்தற்கு வெளியுண் டாதெனின் அறிவும் அதுபோல்வதாமெனை வழீஇ—யுஅ.

தானிலா இட மின்றாதலின் அறிவுக்குத் தேசபரிச்சேதமின் றென்ப தாயிற்று. இங்கே தேசமென்ப திடம்.

விஞ: அறிவுக்கு வெளி யிடமென்றால் என்னை?

விடை: அறிவின் விகற்பங்களுக்கன்றி அறிவுக்கன்றென்க.

விஞ: அறிவையன்றி விகற்பங்கள் வேறன்றாதலின் அறிவுக்கிட மென்றாற் றேடம் என்னை?

விடை: அவ்விகற்பங்கள் சமட்டி வியட்டியெனப்படும். அவற் றுள் சமட்டி ஆகாயமுதலிய பஞ்சபூதமும், வியட்டி அதின்காரிய மாகிய தேகப்பகுதிகளும் அண்டப்பகுதிகளு மாதலினும் ஆனவை சட மாதலினும் அறிவாகா; ஆகாவிடத்துக் கூடாதென்க.

விஞ: ஆனால் விகற்பங்களுக்கென்றது என்னை?

விடை: விகற்பங்கள் சடமாதல்பற்றியென்க.

விஞ: அவ்வெளிதானும் உண்டாயிருக்கின்றதே.

விடை: உண்டாகக் காண்பதைக் காணி னின்றுமென்க (சஎ)

அ-லக.

அறிவுக்குக் காலபரிச்சேத மின்றெனல்.

கால நினைவன்றிக் கண்டாருண் டேலப்போ
காலந் தனிலறிவு கட்டுண்ணுங்—காலம்
விபுவென்று லென்னை விபுவா மறிவில்
விபுவனைத்திற் றுனே விபு.

(எ-து.) சித்து பேதங்களாயுள்ள தேவ பேதங்களுஞ் சீவபேதங் களுங் காலதத்துவத்திற் கட்டுண்டுகிடக்கக் கால மறிவிற் கட்டுண்ட

தென்றதென்னையெனக் கேட்ட மாணுக்கனை நோக்கி, காலமானது வினையைத் தவிர உண்டாயிருக்கக் கண்டாருளராயின் அப்போது காலதத்துவத்தில் அறிவு கட்டுண்டுகிடக்கின்றது மெய்யாகும். காலம் விபுவாதலின் ஒன்றிற் கட்டுண்டல் கூடாதென்பையாயின், விபுத்துவமாம் அறிவிற் காலம் விபுத்துவமென்முற்றுனென்னை? விபுத்துவமாயுள்ள அனைத்தினும் அறிவே விபுத்துவமா மாதலினென்றுணர்தி —எ-று.

இதனுல் அறிவின் விபுத்துவக் காட்சியிற் காலதத்துவங் காணப்படாதாதலின் அறிவுக்குக் கால பரிச்சேத மின்றென்பதாயிற்று.

வினு: கால தத்துவமாவது என்னை?

விடை: காலம், நியதி, கலை, வித்தை, இராகம், புருடன், மாயை முதலாகச் சொல்லப்பட்ட முப்பத்தாறுதத்துவங்களிலொன்று. அது சித்துபேதங்களா யுள்ளனவற்றிற்கு அவித்தை நீங்காதளவும் இச்சா ஞானக்கிரியைகள் நீங்காவாம்; அவை நீங்காவளவும் ஆகாமியமுதலிய கன்மங்கள் நீங்காவாம்; அவை நீங்காவளவும் அவ்வவ்வினைக்குத் தக்கவாறு தனுகரண புவனபோகங்கள் வரையறைப்படி தோன்றி நின்றழியவும் அவ்வவற்றாலுண்டாஞ் சுகதுக்கங்களை வரையறைப்படி நின்றனுபவிக்கவு முண்டாங் கால ஏற்பாடெனக்கொள்க.

வினு: அவித்தை யறுதளவும் இச்சா ஞானக் கிரியைகளைச் செய்யவும், அதனுல் ஆகாமியமுதலிய கன்மங்களை விளைவிக்கவும், அதனுல் தனுவாதிகளை யெடுத்தெடுத்து நின்றழியவும், அதனு லுண்டாஞ் சுகதுக்கங்களை விடாது மாறி மாறி நின்றனுபவிக்கவும் வல்லது அறிவாதலாற் காலதத்துவம் அறிவுக்கின்றென்ப தெங்ஙனம்?

விடை: அறிவுக்காயின் அவித்தை யற்றழியும் நிற்பது அறிவாதலால் அப்போது காலதத்துவம் இன்றுதல்பற்றி யென்க.

வினு: ஆயின் கால தத்துவம் எதற்கோ?

விடை: அறியாமைக்கென்க.

வெளிக்கு இருப்பிடமுண்டாயின் அறிவுக்கும் இருப்பிடமுளதாகக் கூறுதும்; மனவாக்குக் காயத்தால் இடங் கணித்தற்கு வெளி யல்லாதெனின் அறிவும் அதுபோல்வதாமெனவறிதி — எ-று.

தானிலா இட மின்றாகலின் அறிவுக்குத் தேசபரிச்சேதமின் றென்பதாயிற்று. இங்கே தேசமென்பது இடம்.

வினா: அறிவுக்கு வெளி யிடமென்றால் என்னை?

விடை: அறிவின் விகற்பங்களுக்கன்றி அறிவுக்கன்றென்க.

வினா: அறிவையன்றி விகற்பங்கள் வேறன்றாதலின் அறிவுக்கிட மென்றாற் றோடம் என்னை?

விடை: அவ்விகற்பங்கள் சமட்டி வியட்டியெனப்படும். அவற் றுள் சமட்டி ஆகாயமுதலிய பஞ்சபூதமும், வியட்டி அதின்காரிய மாகிய தேகப்பகுதிகளும் அண்டப்பகுதிகளு மாதலினானும் அசைசட மாதலினானும் அறிவாகா; ஆகாவிடத்துக் கூடாதென்க.

வினா: ஆனால் விகற்பங்களுக்கென்றது என்னை?

விடை: விகற்பங்கள் சடமாதல்பற்றியென்க.

வினா: அவ்வெளிதானும் உண்டாயிருக்கின்றதே.

விடை: உண்டாகக் காண்பதைக் காணி னின்றுமென்க (சுஎ)

அ-கை.

அறிவுக்குக் காலபரிச்சேத மின்றெனல்.

கால நினைவன்றிக் கண்டாருண் டேலப்போ
காலந் தனிலறிவு கட்டுண்ணும் — சாலவும்
விபுவென்று மென்னை விபுவா மறிவில்
விபுவனைத்திற் றுனே விபு.

(எ-று.) சித்து பேதங்களாயுள்ள தேவ பேதங்களுஞ் சீவபேதங் களுங் காலதத்துவத்திற் கட்டுண்டுகிடக்கக் கால மறிவிற் கட்டுண்ட

தென்ற தென்னையெனக் கேட்ட மாணுக்கனை நோக்கி, காலமான து நினைவைத் தவிர உண்டாயிருக்கக் கண்டாருளராயின் அப்போது காலதத்துவத்தில் அறிவு கட்டுண்டுகிடக்கின்றது மெய்யாகும். காலம் விபுவாதலின் ஒன்றிற் கட்டுண்டல் கூடாதென்பையாயின், விபுத்து வமாம் அறிவிற் காலம் விபுத்துவ மென்குற்குறனென்னை? விபுத்துவ மாயுள்ள அனைத்திலும் அறிவே விபுத்துவமா மாதலினென் றுணர்தி —எ-று.

இதனால் அறிவின் விபுத்துவக் காட்சியிற் காலதத்துவங் காணப் படாதாதலின் அறிவுக்குக் கால பரிச்சேத மின்றெனபதாயிற்று.

வினு: கால தத்துவமாவது என்னை?

விடை: காலம், நியதி, கலை, வித்தை, இராகம், புருடன், மாயை முதலாகச் சொல்லப்பட்ட முப்பத்தாறுதத்துவங்களிலொன்று. அது சித்துபேதங்களா யுள்ளனவற்றிற்கு அவித்தை நீங்காதளவும் இச்சா ஞானக்கிரியைகள் நீங்காவாம்; அவை நீங்காவளவும் ஆகாமியமுதலிய கன்மங்கள் நீங்காவாம்; அவை நீங்காவளவும் அவ்வவ்வினைக்குத் தக்க வாறு தனுகரண புவனபோகங்கள் வரையறைப்படி தோன்றி நின்ற ழியவும் அவ்வவற்றாலுண்டாஞ் சுகதுக்கங்களை வரையறைப்படி நின் றனுபவிக்கவு முண்டாங் கால ஏற்பாடெனக்கொள்க.

வினு: அவித்தை யறுதளவும் இச்சா ஞானக் கிரியைகளைச் செய்யவும், அதனால் ஆகாமியமுதலிய கன்மங்களை விளைவிக்கவும், அத ஞல் தனுவாதிகளை யெடுத்தெடுத்து நின்றழியவும், அதனு லுண்டாஞ் சுகதுக்கங்களை விடாது மாறி மாறி நின் றனுபவிக்கவும் வல்லது அறி வாதலாற் காலதத்துவம் அறிவுக்கின்றென்ப தெங்ஙனம்?

விடை: அறிவுக்காயின் அவித்தை யற்றுழியும் நிற்பது அறிவாத லால் அப்போது காலதத்துவம் இன்றுதல்பற்றி யென்க.

வினு: ஆயின் கால தத்துவம் எதற்கோ?

விடை: அறியாமைக்கென்க.

வினா: அறியாமை யென்ப தியாதோ?

விடை: தானல்லாததைத் தானெனக் கருதுதல்.

வினா: அங்ஙனமாவதும் அறிவன்றோ?

விடை: அறிவாயினுந் தான் அஞ்ஞானத்தால் மருண்டதுபோல வும், ஞானத்தாற் றெருண்டதுபோலவுங் காணப்படுவதேயன்றி அறி னுண்மையை யுள்ளவாறு விசாரித்துக்காணின், காலத்திரயத்திலுந் தான் அங்ஙனமாகவுமில்லை, அழியவுமில்லையென் றுணர்க.

வினா: அங்ஙனமாயின் கால முதலிய தத்துவங்கள் அஞ்ஞானத் தால் உள்ளனவாயும் ஞானத்தால் இல்லனவாயுங் காண்பானேன்?

விடை: பழுதையிற் பாம்பு முன்னருண்டானு லன்றோ பின்னர் இல்லாததாகவேண்டும்? அதுபோல அறிவின்கண் அவித்தை முதலிய தத்துவங்கள் முன்னருண்டானு லன்றோ பின்னர் இல்லனவாகக் காணுமென வறிக. (௪௪)

அ-கை.

சச்சிதாநந்தமுதலிய குணங்களைப்பற்றி வரும் ஐயத்தை நீக்கல்.

இக்குணங்கள் வெவ்வேறோ வீங்கொன்றோவென் றுரைக்கின்
இக்குணங்க ளொன்றன்றி யீங்குண்டேல்—மிக்கதுயர்க்
காதாரம் வேறில்லை யாமே லஃதெங்ஙன்
நீதா னொருவழியி னில்.

(எ-து.) இந்தச் சச்சிதாநந்த முதலிய குணங்கள் வெவ்வேறு யுள்ளனவோ, ஏகத்துவமானவோ என்னும் ஐயத்தை யறுக்கவேண்டு மெனக்கேட்கின், இக்குணங்கள் ஏகத்துவமேயன்றிப் பின்னப்படா வாம். இவ்வாறன்றி யிங்கே பின்னப்படுமென் றுரைக்கில் எத்துயரி னும் மிக்கது சனன மரண துக்கமாதலால் அத்துயரத்திற்கு ஆதாரம் ஈதன்றி வேறில்லையாம். அஃதெவ்வாறென்னின் யான்சொல்வதைக் கேட்க நீயொரு வழிப்பட்டு நிற்றி—எ-று.

இக் குணங்கள் ஏகத்துவ மாகாவிடத்து நின்று இளைப்பாறுதல் கூடாதாதலின் மிக்கதுயர்க்காதாரம் வேறில்லை எனவும், அறிவு நாட்டத்தாலன்றி யுண்மைவிளங்கக் கூறினும் புலப்படாதாதல் பற்றிநீதான் ஒருவழியில் நில்லெனவுங் கூறியவாறாயிற்று. (சரு)

அ-கை.

சத்தே சித்தாமிடத் துண்டாந் தடைகள் இவையெனக் கூறல்.

அறிவன்றி யில்லை யறிவறியா மைக்கிங்
கறிவே யிடமென் றறியிற்—பிறிதென்றேஞ்
சத்துசித் தொன்றாகிற் சாரா தறியாமை
யெத்திறத்தா லொன்றிங் கிசை.

(எ-து.) அறிவையன்றி ஞானஞ்ஞானங்கள் இல்லவே யில்லை; உள்ளனவாகக் காணப்படும் இந்தஞானஞ்ஞானங்கள் தோன்றி மறைதற்கு அவ்வறிவே யிடமாமெனத் தெளிந்த விடத்துச் சத்தே சித்தென்றது அன்னியமெனக்கூறேம். மெய்யே, சத்துஞ் சித்தும் ஏகத்துவமாகில் அறியாமையென் றொருமயக்க முண்டாயிராது. உண்டாயிருத்தல்பற்றி யிங்கே யேகத்துவம் எங்ஙனம் வாய்க்கும் அடியேனுக்கு உரைத்தருளும்—எ-று.

அறிவானது ஞானஞ்ஞானங்கட்கு முன்னும் பின்னும் இடையினும் எப்போதும் இவற்றிற்கு ஆதாரமாயும் முதற் காரணமாயும் இவை தோன்றி மறையினுந் தான் அங்ஙனமாகாது இவற்றிற்குச் சாட்சியாயும் நின்றுணருந் தன்மையதாதலால் அறிவன்றி யில்லை, அறிவறியாமைக்கு இங்கு அறிவே யிடமென்றறியிற் பிறிதென்றேமெனப்பட்டது. எனவே சத்தேசித்தென்பதாயிற்று. (சகூ)

அ-கை.

அத்தடைகளை நீக்கல்.

சுட்டற்ற தன்னைத்தான் சுட்டுவதே யஞ்ஞானஞ்
சுட்டை யுணர்வதுவுந் தொல்லறிவே—சுட்டற்ற
காலத்துந் தானுணரிற் காணோ மறியாமை
சாலப் படித்தென்ன தான்.

(எ-று.) இது அது வெனச் சுட்டற்று விளங்கும் அறிவானது தன்னைத்தான் ஏகதேசமாக்கி இது அதுவெனச் சுட்டவரின் அதுவே யறியாமையென்னப்படும். இவ்வறியாமையாகிய சுட்டைச் சாட்சியாகியும் விலட்சணமாகியும் நின்றுணர்வதும் அந்தப்பழைய அறிவே. அதுதானே சுட்டற்றகாலத்துஞ் சுட்டற்று நின்றுணருமாயின் அதற்கு அறியாமையென்பது எங்ஙனே கண்டிலம். இவ்வாறு தானுய்த்துணராத நீயெக்கலையும் மிகக் கற்றதனா லாய பயன் என்னை?—எ-று.

இதனால் அறிவு தன்னைத்தான் சுட்டப்படுங்காலத்துஞ் சுட்டப்படாக்காலத்தும் விலட்சணமாய்நின்று அவ்வவ் வதிசயங்களை யிடைவிடா தறிந்திருப்ப தாதலின் அதற் கறியாமை யின்றென்பதாயிற்று. ஆகவே, சத்துக்குச் சித்து அன்னியம் அன்றெனப் பெறும். இங்கே சுட்டென்பது உபாதிமேல் நின்றது. (சஎ)

அ-கை.

உபாதிபற்றியன்றி அறிவறியாமை தனக்கின்றாதலின் சத்துஞ் சித்தும் அபேதமாமெனல்.

இக்குணங்கள் போலி யெதார்த்தமா மென்றிரண்டுள்
மெய்க்குணங்கள் போனடிக்கின் மெய்யாமோ—பொய்க்கு
விட்டுண்மை காணின் வெளிபோல் விடாதாகில் [ணங்கள்
விட்டுவிட்டு நிற்குமெனல் வீண்.

(எ-று.) இந்தச் சச்சிதாநந்த முதலிய ஐந்துகுணங்களும் போலி யதார்த்தமென்று இருவகைப்படும். அவற்றுள் போலிக் குணங்கள் யதார்த்தகுணங்கள்போல மெய்யாய் நடிக்கினும் அவ்யதார்த்தகுண

ங்களாகுமா? ஆகாவே. ஆதலின் போலியாகிய அப்பொய்க்குணங்களை விட்டு மெய்க்குணங்களையே யிடைவிடாதுகாணுங்கால் சத்தமுதலாகிய ஐந்துகுணங்களும் வெளியின்கண் வெவ்வேறுபடாமல் ஏகத்துவமாய் விளங்குமாதலின் அதனையுணராது நீ யக்குணங்கள் வெவ்வேறுமென் றுரைத்தல் வீணுமன்றிப் பயன்படாவாம்—எ-று.

ப்ராதிபாலிகசத்து, வியாவகாரிகசத்து, பாரமார்த்திகசத்தென்று சொல்லப்பட்டஇம்மூன்றுஞ் சத்துப்போன்றிருத்தலிற் சத்துப்போலியெனவும், சீவன் ஈசுவரன் இவர்க்குச் சாக்ஷியாயுள்ள கூடத்தன் பிரமமென்னப்பட்ட இந்நான்குஞ் சித்துப்போன் றிருத்தலின் சித்துப்போலி யெனவும், எண்ணிறந்த ஆநந்த பேதங்களினும் மிக்குயர்ந்துள்ள பிரமாநந்த முதலிய அஷ்டவிதாநந்தங்களும் எதார்த்த ஆநந்தம் போன்றிருத்தலின் ஆநந்தப்போலி யெனவும், நான் இடத்தும் அபாவமாயுள்ள சக ஜீவ பரங்கள் நித்தியம்போன் றிருத்தலின் நித்தியப் போலியெனவும்; காலம், தேசம், வஸ்து என்னும் இம்மூன்றும் எங்கணும் வியாபித் திருத்தல்போல் காண்டலிற் பரிபூரணப் போலியெனவுமாமன்றி யுண்மையாகா வெனக்கொள்க. அறிவானது சனநு வியாபக விளக்கத்தை மறந்த விடத்துத் தன்னைத்தான் முதற்கருவி ய கவும்ஆதாரமாகவுங்கொண்டு பரிணமித்து உதித்தொடுங்கும் உபாதித்திரயங்கட்குச் சாட்சியாய் நின்றுள்ள சத்துத் தானதலால் அந்தச் சத்தொன்றே வியாவகாரிகசத்து,ப்ராதிபாலிகசத்து, பாரமார்த்திக சத்தென மூன்று சத்தாகவும், இவ்வுபாதித் திரயங்கள் தன்பால் உதித்தொடுங்கினுந் தான்அங்ஙனமாகாது அவற்றைச் சாட்சியாய் நின்றுணருந் தன்மையது தானேயாதலால் சத்தாய் நின்றுள்ள சித்தொன்றே பகிர்முக திருஷ்டியாற் சமட்டிவியட்டிகளாகக் காணப்படு முபாதித்திரயங்களில் நிறைவுற்றது போலவும் பிரதிபிம்பித்தது போலவுந் தோன்றுநின்ற சீவேசுவர கூடஸ்த பிரமமெனச் சித்தொருநான்காகவும், இந்தச் சித்துக்குப் பயனுயுள்ள பிரியவடிவஞ் சித்தாதலானுஞ் சித்தையன்றிப் பிரியவடிவம் வேறின்மையானுஞ் சித்தே யாநந்த

மாயிற்று. இந்தச் சிதாநந்த மொன்றே விடையாநந்தம், பிரமாநந்தம், வாசனாநந்தம், முக்கியாநந்தம், நிஜாநந்தம், வித்தையாநந்தம், ஆத்மாநந்தம், அத்துவிதாநந்தமென எட்டுவித ஆநந்தமாகநின்றுஇவையாவும் அந்தந்தப் பருவத்தளவாய் உதித்தொடுங்கினுந் தான் அங்ஙனமாகாமலுந் தனது பிரியவடிவங் குன்றாமலுஞ் சதோதயமாய் விளங்கி நிற்குந் தனது நித்தியத்துவ மொன்றே ப்ராகபாவம் ப்ரத்வம்சாபாவம் அன்னியோன்னியாபாவம் அத்தியந்தாபாவமென் றொரு நான்கு நித்தியத்துவமாகவும் இந்த நித்தியத்துவத்தில் அடங்காப் பொருள், இடம், காலம் வேறில்லாமையால் இதுவே பரிபூரண மாயிற்று. இந்தப் பரிபூரணமொன்றே பொருள்இடங்காலங்கட் குரியதுபோல் அத்தியாசமாகத் தோற்று மூன்று பரிபூரணமாகவுங் காணப்படுவனவன்றி ஆதாரம்போல் ஆதேயம் உண்மையாகா வாகலின், மெய்க்குணங்கள் போல் நடிக்கின் மெய்யாமோ? இக்குணங்கள் போலி யதார்த்தமாமென்றிரண்டிலெனவும், அம்மெய்க்குணங்கள் வெவ்வேறுபடாது ஏகத்துவமாமென் றுவமையால் விளக்கப் பொய்க்குணங்கள் விட்டென்மை காணின் வெளிபோல் விடாதெனவும், அவ்வேகத்துவத்தைச் சமாதியின்கண் காணாது வெவ்வேறாமென வாயாற்கூறுதல் நினக்குப் பயன் படாதாதலின் விட்டு விட்டு நிற்குமெனல் வீணெனவுங் கூறியவாறாயிற்று. இங்ஙனங் கூறியது பொய்க்குணங்களை மெய்க்குணங்களாகக் காணின் மெய்க்குணங்கட்கு ஏகத்துவங் கூடாமைக்கென்க.

வினா: ப்ராதிபாலிக சத்தாவது என்னை?

விடை: பிரதிபலித்தலாகிய சக, சீவ, பரஞ் சகலத்திற் சத்தியப் பொருளாகக் காண்டல்.

வினா: வியாவகாரிக சத்தாவது என்னை?

விடை: விவகரித்தலாகிய இச்சா ஞானக் கிரியைகள் பிரதிபலித்தலுள்ளளவும் உள்ளவாறு நிகழ்வதாகக் காண்டல்.

வினா: பாரமார்த்திக சத்தாவது என்னை?

விடை: விருத்திகள் அடங்கி நிற்றலாகக் காண்டல்; அதாவது கேவலத்திற் பிரதிபலித்தலுஞ் சேட்டித்தலும் இல்லாமை.

வினா: இம்மூன்றும் உள்ளனவா யிருக்க நீரிதனைப் போலிச் சத்தென்றது என்னை?

விடை: இவை யொருபோதுண்டாய் ஒருபோதில்லாமை பற்றி யென்க.

வினா: சீவன்முதல் பிரமமீறுகச் சொல்லப்பட்ட நான்கையுஞ் சித்தென்றது என்னை?

விடை: அறிதற்றன்மைபற்றி யென்க.

வினா: அறிதற்றன்மை யொத்துள்ள சித்தை நான்கென்றது என்னை?

விடை: காரண காரியோபாதிபற்றி யென்க.

வினா: அங்ஙனமாயினுஞ் சித்து இரண்டென்னாதது என்னை?

விடை: இரண்டென்னில் அவித்தை மாயையன்றிச் சமட்டி வியட்டியாயுள்ள சூக்குமோபாதி யில்லாதிருக்கவேண்டும். உண்டா யிருத்தல்பற்றி நான்கென்றதென்க.

வினா: காரணவகையால் அவித்தை மாயையென் றிரண்டுபாதி யுங் காரியவகையாற் சமட்டி வியட்டி சூக்குமமென் றிரண்டுபாதியு மாயின் இவற்றுள் எவ்வெவற்றிற் சித்துநிறைவுற்றும் பிரதிபலித்தும் நிற்கும்?

விடை: அவித்தை மாயை யென்பவற்றில் நிறைவுற்றுஞ் சமட்டி வியட்டி சூக்குமங்களிற் பிரதிபலித்தும் நிற்குமென வறிக.

வினா: எவ்வெவற்றிற்குச் சீவாதி நாமங்கள்?

விடை: மாயை அவித்தைகளில் நிறைவுற்ற சித்துக்குப் பிரம கூடஸ்தரெனவும், சமட்டி வியட்டி சூக்குமங்களிற் பிரதி பிம்பித்த சித்துக்கு ஈசுரன் சீவனெனவுமாமென்க.

வினா: இந்நான்குஞ் சித்தன்றோ? அங்ஙனமாகப் போலியென் றது என்னை?

விடை: ஞானஞ்ஞானங்கட்கு ஏற்கக் காணப்பட்டு அழிவுறு பற்றியென்க.

வினா: அங்ஙனமாயின் சிவேசுரர்களுக்குக் கூடஸ்தபிரமம் யதார்த்தமெனவும், சாக்ஷியெனவும் தொம்பததத்பத லட்சியதார்த்தமென வுஞ் சுருதி கூறுவானேன்?

விடை: சகல கேவலங்க ளற்றவிடத்துள்ளது கூடஸ்த பிரம மாதல்பற்றியென்க.

வினா: இவற்றையும் பொய்யென்றது என்னை?

விடை: தன்னை யுள்ளவாறு காணுழி இவை தன்னைத் தவிர வேறன்றாதல் பற்றி யென்க.

வினா: அஃதெங்ஙனம்?

விடை: மகாகாயத்தை யன்றிக் கடாகாயமும் மேகாகாயமும் வேறன்றாதல் போலவென்க.

வினா: உரையிற்கோட லென்னும் உத்தியால் எண்ணிறந்த ஆநந்த பேதங்க ளென்றீரே; அவை எவை?

விடை: பஞ்சேந்திரியமென்னும் ஐந்தறிவினுட் பரிசமென்னும் ஓரறிவுயிராயுள்ள புல், பூண்டு, செடி, மர முதலியவை யவ் வோரறி வாற்சுகிக்குஞ்சுகமும்; அதனினுமிக்கது பரிசம், இரசமென்னும் ஈரறி வுயிராயுள்ள இப்பி சங்கு முதலியவை அவ்வீரறிவாற் சுகிக்குஞ் சுக மும்; அதனினுமிக்கது பரிசம், இரசம், கந்தம் என்னும் மூவறிவுயிரா யுள்ள கறையான் எறும்பு முதலியவை யம்மூவறிவாற் சுகிக்குஞ் சுக மும்; அதனினுமிக்கது பரிசம், இரசம், கந்தம், ரூபம் என்னும் நான்கறி வுயிராயுள்ள தும்பி வண்டு முதலியவை யந்நான்கறிவாற் சுகிக்குஞ் சுகமும்; அதனினுமிக்கது பரிசம், இரசம், கந்தம், ரூபம், சத்தம் என் னும் ஐந்தறிவுயிராயுள்ள புள், விலங்கு, மக்கள், அசுரர், சுரர் முதலிய

வை அவ்வைந்தறிவாற்சுகிக்குஞ் சுகமும், இச்சுகம் ஐந்தறிவில் ஒத்துளதேனும் மக்கட்குப் புத்தியும், சுராசுரர்க்குப் புத்தியொடு சித்தியும், திரிமூர்த்திகட்குப் புத்தி சித்தியுடன் சர்வஞ்ஞத்துவ முதலிய குணங்களும், பஞ்சகிருத்திய தாரதம்மியமும், பதவிதாரதம்மியமும் ஒன்றுக்கொன்று மேலிட்டிருத்தல் பற்றி யுண்டாந் தாரதம்மிய சுகமுமாம் என்க.

வினா: இவற்றினும் மேலாய எண்வகை ஆநந்தங்களுள் விடையாநந்த மென்பது யாது?

விடை: ஆலிங்கனத்தா லுண்டாஞ் சுகம்.

வினா: பந்த கன்மத்துக்கு ஏதுவா யுள்ள எண் ணிறந்த ஆநந்த பேதங்களு ளொன்றாயிருக்க, இதனை வேறுபிரித்து விடுதிகன்மத்துக் கேதுவாயுள்ள நிஜாநந்த முதலியவற்றுட் சேர்த்துக் கூறுவானேன்?

விடை: ஏனைய விடையசுகம் உபரதி வயிராக்கியத்தாலும் இவ்வாலிங்கன சுகம் பிரத்தியட்சஞானத்தாலுங் கெடுதல்பற்றியென்க.

வினா: ஏனைய விடய சுகம் ஆலிங்கன சுகத்துக்கு ஒவ்வாதது என்னை?

விடை: இதைப்போலக் கணப்போதாயினுந் திரிபுடியற்றிராமையின் றெலன்க.

வினா: திரிபுடி யற்றிருப்பதால் இதனையே ஞானசுக மென்றால் என்னை?

விடை: இது உபாதி பற்றி வந்ததானும், நிரந்தர மில்லாததானுங் கூடாதென்க.

வினா: இங்ஙன மிருக்கப் பிரகஸ்பதி பகவான் இந்திரனுக்கு ஆலிங்கன சுகமே முத்தி யென்றது என்னை?

விடை: சுகிப்பானைக் கண்டு சுகிப்பது அரிது அரிதெனக் கருதி யென்க.

விடை: தன்னையுஞ் சகத்தையும் உள்ளவாறு கருதி குரு சுவானுபவத்தாற் சந்தேகவிபரீதங்களற விசாரியாவிடத்து உதிக்குஞ்சுகம் இதுவாதலால் முத்திச் சுகம் ஆகாதென்க.

வினா: இங்ஙனமாயின் இம்முக்தியானந்தமே முத்தியாமெனச் சிலநூல்களிற் கூறியது என்னை?

விடை: இந்நிலையாவது வாராதாவென்னுங் காருண்ணியத்தாற் கூறினதேயன்றி முத்தியாகாதென்க.

வினா: விடயகதப் பிரத்தியட்சத்தின் நிலையாமைபற்றி யுண்டாமிதனை அவ்விடயத்தினின்று வேறுபிரித்து ஞானகதப்பிரத்தியட்சத்தி னுதிக்கும் நிசானந்தமுதலியவற்றோடு சேர்த்துக்கூறியது என்னை?

விடை: ஞானகதப் பிரத்தியட்சத்துக்கு விராகங் காரணமாதலி னென்க.

வினா: இனி நிசானந்தமென்பது யாது?

விடை: நிசத்தினுதிக்கும் ஆநந்தம்.

வினா: நிசமென்பது யாது?

விடை: அறிவு விகற்பாகாரமாய்க் காணாது ஓர் குறிமுன்னிட்டுத் தனது யதார்த்தவடிவாய் விளங்கல்.

வினா: யதார்த்தவடிவாவது என்னை?

விடை: அறிவு விசுவ, தைசத, பிராக்ஞ ரகிதமாக விளங்கல்.

வினா: அவ்விளக்கத்திற் சுகம் உதிப்பதற்கு ஏது என்னை?

விடை: அவ்விளக்கந் திரிபுடியும் அஞ்ஞானத்தகாரமும் அற்று இருப்பதானும், அபரிச்சின்னமாதலானும், உபாதித்திரயமில்லாததனானும், சும்மாவிருப்பதற்கிடமாதலானும், துக்காபாவமாதலானும் இங்ஙனம் நிற்கும் நிலையே சுகோதயமாமென்க.

வினா: ஞானகதப் பிரத்தியட்சத்தி னுதிக்குஞ் சுகமிதுவாதலின் இதனையே முத்திச்சுகமென்னாது போலிச் சுகமென்றது என்னை?

விடை: அறிவு தேகத்தில் ஆறாதாரக்குறியுள் ஓர் குறிவழித்தாய் இங்ஙனம் விளங்குவதில் மனோலயமாகத்தகும்; இந்நிலை யோகமாத லாற் கூடாதென்க.

வினா: அங்ஙனமாயின் யோகநூலில் மனோநாசமாகும்; இந்நிலையே முத்தியாமெனக் கூறுவது என்னை?

விடை: இதனினுங் கீழாய சரியை கிரியைகட்கு இது மேலாதல் பற்றியென்க.

வினா: அறிவு ஓர் குறிவழித்தாய் விளங்கினும் இந்நிலை மனோலயமாகத் தக்கதன்றோ?

விடை: "மெத்துகின்ற வாதனையை விட்டான் மேலாநிலையுளதாஞ், சத்தினசத்தி னிடைநின்று சைதன்னியத்திற் சாட்டியத்தி, லொத்து நடுநின் றலைவதுவே யுள்ளமாகு மவ்வுள்ளஞ், சித்தின்முயல்வாற் சித்தாகுஞ் செடத்தின் முயல்வாற்சடமாகும்"

என்ற வாசிட்டக் கவிப்படி மனமானது சித்திலேனுஞ் சடத்திலேனும் முயற்சிக்கேற்றவாறு லயிக்கினும் அது லயமன்றென்க.

வினா: ஏன்?

விடை: மனோரம்மியத்திற் கிடமாயுள்ள சகலசேவலங்கள் நிலையாவாறுபோலச் சடசித்துக்கள் நிலையா ஆதலினானும், சடசித்தென்பவற்றுட் சித்தோ குறியன்றி விளங்குவது; இதுவே நிலையாதபோது தேகத்திலோர்குறி முன்னிட்டு விளங்குஞ் சித்தா நிலைக்கும்? நிலையாதாதலினானுமென்க.

வினா: ஆயின் மனோலயமாகும் நிலைதான் யாதோ?

விடை: சித்து சடங்கட்கும், மறதிக்கும் ஆதாரமா யுள்ளதைக் கண்டு அதில் லயிப்பதே லயமா மென்க.

வினா: குறியன்றி விளங்குஞ் சித்து யாதோ?

விடை: கூடஸ்த பிரமமென வறிக.

வினு: அற்றேற் குறிவழித்தா யுதிக்கும் நிசாநந்தத்தில் மனோ
லயமெனக் கூறுவானேன்?

விடை: மனோலயம்போற் காண்டலே யன்றி லயமாயின் மீண்
டும் விடையாகாரமாயுதித்துக் "ஈரைக் கறி சமைத்தாயிற்று" வெனக்
கேட்கவருமா? கேட்கவந்தபடியால் லயமான தன்றென்க.

வினு: மனம் மீளத்தக்க யோகத்தாற் பயன் என்னை?

விடை: ஞானம் அடைதற்கு இது சாதன மாதலானும், இஃ
தன்றி ஞானம் எய்தற்பாலதன்றாமையானும் இங்ஙனம் இருக்கையே
பயனு மென்க.

வினு: ஞானமடைதற்குச் சாதனம் யோகமென்றது எங்ஙனம்?

விடை: அசைவுறுங் கடத்திற் சலமும் அதிற் பிரதிபிம்பித்த
சூரியப்பிரதிபிம்பமும் அதனநுசாயாவொளியும் அவ்வாறலையும்; அலையு
மிடத்து அவ்வொளிக்கு ஆதாரங் காண வேண்டி. . . . . குடத்தை
யசையாது நிறுத்த அதில் நிறைவுற்ற சலமும் அசையாது நிற்கும்;
அதுநிற்க அதிற் பிரதிபிம்பமும் அசையாது நிற்கும்; அது நிற்க அக்
கடத்திற் கருகே யசைவாடிநின்ற அப்பிரதிபிம்பவொளியும் அசைவ
ற்றுநிற்கும்; அது நிற்க அப்போது யதார்த்த பிம்ப சூரியன் வெளிப்
படும்; அது வெளிப்படப் பிரதிபிம்பமும் அதனது சாயாவொளியும்
பொய்யெனக் காணப்படும். அதுபோலப் பிராணுதி வாயுக்கள் சம்
பந்தமாயுள்ளதாற் சரீரஞ் சலிக்க அதை யபிமானித்து அதில் நிறைந்
துள்ள மனஞ் சலிக்கும்; அது சலிக்க அதிற் பிரதிபிம்பித்த சுயஞ்சித்
தாபாசமான சிதாபாசன் சலிக்கும்; அதுசலிக்க அதனது சாயையாக
ப் புறம்பிற் சத்தியமாகக் காணப்படுஞ் சகசீவ பரஞ் சலிக்கும். அது
சலிக்க அதனுல் இவற்றினுண்மையை யாவராலும் அறிதற்கரிதாமென
ச் சோர்வுற்றோருக்கு எவரும் உண்மை இஃதென்று எளிதில்
முறையே யனுட்டித்தடையச் சான்றோராலியற்றிய இயமம், நியமம்,
ஆதனம், பிராணுயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி

யென்னும் அங்கயோகம் எட்டனுள் இயமமாவது: கொல்லாமை, பொய்யாமை, கள்ளாமை, பிறர்பொருள் நயவாமை இந்திரியமடக்கல். நியமமாவது: தவம், தூய்மை, தத்துவநூலோர்தல், மனம் உவந்திருத்தல், தெய்வவழிபாடு. ஆதனமாவது: சுவத்திகம், கோமுகம், பதுமம், வீரம், கேசரி, பத்திரம், முத்தம், மயூரம், சுகம் என்பனவாம். இவற்றில் சுவத்திகமாவது: தொடைக்கும் முழங்காற்கும் நடுவேயிரண்டு உள்ளங்காலையுஞ் செலுத்தி யிறுமாந்திருத்தல். கோமுகமாவது: சகனபக்கத்தில் இருகாற் பரட்டையும் மாறவைத்து அவ்விருகாற் பெருவிரலைக் கைப்பிடித்திருத்தல். பதுமமாவது: இருதொடைமேலும் இரண்டு உள்ளங் காலையும் மாறித் தோன்றவைத்தல். வீரமாவது: வலது தொடையில் இடதுகாற் பரட்டைச்சேர்த்து இறுமாப்புற்றிருத்தல். கேசரியாவது: பீசத்தின் கீழ் இடது பரட்டை வைத்து இடது முழங்கையை முழங்காலில் வைத்து அங்குலியை விரித்து நாசியைப்பார்த் திருத்தல். பத்திரமாவது: பீஜத்தின்கீழ் அவ்விருகாற் பரட்டையும் வைத்து அவ்விருபதத்தையும் இருகையால் இறுகப்பிடித்து அசையாதிருத்தல். முத்தமாவது: இடக்காற் பரட்டாற் சீவனியை யழுத்தி வலக்காற் பரட்டின்கீழூந்தவிருத்தல். மயூரமாவது: முழங்கையிரண்டும் உந்திப் புறத்தில் அழுந்தப் புவியிற் கையூன்றிக் காலை நீட்டித் தலை நிமிர்ந்திருத்தல். சுகமாவது: சுகமுந் திடமும் எவ்வாறிருக்கின் எய்துமோ அவ்வாறிருத்தல். பிராணயாமமாவது: இரேசக பூரக வாயுவைக் கும்பித்து அடக்கல். பிரத்தியாகாரமாவது: உபாதியை நீக்கி யுள் நோக்கல். தாரணையாவது: கண்டம், இதயம், நெற்றி, கபாலம், நாபி யென்னும் இவற்றுள் ஒன்றிற் சந்ததஞ் சிந்தையைவைத்தல். தியானமாவது: ஐம்புலனை அடக்கிச் சிவயோகஞ் சேர்தல். சமாதியாவது: இந்திரியமுதலிய தத்துவச் சேட்டைகட்கு எதுவாகிய ஆக்கையுள் நின்றவற்றோடு கூடினும் அவற்றிற் பற்றின்றி யிருக்கும் ஆன்மாவாகிய தன்னைத்தான் காண்டல். இவ்விதப் பொருள்கோடலைப் பெற்ற இயமமாதிப் பிராணயாமம் ஈறுக்கிடந்த

நான்குந் தறிபோல் உடலஞ்சலியாது நிற்றற்கும், பிரத்தியாகாரமுதல் தியானம் ஈறாக்கிடந்த மூன்றுங் கரணம் பதைப்பறச் சித்திர தீபம் போல் நிற்றற்குஞ் சாதனமாம். சாதனமாகா விடத்துச் சமாதியில் தன்னை யுள்ளவாறு காணப்படாதாதலி னென்க.

வினா: இனி யாத்மாநந்த மென்ப தியாது?

விடை: அவித்தியாவசத்திற் பிரத்தியட்சம் விடயமய மாகுங்கால் ஆன்மா அப்பிரத்தியட்சமாயும், அனுமானத்தா லுள்ளதாகத் தோற்றுந் தோற்றன் மாத்திரமாயும், சொல்மாத்திரமாயும், ஆதாரமுஞ் சுகப்பேறும் விடயமன்றித் தனக்குக் கிஞ்சித்தேனும் வேறில்லாததாயுங் காணப்படுமாறுபோன்று அவித்தியாநாசத்திற் பிரத்தியட்சம் ஆன்மமயமாகுங்கால் விடயம் அப்பிரத்தியட்சமாயும், பூர்வவாசனையாற் காணினுந் தோற்றன்மாத்திரமாயும், சொன்மாத்திரமாயும், ஆதாரமுஞ் சுகப்பேறும் ஆன்மாவன்றித் தனக்குக் கிஞ்சித்தேனும் வேறில்லாததாயுங் காணப்படுங் காட்சியே யாத்மாநந்தமெனவறிக.

வினா: ஆன்மாவே பிரியவடிவமென்றால் அஞ்ஞான தசையில் விடயப்பிரியத்துக்கு அங்காந்திருப்பானேன்?

விடை: நாயானது பசையற்ற என்பைப் பசையுளதாகக்கருதிக் கடிக்குங்காற் சிதையுண்ட என்பிலொன்று தனது பல்லில் தைத்தொழுகும் உதிரந் தனதாகக்கருதாது அதனதாகக்கருதி யவ்வென்பை மேலுமேலும் புரட்டிப்புரட்டிக் கடிக்குமாறுபோல் ஆன்மாவுந் தனது கற்பனாவடிவமே விடயமாமென்றதையும், தற்பிரியமே அது பிரியமாகத் தோற்றுமென்பதையும் மறந்து அதனாற் பசையற்ற விடயத்தைப் பசையுளதாகக் கருதிப் பாடுபட்டுத்தேடித் தனக்குப் பிரியமல்லாததைத் தள்ளிப் பிரியமுள்ளதை யனுபவிக்குங்கா லுண்டாம் பிரியந் தனதாகக்காணாது அதனதாகக் கருதி, அவ்விடயங்களை மீண்டு மீண்டும் மாறி மாறி அனுபவிக்கும்; அனுபவிக்கினும் அவ்விடயப் பிரியம் உதிப்பதும் அடங்குவதுந் தற்பிரியத்திலாதலால் அங்காத்தல்போற் காண்டலேயன்றி யங்காத்த லன்றென்க.

வினா: பிரியவடிவம் விடயமன்றாயின் புகழ், சத்தசுரம், சங்கீதம், நடனம், சர்வவாத்தியம், இனியமிடற்றோசை, குயில்கூவல், கிளிகொஞ்சல், மழலைச்சொல், பஞ்சணை, அலங்காரக்காட்சி, நளபாகம், தீங்கனி, பால், தேன், சர்க்கரை, கற்கண்டு, நன்னீர், நற்கந்தம், வினோத முதலியவைகாரணமாகப் பிரியமும்; இகழ், அவசுரம், அவாத்தியம், இனிமையில்லா மிடற்றோசை, காக்கை கத்தல், கழுதை கூவல், முள்ளணை, பருக்கணை, கோரவடிவம், வறும்பாகம், கசப்புக்கனி, மூத்திரம், உவர்நீர், அவுடதம், துர்க்கந்த முதலியவைகாரணமாக அப்பிரியமும் வருதற்கு ஏது என்னை?

விடை: தானலா வுடம்புதன்னைத் தானெனக் கருதி அபிமானித்தலால் கரண இந்திரியமும் அக்கரணேந்திரியத்தால் இராகாதிகளுஞ் சத்தாதிகளும் இவற்றாற் பிரியாப்பிரியமும் வந்தன வென்க.

வினா: தேவரீர் கூறியது மெய்யேயாயினும் இது நன்கு புலப்படும் வண்ணம் யானும் ஆன்மாவாதலாற் பிரிய வடிவமென்பதை விளக்கவேண்டும்?

விடை: நினது பிரியத்தை விடயத்தினதெனக் கருதி அனுபவிக்கினும் அது விடாக்கவலை யாதலானும், அதனைத் தணிப்பான் வேண்டி விடய விருத்திக ளடங்கி யுறங்கு முறக்கத்தில் ஆன்மாவே தான் மாத்திரஞ் சேடித்து நிற்றலானும் அங்ஙனம், உதிக்குஞ் சுகம் அவ்வான்மாவை யன்றி வேறின் றாதலானும், அவ்வெதார்த்த சுகத்தைத் தானே சுகித்து அக்கவலையைத் தணித்துக் கொள்ளுதலன்றி வேறொன்றாற் றணிக்கப்படாதென்பது அனுதினமும் நினக்கே அனுபவசித்தமாதலானும் இதுவே பிரமாணமெனவறிக.

வினா: பிரியவடிவாயுள்ள அனைத்தினுக்கும் பிரியந் தானெனக் கண்ட இதனையும் போலிச் சுகமென்றது என்னை?

விடை: பிரம வியாபகத்தில் ஆன்மாவாகிய கூடஸ்தன் வியாப்பியமாயும் ஏக தேசமாயும் விளங்குவதைச் சிந்திக்குமிடத்துப் பூர்வ

பட்சமா மென்பதையும், முன்னர் விடயம் பிரிய வடிவாய் நின்றாற் போல இப்போது விசாரத்தால் ஆன்மா பிரியவடிவாய் விளங்குகின்ற தென்பதையுங் கருதியென்க.

வினா: அமுக்கியமாகத்தக்க இவ்வாத்மாநந்தத்தாற் பயன் எவ்வனே?

விடை: இந்நிலை வாய்க்கினல்லது மேனியின் அகம்புறம்பாகக் காணப்படு மனைத்துஞ் சின்மாத்திரமாக்கப் படாதென்பதே பயனு மென்க.

வினா: இனி அத்துவிதாநந்தமென்ப தியாது?

விடை: துவிதநாசத்தில் உதிக்கும் ஆநந்தமாம்.

வினா: துவிதமென்றது எதனை?

விடை: கூடஸ்த பிரமத்தையென்க.

வினா: எவ்வெவ் வவசரத்தில் உதிக்கும் அநுபவத்தைக் கூடஸ்த பிரமமென்றது?

விடை: மேனியினுள்ளிற் றத்துவங்களனைத்தையுங் கரைத்துச் சின்மாத்திரமாக விளங்கும் விளக்கமே கூடஸ்தனெனவும், மேனியின் புறம்பிற் காணப்படுஞ் சகல சராசரங்களையுங் கரைத்துச் சின்மாத்திரமாக விளங்கும் விளக்கமே பிரமமெனவுங் கொள்க.

வினா: கூடஸ்த வியாப்பியத்திற்கு வியாபகமாயுள்ள பிரமத்தையும் ஏகதேசமாக்கித் துவிதமென்றது என்னை?

விடை: அகம் புறமென்பதும் அவ்வகம்புறத்தில் விளங்கும் விளக்கமுந் தன்னையன்றி யில்லாமையானும், அகமென்பது புறம்பிற்கு ஏகதேசமாவதுபோலப் புறம் மென்பதும் அதனுக்கு ஏகதேசமாமென்பதினானும், அகமென்பது இருத்தல் பற்றிப் புறம்பென்ப துண்டாகப் பெறு மென்பதினானுந் துவிதமெனக் கூறியதென்க.

வினா: இத்துவித நீக்கம் எங்ஙனங் கூடும்?

விடை: ஒன்றைத்தவிர நூறென்ப தில்லாததுபோல்க் கூடஸ் தனையன்றிப் பிரமமென்ப தில்லையெனவும், வெளியை யன்றிப் பத்து த்திக்கென்னும் வெளி பேதங்களும் அவ்வவற்றில் நிறைந்துள்ள வெளிபேதங்களும் எங்ஙனம் இல்லையோ, அதுபோலப் பிரமத்தைய ன்றிக் கூடஸ்தபேதங்களுஞ் சீவேசுர பேதங்களும் இல்லையெனவுந் தனது அனுபவ விளக்கத்தினாற் கூடுமென வறிக.

வினா: இங்கே கூடஸ்த பிரமென்றதும் ஐக்கியமென்றதும் அடி யேனுக்குச் சொல்லானந்தமாகக் காண்டலேயன்றி வேறின்றாதலால் இதன் உண்மையை விளங்கக் கூறவேண்டும்?

விடை: உபாதி குணந் தொழிலை நீக்கி விசாரித்துத் தெளியுங் கால் நாற்கதிகளுந் தெரிவெனவும், இத்தெரிவு தனித்தனிக் காண்ட லாற் கூடஸ்தரெனவும், இத்தெரிவனைத்தும் ஏகமாகக் காண்டலால் அதுவே பிரமமெனவுங் கொண்டு இவ்விரண்டினுமிருப்பது தெரிவாத லால் இதுவே யது, அதுவே யிதுவெனத் துணியக் கூடஸ்தனே பிரம மெனவும், பிரமமே கூடஸ்தனெனவும் விளங்குமென வறிக.

வினா: இத்துவித நீக்கத்திற் சுகம் உதிப்பதற்கு ஏது என்னை?

விடை: வியாபக வியாப்பியமென்னுஞ் சொரூபமும், அது பற்றி யுண்டாம் பிரம கூடஸ்தனென்னும் நாமமும், பிருதுவி தத்துவமுதல் நாததத்துவம் ஈறாக்கிடந்தவற்றிலுள்ள சகல காரண காரிய சம்பந்த ங்கள் நசித்து அதற்குமேல் சின்மாத்திரமாய் விளங்குகின்றோமென் னும் வாசனையும் அற்று நின்றநிலை நனவிற் சுழுத்தியாதலால் அதுவே சுகப்பேறுமென்க.

வினா: இதனையும் போலிச்சுகமென்றது என்னை?

விடை: கற்பிதமாயுள்ள அவித்தை மாயையால் அறிவு கூடஸ்த பிரமமெனத் துவிதம்போற் காண்டலே யன்றித் துவிதமாகாது. துவித மாதலன்றோ பின்னர் விசாரத்தால் அத்துவித மாகும்? இல்லவே யில்லை; ஆதலாற் போலியாமென வறிக.

வினா: இவ்வாறாயின் அறிவே கூடஸ்தன், ஆநந்தமே பிரமமென ச் சிலர் கூறுவது என்னை?

விடை: தானென்னும் முதற் பதத்தின் வாச்சியார்த்த லட்சியா ர்த்தம் இன்னதெனச் சிந்தித்து ஐயந்திரிபறத் தெளியாததாலென்க.

வினா: அஃது எங்ஙனம்?

விடை: தன்னையன்றி யறிவும், அறிவையன்றி ஆநந்தமும் இல் லாததா லென்க.

வினா: துவிதமற்ற தன்னை யேகமென்றால் என்னை?

விடை: ஒன்றென்னில் இரண்டென்ன வரும்; ஆதலின் கூடா தென்க.

வினா: ஒன்றே யொழிய இரண்டாவ தில்லையென்னும் ஒரு வேதமெனக் கூறுவானேன்?

விடை: சக, சீவ, பரமென்னும் விகற்பத்தை யொழிப்பான் வேண்டி யென்க.

வினா: ஒன்றென்னில் இரண்டென்ன வருமென்றது எங்ஙனம்?

விடை: தானே தானாய் விளங்குமிலை யொன்றே யுண்மையெ னின் அங்ஙனங் கூறவருமா? வராததால் இரண்டெனப் படுமென வறிக.

வினா: ஆயின் உண்மைதான் யாதோ?

விடை: தானே யெல்லாமாய் அல்லவுமா யிருப்பதாதலிற் றானே யுண்மையென வறிக.

வினா: தானே யுண்மையென்றதற்குப் பிரமாண முண்டோ?

விடை: வேதாந்த சூளாமணி நடுவெது கவி "விரியுமுலக னைத் தும் பொய்மெய்மை தானென்னும் விவேகத்திற் றோற்றுவதே யத்து விதாநந்தம்" என்பதினு லறிக.

வினா: தானே தனது விகற்பமாயுள்ள ஞானஞ்ஞானங்களில் நவநவமாகவும் பாவாபாவமாகவுஞ் சகள நிஷ்களமாகவுங் காரணகாரியோபாதி பேதங்களாகவுங் காணப்படுங் காட்சிகளெத்தனையோ, அத்தனையுஞ் சடமாதலாற் சடமாயும் அச்சடபேதங்களை யங்கங்கே யவ்வவற்றிற்கு ஆதாரமாயுஞ் சாக்ஷியாயும் நின்று தெரியுந் தெரிவுபேதங்கள் எத்தனையோ அத்தனையுஞ் சித்தாதலாற் சித்தாகவும் நிற்றலின் அந்தத் துவிதநீக்கமே யத்துவிதமென்றால் தோடம் என்னை?

விடை: "சித்தம்பிறந்து செகம்பிறந்து நானென்னவோர், கர்த்தன் பிறந்தவழி கண்டோமே - சித்த - மடங்காமை யேமாயை யம்மாயை மாய்ப்பார், நிடந்தானே சாயுச் சியம்" என்பதினானும், "விளக்கு மிரவியு மலருமுண்டாமுண்டாம் வீசொளியும் பகற்பொழுதும் விரையும்போலத், துளக்கமில்சித் துண்டாகி லுண்டாஞாலந் தோற்றரவு மாத்திரமே சொரூபமாகு" மென்பதினானும், "சங்கற்ப சாலச் சகத் தோற் றரவெல்லா-மிங்கற்ப மென்று இழிவரோ" வென்பதினானுஞ் சித்தினது விகற்பஞ் சடமெனப்பெற்றாம். பெறவே, சித்தினது விகற்ப மற்றாற் சகந்தாகிய சடபேதமனைத்தும் ஒருங்கே நசித்துச் சின்மாத்திரமாய் விளங்குவது சேடித்துநிற்கு மாதலானும் அங்ஙன நிற்பது அவித்தியா மாயா நாசத்தால் இரண்டுபோலக் காணுமாதலினானும் அவை கூடஸ்த பிரமமாதலால் அவற்றிற்கே ஐக்கியமாதலானும் அங்கே சடபேத மின்றாதலானுங் கூடாதென்க.

வினா: வியாபக வியாப்பிய மென்னும் உருவமுங் கூடஸ்த பிரம மென்னும் நாமமுஞ் சடமாகவும் அங்கே அவற்றிற்கு ஆதாரமாயுஞ் சாக்ஷியாயும் விலட்சணமாயும் நின்று அவற்றைத் தெரியுந் தெரிவு சித்தாகவுமிருக்க இத்துவிதத்தைப் போக்கத்தக்கதன்றோ அத்துவித மென்றது?

விடை: கடோபாதியாயும் மேகோபாதியாயுந் தடிப்புற்றுநின்ற அறிவு அவ்வவ் வுபாதிகட்கு அகம் புற மின்றி யிடைவிடாது நிறைந்

துள்ளது வெளியேயெனத் தேர்ந்தவிடத்து அவ்வவ்வுபாதிகளாகாது அவ்வவ் வெளியளவா நின்றாற்போல அவித்தியா மாயோபாதி யளவாத்தடிப்புற்றுநின்ற தான் அவ்வவ் வுபாதிகட்கு அகம்புறமின்றி யிடைவிடாது நிறைந்துள்ளது அறிவேயென்று ஐயந்திரிபறத் தேர்ந்தவிடத்து அவ்வவ் வுபாதிகளாகாது அவ்வவ் வறிவளவாகவே நிற்கும். அங்ஙனம் நிற்குந் தான் அறிவாதலானும் அவ்வறிவே வியாபக வியாப்பியமாதலானும் இந்த வியாபக வியாப்பியஞ் சித்துபேதமாதலானும் இந்தச்சித்துபேதமே துவிதமாதலானும் இந்தத் துவித நாசமே அத்துவிதமாதலானுங் கூடாதென்க.

விஞ: பிரமமுதற் பிபீலிகாந்த வரையாயுள்ள சமஸ்தகற்பிதங்களுந் தானேயென்பதுந் தானல்லவென்பதும் எவ்வாறுணரப்படும் ?

விடை: கோச்சேரமான் யானைக்கட்சே எய் மாந்தரஞ்சேரவிரும்பொறையென்றவழி யரச னென்பதோர் சாதியும், சேரமா னென்பதோர் குடியும், வேழநோக்கினையுடையா னென்ப தோர்வடிவும், சேயென்ப தோரியற் பெயரும், மாந்தரஞ் சேர விரும்பொறை யென்பதோர்சிறப்புப்பெயரு மாதலால் இக்கற்பனைகள் ஓர் புருடனல்லாதிருந்தும் அவனையன்றி அவை யில்லாவாறுபோலென்க.

விஞ: ஒழிவிலொடுக்கத்தில் "ஆனைக்கைபோலபின வத்துவிதாநந்தமா, மோனத்தை வாக்குமன முட்டுமோ" வென்னுங் கவியில் "சிவமுமான்மாவு மிரண்டற்றிருப்பதே அத்துவிதமாகிய மோனாநந்த" மென்று கூறியதும் அவ்வத்துவிதந்தானே ?

விடை: கை, நாசி யென்றிரண்டுறுப்பாய்ப் பரிசங் கந்தமென்னும் இரண்டுவிடயங்களையும் வேறுபிரித்து அறிவதாயிருந்தும் பிரியடாது அதுவே இதுவாய், இதுவே யதுவாயிருப்பதுபோற் சிவமென்றும் ஆன்மாவென்றும் இரண்டுபொருளாய்ச் சர்வக்ஞத்துவம், கிஞ்சிக்ஞத்துவமென்னும் இரண்டு ஞானங்களாய் வேறுபட்டிருந்தும் அயிக்கத்துப் பிரிபடாது அதுவே இதுவாய் இதுவேயதுவா யிருப்பது அத்து

விதமென்றால் உபாதி குணங்கள் அறுவிடத்துப் பசுபதிக்கு எங்ஙனம் ஐக்கியங் கூடும்? கூடினதுபோற் காண்டலே யன்றிக் கூடினதன்றெனவும், அவித்தை மாயை கெடாததால் இதுவும் பதவிமுத்தியே யன்றி யைக்கியமுத்தி யன்றெனவும், மீண்டும் பிறந்திறத்தற்கு ஐயமின்றெனவுங் கொள்க.

வினா: இங்ஙனமிருக்க எம்மதத்தோருஞ் சீவேசுரர் சிற்றறிவும் பேரறிவுமாதலாற் சிற்றின்பம் பேரின்பம் ஒன்றுபடாதெனக் கூறுவது என்னை?

விடை: உபாதி குணந் தொழிலே யறிவெனக்கொண்டு இவ்விருவரெனவுஞ் சட சித்து இன்னதெனக் கூறுஞ் சுருதியும் அதனையுணர்ந்த அறிஞருஞ் சித்தையன்றிச் சீவேசுர ருபாதிகுணந் தொழிலாகாரென ஞாயத்தாற் சந்தேகமறக் கூறினும் இவையனைத்தும் பிதற்றலெனவுங்கொள்ளும் அறிவிலிகட்கு அறிவுபேதம் நீங்காது. அது நீங்காவளவும் ஆநந்தபேதம் எங்ஙனம் நீங்குமென வறிக.

வினா: இனி வித்தையாநந்த மென்ப தியாது?

விடை: நான்கு வேதத்தினும் முடிவாயுள்ள மகாவாக்கிய வாச்சியார்த்த லட்சியார்த்த முன்னிட்டு உதிக்கும் ஆநந்தமாம்.

வினா: நான்கு வேதமாவது என்னை?

விடை: இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என்பன.

வினா: அவற்றில் முடிவாயுள்ள மகா வாக்கியமென்பது எது?

விடை: முதலாவது பிரக்ஞானம் பிரமமென்பதும், இரண்டாவது அகம் ப்ரம்மாஸ்மியென்பதும், மூன்றாவது தத்தொமசியென்பதும், நான்காவது அயமான்மா பிரமமென்பதுமாம்.

வினா: இவற்றில் வாச்சியார்த்தம், லட்சியார்த்தமென்பன எவை?

விடை: தன்னைச் சுருதி யுத்தியால் ஐயந் திரிபற விசாரித்து நிச்சயிப்பது வாச்சியார்த்த மெனவும், அங்ஙனம் நிச்சயித்தவாறு

ஞானகதப்பிரத்தியட்சத்தால் தன்னை யுள்ளபடிகண்டு அனுபவிப்பது லட்சியார்த்த மெனவுமா மென்க.

வினு: இதனையும் ஆபாசமென்றது என்னை?

விடை: அக்கினியினது காரியம் புகையாயினும் அப்புகை முன்னிட்டு அக்கினியைக் காணுமாறுபோல், "தன்னிடத்திலே தோன்றித் தன்னிடத்திலே யிருந்து தன்னிடத்திற் கூடுஞ் சகத்தோற்றம்" என்ற கவிப்படித் தனது காரியம் வாக்கியமாயினும் அவ்வாக்கிய முன்னிட்டுத் தன்னைக்காண்பதெனிற் புகை யுள்ளபோதும் இல்லாதபோதுந் தானிருப்பது உண்மையாதலின் ஆபாசமாமென்க.

வினு: இங்ஙனமாயின் வாக்கியமுன்னிட்டுத் தான் விளங்குவானேன்?

விடை: காகதாலிய ஞாயம்போலா மென்க.

வினு: கதகன்ம புண்ணிய பரிபாகத்தால் விளங்குமாயின் வாக்கிய விசாரத்தாற் பயன் என்னை?

விடை: "பண்ணிய பயிரிற் புண்ணியந் தெரியும்" என்பதனுல் வாக்கிய விசாரத்தால் அப்புண்ணிந் தெரியுமாதலின் அதுவே பயனு மென்க.

வினு: விசாரமின்றி ஞானமுதித்தபேரும் உண்டா?

விடை: உண்டு; அவர்கள் முன்னமே கிருதகிருத்தியராமென்க.

வினு: இனி முன்னே அபாவமென்ரெரு நான்குநித்தியத்துவம் உண்டென்றீரே; அவ்வபாவம் என்பதற்கு அருத்தம் என்னை?

விடை: இல்லாமையாம்.

வினு: அவ்வில்லாமையை யேற்பது எது?

விடை: ஜக, சீவ, பரங்களாம்.

வினு: அஃது எங்ஙனம்?

விடை: கடபடங்களுக்கு முன் பின் உள்ளது மண்ணும் நூலுமேயன்றி அவ்வுபாதிகள் அப்போதில்லாவாறுபோலச் சக, சீவ, பரங்கட்கு முன் பின் உள்ளது கரணேந்திரியமென்னுந் தெரிவேயன்றி அவ்விகற்பங்கள் அப்போதில்லையாதலால் ப்ராக்கபாவம் ப்ரத்சொம்சாபாவமெனவும், கடநோக்கிற் படமும் படநோக்கிற் கடமும் எங்ஙனம் இப்போதில்லையோ, அதுபோலப் பசுபதி சித்தும் சகத்து சடமுமாதலாற் சித்துநோக்கிற் சடமும் சடநோக்கிற் சித்தும் இப்போதும் இல்லை யாதலால் அன்னியோன்னியா பாவமெனவும், முன் பின் இப்போது மில்லாக் கடபடங்கள் எப்போதும் இருக்குமா? இராவே. அதுபோலப் இப் பூத பௌஷிய வர்த்தமானகாலத்தில் இல்லாச் சடசித்துக்கள் சதாகாலமும் இருக்குமா? இராவே. அதுபற்றி யத்தியந்தாபாவமெனவுங் கொள்க.

வினா: இதனை நான்கு அபாவமென்றொரு நித்தியத்துவமென்றது என்னை?

விடை: அபாவமே நித்தியமாகக் காண்டலினென்க.

வினா: கல்வியின் மிக்குயர்ந்துள்ள எம்மதத்தோரும் இம்மூன்றையும் அபாவமென்று உணராதது என்னை?

விடை: தன்னைத்தான் உள்ளவாறு விசாரித்துத் தெளியாமையாலென்க.

வினா: இதனையும் போலியென்றது என்னை?

விடை: மலடிமைந்தனென்றாற்போல அபாவமென்னுஞ் சொல்லே போலியென்றதற் குத்தரமென வறிக.

வினா: அத்தியாசமென்றொரு பரிபூரணத்துவம் உண்டென்றீரே; அவ்வத்தியாசத்துக்கு அருத்தம் யாது?

விடை: பழுதையைப் பாம்பென்றது அத்தியாசமாம்.

வினா: அதுபோலப்பரிபூரணமாயுள்ள பொருளிடங்காலங்கட்கு அத்தியாசமாவது என்னை?

விடை: இன்னது ஆகும் இன்னது ஆகாதென்று ஏகதேசதருமத்தை யேற்கப்படுஞ் சடசித்தாயுள்ள சமஸ்தபொருள்களும் விருப்பு வெறுப்பு மயமாமன்றிப் பிரியமய மாகா வாகலின் வஸ்து பரிச்சேதமெனவும், கடல்படுதிரவியங் கான்படுதிரவியம் வயல்படுதிரவியம் மலைபடுதிரவியம் பாலைபடு திரவியமென்பனவே யன்றி இப் பொருளனைத்தையுந் தன்பாலுள்ளதோர் இடம் இன்முதலின் தேசபரிச்சேதமெனவும், ஓர் பருவத் துள்ளது மற்றோர் பருவத்து இன்முதலானும் அப்பருவங்கடோறும் விளைவனவற்றைத் தன்பாலுள்ளதோர் காலம் இன்முதலானுங் காலபரிச்சேதமெனவுங் கூறப்படுவனவே யன்றிப் பூரணத்துவ மில்லாமையாற் பரிபூரணப்போலி யெனப்படும்.

வினா: இதுகாறுஞ் சத்து சித்து ஆநந்தம் நித்தியம் பரிபூரணமென்னப்பட்ட குணங்களை யதார்த்தமெனவும், போலியெனவும் வகுத்துக்கூறினீரே; அது யாது பயன் கருதி ?

விடை: போலிக்குணங்களைக் கண்டு விலகில் யதார்த்தகுணங்களின் ஒருமை தோன்றுமெனக் கருதியென்க. (சஅ)

அ-தை.

இம் மெய்க்குணங்கள் அறிவுக்கு அபேதமாயிருக்க இவற்றை அவ்வறிவினின்றும் வேறுபிரித்துக் கூறுவது என்னையென்ற சங்கைக்குத்தரங் கூறல்.

செம்மையொளி வெப்பந் தீபமே யென்றாற்போல்
மெய்ம்மை குணமறிவே வேறல்ல—நம்மை
யறிவே வடிவென் றறிதற்குச் சொன்ன
குறியாகு மிந்தக் குணம்.

(எ-து.) பதார்த்தசோதனை செய்யவேண்டினோன் அபேதமாயுள்ளதைச் சிவப்பு ஒளி யுட்டணமெனப் பகுத்துணர்ந்து இவைதாம் பேதியாது ஏகத்துவமாகக் காண்டலே தீபமெனத் துணிந்தாற்போல அறிவுசோதனை செய்யவேண்டினோன் அபேதமாயுள்ளதைச் சத்தாதியாகப் பகுத்துணர்ந்து இவைதாம் பேதியாது ஏகத்துவமாய் நின்று

ஒளிர்வதே யறிவெனத் துணிவதற்கன்றி இச்குணங்களை யறிவினின்றும் பிரித்ததற்குக் காரணம் வேறல்ல. இஃதன்றியும் நம்மை யறிவே வடிவமென்று நாமுணர்தற்கும், அவ்வறிவை லட்சியிப்பதற்குஞ்சுருதி சொன்ன குறிகளாகும் இவ் யதார்த்த குணங்கள்—எ-று.

இக்குணங்களை யறிவினின்றும் பிரித்துக் கூறுவிடில் நம்மை யறிவே வடிவமென்றுணர்தற்கு அரிதாமாதலின், சொன்ன குறியாரும் இந்தக் குணமெனப்பட்டது. செம்மையொளி வெப்பந் தீபமே யென்பதின்கண் ஏகாரம் சிவப்பாதி குணங்களின் ஏகத்துவத்தை யன்றித் தீபமென்ப தில்லையெனத்தெளிவிக்குமாறுபோல மெய்ம்மை குணம் அறிவேயென்பதின்கண் ஏகாரஞ் சத்தாதிகுணங்களின் ஏகத்துவத்தையன்றி யறிவென்ப தில்லையெனத் தெளிவிக்குமென வறிக. நம்மை யறிவே வடிவென்றதற் குதாரணம்;—

சொரூபசாரம்.

"நம்மையறி வேவடிவாய் நாங்கண்டோம் நம்மையன்றிச்
செம்மை யுலகத் திரள்காணோம் - நம்மைநாம்
உற்றுப்பா ராதிருந்தோ மல்லா லொருக்காலும்
இற்றுப்போ னோமோ வியாம்." (சுகூ)

அ-கை.

நம்மை யறிவே வடிவென்று அறிதலால் பயன் என்னை யென்பதற்கு உத்தரங் கூறல்.

காரணத்தை யன்றியிலை காரியந்தா னென்பதுஉங்
காரணங்கண் டாலன்றிக் காணுமோ—பூரணமாஞ்
சித்தையன்றி யில்லை செகத்தோற்ற மென்பதுஉஞ்
சித்தையத் தாலே தெளி.

(எ-று.) மண் நூல் என்னுங் காரணத்தையன்றிக் கடபடமென்னுங் காரியபேதமில்லையெனக் கற்றுவல்லோர் கூறுவதும் காரணங்கண்டவிடத் தன்றிக் கூடாமையாற் காரியங் காரணமயமாகக் காணப்படுவது எங்ஙனம்? அதுபோலப் பரிபூரணமாக விளங்குஞ் சித்தை

யன்றிச் சகத்தோற்றமில்லை யெனப் பிரபலசுருதி கூறுவதுஞ் சித்து உதயமானவிடத் தன்றிக் கூடாமையால் தேகாதிபிரபஞ்சஞ் சின்மய மாகக் காணப்படுவதெங்ஙனம்? நீயே சிந்தித்துத் தெளிதி—எ-று.

நம்மையறிவே வடிவாக் காணுதவிடத்துச் சடசித்தென்னுந் துவித மும், அதனால் தானல்லாதவற்றை யானெனதெனக் கொள்ளு மகம் பாவமும், அதனால் ஆகாமியமுதலிய கன்மங்களும் நல்வினை தீவினைக ளும், அதனால் சனனமரண சுகதுக்கமும் இடைவிடாது மாறிமாறி வரு வது திண்ணமாதல்போல, சித்துதையத்திற் சர்வமுஞ் சின்மயமாக விளங்குமாதலால் அப்போது அவையனைத்துந் தவிர்வது திண்ணமா மென்பது குறிப்பாற் றோன்றச் சித்துதயத்தாலே தெளியெனக் கூற ப்பட்டது. இதனாற் சித்துப் பிரத்தியட்சமாக விளங்கின் சகத்துற்ப த்தி தெரியுமெனப்பெற்றாம். சித்தையன்றியில்லை சகத்தோற்றமென் பதற்குஉதாரணம்:—

சொரூபசாரம்.

"சிற்சொரூபந் தானே செகசொருப மானவெலாந்
தற்சொருப சாரமாச் சாற்றவே"
என்பதினானும்,

வாசிட்டம்.

"விளக்குமிர வியுமலரு முண்டா மூண்டாம் வீசொளியும் பகற் பொழுதும் விரையும் போலத், துளக்கமில்சித் துண்டாகிலுண்டா ஞாலந் தோற்றரவு மாத்திரமே சொரூபமாகும்" (ருo)

என்பதினானுங் காண்க.

அ-கை.

சத்தாதி பஞ்சவிலக்கணமுள்ள அறிவே நாமென்றதற்கு அடை யாளங் கூறல்.

அறிவேநா மென்றற் கடையாள மென்னை
அறிதல் மயமேநா மன்றோ—பிறிதென்கொல்
செய்கை முதலாமோ செய்வானை யன்றியுண்டோ
எய்தானே காட்சிதனக் கில்.

(எ-து.) முன்னர் அறிவே நாமெனத் தேவரீர் கூறியதை ஏற்ப தற்கு நம்பால் அடையாள முளதோவெனின் அறிதல்மயமா யிருப்ப தே நமது வடிவமல்லவா? இதனினும் விளக்கத்தகுங் குறிவேறே யென்னையுளதென, அறிதல் ஓர் செயலாதலிற் செய்கை முதலாமோ வெனின், அச்செய்கையுஞ் செய்வானை யன்றி யுண்டோவென, மெய்யே செய்வா னுளனுயிற் கட்குப் புலப்படானு ? படாதல் பற்றி யவனில்லவேயில்லை—எ-று.

சாக்கிராதி சத்தாவத்தையின்கண்ணும் ஆங்கங்குள்ள காட்சிகளை யங்கங்கு இருந்தவண்ணம் இருந்து அறிதல் தவிர்தற்கு அவத்தை யற்ற நேரமின்றாதலானும், இருக்கினும் அவை தன்னைத்தானுணரும் தன்மையன்றாதலானும், அவற்றை யங்கங்கே சாட்சியாய் நின்றறி வதே தனது யதார்த்த வடிவமாதலானும், இதுபோன்ற சுயக்குறி ஒன்றின்றாதலானும் அறிதல் மயமே நாமன்றோ ! பிறிதென்கொ லெனவும், சத்தனை யன்றிச் சத்தி வேறாகாமையாற் செய்வானை யன்றி யுண்டோவெனவும், நபாதியென்பது தோன்ற எய்தானே காட்சிதனக்கெனவும், நாஸ்தியென்பது தோன்றவில்லெனவுங் கூறப் பட்டன.

வினு: சத்தாவத்தையாவது என்னை?

விடை: சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம், மூர்ச்சை, மரண மென்பனவாம்.

வினு: இவையனைத்தினும் அறிதல் மயம் நாமென்பதை யெவ் வாறு ஏற்பது?

விடை: சத்தாவத்தையினுந் தோற்றுங் காட்சிகள் தத்தமக்குள் ஒன்று தோற்றுகையில் ஒன்று தோற்றாமற் சகடக்கால்போல மாறி மாறி வருதலானும், அங்ஙனம் வரினுந் தம்மையும் மற்றொன்றையும் அறியாச் சடமாதலினானும், ஆங்கங்கே யவ்வவற்றிற்கு ஆதாரமாயும் முதற்காரணமாயும் விலட்சணமாயுஞ் சாட்சியாயும் இருந்தவண்ண

மிருந்து அறிந்து அவற்றால் வருஞ் சுகதுக்கங்களை யனுபவிப்பது நாமாதலானும் ஏற்கத் தகுமென வறிக. (௫௧)

அ-கை.

ஆன்மா இல்லையென்பதை மறுத்து உண்டெனக் குறிப்பாகச் சங்கற்ப வாசனையில் விளக்க மாணாக்கனை வினவல்.

கண்டவற்றை யுன்னளவிற் காணும் பொருளேது
கண்டனவேற் போகவரக் கண்டிலமே—கண்டிருந்த
வாசனைதா னென்னிலது வாழ்தற் கிடமெங்கே
யோசிக்கி லோர்வெளியங் குண்டு.

(எ-து.) யாம் இதுகாறுங் கண்ட பொருள் இடங் காலங்களைக் கருதி யவளவிற் பிரத்தியட்சம்போல அகத்திற் காணப்படுமவை எதென, முன் கண்டவைகளென்னின், யாம் இப்போது அவ்விடம் போகவும் அவைகளிங்கே வரவுங் கண்டிலமே. அஃதென்னையென முன்கண்ட வாசனைக் காட்சியெனின் இடைவிடாது தோற்றிக் கொண்டிருக்கும் இதுபோன்ற வாசனைகள் வாழ்தற்கு இடமெங்கே யென, இதுபற்றி யகத்திற் சிந்திக்கு மிடத்து அங்கே யோர்வெளி யுளதாகக் காண்கின்றதெனின்—எ-று.

காக்கை யிருந்த மனை கைமேற் பிறையென்றல்போல இங்கே யறிவானை விளக்கப் புகுங் குறி அதத்துவாவிருத்தி, தடத்தம், சொரூபம் என்னுந் திரிவித லட்சணையுள் தடத்தமென வறிக. (௫௨)

அ-கை.

அங்ஙனம் வினவி வந்ததால் வெளியென்பதொன் றுண்டாகக் கண்டேனென்ற மாணாக்கனை நோக்கி வினவல்.

சடவா சனைதன்னைத் தானுணர்வ துண்டோ
இடமாம் வெளியன்றி யில்லை—சடமும்பின்
எவ்வண்ண மாமெனவவ் வேகவெளி யாமென்னின்
இவ்வண்ண மெப்போ திசை.

(எ-நு.) அவ்வெளியிற் றோற்றுஞ் சடவாசனையானது தன்னைத்தான் உணர்வதுண்டோவென, அது சடமாதலால் அதற் கிடமாயுள்ள வெளியன்றி வேறொன் றுணரத்தக்க தில்லை யெனின் சடமாயுள்ள அவ்வாசனைத் தோற்றமும் பின் எவ்வாறுமென்ன, அவ்வேக வெளியாகக் கரைகின்றதெனின் இங்ஙனமாவ தெப்போது கூறுதி —எ-று.

இவ்வனுபவஞ் சிந்தனையுழைப்பைக் குறிப்பிக்கின்றது. (ருகூ)

அ-கை.

அவ்வெளியாற் றனக்குதித்த அனுபவங் கூறல்.

எப்போதுந் தானென்னி லேனவ் வெளியாகும்
அப்பேயுப் பானுற்போ லாயிற்றே—யிப்போ
துணர்வெளியே நானென் றுணர்ந்துய்யப் பெற்றேன்
உணர்வொளிபோற் காணே னொளி.

(எ-நு.) எப்போதுமேயென்னின் மீண்டும் அவ்வெளியாவானேனென நீரே யுப்பானதால் மீண்டும் அந்நீராகின்றது. அதுபோலச் சிதாகாசமே வாசனைவடிவமாகத் தடிக்குமாதலால் மீண்டும் அச்சிதாகாசமாயிற்றெனவும், நானென்பது அச்சிதாகாசத்தை யன்றி யில்லையாதலால் அச்சிதாகாசமே நானெனவும், இப்போதுண்மையாகக் கண்டுணர்ந்து பிழைத்தேனெனவும், அங்கே சிதாகாசஞ் சோதிமயமாய் விளங்கலால் அச்சிதாகாசம்போ லொளிவிட்டெறிவ தொன் றுளதாக எங்குளுங் கண்டிலனெனவுந் தனக்கு அப்போதுதித்த சுவானுபவத்தை வியந்து கூறினன்—எ-று.

உலகத்தை விளக்குவது ரவியாதிகளும், இந்தரவியாதிகளை விளக்குவது விழியும், இவ்விழியை விளக்குவது மனமும், இம்மனத்தை விளக்குவது சீவனும், இச்சீவனை விளக்குவது சர்வ சாக்ஷியாய்த் தானேதானாய் விளங்குஞ் சிதாகாசமுமாம். ஆகவே, இச்சிதாகாசம்

போன்ற வொளி வேறின்றாதலாலும் இவ்விளக்கத்தில் ஏனைய விள க்க மனைத்தும் மின்மினியாதலாலும் உணர்வொளிபோற் காணேன் ஒளியெனப்பட்டது.

வினு: விழியை விளக்குவது ரவியாதிகளா யிருக்க ரவியாதிகளை விளக்குவது விழியென்றது எங்ஙனம்?

விடை: விழியாகிய தெரிவின்றி ரவியாதி விளக்கமும், அவ்விள க்கத்திற் காணப்படுபவைகளும் இன்றாதல்பற்றி யென்க.

வினு: ரவியாதி விளக்கம் இல்லாவிடத்து இவ்விழிக ளிருந்தும் பூதபௌதிகங்களை விளக்காதிருத்தல் என்னை?

விடை: விளக்கம் இருவகைப்படும். அதாவது சட விளக்கஞ் சித்துவிளக்க மென்பனவாம். இவற்றுள் சடவிளக்கம் ரவியாதிகளும் சித்துவிளக்கஞ் சட்சுமுதலியவைகளுமாம். சடவிளக்கஞ் சடபேதங் களையும், சித்துவிளக்கஞ் சித்து சட பேதங்களையும் விளக்கும். விளக்கு மேனும் விழியாகிய சித்து விளக்கஞ் சட விளக்கத்தைக் கொண்டு பூதபௌதிகமாயுள்ள சடபேதங்களை விளக்குமேயன்றித் தானாய் விள க்காது. இதுவேதிண்ணமாயின் திரிகால ஞானியின்கண்கள் சடவிள க்க மில்லாவிடத்தும் பூதபௌதிகங்களை விளக்குமா? விளக்குமாத வின் கூடுமென வறிக.

வினு: எவ்வெவ்விளக்கத்தினும் அறிவு விளக்கமே மிக்கதென்ப தற்குப் பிரமாணமுண்டோ ?

விடை: மகாவாக்கியம்: "ஞானமே பிரமமென்ற முதன்மொழி யின் பயன்கேள் நாச்செவி கண் மெய் மூக்கு நயந்தபொறி யதனால், ஆனசுவை யோசை யொளி பரிசம்வா சனையா லறிவதுவே ஞானம தின் பிரகாச முரைக்கில், வானிரவி திங்களங்கி பிரகாச மதினும் மலர் விழிகள் பிரகாச மனமதிற் பிரகாசம், தானமுறு சீவனதிற் பிரகாச மதினுந் தன்னறிவே பிரகாசத் தானமென வறியே."

என்பதனுற் காண்க. (ருஅ)

அ-கை.

இங்ஙனம் விளங்கிய சுவானுபூதிப் பிரத்தியட்சத்திற் சகங் காணுமையைப்பற்றித் தியக்குறல்.

தெரிவுமய மாகித் தேசிற் சிறந்த
பெருவெளியே யெங்கும் பிறங்க—மருளுலகம்
எங்கொளித்த தோவறியே னெங்கிருந்தே டுற்றரவின்
இங்கிதற்கென் செய்வே னினி.

(எ-து.) தெரிவுமயமாயுந் தேசிற் சிறந்ததாயு மிருக்கின்ற பெருவெளிமாத்திரம்எங்கணும் பிரகாசித்துக்கொண்டிருக்கஇவ்வுலகத்திற் சிரத்திலழுந்திய மணிப்பாம் பிருளெங்கேயெனத் தேடுற்ருற்போல, மயக்கவடிவாயுள்ள சகத்தைக் காணத் தேடுற்றுங் காணுமையால் எங்ஙனம் போயொளித்ததோ யானறிகிலன். மேலொருகாலத்திற் ருேன்றிற் கெடுக்குமாதலால் இனி யிதற்கு என்செய்வேன்?—எ-று.

விசுவ தைசத பிராக்ஞ னென்பன ஏகமெனத்தோன்றத் தெரிவுமயமாகித் தேசிற்சிறந்த பெருவெளியே யெங்கும் பிறங்கவெனவும், அறிவறியாமை விசாரத் தெளிவின்றிய சகமென்பது தோன்ற மருளுலகமெனவுங் கூறியவா றுயின. (ருகு)

அ-கை.

சித்தை விளக்கியதுபோற் சகத்தினது உண்மையை விளக்க வேண்டு மெனல்.

எந்தா யருண்மூர்த்தி யில்லை யுனையன்றிச்
சந்தேகத் தாக்கறுக்கத் தக்கவர்கள்—வந்தொருகால்
முன்போற் கெடுப்பதின்முன் மூலமறுத் தாள்வாயென்
றன்போ டிரந்தா னவன்.

(எ-று.) எனது ஞானத் தந்தையே! கிருபா மூர்த்தியே! சந்தேக இடையூறு தவிர்க்கத் தக்கவர்கள் உன்னையன்றி யில்லையாதலால் இப்போது ஒளித்தவுலகம் இனி யோர்காலத்து வந்து முன்போல் அடியேனைக் கெடுப்பதின்முன் இதன் மூலத்தை விளக்கிக் கெடுத்தளிப்பா யென்று அவரை யன்போ டிரந்து வேண்டினான் அம்மாணாக்கன்—எ-று.

“திரிவித வுலகத் தரிதொரு ஞானி” யென்பதைக் குறிப்பிக்க, இல்லை யுனையன்றிச் சந்தேகத் தாக்கறுக்கத் தக்கவர்க ளென்றார். இங்கே மூலமென்பது பிரகிருதியை. (௫௬)

அ௩.*

மேற்படியொருகவியாலும் அதனை விளங்கக் கூறல்.

விழித்துப்பா ரென்றனவில் வீறுலகங் காணா
விழித்துப்பா ரெங்ஙனெனா வீரன்—விழித்தறிவில்
என்றுனங் கேகண்ட இவ்வழியோ பாரென்ன
ஒன்றேயென் றாயுந்தனி யுள்.

(எ-று.) அந்தனம் இரந்து வேண்டின மாணாக்கனை நோக்கிச் சமாதியிட்டு விழித்துப்பாரென்று ஆசிரியர் சொல்ல, அவ்வாறு இவன் விழித்தவிற் பயனற்றவுலகங் காண, இப்போ திந்த எதிரிடத்திற் காணப்படுகின்றது? தனது ஞானக்கண்ணைத் திறந்து பாரென்ன, விரகிய மாணாக்கன் அவ்வாறு விழித்து அறிவி லென்றான். சமாதியில் விளங்கியது இவ்வுலகமோ? சிந்தித்துப் பாரென்ன, அப்போது அவன் அகத்தில் சிந்தித்து அவ்வழியும் இவ்வழியும் ஒன்றேயெனக் கூறினான்—எ-று.

திருத்தி செய்யாததால் வீறுலகமெனவும், அஞ்சாது அஞ்ஞானத்தைக் கோறலின் வீரனெனவுங் கூறினார். (௫௭)

அ-கை. இ-து.

இப்போதெங் கேயுலக மிப்போதுங் கண்டிலனான்
எப்போதுங் காணுமே யிவ்வுலகம்—இப்படிநீ
ஆதாரங் கண்டிருக்கி லாதேய மில்லென்றான்
ஆதாரங் கண்ணாயி னான்.

(எ-து.) அகம்புறத் தொன்றே யறிவென்னில் அவ்வறிவு விளக்கத்தில் இப்போது சகத்து எங்ஙனமெனை வினவ, அகத்திற் காணாவண்ணம்போல யான் இப்போதுங் கண்டிலனெனக் கூற, இவ்வண்ணஞ் சதாகாலமும் ஆதாரமே கண்டிருக்க வல்லையாயின், ஆதேயமான உலகு இங்கு எப்போதுங் காணுமோவென, அதற்கு ஆதேயமே யில்லாமற் போமென்றான். ஆதாரமே கண்ணானவனாகிய மாணாக்கன் —எ-று. (௫அ)

அ-கை. இ-து.

ஆதார மேயுலகிங் காமென்றற் கையமில்லை
ஆதாரம் போற்குணமிங் காகாதென்—ஓதாரம்
பாலே தயிராகிற் பாற்குணமிங் குண்டாமோ
சீலா வுனைக்கண்டு தேர்.

(எ-து.) ஐயனே! ஆதாரமே சகத்து இங்கு ஆமென்றற்கு ஐயங் கிஞ்சித்தேனும் இல்லை. நீரே அலையாயினும் நீர்க்குணம் அலையான விடத்தும் உண்டாயிருப்பதுபோலச் சித்தே சகத்தாயினுஞ் சித்தினது குணஞ் சகத்தானவிடத்தும் இல்லாதிருப்பானேனெனை, ஆதாரமான பாலே தயிரானவிடத்துப் பாலினது குணந் தயிருக்குண்டாமோ, பரிசுத்தமான மாணாக்கனே யுன்னைக்கண்டு தெளிதி—எ-று.()

அ-கை. இ-து.

குணபேத மன்றிக் குணிபேத மின்றேல்
நணுகாச் சடசித்து நாட்டம்—நணுகுவதென்

பொன்னே பணியாகப் பொன்னூட்டத் தோடணியும்
என்னே வருதற் கிசை.

(எ-து.) ஆதார ஆதேயங்கட்குக் குணபேதமன்றிக் குணிபேத மில்லையாயின், சடசித்து நாட்டபேதம் வராது. வருவதால் வருதற்கு க் காரணம் என்னவெனிற் பொன்னே பணியாய் அமையப் பொன் னூட்டமும் பணிநாட்டமும் வருதற்குக் காரணம் என்னை ? நீயே சொல்லுதி யென்றாசிரியர்கூற—எ-று. (௯0)

அ-கை. இ-து.

காரணம்போற் காரியமுங் காணா வகையென்னை
காரணம்போற் காணுமோ கானனீர்—பூரணமாஞ்
சித்துதயத் தோடே செகத்தொருங்கு காணுதென்
அத்தநிழற் போலே யறி.

(எ-து.) காரணமாகிய சித்தைப்போலக் காரியமாகிய சகத்து விளங்காததென்னையெனின், காரணமாகிய சூரியப்பிரகாசம்போற் காரியமாகிய கானனீர் காணப்படுமோ வென்று ஆசிரியர் கூற, இஃது உண்மையே. சித்து விளக்கத்தோடே சகத்தொருங்கு காணுவகை யென்னையென, ஆடியிற் பிரதிபிம்ப வதனத்தைக் கண்டமாத்திரத் திற் பிம்பவதனத்தையும் ஒருங்கே கண்டுகளிக்குமாறுபோலு மெனத் தெரிந்து கொள்ளுதி—எ-று.

அத்த நிழற்போலப் பூரணமாஞ் சித்துதயத்தோடே சகத்தொ ருங்கு காணுது காணு மெனினு மமையும். (௯௧)

அ-கை. இ-து.

மாயானை யொன்றிலொன்று மாயம்போற் காணும்
உரநாட்டத் தோடசத்தை யுன்னிற்—றிரநாட்டம்
எவ்வுயிர்க்குங் காணுதென் னேனெங் தகர்க்கிரவி
யெவ்வளவுங் காணு திசை.

(எ-று.) இஃதன்றியுஞ் சித்துநாட்டத்தையுஞ் சடநாட்டத்தை யம்பற்றிச் சிந்திக்குமிடத்தில் மரத்தாலாகிய யானைவாகனம் மரநாட்டத்தில் யானையும், யானைநாட்டத்தில் மரமும் இல்லனவாகக் காணுமாறுபோலத் தோற்றுமே யன்றி யொருங்கு காணுதெனக்கூற, இங்ஙனமாயினுந் தெளிந்த இவ்வனுபவ நாட்டமேனும் எவ்வுயிர்க்கும் விளங்காததென்னையெனின், பிறவிக் குருடருக்குச் சூரியன் கிஞ்சித்தேனுங் காணப்படாதது என்னை? நீயே சொல்லுதி—எ-று. (கூஉ)

அ-கை. இ-து.

இடையிலெனக் கன்னியம்போ லேன்காணு மென்ன
இடையினுமண் ணுக்காணி னெங்கே—கடபேதங்
காணுமைக் கேதென் காக்குமறி யாமையினுற்
றோணுமைக் கேதென்னை சொல்.

(எ-று.) முன்பின் இல்லாப் பந்தமுத்திகள் இடையில் எனக்கு அன்னியம்போற் றோற்றுவானேனென்னில், முன்னும் பின்னும் மண்ணைக் கண்டவாறுபோல இப்போதும் மண்ணைக் காணிற் கடபேதங்கள் எங்கே? அதுபோல முன்னும் பின்னுந் தானாக விளங்கிய பந்தமுத்திகள் இப்போதுந் தானாகக் காணின் அவைகளெங்கே யெனக் கூறத் தானாகக் காணுததற்கு ஏதென்னையெனின், தன்னை மறைத்த அறியாமையினாலெனக் கூற அவ்வறியாமை வருதற்கு ஏது என்னை? தெரித்தருளுமென வினவ—எ-று. (கூங)

அ-கை. இ-து.

பகுக்கப் படாத்தரையைப் பாத்தெனதென் பார்போற்
பகுக்கப் படாவறிவைப் பாத்திங்—ககத்தாலே
நானெனதென் றெண்ணியதா னண்ணுமஃ தெச்சொருபம்
ஆனதறி வென்றே யறி.

(எ-து.) எண்ணத்தால் ஒருவன் றன்னைப் பகுக்கினுந் தனக்கு அப்பாகுபாடின்றி யென்றும் ஒரு தன்மையதாக நிற்கும் நிலத்தை வகுத்து எல்லையிட்டு எனது எனதென்று வழக்கிட்டு மடிவார்போல, சங்கற்பத்தாற் றன்னை வகுக்கினுந் தனக்கு அப்பாகுபாடின்றி யென்றும் ஒரு தன்மையதாக விளங்கும் அறிவை யுபாதியளவாக அகங்காரத்தாற் பகுத்து நானெனதெனக் கற்பித்து அழிவதாலெனக் கூற, அங்ஙனம் உண்டாம் அவ்வறியாமை யாதுசொரூபமெனின் அறிவை யறியாமை யானதென வறிக—எ-று.

வகுத்தலுக்கு முன்னும் பின்னும் இடையினும் அங்ஙனமாகாது ஒரு தன்மைத்தா நிற்கும் நிலம்போல யான் எனதென்று வகுத்தலுக்கு முன்னும் பின்னும் இடையினும் அங்ஙனமாகாது ஒரு தன்மைத்தா நிற்கும் அறிவாதலிற் பகுக்கப்படா வறிவெனப்பட்டது. (கூ௭)

அ-வகு. இ-து.

அறிவே யறியாமை யாமோ களங்கம்
நிறைவெண் மதியன்றி நில்லா—தறியதுபோல்
என்றூற் களங்கத் திருண்டமதி காணுண்டோ
அன்றே விளங்குமதி யால்.

(எ-து.) அறிவே யறியாமையாகுமாவெனின், சந்திரனை யன்றி யதனிற் கருநிறமாகத் தோற்றுங் களங்கம் வேறில்லாததுபோலறிதி யெனக் கூற, அறிவானது அறியாமையால் முழுதும் மறைக்கப்படு மெனிற் களங்கத்தால் மூடப்பட்டு இருண்டுள்ள சந்திர னென்பது ஒன்றுண்டோவென அறிவாலறியாமை விளக்கப்படுதலின் சந்திரனூற் களங்கம் விளங்கப்படுமல்லவாவெனக் கூற—எ-று.

ஊனக்கபோதி யொருவன் பார்வையிழந்தே னென்புழி பார்வை தனக்கு ஏகதேசமாதலின் அதனது இழப்பைத் தன்பாற் கண்டெனா ற்குமாறு போன்று ஞானக்கபோதி யொருவன் எல்லை யறிய

 னென்புழி அவ்வறிவு தனது வியாபகத்துக்கு ஏகதேச மாதலின், அதன் இழப்பைத் தன்பாற் கண்டுணர்த்துவ தாதலின் அறிவே யறி யாமை யெனப்பட்டது.

வினா: இங்கே யறிவென்ப தியாது?

விடை: ஞானமாம்.

வினா: அஞ்ஞானம்போல ஞானமுந் தனக்கு ஏகதேசமாமோ?

விடை: சலமயமாயினுஞ் சமுத்திர மென்புழிப் பரிபூரண திருஷ்டியும், சல மென்புழி யேகதேச திருஷ்டியும், அலை திவலை யென் புழி விகாரதிருஷ்டியும் அமையுமாறுபோல, ஞானமயமாயினும் ஆன் மாவென்புழிப் பரிபூரண திருஷ்டியும், ஞான மென்புழி யேகதேச திருஷ்டியும், அஞ்ஞானம் என்புழி விகார திருஷ்டியுமா மாதலி னென்க. (சுரு)

அ-ஙை. இ-து.

ஆனாலஞ் ஞானத் தறிவுவெளி யாகாதென்
றானா வுடல்கண்ட நாட்டத்தால்—தானாய்
இருக்குஞ் சுழுத்திதனி லேனோ விளங்கா
திருட்டிப்பா ழாவே னிசை.

(எ-து.) அங்ஙனமாயின் அஞ்ஞான காலத்தில் அறிவு விளங்கா ததற்கு ஏது என்னையெனின், வினைகாரணமாகத் தோன்றித் தோ ன்றி மரிக்கும் உடலை நானென் றபிமானித்து, அதனையே கர்த்தா போக்தாவாகக் கண்டுகொண்டிருக் நாட்டத்தாலெனக் கூற, தேகாதி பிரபஞ்சங் காணப்படாது ஆன்மாத் தானாயிருக்குஞ்சுழுத்தி யில் அவ்வான்மா விளங்காது யான் இருண்டு பாழ்பட்டிருப்ப தேனோ அறிகிலென் இதனைத் தெரித்தருடி—எ-று.

நனவிலுங் கனவிலும் விகாரப்பட்டிருப்பினுஞ் சுழுத்தியில் விகாரமின்றி ஆன்மாத் தானே யிருத்தலினானும் அங்கே தான் விளங்கு

தற்குத் தடையின் றுதலினுனுந் தாறு யிருக்குஞ் சுழுத்தி தனில் ஏனோ விளங்கா திருட்டிப்பாழாவே னிசை யென்றுர். (கூகூ)

அ-கை. இ-து.

கண்டவிட யம்பலனுக் கண்டுணர்ந்த காட்சிக்குக்
கண்டவிட யந்தவிர்ந்த காலத்திற்—கண்டுணர்தல்
பாழ்பலனுங் கூத்துணர்ந்த பார்வைக்குக் கூத்தொழியிற்
பாழ்பலனு மென்பதுபோற் பார்.

(எ-து.) நாளுவிதமா யுள்ள விடயரூபமே பலனுகக் கண்டுணர்ந்துவரும் நாட்டத்துக்கு அந்த நாளுவித விடயரூபம் மறைந்த அவசரத்திற் பலனுகக் கண்டுணர்தல் பாழாம். அஃதெங்ஙனமெனின் களரியிற் கூத்தே பலனுகக் கண்டுணர்ந்துள்ள நாட்டத்துக்கு அக்கூத்துக் கலைந்த விடத்திற் பலனுகக் கண்டுணர்தல் பாழா மென்பதுபோல முடியும்; இதனை நினது சுவானுபவத்திற் சிந்தித்துப் பார்—எ-று.

எனவே, ஆதார நாட்டத்திற் பாழ்படுதே லின்றென்பது பெற்றும். (கூஎ)

அ-கை.

ஞாளுஞ்ஞானங்களில் ஞானமே மேலென்றது என்னை யெனவினுவல்.

ஞானே தயத்திலஞ் ஞானங்கா ணுப்போலஞ்
ஞானே தயத்திந்த ஞானமுந்—தானே
மறைந்திருக்க ஞானமே மற்றிரண்டுண் மேலென்
றறைவானே னையா வறை.

(எ-து.) ஞானேதயகாலத்தில் அஞ்ஞானங் காணு வாறுபோல அஞ்ஞானேதயகாலத்தில் அந்த ஞானமுந் தானே மறைவதில் ஒத்திருக்க இவ்விரண்டுள் ஞானமே யேனைய அஞ்ஞானத்திலும் மிக்குச் சிறப்புற்ற தெனக் கூறுவானேன்? ஐயனே! இவ்வைய மகலத் தெருத்தருடி—எ-று. (கூஅ)

அ-கை.

அதற்கு விடையுஞ் சித்து நாறு விகாரவடிவாதற்கு எது என்னை யென்னும் வினாவுங் கூறல்.

அஞ்ஞான காலத் தறிவன்றி யோர்விடையம்
எஞ்ஞான்று மில்லவே யில்லையால்—இஞ்ஞாயத்
தாலென் றறிதி யறிவிப் பிரமையுரு
வேலற்கே தென்ன விசை.

(எ-து.) ஞாஞேதயகாலத்து அறிவு தானே பூரணமாயிருப்பது மன்றி அஞ்ஞாஞேதய காலத்தினும் ஓர் விடயமும் அவ்வறி வன்றி யெக்காலத்தினும் இல்லவே யில்லை. ஆதலால் இஞ்ஞாயம்பற்றி ஞான மே முக்கியமெனக் கூறினதை நீயறிதியென் ருசிரியர் கூற, அங்ஙன மாயின் நிர்விகாரமான அறிவு சக சீவ பரமாயுள்ள இவ்விகாரப் பிர மைவடி வாதற்கு எது என்னை? இதனைத் தெருத்தருடி—எ-று. (கூக)

பிரமை யுருவென்றது மயக்க வடிவத்தை.

அ-கை.

இதுமுதல் மூன்று கவியானும் அதற்கு விடைகூறல்.

பழுதைபாம் பாயிற்ருே பாம்பாகத் தோற்றம்
எழுதற்கிங் கேதுண்டோ வென்னப்—பழுதையாப்
பார்த்த பழக்கமெனிற் பாம்பாகக் காண்பதெது
போர்த்தப்பாற் பேசல் பிழை.

(எ-து.) பழுதை பாம்பாயிற்ருே, இல்லை யெனிற் பாம்பாகக் காணுந் தோற்றம் இங்கு வருதற்குக் காரணம் வேறுண்டோவென, இல்லை; யாமுன்னர்ப் பாம்புகண்ட பழக்கத்தாலெனின் பாம்பாகக் காணப்படுவது எது? பழுதையாதலானும் அதனைவிட் டப்பாற் கட ந்து பேசுவது வரைகடப்ப தாதலானும் அது பிழையாமென் றறிதி—எ-று.

இங்கே ஆசிரியர் விளுதல்: "அறிவறியாமை யையுறல் கொளல் கொடை" யென்னும் விதியில் இஃது அறிவிளு. பாம்பாயிற்ளுே என்பதின்கண் ஒகாரம் மறுத்தற் பொருள் தருதலால் எதிர்மறை. நிர்விகார அறிவு சக சிவ பரமாக விகாரித்ததோ? இல்லவே யில்லை யெனப் பொருள்படப் பழுதை பாம்பாயிற்ளுே வெனவும், ஆளுல் அறிவு விகாரித்ததாகத் தோற்றுகின்றதே, இத்தோற்றம் வருதற்குக் காரணம் யாதோ வென்பதைப் பாம்பாகத் தோற்றம் எழுதற்கு இங்கு ஏதுஉண்டோ வெனவும், இவ்விகாரவடிவும் அநாதிநித்தியத்துவமென் பது தோன்றப் பழுதையாப்பார்த்த பழக்கமெனவும், எது விகாரித்து த் தோற்றுகின்ற தென்பதைப் பாம்பாகக் கண்டது எதுவெனவும், அறிவு அறியாமைபற்றிய வாதத்தைவிட்டு அநாதி யறியாமையென் னும் இரண்டைப்பற்றி வாதித்தல் இவனன்ளுமையின் அது பிழையா மென்பது தோன்றப் பேர்த்தப்பால் பேசல் பிழையெனவுங் கூறிய வாளுயிற்று. (எ0)

அ-கை. இ-து.

பழுதைமுன் னிட்டன்றிப் பாம்பென்ப துண்டோ
பழுதைக்கும் பாம்புக்கும் பாராய்—வழுவன்று
திட்டாந்தத் தொன்றீது செப்பு விவர்த்தமெனுங்
கட்டைவிட் டோதாது காண்.

(எ-து.) பழுதை முன்னிட்டல்லாமல் பாம்புப் பிராந்திதோற்று மா? தோற்ளுதே; ஆதலின், பழுதை பாம்பென்னுங் காரண காரியங் கட்கு ஒற்றுமை பார்; அங்ஙனம் பார்ப்பது யாவர்க்குஞ் சம்மதமாத லாற் பிழையன்று. அன்றியும் இது விருத்தி பரிணுமம் ஆரம்பம் விவ ர்த்தமென்னுந் திருஷ்டாந்த நான்களுள் விவர்த்த திருஷ்டாந்த மாத லால் இவ்வணைகடந்து பேசுதல் தவிர்ந்து நெறிநிற்றலைக் காணுதி— எ-று.

எனவே, ஞாயவாதத்தைக் கடைப்பிடி யென்பது பெற்றும். இங்கே கட்டென்பது ஒழுங்கை. பழுதை யிராவிடத்துப் பாம்புப் பிராந்திதோற்றவேண்டும்; அங்ஙனந் தோற்றாமையாற் பழுதை முன் னிட்டன்றிப் பாம்பென்ப துண்டோ வென்றார். பழுதை முன்னிட் டன்றிப் பாம்பென்ப துண்டோ வென்பது அறிவ முன்னிட்டன்றி அறியாமை தோற்றுமா வெனவும், பழுதைக்கும் பாம்புக்கும் பாரா யென்பது அறிவுக்கும் அறிபொருளுக்கும் ஒற்றுமை பாரெனவும் பொருள்படக் கூறியவாறு காண்க. முற்கவியிற் பழுதை பாம்பாயிற் றோ வென்பது அறிவு அறியாமை யாயிற்றோ வெனவும், இக்கவியிற் பழுதை முன்னிட்டன்றிப் பாம்பென்ப துண்டோ வென்பது அறிவு முன்னிட்டன்றி யறியாமை யுண்டாவெனவும் பொருள் படுதலால் அறியாமை யில்லாதபோதும் உள்ளபோதும் அறிவுண்டென்பது பெற் றும். இதற்குதாரணம் :—

கைவல்லிய நவநீதம்.

"ஆதாரமறைந்துபோனால் ஆரோபம் எங்கே தோன்றும், ஆதார மறையா தாகில் ஆரோப மிலையே." (எக)

அ-கை. இ-து.

சரட்டின் மணியென்னச் சாற்றலு மாகா
சரட்டை மணியெனவுஞ் சாற்றோம்—புரட்டாகும்
மண்ணூ லிடமன்றி மன்னுமுதற் காரணமும்
பண்ணுங் கடபடத்திற் பார்.

(எ-ரு.) நூற்சரட்டில் முத்து முதலியவை யிருக்கின்றனவெ ன்று சொல்லலு மாகாது; சரடே மணியென்றுஞ் சொல்லவு மாட் டோம். சொன்னாற் பேத வாதப் புரட்டாய் முடியுமாதலின் இவ்வுவ மை தக்கதன்றென மறுத்துக் கடபடங்கட்கு மண்ணும் நூலும் ஆதா ரமாய் நிற்பதன்றி அவற்றிற்கு முதற் காரணமாயும் இருத்தலால்அந்த மண் நூலாலாகிய கடபடத்திற்றானே நீ யதனைக் கண்டுணர்தி— எ-று.

இங்கே ஆசிரியர் வினுதல்: "அறிவறியாமை யையுறல் கொளல் கொடை" யென்னும் விதியில் இஃது அறிவினு. பாம்பாயிற்றோ என்பதின்கண் ஓகாரம் மறுத்தற் பொருள் தருதலால் எதிர்மறை. நிர்விகார அறிவு சகசீவ பரமாக விகாரித்ததோ? இல்லவே யில்லை யெனப் பொருள்படப் பழுதை பாம்பாயிற்றோ வெனவும், ஆனல் அறிவு விகாரித்ததாகத் தோற்றுகின்றதே, இத்தோற்றம் வருதற்குக் காரணம் யாதோ வென்பதைப் பாம்பாகத் தோற்றம் எழுதற்கு இங்கு ஏதுஉண்டோ வெனவும், இவ்விகாரவடிவும் அநாதிநித்தியத்துவமென் பது தோன்றப் பழுதையாப்பார்த்த பழக்கமெனவும், ஏது விகாரித்துத் தோற்றுகின்ற தென்பதைப் பாம்பாகக் கண்டது எதுவெனவும், அறிவு அறியாமைபற்றிய வாதத்தைவிட்டு அநாதி யறியாமையென்னும் இரண்டைப்பற்றி வாதித்தல் இவணன்றுமையின் அது பிழையா மென்பது தோன்றப் பேர்த்தப்பால் பேசல் பிழையெனவுங் கூறிய வாறுயிற்று. (எ0)

அ-கை. இ-து.

பழுதைமுன் னிட்டன்றிப் பாம்பெனப தூண்டோ
பழுதைக்கும் பாம்புக்கும் பாராய்—வழுவன்று
திட்டாந்தத் தொன்றீது செப்பு விவர்த்தமெனுங்
கட்டைவிட் டோதாது காண்.

(எ-து.) பழுதை முன்னிட்டல்லாமல் பாம்புப் பிராந்திதோற்று மா? தோற்றுதே; ஆதலின், பழுதை பாம்பென்னுங் காரண காரியங் கட்கு ஒற்றுமை பார்; அங்ஙனம் பார்ப்பது யாவர்க்குஞ் சம்மதமாத லாற் பிழையன்று. அன்றியும் இது விருத்தி பரிணமம் ஆரம்பம் விவர்த்தமென்னுந் திருஷ்டாந்த நான்களுள் விவர்த்த திருஷ்டாந்த மாத லால் இவ்வணைகடந்து பேசுதல் தவிர்ந்து நெறிநிற்றலைக் காணுதி—எ-று.

எனவே, ஞாயவாதத்தைக் கடைப்பிடி யென்பது பெற்றும். இங்கே கட்டென்பது ஒழுங்கை. பழுதை யிராவிடத்துப் பாம்புப் பிராந்திதோற்றவேண்டும்; அங்ஙனந் தோற்றுமையாற் பழுதை முன் னிட்டன்றிப் பாம்பென்ப துண்டோ வென்றார். பழுதை முன்னிட் டன்றிப் பாம்பென்ப துண்டோ வென்பது அறிவ முன்னிட்டன்றி அறியாமை தோற்றுமா வெனவும், பழுதைக்கும் பாம்புக்கும் பாரா யென்பது அறிவுக்கும் அறிபொருளுக்கும் ஒற்றுமை பாரெனவும் பொருள்படக் கூறியவாறு காண்க. முற்கவியிற் பழுதை பாம்பாயிற் றோ வென்பது அறிவு அறியாமை யாயிற்றோ வெனவும், இக்கவியிற் பழுதை முன்னிட்டன்றிப் பாம்பென்ப துண்டோ வென்பது அறிவு முன்னிட்டன்றி யறியாமை யுண்டாவெனவும் பொருள் படுதலால் அறியாமை யில்லாதபோதும் உள்ளபோதும் அறிவுண்டென்பது பெற் றும். இதற்குதாரணம்:—

கைவல்லிய நவநீதம்.

"ஆதாரமறைந்துபோனல் ஆரோபம் எங்கே தோன்றும், ஆதார மறையா தாகில் ஆரோப மில்லையே." (எக)

அ-கை. இ-து.

சரட்டின் மணியென்னச் சாற்றலு மாகா
சரட்டை மணியெனவுஞ் சாற்றோம்—புரட்டாகும்
மண்ணூ லிடமன்றி மன்னுமுதற் காரணமும்
பண்ணுங் கடபடத்திற் பார்.

(எ-நு.) நூற்சரட்டில் முத்து முதலியவை யிருக்கின்றனவெ ன்று சொல்லலு மாகாது; சரடே மணியென்றுஞ் சொல்லவு மாட் டோம். சொன்னாற் பேத வாதப் புரட்டாய் முடியுமாதலின் இவ்வுவ மை தக்கதன்றென மறுத்துக் கடபடங்கட்கு மண்ணும் நூலும் ஆதா ரமாய் நிற்பதன்றி அவற்றிற்கு முதற் காரணமாயும் இருத்தலால்அந்த மண் ணூலா லாகிய கடபடத்திற்றனே நீ யதனைக் கண்டுணர்தி— எ-று.

அறியாமைக்கு அறிவு ஆதாரமும் முதற்காரணமு மாதலின் சரட்டு மணியை விலக்கி யறிவறியாமை அபேதமாமெனக் குறிப்பிக்க மண் ணூவிட மன்றி மன்னுமுதற் காரணமும் பண்ணுங் கடபடத்திற் பாரெனை வுவமை கூறியவாறு காண்க. இம்மூன்று கவியானும் அறிவு நிர்விகாரியெனப் பொருள்படக் கூறியவாறு காண்க. (எ௨)

அ-கை.

தேகாதி பிரபஞ்ச மனைத்துஞ் சிற்பாவனை யாதலாற் சித்தை யன்றி யற்பமும் இன்றெனல்.

தேகநா னென்பவெலாஞ் சித்தினது பாவனையேல்
தேகாதி காணுலகஞ் செப்பவோ—தேகம்
நினைவு கனவுகளி னீநானென் றேதிங்
கனையதே சித்தென் றறி.

(எ-து.) எவ்வுயிருந் தேகம் நானெனப்படுவன வெல்லாஞ் சிற்பாவனையாயின் தேக முதலாகக் காணப்பட்ட வுலக மனைத்துஞ் சிற்பாவனையென்று சொல்லவேண்டுமோ? இதன்றியும் நனவி லன்றி நினைவு கனவுகளில் தேக வடிவாய் நின்று நீ நானென்று விவகரிப்பது எதுவோ, அதுவே சித்துப் பொருளென் றிங்குணர்தி—எ-று.

இதனால் தூலாதி யனைத்துஞ் சித்தின் றடிப்பென்ப தாயிற்று.()

அ-கை.

சித்துக்குச் சகத்து ஆதாரமென்பதை மறுத்துச் சங்கற்பமே சகத்துக்கு ஆதாரமெனக் கூறல்.

சித்திடமன் றுருகுஞ் செகபா வனையாலே
சத்தமுத லெந்திற்குந் தாமிடமே—தத்தமக்குள்
என்றால் வெளிக்கிங் கிடமிந் திரியமிதற்
கன்றேசங் கற்பமிட மால்.

(எ-து.) சகத்துப் பாவனுவடிவ மென்றதனுல் சித்துத் தன்னைப் பாவிப்பதற்குச் சகத் திடமா யிருக்கவேண்டுமே யன்றிச் சித்து சகத்துக்கு இடமாகாது; எங்ஙனமெனின், சத்ததன் மாத்திரையான ஆகாய முதலிய பஞ்ச பூதங்களுந் தமக்குள் தாமே காரண காரிய வகையால் இடமாகுமென்று கூறுவையாயின், மண்ணுக்குச் சலமும், சலத்துக்கு அக்கினியும், அக்கினிக்கு வாயுவும், வாயுவுக்கு ஆகாயமும் ஆதாரமானுற்போல ஆகாயத்துக்கு இந்திரியமும் இந்திரியத்திற்குச் சங்கற்பமும் இடமாயிருக்குமல்லவா? இங்ஙனம் இருத்தலால் இதனை மறுத்தல் கூடாதென் றறிதி—எ-று.

எனவே, சங்சுற்ப மன்றிச் சகத்துக்கு ஆதாரம் இன்றென்பதாயிற்று. (எச)

அ-கை.

அங்ஙனமாயின் சங்கற்பஞ் சகத்திற்கு ஆதாரமே யன்றி முதற் கருவி யாகாதெனை வினுதல்.

சங்கற்ப மன்றிச் சகத்தோற் றமவெங்கே
சங்கற்ப மேயிடமாச் சாற்றலாம்—இங்கீ
துலகுமுதற் காரணமென் றெண்ணது கண்டான்
பலவுருவ மாமோ பகர்.

(எ-து.) அதற்கு மாணுக்கன் சங்கற்பத்தைத் தவிரச் சகத்துத் தோன்றி மறைதற்கு இடம் எங்கே யிருக்கின்றது? இல்லாமையாற் சங்கற்பமே யதற்கு இடமென்று திடமாகச் சொல்லலாம். இதுபோலச் சங்கற்பம் முதற்கருவியாமெனக் கூறுதல் கூடாது; கூடுமெனிற் கண்ணனது தன்னுல் அறியப்பட்ட சமஸ்த வடிவமுந் தானுகுமா? ஆகாதே. கர்த்தனே! இதனைச் சொல்லுதி—எ-று.

உருவங்கட்குச் சித்து கண்ணனதால் இவ்வொன்றை விளக்கில் அனைத்தையும் விளக்கினதுபோலா மென்பதைக் குறிப்பிக்கக், கண்டான் பல வுருவமாமோ பகரெனப்பட்டது. (எரு)

அ-ரைகை.

சித்துத் துணைக்கருவியா மென்ற மாணுக்கனை யேற்றல்போல் மறுத்தல்.

உருவருவங் கண்டுணர்தற் குற்றபொறி யென்பர்
பெரியருந்தான் மெய்யே பிழையன்—றருவுருவஞ்
சத்தாகா சித்தாகா தாமென் றதற்கன்றிச்
சித்தாந்த மாமோ தெளி.

(எ-து.) ரூபாரூபங்களைக் கண்டுணர்தற்குப் பொறிகள் துணைக் காரணமா மென்று அறிஞருங் கூறுவர்; அது மெய்யே. அங்ஙனங் கூறுவது ஓர் வகையாற் பிழையன்று. சத்து சித்தாகக் கருதப்படும் உருவங்களை அசத்து சடமெனப் பூர்வபட்ச மாக்குதற்கு இங்ஙனங் கூறினதேயன்றி, அதுவே சித்தாந்தமாமோ தெளிநியென் றாசிரியர் கூற—எ-று.

பொறிகளைத் துணைக்காரண மென்றது முதற்காரண மென்யாரை மறுத்தற் கன்று; சகத்தைச் சத்து சித்தாகக் கருதியதைத் தடுத்தற்கென்க. (எசு)

அ-ரைகை.

சங்கற்பமே யுல கென்றதை ஆசாரியர் ஞாயத்தால் மறுத்தல்.

சங்கற்ப மன்றியொன் றைத் தாமே பொறியறியா
சங்கற்ப மேயுலகாச் சாற்றலா ஞ்—சங்கற்பம்
இல்லாச் சுழுத்திக்க ணில்லா வுலகதனால்
நல்லா யிதையுன்னி நாடு.

(எ-து.) சங்கற்பத்தைத் தவிரப் பொறிகள் தாமே விடயங்களில் ஒன்றையும் அறியாவாதலிற் சங்கற்பமே யுலகமாகச் சொல்லலாம். அஃதெங்ஙன மெனின், சங்கற்பம் அடங்கிய சுழுத்தியின்கண்

சகந் தோற்றுதலினாற் சற்புத்திரா, இந்த ஞாயத்தை யுன்னுள்ளத்திற் சிந்தித்து இது மெய் பொய் யென்பதை நாடுதி—எ-று.

சகத்துக்குப் பொறியும் பொறிக்குச் சங்கற்பமுங் காரணமாம் என்பார் சங்கற்ப மன்றி யொன்றைத் தாமே பொறியறியா வெனவும்; சங்கற்ப விரிவே சகத்தென்பதைக் குறிப்பிக்க வந்தவர் சங்கற்ப மில்லாச் சுழுத்திக்க ணில்லா வுலகெனவுங் கூறினார். கூறவே, சங்கற்ப விரிவே சகத்தென்பதைச் சாக்கிரத்திலும், அதன் குவிவே பாழென்பதைச் சுழுத்தியிலும் பிரத்தியக்ஷமாகக் காணலாமென்பது பெறறாம். நல்லா யிதை யுன்னி நாடென்பதினாற் சங்கற்பம் விரிந்த விடத்திற் சகத்துங் குவிந்தவிடத்து அஃதின்மையும் நீயே சிந்தித்து யான் கூறியது சரியென்பதையும் அல்லவென்பதையும் பாரென்பதாயிற்று.

அ-கை.

அதனாற் சங்கற்பமே முதற்காரணமாமெனல்.

முதற்கருவி சங்கற்ப முற்றுலகுக் கன்றி
யிதைதத்தவிர வேறொன் றியம்பம்—முதற்கருவி
யல்லவெனிற் காணிலிதை யப்போ தெரியுமன்றிச்
சொல்லினா லென்னபயன் சொல்.

(எ-று.) சமஸ்த வுலகங்கட்குஞ் சங்கற்பமே முதற்கருவியாம் எனக் கூறுதுமன்றி யிந்தமுதற்கருவியைத் தள்ளி வேறு கருவியாகக் கூறுதுமல்லம். இதுமுதற்கருவி யாகாதெனின், அம்முதற்கருவியைப் பிரத்தியக்ஷமாகக் காணவல்லையாயின் அப்போது இதனுண்மை நினக்கு ஐயமின்றித் தெரியுமன்றி யிவ்வெறுஞ் சொல்லால் யாதுபயன் வாய்க்கும் நீயறிந்து சொல்லுதி—எ-று.

காணில் இதை யப்போதெரியு மென்பதினான் ஞானக்கண்ணும், இந்தச் சொல்லினால் என்னபலன் என்பதினா லூனக்கண்ணும் பொருள்படுமாறு காண்க. (எஅ)

காரணங்கண் டாலொழியக் காரியமீ தென்றறியோங்
காரியமே காரணமாக் காணுமே—யோரில்
அறிவை விளக்கிக்கொண் டப்பாலே காணில்
வெறும்பொய் யுலகாய் விடும்.

(எ-து.) உலகத்தில் அபேத காரணகாரியவகைக ளனைத்தினுள்ளுங் காரணத்தைப் பிரத்தியக்ஷமாகக் கண்டாலன்றி யிது காரியப்பொருளென் றுய்த்துணரமாட்டோம். ஏனெனில் காரியமே காரணமாகத் தோற்றுவதினாலே, இதுபோலத் தாஷ்டாந்தத்திற் சிந்தித்துப் பார்க்குமிடத்து அபேத காரணகாரிய வகையாயுள்ள அறிவறியாமை யென்பவற்றுள் அறிவாகிய காரணத்தை யுள்ளவாறு ஞானாசிரியராற் பிரத்தியக்ஷமாக விளக்கிக்கொண்டு பின்னர்க் காரியமாகிய உலகத்தைக் காணில் வெறும் பொய்யாய் முடியுமென்றுணர்தி—எ-று.

விசாரித்துத் தெளியாவிடத்துப் பௌதிகமே பூதமாகக் காணுமாறுபோலச் சிரவணாதிகள் செய்து தெளியாவிடத்து அறியாமையே யறிவாகக் காணப்படுதலின் காரியமே காரணமாகக் காணுமெனப்பட்டது. (எக)

அ-கை.

ஞானோதயத்தின் அருமைகூறல்.

தானந் தவங்கல்வி சற்குணம்பூ சைப்பெருமை
மானங் குலந்திருவு வாய்த்தாலுந்—தானே
வருமோ குருவன்றி வாராமை திண்ணந்
தெரிவுதய மென்றே தெளி.

(எ-து.) ஞானோதயமானது தானம், தவம், கல்வி, சற்குணம், தேவதாபூசை, மகிமை, மானம், உயர்குலம், அஷ்டைசுவரிய முதலியவை யொருங்கு கிடைக்கினும் இவற்றுள் ஒன்று கிடைக்கினும் ஞானாசிரியரது அருளோக்காலன்றி யிவற்றைப்போற் றானே வந்தமையுமா? அமையாதது திண்ணமென்று நீ சிந்தித்துத் தெளிதி—எ-று.

வாய்க்காவிடத்து மென்பது எஞ்சி நிற்றலால் வாய்த்தாலும் என்பதின்கண்ணுள்ள வும்மை யிறந்தது தழீஇய வெச்ச வும்மை யாயிற்று. தானந் தவ முதலியவை வாய்க்கினும் வாய்க்காவிடினுங் குருவருளன்றி அறிவு விளங்காதென்பது கருத்து.

வினா: ஆயின் தானந் தவமுதலிய சற்கருமங்களால் பயனில்லை யாயின், இவற்றை விதிவாக்கியமாகச் சுருதி கூறுவானேன்?

விடை: சித்தசுத்தி யுண்டாதற் கென்க.

வினா: இந்தச் சித்தசுத்தியே ஞானோதய மென்னுற் றோடம் என்னை?

விடை: தானந் தவ முதலியவற்றாற் சித்த சுத்தியும், அச்சித்த சுத்தியாற் சாதன சதுஷ்டயமும், அச்சாதனசதுஷ்டயத்தாற் சிரவணாதிகளும், அச்சிரவணாதிகளால் ஞானோதயமுமென்று இங்ஙனங் கூறாது அங்ஙனங் கூறின், சாதன சதுஷ்டயமுஞ் சிரவணாதிகளு மின்றி அறிவுதயமாகாதெனச் சுருதி மிகபடக் கூறுதிருக்கவேண்டு மாதலி னானும், தானந் தவமுதலிய கருமங்கள் புண்ணிய பலனைத் தருதற்கு ஏற்றனவெனவுஞ், சாதன சதுஷ்டயமுஞ் சிரவணாதிகளும் ஞானோதயத்திற் கேற்றனவெனவுங் கூறும் அனுபவ முறைக்கு மாறு யமையுமாதலானுங் குற்றமே யாமென்க. (அ0)

அ-கூ.

முன்னர்ச் சங்கற்பமென்றது எது? இச்சங்கற்பமே யாவுமா மென்றது எங்ஙனங் கூடுமென்ற மாணாக்கன் வினாவுக் குத்தரங் கூறல்.

சங்கற்ப மென்றதெது தன்னினைவே யென்றளவில்
இங்கிதுவே யாவுமென்ப தெவ்வண்ணம்—பங்கமிலா
நிர்விகற்ப சவ்விகற்ப நீங்கா மனவிகற்பாய்க்
கர்வமிலார் மூன்றென்பார் காண்.

(எ-து.) முன்னர்ச் சங்கற்ப மென்றீரே; அஃதெதுவெனில் தன்னினைவே யென் றாசிரியர் கூறியவளவில், மாணாக்கன் இந்நினைவே சமஸ்தமுமாய் இங்கமையுமென்றீரே; அது எவ்வாறமையுமென வினவ, அதற்காசிரியர் அந்தச் சங்கற்பமானது குற்றமற்ற நிர்விகற்ப சங்கற்பம், சவ்விகற்ப சங்கற்பம், மனவிகற்ப சங்கற்பமென மூவகைப்படுமென்று அகம்பாவமற்ற சத்துக்கள் சொல்லுவர். இதனை நீ சிந்தித்துக் காணுதி—எ-று. (அக)

அ-கை. இ-து.

தான்றெரிவென் றாகுமிடந் தானிர் விகற்பமெனல்
தான்சுகியென் றாகுமிடஞ் சவ்விகற்பந்—தான்காணும்
ஞாதுருவென் றாகுமிட நண்ணு மனவிகற்பம்
ஈதுணர்ந்து கொண்டிங் கிரு.

(எ-து.) தன்னைத்தான் அறிவு வடிவமென்று இடைவிடாது அதுவாகக் கண்டு கண்டு சிந்தித்துத் தெளியும் அவசரமே நிர்விகற்ப சங்கற்பமெனவும், தன்னைத்தான் சுகசொரூபியாகக் கண்டு அதுவாகச் சுகிக்கும் அவசரமே சவ்விகற்ப சங்கற்ப மெனவும், திரிபுடிக்கு விலட்சணமான தன்னைக் காண்பானாகக் கண்டு அதுவாகச் சிந்திக்கும் அவசரமே பொருந்திய மனோவிகற்ப சங்கற்பமெனவுமாம். இதனை யிங்கே நினது அகத்திற் சிந்தித்துக்கொண்டிரு—எ-று.

தன்னைச் சிற்பிரகாச வடிவாகக் கண்டு நிற்கும் நிலையைத் தான்றெரிவென்றாகும் இடமெனவும், தன்னை ஆநந்த சொரூபியாகக் கண்டு களிக்கும் நிலையைத் தான் சுகியென்றாகுமிடமெனவும், அறிபடுபொருளாகிய திரிசியங்களில் ஒன்றைக் காண்பானாகக் கண்டு உறுதிகொண்டு உழலும் நிலையைத் தான்காணும் ஞாதுருவென்றாகும் இடமெனவுங் கூறியவாறு காண்க.

வினா: தன்னைச் சிற்பிரகாச வடிவாகவும் ஆநந்த வடிவாகவுங் கண்டு அனுபவிக்கும் நிலையையுஞ் சங்கற்பமென்றது என்னை?

விடை: அறிவே ஆநந்தமும் ஆநந்தமே அறிவுமாய் நிற்கும் நிலையே தானாதலால் அங்ஙனந் தன்னை அனுபவியாது வெவ்வேறாகக் கண்டு தன்னை யனுபவித்தலினா லென்க.

வினா: சிற்பிரகாச வடிவை நிர்விகற்பமெனவும், ஆநந்த வடிவைச் சவ்விகற்பமெனவுங் கூறுவானேன்?

விடை: சிற்பிரகாசத்தில் மயக்கமின்மையும் ஆநந்தத்தில் மயக்கமுடைமையும் பற்றியென்க.

வினா: இம்மூன்று சங்கற்பத்தையும் விளங்கக் கூறவேண்டும்?

விடை: மனோவிருத்தியை மனவிகற்ப சங்கற்பமெனவும், அகண்டாகார விருத்தியைச் சவ்விகற்ப மெனவும், விவேக விருத்தியை நிர்விகற்ப மெனவுங் கொள்க. அன்றியும் விவேகவிருத்தி அபரிச்சின்னமும் அகண்டாகார விருத்தி சுகதபேதமும் மனோவிருத்தி சுசாதிக விசாதிகமுமா மென்க. (அஉ)

அ-கை.

இம்மூன்று சங்கற்பத்தினுள் முதற் சங்கற்பமே கற்பனைகட்கெல்லாம் ஆதிகாரணமாமெனல்.

தானேதா னாயிருக்குந் தன்மைக் ககன்றமுதல்
தானேயென் கொள்கையது தானுணரா—தேனோ
விபரீதத் தாலுழன்று வீணாவ தையோ
விபரீதம் விட்டடைவாய் வீடு.

(எ-து.) சகுண நிர்க்குணமென்ப தின்றித் தானே தானாகத் தீர்ந்த சுவானுபவ நிலைமைக்கு வெதிருத்தமாகக் காணப்படுகின்ற முதற் சங்கற்பமே சகல அனர்த்தத்திற்கும் முதற் கருவியாமென்பது எனது சித்தாந்தம். அதனை யுய்த்துணராது யாதுகாரணத்தினாலோ ஐயந் திரிபாற் சபலித்து அபலமாவது! ஐயோ! இனியாவது எனது இலட்சியார்த்த சித்தாந்தத்தை யூகித்துணர்ந்து ஒன்றை ஒன்றாகக்

(எ-து.) முன்னர்ச் சங்கற்ப மென்றீரே; அஃதெதுவெனில் தன்னினைவே யென் ருசிரியர் கூறியவளவில், மாணுக்கன் இந்நினைவே சமஸ்தமுமாய் இங்கமையுமென்றீரே; அது எவ்வாறமையுமென வினவ, அதற்காசிரியர் அந்தச் சங்கற்பமானது குற்றமற்ற நிர்விகற்ப சங்கற்பம், சவ்விகற்ப சங்கற்பம், மனவிகற்ப சங்கற்பமென மூவகைப்படுமென்று அகம்பாவமற்ற சத்துக்கள் சொல்லுவர். இதனை நீ சிந்தித்துக் காணுதி—எ-று. (அக)

அ-கை. இ-து.

தான்றெரிவென் ருகுமிடந் தானிர் விகற்பமெனல்
தான்சுகியென் ருகுமிடஞ் சவ்விகற்பந்—தான்காணும்
ஞாதுருவென் ருகுமிட நண்ணு மனவிகற்பம்
ஈதுணர்ந்து கொண்டிங் கிரு.

(எ-து.) தன்னைத்தான் அறிவு வடிவமென்று இடைவிடாது அதுவாகக் கண்டு கண்டு சிந்தித்துத் தெளியும் அவசரமே நிர்விகற்ப சங்கற்பமெனவும், தன்னைத்தான் சுகசொரூபியாகக் கண்டு அதுவாகச் சுகிக்கும் அவசரமே சவ்விகற்ப சங்கற்ப மெனவும், திரிபுடிக்கு விலட்சணமான தன்னைக் காண்பானுகக் கண்டு அதுவாகச் சிந்திக்கும் அவசரமே பொருந்திய மனோவிகற்ப சங்கற்பமெனவுமாம். இதனை யிங்கே நினது அகத்திற் சிந்தித்துக்கொண்டிரு—எ-று.

தன்னைச் சிற்பிரகாச வடிவாகக் கண்டு நிற்கும் நிலையைத் தான் றெரிவென்ருகும் இடமெனவும், தன்னை ஆநந்த சொரூபியாகக் கண்டு களிக்கும் நிலையைத் தான் சுகியென்ருகுமிடமெனவும், அறிபடுபொருளாகிய திரிசியங்களில் ஒன்றைக் காண்பானுகக் கண்டு உறுதிகொண்டு உழலும் நிலையைத் தான்காணும் ஞாதுருவென்ருகும் இடமெனவுங் கூறியவாறு காண்க.

வினு: தன்னைச் சிற்பிரகாச வடிவாகவும் ஆநந்த வடிவாகவுங் கண்டு அனுபவிக்கும் நிலையயுஞ் சங்கற்பமென்றது என்னை?

விடை: அறிவே ஆநந்தமும் ஆநந்தமே அறிவுமாய் நிற்கும் நிலையே தானாதலால் அங்ஙனந் தன்னை அநுபவியாது வெவ்வேறாகக் கண்டு தன்னை யனுபவித்தலின்றென்க.

வினா: சிற்பிரகாச வடிவை நிர்விகற்பமெனவும், ஆநந்த வடிவைச் சவ்விகற்பமெனவுங் கூறுவானேன்?

விடை: சிற்பிரகாசத்தில் மயக்கமின்மையும் ஆநந்தத்தில் மயக்கமுடைமையும் பற்றியென்க.

வினா: இம்மூன்று சங்கற்பத்தையும் விளங்கக் கூறவேண்டும்?

விடை: மனோவிருத்தியை மனவிகற்ப சங்கற்பமெனவும், அகண்டாகார விருத்தியைச் சவ்விகற்ப மெனவும், விவேக விருத்தியை நிர்விகற்ப மெனவுங் கொள்க. அன்றியும் விவேகவிருத்தி அபரிச்சின்னமும் அகண்டாகார விருத்தி சுகதபேதமும் மனோவிருத்தி சுசாதிக விசாதிகமுமா மென்க. (அஉ)

அ-கை.

இம்மூன்று சங்கற்பத்தினுள் முதற் சங்கற்பமே கற்பனைகட்கெல்லாம் ஆதிகாரணமாமெனல்.

தானேதா னாயிருக்குந் தன்மைக் ககன்றமுதல்
தானேயென் கொள்கையது தானுணரா—தேனோ
விபரீதத் தாலுழன்று வீணாவ தையோ
விபரீதம் விட்டடைவாய் வீடு.

(எ-று.) சகுண நிர்க்குணமென்ப தின்றித் தானே தானாகத் தீர்த்த சுவானுபவ நிலைமைக்கு வெதிருத்தமாகக் காணப்படுகின்ற முதற் சங்கற்பமே சகல அனர்த்தத்திற்கும் முதற் கருவியாமென்பது எனது சித்தாந்தம். அதனை யுய்த்துணராது யாதுகாரணத்தினாலோ ஐயன் திரிபாற் சபலித்து அபலமாவது ! ஐயோ ! இனியாவது எனது இலட்சியார்த்த சித்தாந்தத்தை யூகித்துணர்ந்து ஒன்றை ஒன்றாகக்

கொள்ளும் விபரீதத்தினின்று விலகி நிரதிசயாநந்தமென்னும் வீட்டை யடைதற்கு முயலுதி—எ-று.

எனவே, உலகத்துக்கு ஏனைய இரண்டு சங்கற்பமும் மூதற் காரணமாமெனக் கோடலைத் தவிர்த்த தென்பது பெற்ரும். (அங)

அ-கை.

இதனைத் தீர விளக்கி யருளுமென்ற மாணக்கனை நோக்கிக் கூறல்.

சித்தே சடமென்கை தீர விளங்கவிலை
யத்தனே யென்னிலதை யாயுங்கால்—எத்தனைகற்
றூலுந் தெரியாதிங் கற்பவுணர் வாலென்பர்
சாலத் தனையுணர்ந்தோர் தாம்.

(எ-து.) சித்தே சடமாமெனக் கோடல் தெளிவாக விளங்கவில்லை கர்த்தனே! யென்பையாயின் அதைப்பற்றியுய்த்துணருமிடத்தற்ப வுணர்வால் இங்கே பிரபலசுருதிகளை யெவ்வளவு கற்கினுந் தெளிவுபெற விளங்காதெனத் தீரத் தன்னைக் கற்றுத் தெளிந்துணர்ந்த சான்ருேர் கூறுவர்—எ-று.

அற்பவுணர்வு என்றது புகழ், மகிமை, சிற்றின்பப் பிரியம், யாவருந் தன்னை மிக்கோனுக மதித்தல் முதலிய இழி குணங்களுக்கு அபேட்சித்த அறிவும், சாலவென்றது ஐயந் திரிபின்மையுமாம்.(அச)

அ-கை.

சித்தே சடமெனத் தெளிவிப்பான் வேண்டி யிதற்கு இது சித்தெனல்.

தூல வுலகுக்குச் சொல்லுஞ்சித் திந்திரியம்
போலி யுலகுக்குப் பொன்றுமனஞ்—சோலி
யறும்பாழ்க் குயிர்சித் தறிவெங்குங் காண்டற்
குறுஞ்சித்துத் தானென் றுணர்.

(எ-து.) நனவில் தூலித்துக் காணப்படும் உலகங்கட்கு நேரான சித்தென்று சொல்லப்படுவது பஞ்சேந்திரியமும், நினைவு கனவுகளில் தூல வுலகம்போற் காணப்படும் போலியுலகங்கட் கடுத்த சித்து நசித்தற் கேதுவாகிய மனமும், கேவலத்தில் எல்லாச் சேட்டையும் அடங்கியதுபோற் காணப்படுஞ் சூனியக் காட்சிக்குரிய சித்துச் சிதாபாசனும், அவத்தை யறுதியில் தன்னை யறிவே வடிவாக எவ்விடத்தும் எப்பொருட்கண்ணும் பிரத்தியக்ஷமாகக் காண்டற்குரிய சித்துத் தானே தானாக விளங்கும் ஆன்மாவுமெனக் கண்டுணர்தி—எ-று.

இந்திரிய மன்றித் தூலவுலகமும், கரண மன்றிப் போலியுலகமும், சிதாபாச னன்றிச் சூனியமும், ஆன்மாவன்றிச் சிற்சுகோதய விலாசமுங் காணப்படாமையின் இங்ஙனங் கூறியவாறாயிற்று. ஆகவே ஒன்றற் குரியதை மற்றொன் றறியாதென்பது பெற்றாம். (அ௫)

அ-கை.

சத்தமுதலிய பஞ்ச விடயங்கட்குச் சித்துத் தத்தம் பொறியெனவும், அனைத்துஞ் சித்தெனவும், சித்தொன்றே யுபாதிபேதத்தாற் பலவாறுற்போற் றோற்றுகின்றதெனவுங் கூறல்.

சத்தமுத லைந்திற்குந் தத்தம் பொறிசித்தாம்
எத்தனையுஞ் சித்தன்றி யில்லையால்—எத்தனைசித்
தானலு மொன்றே யறிவிடயத் தாற்பலவாய்
ஆனற்போற் காண்ப தறி.

(எ-து.) சத்தமுதலிய பஞ்ச விடயங்கட்குச் சித்துத் தத்தமக் கேற்ற புலன்களாம் எவ்வளவு கற்பனைகளுஞ் சித்தைத்தவிர வில்லையாதலின்; அதுபற்றி யெத்தனை சித்தாகக் கற்பிக்கினுஞ் சித்தொன்றேயாம். சித்துப் பலவாகக் காணப்படுகின்றதே யெனின் திரிசியபேதங்களாற் பலவாகக் காணப்படுகின்றதேயன்றி வெவ்வேறன்றெனச் சிந்தித்தறிதி—எ-று.

ஓசைக்குச் சுரோத்திரமும், பரிசத்திற்குத் தொக்கும், ரூபத்திற்குச் சட்சுவும், இரசத்திற்குச் சிங்குவையும், கந்தத்திற்கு ஆக்கிராணமு மாதலின் சத்தமுதலைந்திற்குந் தத்தம் பொறி சித்தாமெனவும், பிரகிருதிமுதல் தம்பமீருகக் கிடந்த கற்பனைகளனைத்தும் அங்கங்கே யுதித்து விளங்குவது சித்துவிளக்கத்தி லாதலால் எத்தனையுஞ் சித்தன்றி யில்லையெனவும், உபாதியாற் பலவாறாற்போற் காணினும் அங்கங்கே அவ்வவற்றை விளக்கும் விளக்கத்தால் ஒன்றுதல்பற்றி எத்தனை சித்தானாலும் ஒன்றே யறிவிடயத்தாற் பலவாயானாற்போற் காண்பதெனவுங் கூறியவாறாயிற்று. (அசா)

அ-கை.

இங்ஙனஞ் சித்தே சகத்தெனக் குறிப்பித்ததாலுண்டாம் ஐயத்தை யகற்றல்.

பார்வைக்கு முன்பினிடை பாராதி தாமிலையோ
பார்வை முதலாப் பகரோமே—தீர்வை
யெனினுருவங் கண்ணென் றிருக்களவும் வேறன்
றெனில்விருட்சங் கண்ணோ விசை.

(எ-து.) சித்தே சகத்தாமென் றிங்ஙனங் கூறிற் சித்து பேதத்துள் ஒன்றாகிய விழிக்கு முன்னும் பின்னும் இடையினும் பிருதுவியாதி பஞ்சபூத பௌதிகங்கள் இல்லனவோ? இருக்கின்றனவே; ஆதலின் ரூபவிடயங்கட்குப் பார்வை முதற்கருவியாமெனக் கூறுதுமல்லம். இங்ஙனம் நிச்சயித்ததே தீர்ப்பாமென்று மாணாக்கனே நீ கூறுவையாயின் கறுப்பு வெள்ளையாயுள்ள வடிவமே கண்ணாமென்ற திடபாவனை வழுத்த முள்ளளவுங் கண் வேறல்லவென் றாசிரியர் கூற மாணாக்கன் அங்ஙனமாயின் எதிரிற் காணப்படும் இவ்விருட்சமுங் கண்ணாகுமா? ஆகாதே. இதனைத் தெரித்தருடி? யென்று வினாவினன் —எ-று.

முதற்கருவி யல்லவென்பதனால் துணைக்கருவியாமென்பது கருத்தெனக் கொள்க. ரூபம் அரூபம் ரூபாரூபமென்னும் இம்மூன்றுஞ் சடமாதலின் கண்ணாகாவிடினுங் கண்ணைக் கண்ணாகக் காணுமளவும் இம்மூன்றனுள் ஒன்றைக் கண்ணெனக் கோடல் ஆன்மாக்கட் கியற்கைபோற் காண்டலினானும், காணினும் உருவப் பிரத்தியட்சம்போல் ஏனைய இரண்டுஞ் சிறந்ததன்றாமையானும், இம்மூன்று வடிவமல்லாத காண்பான் காட்சியைக் காணும் பொருளாகிய ரூபவிடயங்களிலொன்றாகக் கண்டு களித்தலினானும், ரூபப்பேறே யன்றி மற்றப் பேறெல்லாம் பேறல்லவென மதித்துழல்வதினானும் உருவங் கண்ணெனப்படும். இது கண்ணைக் கண்ணாகக் கண்டளவில் ரூப முதலிய மூன்றுபேதங்களும் இன்னதிசையெனக் காணப்படாமல் அனைத்துங் கண்ணாய் விளங்குமென்பதைக் குறிப்பித்து நின்றது. (அஎ)

அ-கை.

அங்ஙனமாயின் இவ்விருட்சங் கண்ணாகவேண்டுமே; அப்படி ஆகுமா, ஆகாதேயெனவும் ஆகுமெனிற் சடமன்றோவெனவும் வினாவிய மாணாக்கனுக் குத்தரங் கூறல்.

விழியுருவாக் காணில் வெளியுருவாக் காணுங்
கழியிலனைத் தும்மனைத்தாக் காணும்—வழியதனாற்
கண்ணே மரமென்பங் காணாச் சடமென்னில்
நண்ணுமா மென்பதனை நாம்.

(எ-நு.) ரூபம் அரூபமல்லாக் கண்ணை ரூபமாகக் காணில் அவ்வுருவுக்கு அயலிடமனைத்தும் உருவமாகவே காணப்படும். பின்னர்க் கண்ணை வெவ்வேறாகக் கற்பிக்கும் கற்பனைகளினின்றும் விசாரணையால் விலகில் அவ்வவ் வவசர அனுபவக் காட்சிபோன்று அயலிடமனைத்தும் அவ்வவ் வண்ணமாகவே காணப்படும். இம்முறைமையாற் கண்ணே மரமெனக் கூறுதும். மரஞ் சடமாதலிற் கூடாதெனின் மரமென்று நம்மால் வழங்கப்படுவது எது? அதனை யினையதெனக் கூறுதி—எ-று.

உருவம் அருவம் உருவாருவஞ் சிற்பிரகாசமென்னும் இந்நான்கனுள் ஒன்றாகக் காணுங் காக்ஷியின் வண்ணமாகவே அதற்கு அயலனைத்தும் விளங்கு மாதலிற் கழியிலனைத்தும் மனைத்தாக் காணுமெனவும், தோற்றத்தைப் பொருளெனக் கருதிக் கற்பிக்கும் பெயரே நாமமாதலின் அதனை விலக்கி யதார்த்தத்தை யறிவிப்பான்வேண்டி நண்ணுமரமென்பதெதை நாமமெனவுங் கூறினாரென்க. (அஅ)

அ-கை. இ-து.

வெளியொளிய தாகி வெறுந்தெரிவாய் நிற்குந்
தெளிவே யறிவென்னத் தேர்தற்—கொளிவிழியென்
றார்வள் ளுவரு மறிந்ததற்கு மாறாகப்
பார்ப்பார்க்கிங் கேன்வாய் பகர்.

(எ-து.) வியாபக விளக்கமாகியும், வெறுந் தெரிவுமயமாகியும் இருக்கின்ற களங்கரகிதமான சுத்தசைதன்னியமே யறிவென்று யாவருங் கண்டு தெளிதற்குத் தெய்வப்புலமைத் திருவள்ளுவருஞ் சிற்பிரகாசமே கண்ணுமெனக் கூறினர். அங்ஙனங் கூறியதை வாசித்துணர்ந்தும் அதற்கு மாறாக ரூபமாகவேனும் அரூபமாகவேனும் அதனைப் பாவித்துப் பார்க்கும் அவிவேகிகட்கு இங்கறிந்தார்போற் பேசும் வாயேன்? நீ யிதனைச் சொல்லுதி—எ-று.

வெறுஞ் சொல்லாற் பயனின்றென்பார் மாறாகப் பார்ப்பார்க்கு இங்கு ஏன்வாயென்றார். ப்ரக்ஞா சொரூபமே சைதன்னியமென்பது தோன்ற வெளி யொளியதாகி வெறுந் தெரிவாய் நிற்குந் தெளிவே யறிவெனப்பட்டது. விழியை யொளி யென்றதற்குப் பிரமாணம:—

திருக்குறள்.

"சுவையொளியூ றோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு"
என்பதனாற் காண்க. உம்மை யெஞ்சிநின்றது. (அக)

அ-கை.

இது மரமாமெனக் குறித்தவற்றையெல்லாம் ஆசிரியரல்லவெனப் பூர்வபட்சமாக்கல்.

உருவமெனின் மெய்யே யுருவருவம் வன்மை
பருமனெட்டை குட்டைநிறம் பாரம்—ஒருமைமுதல்
யாவுங் குணமென்ன வீங்குரைத்த தாகுபெயர்
யாவுமெனிற் கேளா யிது.

(எ-து.) முன்னர் மரமெனப்படுவது எதுவென்ற ஆசிரியர்க்கு மாணுக்கன் உருவமே மரமாமென, அங்ஙனங் கூறுவ துண்மையே. மரமெனப்படுவது உருவமாயின் உருவம், அருவம், கடினம், பருமன், நெட்டை, குட்டை, நிறம், பாரம், ஒருமை, பன்மை முதலியவாகக் கூறுவன அனைத்துங் குணமாதலால் இவை குணியாகுமாவென் றாசிரியர் கூற, அதற்கு மாணுக்கன் இங்ஙனங் கூறிய அனைத்துங் குணவாகு பெயராதலின் மரத்தையே குறிக்குமெனக் கூற, ஆசிரியர் அவ்வாறாயின் யான் கூறும் வசனமாகிய இதனைக் கவனித்துக் கேட்டுணர்தி —எ-று.

குணங்களெல்லாந் தோற்றமாதலின் யாவுங் குணமென்றார். ()

அ-கை.

மரமென்பது கண்ணன்றி யில்லையென்று ஆசிரியர் நியதிகளைந்து காட்டல்.

அணுக்கூட்ட மன்றி யருவுருவ நாமம்
அணுகாதே யிந்த வணுவும்—நணுகாது
மண்ணன்றி யீதும் மருவா வெளியன்றிக்
கண்ணன்றி வேறெங்கு காண்.

(எ-து.) யான் கூறுவ தியாதெனின் ஒன்றன் கூட்டமாகிய அணுக்கூட்டமன்றி ரூபாரூப மென்னும் பெயரும் வருதற் கேது

வில்லை; இந்த அணுவுமோ பரமாணுவாகிய மண்ணின் கூட்டரவன்றி யெங்கணும் வருதற்கு ஏதுவில்லை; இந்தப் பரமாணுவும் உட்புறம் பாய் நிறைந்துள்ள வெளியைத் தவிர வருதற்கு ஏதுவில்லை; இவ்வெளியுங் கண்ணைத்தவிரத் திரிகாலத்திலும் வேறெங்குளது இல்லவேயில்லை; இதனைக் கண்டுணர்தி—எ-று.

எனவே,

"சிதலதுநீர்வாய்ச் சிறுதுக ளாற்பெரும் புற்றுரு வமைந்த பெற்றிய தென்ன வைம்புலப் பேருரு வைந்துமைந் தணுவா லிம்பரிற் சமைவ தியாவரு மறிதலின்"

என்றவாறே யுருவமன்றி மரமும், அணுக்கூட்டமன்றி யுருவமும், மண்ணன்றி யணுவும், பரமாணுவன்றி மண்ணும், வெளியன்றிப் பரமாணுவும், கண்ணன்றி வெளியும் இல்லையெனப் பொருள்படுமாறு காண்க. (கூக)

அ-கை.

ரூபாரூப முதலிய அனைத்துங் கற்பனையெனவும், கண்ணே யதார்த்தமெனவுங் கூறல்.

கண்ணன்றி யீதெல்லாங் காணு ததுமல்ல
நண்ணினது மல்லவென நாடிலையோ—எண்ணும்
இவையனைத்துங் கற்பனையே யீங்குண்மை கண்ணே
எவையேனு மையமிதற் கில்.

(எ-து.) கண்ணைத்தவிர ரூபமுதலிய அனைத்தும் இல்லாததுமல்ல, உள்ளது மல்லவென நீ யுய்த்துணரவில்லையோ? அறிவின்மையால் யதார்த்தமெனக் கருதப்படும் ரூபமுதலிய அனைத்தும் பொய்ம்மையே யாதலால் இங்கு மெய்ம்மை யாதோவெனின் கண்ணொன்றேயாம். இங்ஙனங் கூறியதில் ஐயமென்பது சிறிதேனும் இல்லையெனக் கண்டுணர்தி—எ-று.

கண்ணாகிய வியாபக விளக்கத்தைத்தவிர ரூபாரூபமுதலியஅனைத்தும் முன்னருண்டானவன்றோ பின்னர் இல்லாதனவாகும்? உண்டானதுபோலவும் இல்லாததுபோலவுங் காணப்படுவதேயன்றி யுண்டானது மல்ல, இல்லாததுமல்ல வென்பார் கண்ணன்றி யீதெல்லாங் காணாததுமல்ல, நண்ணினது மல்ல வெனவும், அருட் கண்ணால் உய்த்துணர வில்லையோ வென்பார் நாடிலையோ வெனவும், வஸ்து பரிசோதனையில் ரூபாரூப முதலியவாகக் காணப்படுஞ் சகலதோற்றமும் அவற்றிற்குரிய பெயரும் வெறும் பொய்யாயுங் கண்ணொன்றே திரிகாலத்திலு முள்ளதாயு மிருப்பதால் இவையனைத்துங் கற்பனையே ஈங்குண்மை கண்ணே யெனவும், இவ்வாறு கூறியது சுருதி யுத்தி யனுபவத்துக் கொத்துளதாதலின் ஐயமிதற் கில்லெனவுங் கூறினாரென்க. (௬௨)

அ-கை.

ரூபாரூப முண்மையாதலின் அவற்றைக் கண் ணறிகின்றது; அவை யில்லாதனவாயின், கண்ணறியுமா வென்ற மாணாக்கனுக்கு உத்தரங் கூறல்.

கண்ணே யருவுருவங் காணுங்கா லென்றுரைத்தீர்
நண்ணுவதா விவ்விரண்டும் நாடுமே—கண்ணுக்
கெனினுய்தன் முன்னுருவா யிங்கருவ மாய்ப்பின்
எனுந்திரிபுக் கென்னோ விசை.

(எ-று.) அடியேனை விளக்குதற்கு எழுந்தருளிவந்த ஆசிரியமூர்த்தமே! சிந்தித்துப் பார்க்குமிடத்துக் கண்ணே ரூபாரூபத் தோற்றமெனக் கூறினீர். பட்டணம் வெளியாயும், வெளி பட்டணமாயுங் காணப்படுமோ? காணப்படாவே. பட்டணமும் வெளியு முள்ளனவாதலின் பட்டணம் பட்டணமாயும் வெளி வெளியாயுங் கண்ணுக்குக் காணப்படுகின்றனவே யென்று மாணாக்கன் கூற, அங்ஙனங் கூறில் ஓர் பொருளை ஆராய்வதற்குமுன் அஃதுருவமாயும், பின்னர்

அருவமாயுந் திரிந்து காணப்படுவதற்கு ஏது என்னையோ அதனை யறிந்து சொல்லுதியென்றாசிரியர்வினவ—எ-று.

பஞ்சபூத பௌதிகங்களுஞ் சூரியன்முதலிய சகல அண்டங்களும் பத்துத் திக்கென்னப்படும் வெளியு முள்ளனவாதலின், அவை கண்ணுக்குப் புலப்படுமென்பார் நண்ணுவதால் இவ்விரண்டும் நாடுமே கண்ணுக்கெனவும், ரூபாரூப முண்மையாயின் ஒருருவப் பொருளை யாராய்வதற்கு முன் உருவாயும் பின்னர் அருவாயுந் திரிந்து காண்பானேனென்பார் ஆய்தன்முன் உருவா மீங்கருவமாய்ப்பின்னனுந் திரிபுக் கென்றோ வெனவுங் கூறியவாறு காண்க. (கசுஉ)

அ-கை.

அங்ஙனம் மாறுவது ரூபாரூபமெனவும் அன்றெனில் திரிவதுபோற் காணுமெனவுங் கூறிய மாணாக்கனை வினவல்.

உருவருவ மாறுமெனி னுள்ளபடி நிற்குந்
திரிபவற்றிற் கன்றென்னச் சீடன்—திரிவதுபோற்
காண்டலெனி னக்காட்சி கண்ணின் றிரிபன்றோ
ஈண்டுசுட்டோ டின்மையதென் றெண்.

(எ-து.) அதற்கு மாணாக்கன் ரூபாரூபங்களே மாறுகின்றனவெனக்கூற, அவ்வாறாயின் அவை யிருந்தபடி யிருக்கின்றனவாதலின், அங்ஙனமாறுதல் அவற்றிற் குரியதன்றென ஆசிரியர் கூற, மாறுவதுபோற் காண்டலேயன்றி அவை மாறுவதில்லையெனச் சீடன் சொல்ல, அங்ஙனமாயின் மாறுவதாகக் காணுந் தோற்றந் திருஷ்டிபேதமல்லவா? அஃது எங்ஙனமெனின் இங்கே முன்னர்ச் சுட்டி யறிதலும் பின்னர்ச் சுட்டற்று நிற்றலுந் திருஷ்டி தர்ம்மமாதலினென்று நீ சிந்தித்துணர்தியென் றாசிரியர் கூற—எ-று.

கண்ணானது ரூபத்தைப் பார்க்கும்போது ரூபமும் அரூபத்தைப் பார்க்கும்போது அரூபமும் மாறிக் காணுதலின் உருவருவமாறுமெனவும், ஈசுவரகற்பனை சீவகற்பனை யென்பவற்றுள் ஈசுவர கற்பனையா

கிய ரூபாரூபங்கள் மாறு திருந்தவண்ணமிருக்க, அவை மாறுமெனக் கூறுதல் கூடாதாதலின் உள்ளபடிநிற்குந் திரிபு அவற்றிற்கு அன்றெனவும், அவை மாறுதேனும் மாறுவதாகக் காணப்படுமாதலின் திரிவதுபோற் காண்டலெனவும்; நான், நீ, அவன், அவள், அது வெனச் சுட்டியறிதற்கும் அச்சுட்டின்கண் காமக்குரோதாதிகள் விளைதற்குங் காரணமாகத் தடிக்குமுருவமும் அவ்வுருவத்தை யொவ்வொன்றாகக் காரணகாரியவகையால் நியதிகளைந்தவிடத்தில் அது இதுவெனச் சுட்டப்படாமலுஞ் சுட்டற்றபோது காமக்குரோதாதிகள் விளைதற்கு ஏதுவில்லாமலும் நிற்கும் வெளியாகிய அருவமுஞ்சீவகற்பனையாதலால் இவை மாறுமென்பதுஞ் சீவகற்பனை முன்னிட்டன்றி யீசுவரகற்பனை விளங்காதென்பதுஞ் சீவகற்பனைபற்றி யீசுவரகற்பனை வந்ததென்பதுந் தோன்ற அக்காட்சி கண்ணின் றிரிபன்றோ? ஈண்டுச் சுட்டோடு இன்மையதெனவுங் கூறினரென்க.

வினா: அது இதுவெனச் சுட்டுதலும் அஃதின்றிச்சுட்டற்று நிற்றலுமாகிய ரூபங்கள் கண்ணின் றிரிபென்றது எங்ஙனங் கூடும்?

விடை: கற்பனை ஈசுவர கற்பனை சீவகற்பனை யென்றிரண்டாம். அவற்றுள் ஈசுவரகற்பனையாவது பஞ்சபூத பௌதிகங்களுஞ் சூரியன் முதலிய சகலவண்டங்களும் அது இதுவெனச் சுட்டுதலுஞ் சுட்டற்று நிற்றலுமின்றி, என்றும் ஒருதன்மையனவாய் நிற்பது; சீவகற்பனையாவது அப்பஞ்சபூதாதி யாகாரமாக நின்று அது இதுவெனத் தடித்துச் சுட்டுதலால் இச்சாஞானக்கிரியைகளும் அச்சுட்டு ஆண்டாண்டு அந்தந்தக் கணத்து ஒன்றிலொன்றில்லாமற் கரைதலால் அவ்விச்சாஞானக் கிரியைக ளின்மையுமாநிற்பது. அவ்வீசுவர கற்பனையுஞ் சீவகற்பனை யுள்ளவிடத் துண்டாயும் இல்லாதவிடத்து இன்றாயும் இருப்பதால் அதனை யிதனுள் அடக்கிச் சீவகற்பிதமே கற்பிதமெனவும் அக்கற்பிதத்திற் சட்சு கற்பித மொன்றாதலால் அச்சட்சு கற்பிதத்தில் விடயமாகத் தோன்றும் ரூபாரூபங்களில் விசாரமின்றியவிடத்து ரூபம் ரூபமாகவும் விசாரமுள்ளவிடத்து அவ்வுருவமே யருவமாகவும்

மாறுதலினானும் அம்மாறுதல் சட்சுவன்றி யில்லாமையானும் ரூபாரூபத்திரிபு கண்ணின் றிரிபெனவும் பொருள்கருதிக் கூறுதலிற் கூடு மென்க.

வினா: ஈசுவர கற்பனையாகிய பஞ்சபூதாதிக ளுண்டாயிருப்பது பற்றியன்றோ அவற்றைக் கண்டு அந்தந்த ஆகாரமாகத் தடித்து இச் சாஞானக் கிரியைகளியற்றி அவற்றா லுண்டாஞ் சுகாசுகங்களில் மொத்துண்டு கிடத்தலாகிய சீவகற்பித முண்டாயிருக்கின்றது? இங் ஙனமிருக்கச் சீவகற்பனை முன்னிட்டன்றி யீசுவரகற்பனை விளங்கா தெனவும், சீவகற்பனைபற்றி யீசுவரகற்பனை வந்ததெனவுங் கூறியது எங்ஙனங் கூடும்?

விடை: அறிவாகிய சீவனுக்கு அறிபடுபொருளாகத் தூலித்துக் காண்பதைச் சகத்தெனவும் ஈசுவர கற்பிதமெனவும் கருதில் அத் தூலக்காட்சி மாறாது என்றும் ஒருபடித்தாய் நிற்கவேண்டும்; அங்ஙனம் நில்லாது சீவனுக்கு நனவிற் றூலவடிவாயுங் கனவிற் சாயாவடிவாயுங் கேவலத்திற் சூனியவடிவாயுங் காணப்படுவானேன்? இஃதன்றியும் இவ்வுலகமானது சீவன் தூலவடிவாகத் தடித்த விடத்திற் றூலவடி வாயும் சாயாவடிவாகத் தடித்தவிடத்துச் சூனியவடிவாயும் மாறிக் காணப்படுவானேன்? இங்ஙனம் மாறுவதால் இவற்றுள் எது உலகெ னப்படுவது? தூலமெனக்கொள்ளின் அதுவும் ஆராயுமிடத்துக் கார ணகாரியவகைகளால் ஒன்றிலொன்றில்லாமல் இங்ஙனம் விசாரிக்கப் புகுந்த அறிவுமாத்திரம் மிஞ்சி நில்லாதிருக்கவேண்டும் அப்படி யில் லையே. ஆதலால் இங்ஙனம் மாறிக்காண்ப தனைத்தும் அறிவின்றிரி பெனவும், அவ்வறிவின்றிரிபே சகத்தெனவும் அனுபவமாயிருத்தலின் அங்ஙனங் கூறினா மென்க.

வினா: ஈசுவர கற்பிதமாகிய ரூபாரூபங்க ளிருத்தல்பற்றி யவற் றைக் கண்டு நனவில் அவ்வவ்வாகாரமாதலும் அதனால் நினைவு கனவு களுண்டாதலுஞ் சீவகற்பிதமாயிருக்க, அறிவன்றி யிவ்விரண்டு கற் பிதமும் ஆபாசமென்றது என்னை?

விடை: சகக்காட்சியாலன்றோ சிவகற்பிதமெனவும் ஈசுவரகற்பிதமெனவும் இரண்டாகக் கற்பிக்கலாயிற்று; சகக்காட்சிக்கு முன்னும் பின்னும் இடையினும் எப்போதுமுள்ளது அறிவாதலானும், அவ்வறிவிற் றூலாதிகாட்சிகள் தோன்றி மறையினுந் தான் அங்ஙனமாகாது என்றும் ஒருபடித்தா யிருந்தவண்ணமிருந்து அந்தந்தக் காட்சிகளையறிதலானுமென்க.

வினா: சகக்காட்சிக்கு முன்னும் பின்னு மிடையினும் எப்போது முள்ளது அறிவே யென்பது எவ்வாறு?

விடை: சகக்காட்சிக்குமுன்னர்ச் சுழுத்தியிற் சூனியத்தையும், பின்னர்ச் சொப்பனத்திற் சாயாவடிவங்களையும், இடையிற் சகக்காட்சிகளையும் எப்போதும் எல்லாமாய் அல்லவுமாய் நிற்குந் தனது கோலத்தையும் நின்று அறிவது அறிவாதலா லென்க.

வினா: இந்நான்கு காலத்தினு முள்ளது அறிவெனவும் இல்லாதது சகத்தெனவும் பொருள்படுதலால் இவ்வாறேற்கின் சகத்துக்கு முன்னும் பின்னும் எப்போதும் அச்சகத்தில்லாததுபோல இடையினும் இல்லாதிருக்கவேண்டும். உண்டாயிருத்தலால் இடையிலாபாசமெனல் எங்ஙனம்?

விடை: அன்னியோன்னியா பாவத்தால் இடையினும் ஆபாசமெனப்படு மென்க.

வினா: அஃது எவ்வாறு?

விடை: ஒன்றிலொன் றில்லாததா லென்க.

வினா: ஒன்றிலொன் றில்லாதவாறு எங்ஙனம்?

விடை: கடக்காட்சியிற் படமும் படக்காட்சியிற் கடமுமில்லாதிருப்பதுபோலென்க.

வினா: ஒன்றிலொன்று தெரியவில்லையெனக் கூறவேண்டுவதேயன்றி யொன்றிலொன்று இல்லாமற் போயிற்றோ?

விடை: ஒன்றுதானேனும் தெரிந்தவிடத்து உண்டாயுந் தெரியாவிடத்து இன்றாயுங் காணப்படுமென்று கொள்ளவேண்டும். அங்ஙனங் கொள்ளினுந் தெரிவுமுன்னிட்டன்றி யாதேனுந் தெரியப்படாமையால் தெரிவு முதற்காரணமாகின்றது. இஃதன்றியுங் காணப்படும் பொருள்களி லொன்றைக் காரணகாரியவகையால் ஆராயுமிடத்து முடிவில் ரூபாரூபமின்றி யாராய்ந்து அறிந்த அறிவு மாத்திரம் மிஞ்சிநிற்றலால் இவ்வறிவே முன்னர் ரூபாரூபமாய்க் காணப்பட்டதென ஐயந்திரிபறத் தீர்மானிக்கவேண்டிச் சான்றோரும்

"சிற்சொருபந்தானேசெகசொருபமானவெலாந் தற்சொருபம்"

எனவும்,

"பூதாதி யைந்து பொறிபுலன்க ளெல்லாஞ்சித் தேதாதி யந்த மவ்வ யெல்லாஞ்சித்து"

எனவுங் கூறினர். ஆதலால் இப்போதும் அறிவன்றி யறியப்படு பொருளாகிய திரிசியமில்லையென்றுணர்க. (கஅ)

அ-௯க.

அது இதுவெனச் சுட்டுதற்கு ஏதுவாய் நின்ற வுருவமும் அஃதின்றிச் சுட்டற்று நிற்றற்கு ஏதுவாய்நின்ற அருவமும் ஒன்றிலொன்றில்லாமல் மாறிக் காண்பது கண்ணின்றிரியென்றதனால் இதுவேயுண்மையாமெனக் கருதிய மாணாக்கனைநோக்கிக் கூறல்.

சுட்டுசுட் டற்றவிடஞ் சொல்லுவிழி யென்றதற்க
தட்டுஙய நட்டிக்குத் தானன்று—விட்டுக்
கரியாம் விழியென்னக் காணுவிழி யீதென்
றுரையென்றூ னேத்தி யுவந்து.

(எ-து.) சுட்டுதற்குஞ் சுட்டற்று நிற்றற்கும் ஏதுவாய் நின்ற ரூபாரூப அவசரமே மேற்கூறிய கண்ணுமெனக்கோடலைத் தவிர்க. யாதினாலெனில் அக்கற்பனையாலுண்டாஞ் சுகாசுகங்கள் அறிவாகிய கண்ணுக்கு இல்லாமையால் அவற்றிற்குத் தான் முதலன்று. மற்றெங்

னனங் கொள்வதெனின் தானே யவையாயினும் அவை தானாதலை விட்டு அவற்றிற்கு விலக்ஷணமாயுஞ் சாட்சியாயும் நின்றறியுமெனக் கொள்கவென் றாசிரியர் கூற, அதற்குமாணாக்கன் மகிழ்ந்து அவரைத் துதித்து இங்ஙனஞ் சாக்ஷியாய் நின்றறியும் விழியாவது இனையதென த் தெரித்தருள வேண்டுமென் றிரந்துகேட்டனன் — எ-று.

ரூபாரூபங்களும் அவற்றால்உண்டாஞ் சுகாசுகங்களும் மாறினுந் தான் அங்ஙனம் மாறாமலும் அவற்றிற் சிக்குண்ணாமலும் விலக்ஷண மாக நின்று அறிதலால் அவை தானாகாவென்பார் விட்டுக் கரியாம் விழியென்றார்.

வினா: கண்ணே ரூபாரூபமா யிருக்க அவை தானாகா வென்ப தெவ்வாறு?

விடை: அவை கண்ணாமெனக் கூறின் யாவுஞ் சிவமென்ற சுருதி வாக்கியத்தை நம்பினோன் அது யாது பொருள் கருதிக் கூறியதோ வென அச்சமுற்று ஆய்ந்துணராது எதிருற்ற ரூபாரூபங்களையே சிவ மெனக் கருதி அவலமாவதுபோல் முடியுமெனக் கருதி அவை தானா காவெனக் கூறியதென்க.

வினா: ரூபாரூபங்களைக் கண்ணெனக் கொள்ளின் அவலமா மென்றது எவ்வாறு?

விடை: உருட்சி, தட்டை, நெட்டை, குட்டை, வன்மை, மெ ன்மை, அகலம், நீள முதலியவாகநிற்கும் வண்ணப்பொருள், வடிவப் பொருள், அளவுப்பொருள், சுவைப்பொருளெனப்படும் விகார ரூபங் கண்ணெனப்படுமோ? இப்படி விகாரித்திருப்பதுதானோ கண்ணின் சொரூபம்? அல்லவே, ஆதலானும் தம்மையறியாவேனுந் தமக்கு எதி ருற்றவைகளையேனும் அறிதற்றன்மையது இன்றாதலானும் இங்ஙனங் கூறினாமென்க

வினா: ரூபாரூபங்கள் நெட்டை, குட்டை, தட்டை, உருட்சி, வன்மை, மென்மைமுதலிய பலவேறுவகைப்பட விகாரித்துத்தோற்றி

னும் அவை யறிவின் விகற்பமாதலால் அவற்றை யறிவென்முற் ரேடம் என்னை?

விடை: அவற்றை யறிவாகக் காணளவும் நிச்சயஞானத்தாலே னுங் கேள்விச் சொல்லாலேனும் அறிவேயாமெனக் கருதின் அவற் றை யறிவாகப் பாகஞ்செய்தற்கும் அங்ஙனம் பாகஞ்செய்ததை யனுப வித்தற்கும் அதனால் நித்திய திருப்தியடைந்து சும்மா விருத்தற்குங் கூடாமல் உபயப்பிரஷ்டத்துவம் வருமெனக் கொள்க.

வினா: அங்ஙனங் கருதுவாரு முளரோ?

விடை: பலருமாமென்க.

வினா: ஆயின் அறிவாகப் பாகஞ்செய்து அனுபவிப்பவர் இலரோ?

விடை: திரிவித வுலகத்து அரிதொரு ஞானியென்றதனால் அங் ஙனம் அனுபவிப்பது அரிதரிதாமென்க. (கரு)

அ-கை.

எல்லாமா யல்லவுமாய் நிற்பது கண்ணெனப் பொருள்படுதலின் அக்கண் இனையதெனக் கண்டவிடத்தன்றித் தெளிவுபடாதென்பது கருதி அதனது யதார்த்த வடிவந்தான் யாதோவென்ற மாணாக்கனது ஐயம் அகற்றவேண்டிப் பொருள், இடம், காலம், சினை, குணம், தொ ழிலென ஆறுகவகுத்து இக்கவியிற் பொருள் இடம் ஆமாறுணர்த்து கின்றது.

தெரிவு மயமாகித் தேசிற் சிறந்த
பெருவெளியொன் றுண்டாயிற் பிள்ளாய்—ஒருவகையால்
ஒத்திருக்கு மென்றபொரு ளூற்றவிடந் தானே தான்
எத்தடையு மில்லாமை யின்.

(எ-து.) தெரிவுமயமாகியும் ஒளியிற் சிறந்ததாகியும் இருக்கின்ற பெருவெளியானது ஒன்றுண்டா யிருக்குமாயின், ஞானபுத்திரா, கண்ணனது அதற்கு ஓர் விதத்தால் நிகர்க்குமென்று சொல்லத்தக்க

தான சித்துப் பொருளாகும். தங்குதற்கு ஆதாரமான விடந்தானே தானாகும் இதற்கு யாதோர் தடையும் இல்லாமையின்—எ-று.

தெரிவுமயமாகித் தேசிற்சிறந்த வென்றது பெருவெளியொன் றுண்டாயி னென்னிற் பூதாகாயமெனவும், தேசிற்சிறந்த வென்றது தெரிவுமயமான பெருவெளியொன் றுண்டாயினென்னிற் சுழுத்திக் கண் சூனியாகாயமெனவும், தெரிவுமயமாகி யென்றது தேசிற் சிறந்த பெருவெளியென்னிற் சூரியவிளக்கத்தாற்பின்னமாகா தொன்ற போ லொளிரும் மகாகாயமெனவும் பொருள்படுமாதலின் தெரிவுமய மாகித் தேசிற்சிறந்த பெருவெளியொன் றுண்டாயினெனவும், உப மானமெல்லாம் ஏகதேசமாதலின் ஒருவகையாலெனவும், இவ்வாற மைந்துள்ள பொரு ளென்பது தோன்ற ஒத்திருக்கு மென்ற பொரு ளெனவும், இங்ஙனம் நின்ற பொருளுக்குத் தன்னையன்றித் தனக்கு வேறிடமில்லாமையின் உற்றவிடந் தானே தானெனவும், சமஸ்தகர்ப னைகட்கும் இடம் அறிவாதல்போல அறிவுக்கு இடம் அவ்வறிவே யன்றி வேறிட மில்லவேயில்லை யென்னுந் தீர்ப்பைத் தடுத்தற்கு யாதொன்றானுங் கூடாமையின் எத்தடையும் இல்லாமையெனவுங் கூறினாரென்க.

வினா: உபமானமெல்லாம் ஏகதேசமென்றது என்னை?

விடை: யாதானும் ஓர்பொருளைப் புலப்படுத்த வேறொன்றால் உபமானிப்பது ஏகதேச குணத்தா லாதலினென்க.

வினா: அஃது எங்ஙனம்?

விடை: மதிமுக மென்றவிடத்து மதிக்குள்ள வட்டம், சீதளம், பிரகாசம், வெண்மை, கிரணம், களங்கமுதலிய குணங்களையும், முக த்துக்குள்ள கண், மூக்கு, செவி, வாய், கன்னம், முகக்கட்டை, சிவ ப்பு, கறுப்பு முதலிய குணங்களையுஞ் சாதாரண தர்மமாகக் கொள் ளாது மதிக்குள்ள வட்டம், சீதளம், பிரகாசமென்பவற்றையும் முகத்து க்குள்ள வட்டம், சுளியாமை, அழகு என்பவற்றையுஞ் சாதாரண தர்மமாகக் கொண்டு நிற்றலின் ஏகதேசமாமென்க.

வினு: இதற்கு மேற்கோளுண்டோ?

விடை: "ஊகமுள்ளதேற் சிறுவ ருரையுங்கொள்க வொழிந்த நய னுரைத்திடினுந் திரணமொப்ப, வேகவிடுவாய் ஞானமெனிநிற் ருேன்ற வியம்பு முபமானமெல்லா மேகதேசம்" என்னும் வாசிட்டக் கவியினுலுணர்க.

வினு: மெய்யே; இங்கே யேகதேசமென்றது எவ்வண்ணம்?

விடை: அறிவின் குணங்கள் சத்து, சித்து, ஆநந்தம், நித்தியம், பரிபூரணம், சுத்தம், சூனியம், சுபாவம், ஒழிவு, அதீதம், யதார்த்தம், இரகசியம், அறுதி, ஒடுக்கம், மோனம், சிதாகாசம், சுயஞ்சோதி, தடையற்ற ஆநந்தம் முதலியவாகக்கிடந்தவற்றுட் சிதாகாசஞ் சுயஞ் சோதி யென்பவற்றைமாத்திரம் எடுத்து உபமானித்ததாலென்க.

அ-கை.

மேல்நிறுத்த முறையானே காலஞ் சினை குண மாமாறுணர்த்து கின்றது.

கற்பனைநா ளல்லாத கால மதுவாகும்
அற்புதந்துக் காபாவ மாதிநான்—கிற்கே
சினையென்ற தாகுஞ் சிதையாச்சத் தாதி
அனைத்துங் குணமென் றறி.

(எ-து.) நாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழம், வெள்ளி, சனி யெனக் கற்பித்துக்கூறுங் கற்பனை நாளல்லாத நாளே முன்னர்க் காலமெனப்பட்டதாம். ஞானவினேதமான துக்காபாவம், கிருதகிருத்தியம், சர்வகாமாப்திகம், பிராப்திப் ராப்பியம் என்று நான்கு அங்கத்திற்கே முன்னர்ச் சினை யெனப்பட்டதாம். நசியாதுள்ள சத்து, சித்து, ஆநந்த முதலிய எல்லாக் குணங்களும் மேற்குறித்த குண மெனவறிக—எ-று.

அறிவாகிய வியாபக விளக்கமானது தன்னிடத்திற்றன்னுற் கற்பிக்கப்பட்ட நாளெல்லாம் பலவாகவந்து வந்து மாறினும் தான் அங்

ன மாறாமலும் பலவாகாமலும் என்றும் ஒருநாளாய் விளங்கிநிற்ற
லின் கற்பனைநா ளல்லாத கால மதுவாகுமெனவும், சகல கேவல சுக
ங்கள் அப்போதப்போதே துக்கமாய் அமைதலின் அவற்றையே துக்க
மெனக்கருதி அவை தன்பா லில்லாமையிற் றுக்காபாவமெனவும்,
தன்னை ஏகதேசமாகச் சுகிக்காது தன்னை யெங்கணுங் கண்டு சுகித்த
லின் சர்வகாமாப்திக மெனவும், தன்னைத்தான் சின்னமாகவும் அவி
ச்சின்னமாகவும் இயற்றுஞ் சேட்டை தன்பால் இல்லாமையிற் கிருத
கிருத்தியமெனவும், தனக்கன்னியத்தை யெல்லாம் பலப்பிராப்தி
யென் றுழல்வதைத் தவிர்ந்து "என்னையே யல்லாமல் யான் பெற்ற
தொன்றுமில்லை" யென்றவாறே தன்னையே பலப்ராப்தியாக ஐயந்திரிபற
ச் சுருதி யுத்தி யனுபவத்தாற் கொத்துக் கண்டு அனுபவிக்கும் பலப்
பிராப்திக்குமேற்பட்டபலப்ராப்தி யில்லவேயில்லை யாதலின் பிராப்தி
ப்ராப்திய மெனவும் பொருள்படுமாதலினும், இந்நான்குந் தனக்கு
அங்கமாதலினும் அற்புதந் துக்காபாவமாதி நான்கிற்கே சினையெ
ன்றதாகுமெனவும், தன்பால் உதிக்குங் கற்பனைகள்போல மவுட்டிக
த்தாற் கொள்ளுஞ் சச்சிதாநந்த முதலிய குணங்கள் கேட்டல் சிந்தி
த்தல் தெளிதலால் தனக்கே யமைதலின் சினையாச் சத்தாதி யனைத்
துங் குணமெனவுங் கூறியவாறு காண்க. (கூஎ)

அ-ணை அ

ஏனைய தொழில் ஆமாறுணர்த்துகின்றது.

தன்னிலனைத் துங்காணல் தன்னையனைத் திற்காணல்
தன்னைவே றுக்காணல் தானனைத்தாய்த்—துன்னி
விளங்கிச்சும் மாவிருத்தல் வேதாதிக் கொத்தல்
துளக்கமிலா மைத்தன் றொழில்.

(இ-ள்.) வியாபக விளக்கமாகிய தன்னிடத்திற் சித்து சடபேதங்
களின் விகற்பமாயுள்ள அனைத்தையுங் காண்டலுஞ் சகல கற்பனைக
ட்கும் இடமாயுள்ள தன்னை அக்கற்பனைகடோறுந் தனித்தனிக்

காண்டலுந் தன்னை யவற்றிற்கு வேறாக் காண்டலுந் தானே சமஸ்தமுமாக நிறைந்தொளிர்ந்து சும்மாவிருத்தலுந் தான் சுருதி யுத்தி யநுபவத்துக் கொத்து நிற்றலும் நினைப்பும்மறப்பு மில்லாமையாற் சனன மரண பயந் தவிர்ந்து நிற்றலுமாகிய। இவைபோல்வன வெல்லாந் தன்பால் நிகழுஞ் செயல்களாம்——எ-று.

தன்னில் அனைத்துங் காணவென்றதனால் அறிவாகிய வியாபக விளக்கத்திற் சராசரமாயுள்ள சகல கற்பனைகளும் ஜாலம்போல் நடிக்கக் காண்டலும், தன்னை அனைத்திற் காண வென்றதனாற் றனக்கு வெதிருத்தம்போற் காணப்படுவனவற்றுளெல்லாம் வியாபக விளக்கமாகிய தன்னைக் காண்டலும், தன்னை வேறாக் காண வென்றதனாற் றனக்கு வேறாகக் காணப்பட்டவற்றை யெல்லாந் தானல்லவென்று வொவ்வொன்றாக நியதிகளைந்துகாரண காரிய வகை கடந்த தன்னை அவற்றிற்கு விலக்ஷணமாகக் காண்டலும், தான் அனைத்தாய்த் தன்னே விளங்கிச் சும்மாவிருத்த வென்றதனால் வியாபக விளக்கத்திற் றுமறாக எத்தனை கற்பனைகள் தோற்றினும் அவை வியாபக விளக்கமாகக் கரைதலைக் கண்டு கண்டு அவை யாவும் வியாபக விளக்கமே யெனத் திடங்கொண்டு விளங்கிய விடத்து அன்னியமில்லாமல் நிறைந்துசேட்டையற்றுச் சும்மாவிருத்தலும், வேதாதிக்கொத்த வென்றதனால் எல்லாமாய் அல்லவுமாய் நிற்குந் தனது நிலையையே கூறுஞ் சுருதிக்கும் அங்ஙனம் நிற்றலை ஞாயத்தால் விளங்கப் பிரதிவாதிக்கும் உத்திக்கும் அந்நிலை யுண்மையோ பொய்யோவென இருவகை நிட்டையாற் றன்பாற் பிரத்தியட்சமாகக் கண்டு அநுபவிக்குஞ் சுவாநுபவத்திற்கும் ஒத்து நிற்றலும், துளக்கமிலாமை யென்றதனாற் சகசிவ பரங்களிற் சோதியாக விளங்கும் விளக்கத்திற் சனன மரண பயமற் றிருத்தலும் அமைந்து நிற்றலைக் காண்க வென்றவா றாயிற்று. (கூ௨)

அ-கை.

இங்ஙனம் நிற்ப தன்றியும் அவ்விழி சாமானியம் விசேடமென்னும் இரண்டு தர்மத்தையும் ஏற்குமெனல்.

பொதுச்சிறப்புத் தன்மையினைப் புல்லும்விழி யென்பர்
பொதுச்சுட்டாக் காட்சியது புக்கிங்—கெதிர்த்ததனைச்
சுட்டுங்காட் சிச்சிறப்புச் சொல்லிரண்டு மின்னமுங்கேள்
விட்டுவிட்டுப் பார்ப்பதனை விட்டு.

(எ-து.) இஃதன்றியும் அவ்விழியானது சாமானியம் விசேடண மெனச் சிறப்பித்துக் கூறும் இவ்விரு தர்மமுந் தன்பால் நிகழப்பெறு மென் றறிஞர் கூறுவர். அவற்றுட் சாமானிய திருட்டியாவது இது அதுவெனச் சுட்டா துணர்வது. விசேடண திருட்டியாவது சின்னஞ் சின்னமா நின்றுள்ள விடயங்களிற் சென்று இங்கு எதிரு ற்ற விடயத்தை இன்ன இன்னதெனத் தனித்தனிச் சுட்டியுணர்வது. இங்ஙனங் கூறிய இவ்விரண்டு திருட்டியையும் இன்னமும் யாஞ் சிற ப்பித்துக் கூற வொன்றைவிட் டொன்று பற்றிப் பார்த்துக்கொண்டி ருக்கும் விடயநாட்டத்தை விட்டு நீ கவனமாகக் கேளுதி—எ-று.

எனவே, இவ்விரு தர்மமும் பந்ததசையி லென்பது பெற்றாம்.

அ-௯௩.

விழியானது எல்லாமா யல்லவுமா மெனல்.

தன்னைத்தான் சுட்டுவது தானே விடயமதாந்
தன்னைத்தான் சுட்டல்விடிற் றன்மாயை—தன்னைவிட
இவ்விரண்டு மில்லையெனி லிவ்விரண்டுந் தானன்றிங்
கிவ்வளவுந் தோற்றமதா லெண்.

(எ-து.) வியாபக விளக்கமாகிய கண் தன்னைத்தான் சுட்டுங் கால் அச்சுட்டே பாஞ்சபூத பௌதிகமாகப் பரிணமிக்கு மாதலால் அப்பரிணமிப்பே விடயமெனப்படும். அங்ஙனமாய விழி தன்னைத் தான் சுட்டுதலைத் தவிரில் அவிச்சின்னமதாம். அவ்வவிச் சின்றே ற்றியே மாயையெனப்படும். சின்றோபாதி யவிச்சின்றோபாதி யாகிய இவ்விரண்டும் விழியையன்றி யில்லனவாம். ஆயின் இவை விழியாமே

யெனிற் றன்பால் இவை தோற்றன் மாத்திரமே யன்றிப் பொருளன்றாமையின் இவ்விரண்டுந் தானல்லவெனச் சிந்தித்துணர்தி—எ-று.

எனவே, உபாதித்திரயங்கள் காலத்திரயத்திலுந் தோற்றன் மாத்திரமெனப் பெற்றாம். பெறவே, இவை தன்னைவிட இல்லையென்பது கருத்தாயிற்று. (சுOO)

அ-கை.

தன்னை யுணர்ந்து தானாயினார்க்கு அவ்விழி வேறாகாதெனல்.

உடறோறு நானென் றுறுதித் திடங்கொண்
டுடலளவே நானென் றொழிவம்—மடமையதால்
நானவ தின்னதென நாடிநா டிப்பழகி
ஆனார்க் கயலன் றறி.

(எ-து.) எடுத்த வுடறோறும் நின்று அவ்வவ்வுடலை நானென்னெனப் பழகிப் பழகி மிக்க திடங்கொண்டு அவ்வவ் வுடலளவே நானெனப் பாவித்துப் பாவித்து அவ்வவ்வுடல் நீங்குந்தோறும் நீங்குந்தோறும் யாமும் இலவங்காத்த கிளிபோற் காத்தொழிவம். யாம் இங்ஙன மாதற்குக் காரணம் அறியாமை யானதாலெனத் துணிந்து நானெனப்படுவது இனையதெனச் சுருதி யுக்தி யனுபவத்தால் ஐயந் திரிபறத் தேர்ந்து, தன்னை விடாது கண்டு கண்டு இது நான் இது நானெனப் பலகற்பம் பழகித் தானே தானாயினார்க்கு அவ்விழி அன்னிய மன்றெனச் சிந்தித்துணர்தி—எ-று.

தன்னையன்றி அறிவாகிய விழி வேறன்றாமையின் ஆனார்க்குஅயலன் றறியென்றார். (சOக)

அ-கை.

அவ்விழிமயமே யுடம்பெனவும் அவ்வுடம்பு உபாதித்திரய மன்றெனவுங் கூறல்.

உடம்பெல்லாங் கண்ணே யுணர்வானைக் காணில்
உடம்பாவ தன்றே யுபாதி—யிடங்கொள்ளா

எங்கெங்குந் தானா யிலகு மறிவாகும்
அங்கங் கதுவா யறி.

(எ-று.) தன்னை யுள்ளவாறு விசாரித்துக் காணில் உடம்பெங்கும் மேற்குறித்த கண்மயமாகவே விளங்கும். அவ்வாறு விளங்கும் உடம்பாவது உபாதித்திரயமன்று; ஓரிடத்து மடங்காதுஎவ்விடத்தும் பரிபூரணமா நிறைந்து தானே தானாக விளங்கும் அறிவு வடிவமாகும். அதனை அதுவாக நின்று அங்கங்குங் கண்டுணர்தி — எ-று.

உபாதி வடிவில் எங்குமாகாது ஏகதேசமாய் ஓரிடத்து நின்றுணருங் கண் ணன்றெனத் தோன்ற வுடம்பெல்லாங் கண்ணே யெனவும், உடம்பெங்குங் கண்மயமாய் விளங்குவது தன்னை யுணர்ந்தவிடத்தாதலால் உணர்வானைக்காணிலெனவும், சமட்டி வியட்டி வடிவந் தன்பாற் றோன்றி மறைவதனால் அதனை யுபாதி யெனவும், அது தன்னை யுணரப்படுதலிற் சடமென்பது தோன்ற அன்றெனவும், அறிதலாகிய சத்தி யறிவானாகிய அறிவைத் தவிர வேறில்லாமையினாலும், அவ்வறிவில் அனைத்தும் விளங்குதலினானும், இடங்கொள்ளாது எங்கெங்குந் தானா யிலகு மறிவெனவும், அங்கங்கு அவன் அவள் அது வாய்த் தோற்றுவது அறிவு வியாபகத்தி லாதலால் அங்கங்கு அதுவா யறியெனவுங் கூறினார். கூறவே, அனைத்தும் அறிவே யென்பது பெற்றாம். அடங்காதென்பது ஒருபாதி வடிவினுங் கட்டுப்படாதது. (கoஉ)

அ-கை.

அவ்விழி யொருகாற் சித்தாயும் ஒருகாற் சடமாயும் விளங்குமெனவுந் தானவது இனைய தெனவுங் கூறல்.

தானாவி னார்க்கதுவுந் தானாக வேவிளங்குந்
தானாகா தார்க்கயலாத் தான்விளங்கும் — தானே
அறிவானந் தப்பொருளா மன்னியமுந் தானே
அறிவாரோ வேறாயி னார்.

(எ-று.) விகார வடிவந் தவிர்ந்து தானாக விளங்கினோர்க்கு அவ் விழியுந் தன்மயமாகவே விளங்கும்; தானாக விளங்காதார்க்கு அதுவும் அன்னியமாகவே விளங்கும். ஆயின், தானெனப்படுவதோ அபேதமா யுள்ள அறிவானந்தப் பொருளாம். இங்ஙனம் நிற்பதன்றியும் இதற்கு மாறாய விடயாநந்தப் பொருளா நிற்பதுந்தானே. இங்ஙனமாய நிலை யைத் தன்னை யுணர்ந்தோரே யன்றி வெறிருத்தமாயினோர் எங்ஙனம் அறிவார்?—எ-று.

மூலமுதற் பிரகிருதி யீறாயுள்ள தத்துவங்களில் ஒவ்வொன்றை யே புத்தி விகற்பத்தால் சமயிகள் தானெனக் கூறும் மூடவாதத்தை யகற்றுவான் வேண்டித் தானே அறிவானந்தப் பொருளா மென்கிறார்.

அ-ரை.

அறிவன்றிச் சகத்துந் தானன்றி யறிவும் இல்லையெனல்.

தானறிவா னந்தமெனல் சத்தியமே யன்னியமுந்
தானெங்ங னவ்விதனச் சற்குருவுந்—தானும்
அறிவன்றி யில்லா வருவுருவம் போல
அறிவுந்தா னன்றியிலை யால்.

(எ-று.) தானென்பது அறிவானந்தப் பொருளென் றருளிய துண்மையே. அவ்வறிவானந்தத்திற்கு மாறாயுள்ள திரிசியங்கள் தானா கும் வண்ணம் எவ்வாறென்று மாணாக்கன் வினவ, அதற்கு ஞானா சாரியர் தானாகிய அறிவைத் தவிர ரூபாரூப மில்லா வாறுபோல, அவ்வறிவுந் தானென்பதைத் தவிர இல்லாமையால் அனைத்துந் தானெனப்படும்—எ-று.

அறிவானந்தத்திற்கு மாறாயதிரிசியம் அறிவானந்தமாமோ வென த் தானே ஆசங்கித்து அறிவே விடயமும், ஆனந்தமே பிரியமு மாத லின் அன்னியமுந் தானே யென்கிறார். (கoசு)

அ-ரை.

தானே திருக்குந் திரிசியமுமாயின் திரிபுடிவரக் கணக்கென்னை யென்ற வினாவிற் குத்தரங் கூறல்.

அறிவா னறித லறிவனவிம் மூன்றும்
அறிவான் மறையி லறிவான்—மறையாக்காற்
காணு விரண்டுமெனிற் காணுவா றெங்ஙனென
மாணு வஃதுரைப்ப மற்று.

(எ-ள்.) காண்பான் வெளிப்படாவிடத்துக் காணப்படுவனவாகிய திரிசியமே ஞாதுரு ஞான ஞேயமென மூன்றாக விகற்பித்துக் காட்டும். காண்பான் வெளிப்பட்டவிடத்துத் திரிசியமில்லாமையால் ஏனைய ஞான ஞேய மாகிய இரண்டும் இன்ன திசையெனக் காணாமற் போகுமென்று ஆசிரியர் கூற, அங்ஙனங் கூறில் அவை காணாமற் போனவிதம் எவ்வாறென்று மாணாக்கன் வினவ, அதற்கு ஆசிரியர் மாணாக்கனே, அதனை யாம் விளங்கக் கூறுதுங் கேளுதி—எ-று.

ஞாதுரு ஞான ஞேய மென்பவற்றுள் ஞாதுருவை யன்றி ஞானமும் ஞானத்தையன்றி ஞேயமும் இல்லாமையானும், ஞாதுருவின் புடைபெயர்ப்பே ஞான மாதலினானும், ஞானமாவது தொழிற்பெயரென்பது தோன்றக் காட்சியென்பதினானும், இதனையறியாது ஞாதுருவைப் போல் இதனையும் பொருளாகக் கொள்வாரை மறுத்தற்கு அறிதலென்றும், ஞானகதப் பிரத்தியட்சம் விடயகதப் பிரத்தியட்சமென்னும் இரண்டனுள் விடயகதப் பிரத்தியட்சத்தில் அவ்விடயம் அசேதனமாயுஞ் சடமாயு மிருத்தல்பற்றிக் காண்பான் காட்சிவேறுள்ளனவாய் அனுமானித்தல் மாத்திரமே யன்றிப் பிரத்தியட்சமாய் அனுபவித்தல் விடாதத்தை யாதலால் அறிவான் அறிதல் அறிவன இம்மூன்று மறிவான் மறையிலென்றும், ஞானகதப் பிரத்தியட்சத்தில் விளங்கும் அறிவானில் அறிபடு பொருளும் அதுபற்றிக் காணும் அறிதலும் இல்லாமையால் அறிவான் மறையாக்காற் காணு இரண்டு மென்றுங் கூறினார். (கoரு)

அ-கை.

மேல் கவிக்குத் திருட்டாந்தங் கூறல்.

சித்திரநாட் டத்தாற் செயலொடுசெய் வான்காணுஞ்
சித்திரிக ணாட்டத்தாற் செய்கையொடு—சித்திரமும்
இல்லா ததுபோலா மீங்கிவற்று ளேதுண்மை
இல்லாத தேதிங் கிசை.

(எ-து.) ஓர் படத்தில் வரைந்திருக்குஞ் சித்திரத்தை நாடு நாட்டத்தால் அதனை வரைதலும் வரைதற் கர்த்தாவுங் காணவிடினும் அனுமானத்தால் உள்ளனவாகக் காணப்படுவர். சித்திரிகனாகிய வரைதற் கர்த்தாவை நாடு நாட்டத்தால் வரைதலாகிய செய்கையும் வரையப்பட்டனவாகிய சித்திரமும் அவனையன்றி யில்லாமைபோற் காணப்படுவனவாம். இதனை யறிந்து இங்கே கூறிய திருக்குதிரிசிய மென்பவற்றி லுள்ள தியாது? இல்லாத தியாது? அதனை யிங்குச் சிந்தித்துச் சொல்லுதி—எ-று.

சித்திரம் அசேதனமுஞ் சடமுமாதலிற் செய்கையுஞ் செய்வானுமின்றி அமையாததுபற்றி அனுமானத்தாற் காணுமென்றார். இதனால் அனுமானித்தவாறு காணுமை பொய்யெனவும் காண்டல் மெய்யெனவுங் கருதி, அவனை யறிய வினவியதென்பது தோன்றக் கிடந்தது.

அ-கை.

இன்னுந் திரிபுடி பொய்யென்றற்கு ஏது கூறல்.

அறியுடலை நானென் றழுத்தத்தால் வந்த
வெறுமத்தி யாசமெனல் வேண்டுஞ்—சுறுசுறுப்பாய்ச்
செய்தேன்கண் டேனின்றேன் றேடிபுரண் டேனூறி
எய்தா தனைக்காணி லிங்கு.

(எ-து.) திரிபுடிகட்கு இடையில் புடைபெயர்ச்சியாக நின்ற யான் அதனைச் சுறுசுறுப்பாய்ச் செய்தேன், யான் அதனைக் கண்டேன், யான் இங்கு இன்னது வேண்டி நின்றேன், யான் ஒன்றைத் தேடி அது கிடையாமையால் அழுது புரண்டேனெனக் கூறப்படுவனவும், இவைபோன்ற மற்றெல்லாச் செய்கைகளும் அறியப்படுவெ

தாகிய நூலவுடலை யானெனப் பலகால் இடைவிடாது பழகும் பழக்கத்தின் அழுத்தத்தால் வந்த வெறும் அத்தியாசமென்றே சொல்லல் வேண்டும். அஃதெங்ஙனமெனின் புடைபெயர்ச்சி யனைத்துந் தன்னையுள்ளவாறு கண்டவிடத்து இங்கு எய்தாமையால்—எ-று.

எனவே புடைபெயர்ச்சி யுள்ளனவாகக் காண்டல் திரிசியநாட்டத்தன்றித் திருக்கு நாட்டத்து அஃது இடையற நின்று பரி பூரணமாக விளங்குதலின் இன்றென்பது பெறும். அத்தியாச மென்பது பொய். அவித்தை யுள்ளளவும் வந்துபோகும் உடல்களை யுடலென்றது ஒருமை பன்மை மயக்கம். (க0எ)

அ-கை.

நனவாதிகளிற் றோன்றுந் திரிபுடிகள் மித்தையேயென வைப்புறுத்தல்.

நனவு நினைவோடே நண்ணுகனா மூன்றும்
நனவிற் றிரிசியமே நாடும்—இனமூன்றேற்
றத்தே திரிபுடியாஞ் செப்பிரண்டி லென்னுங்கால்
எத்திறத்தும் பொய்யா மிவை.

(எ-து.) நனவு நினைவு கனவு என மூன்றும். அவற்றுள் நனவிற் றூலித்துக் காணப்படுவனவாகிய பாஞ்சபூத பௌதிக திரிசியங்களே ஓரினமாயுள்ள திரிபுடியாக நாடப்படுமெனின் மேற்கூறிய மற்றிரண்டினுந் திருக்கே திரிபுடியாக நாடப்படு மென்னலாம். இங்ஙனங் கூறுமிடத்து எந்த விதத்தினும் இவை யுண்மை யாகாமையிற் பொய்யாமென வறிதி—எ-று.

சடமாதலிற் றிரிசியந் திரிபுடி யாகாவாறுபோல நீக்கமற நின்று இரண்டற்று விளங்குதலின் திருக்கு திரிபுடி யாகாதென்பதைக் குறிப்பித்து விளக்க இங்ஙனங் கூறினா ரென்க. எத்திறத்து மென்றது இங்கே சுருதி யுத்தி யனுபவமென வறிக. (க0அ)

அ-கை.

திரிபுடி யுண்டென்பதும் இன்றென்பதும் ஞான நாட்டத்திற்கு இயையுமெனல்.

திரிபுடியின் றென்னிற் செகத்திருப்ப தென்னை
திரிபுடியுண் டென்னிற் றிண்ணாக—தெரியானைக்
காட்டித் தெரிக்கிற் கலைவதிலை யூனவிழி
நாட்டத்திற் கெட்டாது நாடு.

(எ-து.) மேற் கூறியது பற்றித் திரிபுடி யின்றெனக் கூறலா மெனின் ஞேயமாகிய சகத்துண்டாயிருப்பதற்கு ஏதென்னை? ஞேயம் இருப்பதாற் றிரிபுடி யுண்டெனக் கூறலாமெனின் உண்மையே. ஞாதுருவை விளக்கி அவ்விளக்கத்தில் ஞேய முண்டாயிருக்கக் காட்டுதி யேற் றிரிபுடி யுண்டென்பதை விலக்குவ தின்றாம். இங்ஙனங் கூறிய இவ்விரு தன்மையுந் தனக்குண்டில்லையெனக் கணிப்பது ஞானநாட்டத்திற்கு அமையுமன்றி யூனக்கண்ணால் நாடும் நாட்டத்திற்கு அமையாதென்பதைச் சிந்தித் துணர்தி—எ-று.

சகத்துக் காணப்படும் பொருளாதலின் அஃதுண்டா யிருக்கையில் அதனைக் காணும் காட்சியும் அக்காட்சியா லுண்டாஞ் சகத்துக்கு அனுபவியாகிய காண்பானு முளரா மென்பது குறிப்பிக்கச் சகத் திருப்பதென்னை யெனவும், ஞாதுருப் பிரத்தியட்சந் தவிர்த்துவிட்டு அனுமானிப்பது திரிபுடியெனக் குறிப்பிக்கக் கலைவதிலை யெனவும், திரிபுடி உண்டில்லையெனக் கணிக்கு மவைசாதிலை கண்ணொளிக்கற் பாலது ஞானநாட்டமேயெனக் குறிப்பிக்க ஊனவிழி நாட்டத்திற் கெட்டா தெனவுங் கூறியதாமென்க. கூறவே, திரிபுடி, கணிக்கத் தக்கது ஞானதிருட்டிக்கே யுரித்தென்பது பெற்றாம்.

அ-கை.

திரிபுடி யுண்மையாகக் காணப்படுவது என்னை யென்றதற்குத் தோற்றல் மாத்திரமுஞ் சொல்மாத்திரமுமாமெனக் கூறல்.

தோற்றளவுஞ் சொல்லளவுந் தானுந் திரிபுடியை
யேற்றற் கிடமில்லை யீரிடத்தும்—மாற்றிடுதல்
மண்ணைச் சிறுவர் மனையாதி யென்பதொக்கும்
எண்ணிற் பிரமை யிது.

(எ-று.) சித்துசடமென்னும் இரண்டிடத்துந் தோற்றல்மாத்திர மாகவுஞ்சொன்மாத்திரமாகவும்நிறைவற்றுக் காணுந்திரிபுடியை யுண்மைப் பொருளாக அங்கீகரித்தற்கு அணுவளவேனும் ஞாயமேயில்லை. இதனை மறுத்து உண்மைப் பொருளாகக் கோடல் பேதைப் பருவச் சிறுவர்கள் ஆண் பெண் ணுருவாக அமைத்த மண்ணுருவங்களை நாயகி நாயகருநியாகப் பாவித்து விளையாடுவ தொக்கு மாதலின் சிந்தித்துப் பார்க்குமிடத்து இது ப்ரமையே யாமென வறிதி—எ-று.

கானல் நீராகவுங், கிளிஞ்சல் வெள்ளியாகவும், பழுதை பாம்பாகவுங் காண்டல்போலச் சித்தே திரிபுடியாகக் காண்டலின் ப்ரமை யென்றும். (கக0)

அ-கை.

சித்துத் திரிபுடிபோல் சடந்திரிபுடி தோற்றல் மாத்திர மாகா தென்றற் குத்தரங் கூறல்.

சித்துத் திரிபுடிக்கே செப்பலாந் தோற்றளவிங்
கொத்த வனுபவத்தா லொண்ணாது—மற்றையதேல்
ஓரனுப முண்டா யுணர்வன்றிக் காணுமெனின்
யாரில்லை யென்பா ரதை.

(எ-று.) இருவிதத் திரிபுடியினுள் சித்துத் திரிபுடி அனுபவத் துக்கு உதவாமையால் அதற்கே தோற்றல் மாத்திரஞ் சொல்லலாமே யன்றி மற்றச் சடத் திரிபுடி அனுபவிக்கும் அனுபவத்தில் யாவர்க்கும் ஒத்து நிற்பதால் அதற்குச் சொல்லத்தகா தென்னையாயின் ப்ரக்ஞை யன்றி ஓர் நுட்ப அணுவேனும் உண்டாயிருக்கக் காணப்படுமெனின் யார் அதனை யில்லை யெனச் சொல்ல வல்லவர்—எ-று.

சடத் திரிபுடியாகிய ஸ்தூல பாஞ்சபூத பௌதிகமா யுள்ளவைகளும், அவற்றின் கடினம், நெகிழ்ச்சி, சீதளம், செம்மை உட்டணம் ஒளி, சலித்தல் மோதல், நிரந்தரம் பொருளின்மை முதலிய குணங்களும், இவற்றை அனுபவித்தற் கேதுவாகிய சத்த, பரிச, ரூப, ரச, கந்தவகைகளும், தெரிவாக நடப்பன, பறப்பன, இருப்பன, ஊர்வனவாயுள்ள சராசர வுயிர்களனைத்துக்கும் ஒருயிருக் கொத்தவாறு அனுபவத்துக் கொத்து நிற்றலின் ஒத்த அனுபவத்தா லெனவும், ப்ரக்ஞா சொரூபமே சகத்தென்பது தோன்ற ஒரணுவு முண்டா யுணர்வன்றிக் காணுமெனினெனவுங் கூறினுமென்க. (கககு)

அ-கை.

இன்னுந் திரிபுடியைப்பற்றிப் பிரதிவாதிக்க விடயத்திற்குச் சித்துத் துணைக்காரணமா யிருக்க முதற்காரணமென்றது எங்ஙனங் கூடுமென்றற் குத்தரங் கூறல்.

அந்தர்முக நாட்டத்தா லாயிலறி வாய்முடியும்
இந்திரிய மாதி யெதிர்நோக்காற்—சிந்திக்கிற்
பூதாதி யாவும் புகுமே யறிவாக
ஏதிரண்டா யீங்கிருப்ப தெண்.

(எ-து.) யாதானும் ஓர் விடயத்தைப் பூர்வபக்ஷ சித்தாந்தஞ் செய்வதற் கேதுவாயுள்ளது காரண காரிய மெனவும், அக்காரண காரியம் அமைதற் கேதுவாயுள்ள திருமுகநாட்ட மெனவுங் கற்பித்தது அகமுக நாட்டத்ததாதலின் அந்நாட்டத் ததனை ஆராயுமிடத்து அவ்விடயாகாரமா நின்றுணரும் இந்திரியமுதலிய அறிதற் கருவிகள் யாவும் பிரக்ஞா சொரூபமாகவே முடியும். இதற்கு மாறா யுள்ள பகிர்முக நாட்டத் ததனை ஆராயுமிடத்து அதற்குக்காரணமாயுள்ள பாஞ்சபூத முதலிய அறிபடுங் கருவிகள் யாவும் அறிவாகவே முடியும். ஆதலின் ஆராய்ச்சி செய்யும் நாட்டம் ஏதிங்கிரண்டா யிருப்பதைச் சிந்தித் துணர்தி—எ-று.

அந்தர்முக நாட்டமென்றது அறிதற் கருவிகளை யாராயும் நாட்டம். எனவே, அறியப்படுவன யாவும் அறிவுக்கே புலப்படுதலினானும், அவற்றை யறிதல் அவ்வறிவாதலினானும், அவை தோன்றி மறைதல் தன் கண்ணே யாதலினானும், இந்திரிய முதலிய அறிதற் கருவி யுண்டாயபோது அங்கவை யுண்டாயும் இன்றாயபோது அங்கவை யின்றாயும் இருப்பது பற்றி அவற்றிற்கு அதுவே முதற்காரணமெனத் துணியத்தகு மாதலினானும் அவ்வறிதற் கருவியின் பேதங்களை யொவ்வொன்றா யுய்த்துணர்ந்து ஆராய்தலென்பது பெற்றாம். இந்திரியம் அந்தக்கரணஞ் சிதாபாசன்முதலியவற்றை அறிதற் கருவியென்றது தொகை யொருமை. பகிர்முக நாட்ட மென்றது அறியப்படுவனவற்றை யாராயு நாட்டம். எனவே, அறியப்படுமவை யறிவுக்கெனவும், அவற்றை அறிவது அறிவெனவும், அவற்றிற்கு அதுவே யாதாரமாயும் முதற்காரணமாயு மிருப்பதெனவும், அஃதுண்டாயபோதுண்டாய் இன்றாயபோது இன்றா யிருக்குமெனவுங் கேட்டுப் போதிக்கினும் பிரத்தியக்ஷ மில்லாமையாற் சொன்மாத்திரமாய் அமையும். அமைந்தவிடத்துப் பிரத்தியக்ஷம் விடயமாதலின் அவ்விடயங்கட்குக் காரண காரியம் அவ்வவற்றின்கண்ணே வருதலென்பது பெற்றாம். இதனால் அறிவனவு மறியப்படுபவையும் பிரக்ஞா சொருபமே யென்பதாயிற்று. (ககஉ)

அ-கை.

அறிவானது பகிர்முக நாட்டத் தனைத்தையும் அறிதற்குத் துணையா நிற்றலின் துணைக்காரணமு மென்றற் குத்தரங் கூறல்.

காண்பவற்றை யிவ்வாறு கண்ணுடையா ரைக்கொண்டு
காண்பாரல் லார்க்கவலங் கட்டறுமோ—மாண்பிற்
றுலங்கறிவு தானுந் துணைமுதலா நிற்கும்
நலந்தெரிவா ருக்கடிமை நாடு,

(எ-று.) காணப்படுவனவற்றை யெல்லாம் இவ்வாறே ஞானக் கண்ணுடையாரைக் கொண்டு காணவல்லார்க்கே யன்றி யேனையோருக்கு அவலமாயுள்ள பந்தவினைக ளொருங்கே கெடுமோ? கெடாவாகலின், சிறந்த சத்தாதி இலக்கணங்களால் விளங்கும் அறிவுந் துணைக்காரணமாயும் முதற் காரணமாயும் நிற்கும் அதிசயானுபவத்தைக் கண்டுகொண் டிருக்கும் மகான்களுக்கு அடிமையாகும் வழியைத் தேடுதி—எ-று.

அறிவு துணைக்காரணமென்றது தமக்கும் உடன்பாடேபோலுமென்பதைக் குறிப்பிக்க அறிவுதானுந் துணைமுதலா நிற்கு மென்றார். விகுருதி முதல் பிரகிருதிகாறுந் தன்னைத்தான் ஆமாயுந் துணைக் கருவிதானே யாதலின் துணைக்கருவி யென்றார். (கசுக)

அ-கை.

ஒத்திருப்பினுஞ் சிலகாதுக்களால் அறிவு முதற்காரண மென்றற்குத் தடை யினையதென்பதைக் களைதல்.

அறிவே யுலகனைத்து மாமே லொழிவில்
அறிவொழியக் காணுதென் ஞங்கே—யறிவதனுற்
காரியத்தை நீக்கக் கதிரவனே நாளெனல்போன்
மாரணத்தி னெண்ணமிது வாம்.

(எ-று.) அறிவே சமஸ்த வுலகமானல் அவை சுழுத்திக்கண் மறைந்தவிடத்து அவ்வறிவு மறையக்காணுத தென்னை? மறைந்ததெனின் அங்கேதோன்றும் பாழை அவ்வறிவங்கே நின் றறிகின்றதினுல் மறைந்ததன் றென்னையாயின் மாணுக்கனே, இங்ஙனங்கூறுவதெல்லாங் காரணத்தை யன்றிக் காரியம் ஓர் பொரு ளன்றெனக் கழிப்பான் கருதிச் சூரியனே நாளென்பதொக்கும். இங்ஙனம் அபேதகாரண காரியமாகக் கூறுவதும் வேதத்தின் கருத்து இதுவாமென்றறிதி—எ-று.

அபேத காரண காரிய வாதமாவது: காரணத்தை யன்றிக் காரியம் வேறுபடாமை. இங்கே காரணமென்பது முதற்காரணமெனவும் கதிரவனே நாளென்பது இதற்கு உதாரண மெனவும், காரியத்தை நீக்கவென்பது திரிசியந் திருக்குவை யன்றி யோர் பொரு ளன்றாத லின் அதனை நீக்க வெனவும் பொருள் படுமாறு காண்க. இதனாற் காரண காரியவாதம் இதனை யதற்காக வென்பது பெற்றாம். தாம முள்ளபோது மில்லாதபோதும் அக்கினி யிருக்குமாறு போன்று திரிசிய முள்ளபோதும் இல்லாதபோதுந் திருக்கிருத்தலைப் பின்னருணர்ந்த முன்னர் திருக்கு திரிசியத்திற்கு அபேத காரண காரியம் விதித்ததெனவும், அஃதுந் திரிசிய முண்டென்னும் ப்ரமை யொழித்தற்கு இங்ஙனங் கூறியதெனவும் பொருள்பட விடை கூறியவாறு காண்க.

அ-கை.

பகிர்முகத்தில் திருக்குநாட்டம்வராமையால் தியக்க முண்டாவதைக் குறிப்பா லுணர்ந்து திரிசிய நாட்டத்திற்றானே யோர் தந்திரத்தால் அவ்வருத்தம் அவன்பா லுளதாகக் காட்டல்.

நினைவன்றி யில்லை நிலையாகக் காணும்
நனவோ டுலகுண்மை நாட்டம்—நினைவுதனிற்
காண்பனவா யங்குணர்வாய்க் காட்டுமொளி யாயிடமாய்க்
காண்பதனைக் கண்டுணர்ந்தக் கால்.

(எ-று.) இதின்கண் ஐயமுளதேல் நின்பால் இயங்குவ தாகிய நினைவின்கண் தோற்றுவனவாயும் அவற்றை அங்கங்கேநின் றுணர்வதாயும் அவற்றை விளக்கும் விளக்கமாயும் அவ்வவற்றிற்கு ஆதாரமாயுங் காணப்படுவது எதுவோ அந்தப் பரவஸ்துவைக் கண்டு ஐயமறத் தெளிந்தவிடத்து ஸ்திரவடிவாகக் காணப்படுகிற நனவும் அதனோடு உலகுண்மை நாட்டமும் நினைவைத் தவிர இல்லன வாதலைக் கண்டுணர்தி—எ-று.

நினைவிறந்த விடத்துக் கண்ட பரவஸ்து நினைவினும் வியாபித்து விளங்குவதைக் குறிப்பால் விளக்க நினைவுதனிற் காண்பனவா யங்குணர்வாய்க் காட்டு மொளியா யிடமாய்க் காண்பதெனவும், அதனைப் பிரத்தியக்ஷமாகக் கண்டவிடத்தன்றிக் கலக்கந் தீராமையால் அதனைக் கண்டுணர்ந்தக்கா லெனவுங் கூறினார். இதனால் நினைவின் து உண்மை நிலையைக்கண்டு பின்னர் யான்கூறிய துண்மையோ பொய்யோ வெனத் தேர்தி யென்றவாறாயிற்று. (கக௫)

அ-கை.

இதுவும் நினைவைத் தவிர நனவுலக மின்றெனல்.

நினைவொன்றைப் பற்றிலெதிர் நிற்பதெனை லெங்கே
நினைவெஃதென் றாயுகினு நில்லா—நனவுலகம்
எவ்வுயிர்க்கு மென்றா லிதற்கெதிராப் பேசுவதென்
செவ்விதாக் கற்றுணர்ந்தோர் செப்பு.

(எ-து.) நனவுலகாகிய தூலப்பிரபஞ்சம் எழுவகைத்தோற்றமா யுள்ள எவ்வகை யுயிர்க்கும் நினைவானது யாதோர் விடயத்தைப்பற்றி அகத்தில் அழுந்தின அவசரத்திற் கண்ணுக்கு எதிரா யிருக்கின்றது என்பதெங்கே? இங்ஙனந் தடிக்கும் நினைவாவ தியாதெனை அதனை நாடு நாட்டத்தினும் அவ்வுலகங் காணப்படாது. இவ்வநுபவம் எவ்வுயிர்க்கு மொத்ததென்றால், இதனுக்கு மாறாக நினைவைத் தூலக் காரணமெனச் செவ்வையாகக் கற்றுணர்ந்தோர் கூறுவதென்னை? இதனை நீயே யறிந்து சொல்லுதி—எ-று.

அகமுக நாட்டந் தெரியாமையால் நினைவெஃதென் றாயுகினு மெனவும், தூலித்துக் காணப்படும் பாஞ்சபூத பௌதிக முதலிய அண்டாண்டங்களை நனவுலகமெனவும், விடயங்கட்கு அறிவு முதற் காரணமெனக் கற்றறியாதா ரென உல்லங்கனஞ் செய்வான் கருதி, செவ்விதாக் கற்றுணர்ந்தோ ரெனவுங்கூறினார். கூறவே அவர்போல்

நீயும் மாறுகப் பேசுதி யென்பது அருத்தாபத்தியாற் றேன்றக் கிடந்தது. (ககசு)

அ-கை.

இந்நெறியாற் றிரிபுடி யில்லையெனவும், நின்றது போதமெனவும் அப்போதமே நீயெனவுங் கூறல்.

ஆதலா லெங்கே யறிவுந் திரிபுடிதான்
போதமாக் கண்டனைத்தும் போற்றிலெதிர்—ஏதும்
நினையன்றி யப்போத நில்லாமை காண்பை
யனையதே தீர்ந்தநிலை யாம்.

(எ-து.) ஆகையால் தன்னால் அறியப்படுந் திரிபுடியென்பதெங்கே? நின்றது போதமாதலால் அப்போதமாகவே காணப்படுவன அனைத்தையுங் கண்டு அதுவாகக் காக்க வல்லையாயின் அப்போதத்துக்கு வெதிருத்தமாயது யாது? அங்ஙனே நின்னைத்தவிர அப்போதம்வேறுபட்டு விளங்காமையை நின் அனுபவத்திற் காண்பை; அத்தன்மையான சுவானுபவமே தீர்ந்த நிலையாமெனத் தேர்தி—எ-று.

அனைத்தையும் ஞானமயமாகக் கண்டவிடத்து அன்னியமொன்றில்லாமையால் எதிரேதெனவும், பின்னர் நீ யந்த ஞான மாகவே விளங்குவை யென்பார் நினையன்றி அப்போதம் நில்லாமை காண்பை யெனவும், தானே யறிவும் அறிவே தானுமாக விளங்கும் அந்நிலைக்கு மேல் முடிவான நிலை வேறு இன்மையால் அனையதே தீர்ந்த நிலையாம் எனவுங் கூறினர். கூறவே முத்திமுடி வென்பது இனையதெனப் பெற்றாம். (ககஎ)

அ-கை.

ஆதாரம் இஃதென் றுணர்த்துகின்றது.

தேகாதி பந்தஞ் சிதையாச் சுகதுக்கம்
ஏகாக் கவலைக்கு மிந்நினைவே—நீகாண்

இடம்போலு மாங்காங்கே யென்றுன்னக் காணும்
அடங்காச் சுகவாழ் வறி.

(எ-து.) தேகங் காரணமாக வரும் பந்தமும் அறுபற்றி யொழி யாது வருஞ் சுகாசுகமுந் தன்னைவிட்டு நீங்காக் கவலைகளுமாகிய இவ ற்றிற்கு இந்த நினைவே யிடமெனவும் இந்நினைவுக்கு நீயே யிடமென வும் அங்கங்கே சிந்தித்துக் காணவல்லையாயின் அங்ஙனே தடையற்ற சுகவாழ் வுண்டாம்; அதனை நீயே கண்டறிதி—எ-று.

தேகாதி பந்தமென்றதனாற் றேகமும் அதுகாரணமா யுண்டாந் தாய் தந்தை மனை மக்கள் சுற்றமுந் தேகத்துக்கு வேண்டிய இடம் பொருள் ஏவலும் நண்பரும், சிதையாச் சுகதுக்க மென்றதனாற் றேக த்தை நானென் றளவும் ஆணவமும் அவ்வாணவம் நீங்கா வளவும் மாயையும் அம்மாயை நீங்காவளவுங் காமியமும் அக்காமியம் நீங்கா வளவுந் தேகாதிபந்தமும் அப்பந்தம் நீங்காவளவுஞ் சுகதுக்கத்துக்கு முடிவின்மையும், ஏகாக் கவலை யென்றதனால் அச்சுகதுக்கம் ஆன்மா க்கட்குச் சுபாவமென்ற அளவும் ஒழியாதது மடமையும் அம்மடமை யின்னதென உன்றுவளவும் ஒழியாதது இச்சையும் அவ்விச்சை யாது க்காகவெனத் தன்னை விசாரியாவளவும் ஒழியாத எண்ணங்களும் அமைந்து கிடந்தன. அனுதினமும் இடைவிடாமல் பந்தமுதலியவற் றிற்கு நின்னினைவே யிடமா நிற்றலைப் பிரத்தியட்சமாக நீயே கண்டு அனுபவிக்குமாறு போன்று அவ்வவ் வுயிரும் இவ்வாறு கண்டனுபவி ப்ப துண்மையாதலினானும், பந்த முதலியவை நின்பாற் றோன்றி மறையினும் அவற்றிற்கு இடந் தோன்றி மறையாததுபோன்று அவ் வவ் வுயிர்க்கண்ணும் அவ்வவ் விடந் தோன்றி மறையாமையானும் சான்றோர் பந்தமுதலியவற்றை விட்டு அவற்றிற்கு ஆதாரத்தை மாத் திரம் நாடுவதுபோன்று அங்கங்கும் அவற்றிற்கு ஆதாரத்தை மாத்தி ரம் நாடுகவென்பார் இந்நினைவே நீகா ணிடம்போலு மாங்காங்கே யென்றுன்னவெனவும், நிரதிசயாநந்த வாழ்வென்பார் அடங்காச் சுக

வாழ்வெனவுங் கூறினார். இது பந்தமுதலியவற்றிற்கு ஆதாரத்தைச் சீர்தூக்கிக் காணில் அவ்வவ் வாதாரம் வெவ்வேறாக விளங்காமல் ஏகமாக விளங்குமெனத் தெரிவித்ததெனக் கொள்க. (கக௮)

அ-கை.

பிரக்ஞையே திரிபுடியாமென் றுணர்த்தல்.

தெரிவே யுருப்பலவாத் தீரத் தெரியுந்
தெரிவா நினைவதனிற் றேரில்—திரிபுடியும்
அத்தெரிவே யாமிதற்கிங் கையமிலை யாதலினால்
அத்தெரிவாய் நின் றங் கறி.

(எ-து.) நினைவின்கண் தெரிவே பலவேறு வகைப்பட்ட வுருப்பேதங்களாகத் தடித்து அததுவாக நின்று அது அதைச் செவ்விதாயுணர்ந்துகொண் டிருக்கும். பிரக்ஞா மயமாகிய நினைவின்கண் தீர விசாரித்துணரில் திரிபுடியும் அத்தெரிவாகவே முடியும். இங்ஙனங் கூறிய இந்நிலைக்கு இங்கு ஐயமின்றாதலால் நினக்கு இதன்பால் ஐயமுளதேல் அத்தெரிவு வடிவாக நின்று அதனை யங்கு அறிதி—எ-று.

நினைவின்கண் அவன் அவள் அதுவாக விகாரித்து மிதமின்றித் தோற்றுதலும் அதனை யதுவே கண்டு களித்தலும் அத்தோற்றந் திரிபுடியாகக் காண்டலும் அதனை மெய்யென மயங்கி விவகரித்தலுந் தெரிவாதலால் தெரிவேயுருப்பலவாத் தீரத்தெரியுந் திரிபுடியுமத்தெரிவேயாமெனவும், இங்ஙனமாய நிலை வேறாகநின் றுணரப் படாமையால் அத்தெரிவாய்நின் றங்கறி யெனவும், உணர்தல் மயம் நினைவாதலாற் றெரிவா நினைவிலெனவுங் கூறினார். இதனால் நினைவுந் தோற்றமுந் தெரிவாதலால் திரிபுடியுந் தெரிவாமென்ற தாயிற்று. (கககூ)

அ-கை.

ஆதலின் பிரக்ஞையாகிய வியாபக விளக்கத்தில் உறைந்திருக்க வேண்டுமெனல்.

வியாபித்து நின்ற விளக்க நினைவாம்
நியாயத்தாற் காட்டவலம் நேரே—வியாபகத்தை
யன்றித் திரிபுடியின் றுதலா னவ்வொளியில்
நின்று கழிப்பாய் நிதம்.

(எ-து.) நீக்கமற்று எங்கும் வியாபித்து அவ்வவற்றை விளக்க நின்ற விளக்கமே நினைவெனப்படும். இதனை மடமையான் மறுப்பார்க்குப் பிரத்தியட்சமாக நியாயத்தால் நேரே காட்ட வல்லமை யுடையேம் யாம். இஃதன்றியும் வியாபக விளக்கத்தை யன்றித் திரிபுடி யென்பது இன்றுதலின் யவ்வியாபக விளக்கத்தில் இடைவிடாது நின்று நாள் கழிக்குதி—எ-று.

உபாதிரகித விளக்க மென்பது தோன்ற வியாபித்து நின்ற விளக்கமெனவும், சொன்மாத்திரத்தா லல்ல வென்பதைக் குறிப்பிக்க நியாயத்தாற் காட்ட வலமெனவும், அன்னியமாக வல்ல உன்னிடத்திற்றனே யென்பது தோன்ற நேரே யெனவும், உள்ளது இதுவென்பது தோன்ற அவ்வொளியி னின்று கழிப்பாய் நிதமெனவுங் கூறினார். இது நினைவெனப்படுவது சின்னமோ அசின்னமோ வென்ற மயக்கத்தைக் களைந்து இன்னதெனக் குறிப்பித்தது. (கஉ0)

அ-கை.

இனி நனவாவ தியாதெனக் கேட்டல்.

நினைவின்ன தென்று நிகழ்த்தியது போல
நனவின்ன தென்றெனக்கு நாட்டில்—இனையபிரி
வின்றிச் சுகித்திருப்ப னெம்மானே யென்னவவர்
நன்றுரைக்க லுற்றார் நயந்து.

(எ-து.) நினைவாகும் நிலை யினையதென நாட்டிக் காட்டியது போல, நனவாகும் நிலை யினையதென அடியேற்கு நாட்டிக் காட்டியருளின் அக்கணமே நனவு நினைவெனப்படும் அகம்புறப் பாகுபாடு

ளின்றிச் சுயம்பிரகாசமாக விளங்கிச் சுகபோதமாய் நிற்பன். எமது கர்த்தனே! யென்று மாணாக்கன் இரந்து கேட்க, அதற்கு ஆசிரியர் அகமகிழ்ந்து அதனை இனிதாகக் கூறத் தொடங்கினர்—எ-று.

விடயம் தூலவடிவாகவுஞ் சாயாவடிவாகவுங் காண்டலை யுணர்த்தும் உணர்வு அகம்புறம்போல் நிற்றலின் நினைவு நனவெனப்பட்டது. இந்நினைவும் நனவும் அறிவன்றி யில்லாமையால் இனைய பிரிவின்றி யெனவும், இங்ஙனந் தெளிந்த விடத்து அறிவு பேதம் இன்றாம்; இன்றாயபோது ஆனந்தபேதம் எங்ஙனங் கூடும்; கூடாவிடத்து ஏகமா நிற்றலிற் சுகித்திருப்ப னெனவுங் கூறினார். (கஉக)

அ-கை.

அதற் குத்தரங் கூறல்.

சத்தமுத லைந்துந் தனித்தனியே தோற்றுதற்கும்
ஒத்திவைகள் காண்டற்கு மோர்தற்கும்—நித்தம்
அறிவே யிடமா யனுபவிப்ப மாறால்
அறிவே நனவென் றறி.

(எ-து.) சத்த பரிச முதலிய ஐந்துந் தனித்தனியே நின்று காணப்படுதற்கும் ஒன்று கண்டவாறு இவையனைத்தும் ஒருங்கே காணப்படுவதற்கும் இன்னின்னதென் றிவற்றை யறிதற்கு மனுதினமும் இடைவிடாது அறிவே யிடமாகக்கண்டு அனுபவிப்பமாறால் நனவாவ தறிவேயென் றறிதி—எ-று.

தேகாதி பிரபஞ்சந் தனக்குத்தானே காணப்படாததினாலும், அங்ஙனங் காணப்படாத தன்னைத் தானே காணக்கூடாததினாலும், இன்ன தின்னதெனப் பகுத் துணரக் கூடாததினாலும், அதனை யொழித்து இவை யனைத்திற்கும் ஒத்த விட மறிவென் றனைவர்க்கும் அனுபவமாதலினாலும் அறிவே யிடமா யனுபவிப்பமென்றார். தனித் தனி யொத்தென்றது வியட்டி சமட்டிகளை. (கஉஉ)

அ-கை.

அறிவே நனவென்றற் குளதாங் குற்றம் இனையதென் றதனை மறுத்துத்தரங் கூறல்.

அறிவே நனவாயி னந்நினைவின் வேறன்
றறிதற் றொழிலா லயலேற்—பிறிதாகா
தொத்தவினை யானினைவிங் கோயா விசையாகுஞ்
சுற்றி விடல் போனனவாஞ் சொல்.

(எ-து.)அறிவே நனவெனத் திருவாய்மலர்ந்தருளினீர்; அங்ஙனமாயின் நினைவும் அறிவாதலால் அந்நினைவுக்கு இஃது அன்னியம் அன்றாகவேண்டும். கற்பனையாயும் வாசனையாயும் நின்று அறியும் அறிதற்றொழிலால் அன்னியமாகுமெனின் இருவகையாயினுஞ் செயலாதலாற் செயலில் ஒத்திருப்பதுபற்றி அன்னியம் அன்றாகவேண்டுமென்ற மாணக்கற்கு ஆசிரியர் நனவாவது பம்பரத்தைச் சுற்றிவிடுதல் போலவும், நினைவாவது அதனது ஓயா விசைபோலவும் இருத்தலின் நீ இப்போது சொல்லவேண்டியதைச் சொல்லுதி— எ-று.

அரசனுயினும் பிறப்பிறப்பிலும் அருந்தல் பொருந்தலிலும் வறியோனின் மிக்காது ஒத்திருத்தல் போறலின் ஒத்த வினையாலென்றார். சுத்திவிடல் விசையென்றமையாற் பம்பரம் வருவிக்கப்பட்டது. இதனால் நனவு நினைவின் இயற்கைநிலை யினையதெனக் கூறப்பட்டது.()

அ-கை.

நனவே தெரிவென்பதற்கு அடையாளங் கூறல்.

தெரிதன் மயமே செகத்தா மதுவும்
இருதிறத்த தாநிற்கு மீங்கே—தெரிதலைவிட்
டோய்ந்த வுறக்கத் துலகின்மை யேசான்றும்
ஆய்ந்தார்க்கு மாயார்க்கு மால்.

(எ-று.) நனவெனப்படுவது தெரிவே; அத்தெரிதல் மயமே சக சொருபமாம்; அத்தெரிதலுஞ் சாமானியம் விசேடணமென இங்கிரு தன்மைத்தா நிற்கும். இதன்கண் ஐயமும் உளதேல் இங்கே தெரிதற்றொழிலைவிட்டு ஒய்ந்த வுறக்கமாகிய கேவலத்தின்கண் சகத்துக்காணப்படாமையே போதுமான சாட்சியாம். இது கற்றுத் தெளிந்தோர்க்குந் தெளியாதோர்க்கு மாதலால் ஐயமறுதி—எ-று.

எனவே, தெரிதற்றொழிலுள்ளவிடத்துச் சகத்துண்டாயும் இல்லாவிடத்து இன்றாயும் இருப்பதே அனைவர்க்குஞ் சகசானுபவமாதலால்தெரிவே நனவென்பது பெற்றாம். சைதன்னியத்தினது ஸ்புரண வடிவே சமஷ்டி வியஷ்டி யென்பது கருத்து. (கஉச)

அ-கை.

நனவாகிய தெரிவை மாத்திரம் விடாதுற்றுச் சிந்தித்தவிடத்துண்டாம் அனுபவங் கூறல்.

தெரிதலையே யுற்றுன்னிற் றேர்வாய் முதலை
விரிதலைவிட் டெக்கணமும் வீயா—தொருதலையே
யானந்தங் கம்மித் ததுவாகி யேயெங்குந்
தானந்த மில்லாமற் றான்.

(எ-று.) அறிபடுபொருளாகிய சத்தமுதலிய விடயங்களாகப் பரிணமித்து விரியாமல் அறிதலாகிய நனவைமாத்திரம் இடைவிடாதுற்றுச் சிந்திக்க வல்லையாயின் ஒருமிக்க ஆனந்தவெள்ளம் பெருகி யெங்கும் அதுவாயிருக்க, அதனால் மூடப்பெற்றுத் தானிடையில் ஒன்றாற் கெடாது சதோதயமாய் விளங்க அப்போது அவ்வறிதற் சேட்டைக்கு முதலாயுள்ள நியாதோ அதனைக் கண்டு தெளிவை—எ-று.

ஒருகணத்திற்றானே சமுத்திரம் உலகமெங்குந் திடீரென்று மூடிக்கொண்டாற்போல மூடிக்கொள்ளுதலின் ஒருதலையே யானந்தங் கம்மித்து அதுவாகியே யெங்குமென்றார். இதில் அறிதலைமாத்திர முன்னுதலா லாய பயன் இனையதென்பது விளங்கக்கிடந்தது. (கஉரு)

அ-கை.

தெரிவே சகத்தாமெனத் தெளிவித்தல்.

தெரித லுளதேற் செகத்துளதா மாயிற்
றெரிதலுக் கன்னியமோ செப்பாய்—தெரிதலுக்கு
முன்னுளது பற்றியன்றோ முன்னாகத் தோற்றுமெனின்
முன்பின் னதுவா மொழி.

(எ-து.) தெரித லுண்டானால் சகத்து முண்டாயிருப்பது எவ்வுயிர்க்கும் பிரத்தியட்ச அனுபவமாதலிற் றெரிதலுக்குச் சகத்து அன்னியமெனப் படுமோ? நீயே சொல்லுதி. இங்ஙனமன்றிச் சகத்துந் தெரிதலுக்கு முன்னுண்டாயிருப்பது பற்றி யல்லவா நமக்கு எதிராகத் தோற்றுகின்ற தென்பை யாயின், சகத்துக்கு முன்னென்பதும் பின்னென்பதுந் தெரித லுண்டானவிடத் தாதலின் அவ்விருகாலமுந் தெரிதலேயாம். இப்போது யாது கூறுதி?—எ-று.

பொருள், இடம், காலம் என்பன மூன்றுந் தெரித லுண்டாயவிடத்தாதலின் முன்பின் னதுவா மென்றார். தெரிதல் காரணமெனவும், தெரியப்படுவன யாவுங் காரிய மெனவுந் தோன்றக் கிடப்பதை யுய்த்துணர்ந்து கொள்க. (கஉரு)

அ-கை.

நனவாவது தெரிதலெனப் பொதுப்படக் கூறியது விளங்க இன்னதின்ன தெனல்.

பொறிகரண மொத்துப் புரித னனவாம்
பொறியாவ தைந்துணர்தல் போதம்—அறியேம்
ஈதன்றி யோர்விடய மீங்கிதனுக் காதாரஞ்
சோதிமய மாகத் துனல்.

(எ-து.) புலனுங் கரணமும் வேறுபடாது ஒத்துணர்தலாகிய கருமம் இயற்றுதல் நனவெனப்படும். இவற்றுட்புலனாவது ஐந்து

கையாக வுணரும் உணர்தலாகிய ஞானமாம். இந்த நனவையன்றி யோர் விடயம் உளதாகக் கண்டிலம். இந்நனவு உதித் தொடுங்குதற்கு ஆதாரமானது இங்கே சுயஞ்சோதி மயமாக எங்கணும் நிறைந்திருப் பது எதுவோ அதுவேயாம்—எ-று.

பொறிகரண மொத்துப் புரிதலாவது வியாபித்தலும் அதததுவாக நின்று அங்கங்கே விளக்கலுமாதலே. இங்கே தன்னலேத் தனலென் றது விகாரம். உணர்தல் கருமமாயினும் அறிதற்சேட்டையாதலின் போதமெனவும், இவ்வறிதற்சேட்டைக்கு ஆதாரம் பாஞ்ச பூத பௌ திகமுதலிய சடப்பொரு ளன்றாதலின் ஈங்கிதனுக் காதாரஞ் சோதி மயமாகத் தனலெனவுங் கூறியவாறாயிற்று. இதனால் வியாபகவிளக் கமே நனவும் அந்நனவே சத்தமுதலிய விடயங்களு மாமெனப்பொரு ளமையப் பெற்றாம். (கஉஎ)

அ-கை.

முன்னர்ப் பொறிகரணமென்றது இனையதெனல்.

பொதுவா யுணரும் பொறிகரணந் தானும்
அததுவா நின்றுணரு மாங்கே—யததுவும்
தன்னிடத்திற் றானே தடிப்புகரி யாநினக்கே
நின்னினைவு சொப்பனத்தி னீ.

(எ-று.) நனவெனப்படும் பொறி கரண மென்ற இருவகையி னுட் பொறியாவது கடபடாதி விடயங்களைச் சாமானியமாக நின்று உணர்வது; கரணமாவது அக்கடபடாதி விடயங்களி லது அது ஆகா ரமாகநின்று அது அதனை விசேடித்து அங்கங்கே யுணர்வது. இவ்வா றுணரப்படும் அவ்வவ்விடயங்களும் ஆன்மாவாகிய தன்னிடத்திலே யே தானே பல பல விகார வடிவங்களாகத் தடிக்குந் தடிப்பாம். இத ற்குச் சாட்சி யுனக்கு நீயே யாகும். எங்ஙனமெனின் இவ்வனுபவம் நின் நினைவின்கண்ணுங் கனவின்கண்ணும் நீயே யனுதினமுங் காண் டலின்—எ-று.

சுரோத்திரவியாபகத்திற் சத்தமுஞ் சட்சுவியாபகத்தில் ரூபாரூபமும், தொக்குவியாபகத்திற் பரிசமும், சிங்குவை வியாபகத்தில் ரசமும், ஆக்கிராண வியாபகத்திற் கந்தமு மாகிய இவை சாமானியமாக வுணரப்படும் அவசரம் பொறியாதலாற் பொதுவா யுணரும் பொறியெனவும், இவை யசேதனமாதலில் தோற்றல் மறைதலாகிய புடைபெயர்ச்சியுஞ் சடமாதலிற் சுகதுக்கத்தையுணரும் உணர்ச்சியுமின்றி வியாபித்து நிற்கும். அப்பொறி வியாபகத்தில் அது அதுவாக நின்று எழுஞ் சித்தே அது அதுவாகநின்று விசேடித்துணரும் அவசரங் கரணமாதலிற் கரணந்தானு மதுதுவா நின் றுணரு மாங்கே யெனவும், இங்ஙனம் வியாபித்தலும் விளக்கலுமாகிய புடைபெயர்ச்சிக்கு ஆதாரம் ஆன்மாவாகிய தன்னையன்றி வேறோர் முதலின்மையின் அததுவுந் தன்னிடத்திற்றானே தடித்தலெனவும், இவற்றிற்கு அவ்வவ் வான்மாக்களுந் தத்தம் நினைவு கனவுகளிற் றமக்குத் தாமே சாட்சியாதல்போல உனக்கு நீயே உனது நினைவு கனவுகளுக்குச் சாட்சியாதலிற் கரியா நினக்கே நின்னினைவு சொப்பனத்தி னீயென வுங் கூறியவாறு காண்க. இதனாற் பொறிகரணங்களின் நிலையும் அவற்றின் அவசரமும் அவற்றிற்கு ஆதாரமும் அவற்றிற்குச் சாட்சியும் இனைய வென்பது பெற்றாம். (கஉ௪)

அ-கை.

உன்னுதலாகிய விசேடணமும் முயற்சிக்குத் தக்கவாறு ஆமெனல்.

சித்தின் முயற்சியினாற் சித்தாம் விசேடணமே
சத்தெதிராச் செய்யிற் சடமாகும்—இத்தை
யுணரில் விசேடணத்தி னுண்மைதனைக் காண்போம
உணரா விடத்தென்னை யுண்டு.

(எ-று.) சின்மயமாதற்குத் தக்க முயற்சியினால் சின்மயமாகின்ற விசேடணமே சடமயமாதற்குத் தக்க முயற்சியினாற் சடமயமாகும். இங்ஙனமாதலைச் சிரவணாதிகளால் ஐயந் திரிபறச் சிந்திக்குமிடத்து

அகக்கரணமாகிய விசேடணத்தி னுண்மைவடிவம் இனையதெனக் காண்போம். இவ்வாறு சிந்திக்காவிடத்து என்னபயன் உண்டு எ-று.

சத்தெதிராச் செய்யிலென்றது சத்துக்கு வெதிருத்தமாகச் செய்தலை. எனவே, சத்தல்லாததைை யெல்லாஞ் சத்தெனக் கருதிச்செயலென்பதாயிற்று. இவ்விருவகை முயற்சியினால் இவ்விருவகை மயமாகின்ற மனம் இனையதென அனுபவத்தாலன்றி யேனைய நிச்சயஞானத்தாற் கணிப்ப தரிதாதலினாலும், கணியாவிடத்து விடய மேலீட்டால் சுக துக்கத்தின்கண் மொத்துண்ணல் தப்பாததினாலும், இப்பலனையன்றி வேறுபல னில்லாததினாலும் உணராவிடத்து என்னையுண்டென்றார். இதனால் மனமென்பது அவாந்தர வடிவெனக் குறிப்பித்தவாறு காண்க. (கஉக)

அ-கை.

வியாபித்த லுன்னலாகிய பொறிகரணங்கட்கு உலகம் அன்னியம் அன்றாமென்பதையும் இம்முயற்சியே பந்தமுத்திக்கு ஏது என்பதையும் உணர்த்தல்.

வியாபித்த லுன்னல் விடிலுலகங் காணில்
வியாபித்த லுன்னற்கு வேறாம்—வியாபித்தல்
உன்னலாற் பண்டே யுடலாதி தோற்றுவதால்
இன்னவற்றைச் செய்யா விலை.

(எ-று.) பொறி கரணங்களாகிய வியாபித்தல் உன்னலைத் தவிர்ந்தவிடத்து உலகங் காணப்படுமாயின் வியாபித்த லுன்னலாகிய இவ்விருவகைச் சேட்டைக்கும் இவ்வுலகம் அன்னியமென்னப்படும். இங்ஙனம் இல்லாமையால் இனி யுய்வதற்கு வகை யேதெனின், இவ்விருவகைச் சேட்டையினாலேயே பிரகிருதிதொடங்கித் தேகாதி பிரபஞ்சங்கள்தோற்றிவருவதால் விடத்தைக்கொண்டு விடத்தைக்கெடுக்குமாறுபோன்று அம்முயற்சிகொண்டு அம்முயற்சி கெடுக்கின் நசிக்கும்—எ-று.

"மனத்தை யடக்க மனந்துணையாகும்" எனச் சான்றோர் வசன மிருப்பதனுல் இது குற்றமன்றென வுணர்க. வியாபித்தலும் உன்ன லுஞ் சகலத்தின்கண் ணுதலால் அப்போது சகத்துண்டாயும் இவ்விர ண்டும் இல்லாமை கேவலத்தின்கண் ணுதலால் அப்போதின்றாயும் இருப்பது எவ்வுயிர்க்கும் பிரத்தியட்சானுபவ திடமென்பதுதோன்ற வியாபித்த லுன்னல் விடிலுலகங் காணில் வியாபித்த லுன்னற்கு வேருமெனவும், கானநீர் கிளிஞ்சல் வெள்ளி கந்தர்ப்பநகர் பழுதை பாம்பு முதலிய கற்பனைக ளெவ்வுணர்தற் சேட்டையால் விளைந்தன வோ அவ்வுணர்தற் சேட்டையால் அகலுமாறுபோன்று இருத்தலினு னும், உணர்தல் ஒன்ருயினும் அறிந்துணர்தல் அறியாதுணர்தலென இருவகைத்தாய் விடுதிகன்மமெனவும் பந்தகன்மமெனவுஞ் சான்றோ ரால் வழங்கிவருதலினுனும், இவற்றுட் பந்தகன்மம் உணரப்படுவதை யுணர்வது, விடுதிகன்ம முணர்வானை யுணர்வது எனப் பொருள்படு மாதலினுனும், இதுபற்றி வியாபித்தல் உன்னலாற் பண்டே யுடலாதி தோற்றுவதால் இன்னவற்றைச் செய்தா லிலையெனவும் கூறியவாறு காண்க. இது பந்தமுத்திக் கேற்ற சாதனமென்ப துணர்ந்தக் கிடந் தது. காற்ருல் நின்று எரியுந்தீப மக்காற்ருல் அணையப்படுவது சர்வ த்திரசாதாரண வழக்கம் இருத்தலின் இது மாறன்று. (கசுo)

அ-கை.

ஆதலிற் பந்தமகலக் கற்கவேண்டியது இனையதெனல்.

நினைவாவ தெங்கு நிகரில்சிற் சோதி
யனையதேல் வேருக்கி லாமோ—அனையதாக்
கண்டு படிப்பதே கல்விமற் றெப்படிப்புந்
தெண்டப் படிப்பாத் தெளி.

(ஏ-து.) எங்கணும் நினைவெனப்படுவது தனக்குத்தானே நிகரா ய்ச் சுயமாய் விளங்குஞ் சிற்சோதியாம். அத்தகையதாக விளங்குமா

யின் அதனை பாஞ்சபூத பௌதிக முதலிய விகாரவடிவங்களாக்கிக் காணின் அவ் விகாரவடிவங்களாகுமோ? ஆகாதே. ஆதலின் அந்நினைவைச் சுயம்பிரகாச வடிவமாகக் கண்டு படிக்கும் படிப்பே படிப்பாம். அஃதொழிந்து படிக்கும் ஏனைய படிப்பெல்லாம் விவர்த்தமாகப் படிக்கும் படிப்பெனத் தெளிதி—எ-று.

யாது யாதாகக் கருதிற்றோ அது அதுவாய் அகத்தில் தடித்தது போற் காணப்படினும் அவை மீண்டுஞ்சிதாகாச வடிவமாதலின் வேறாக்கி லாமோவெனவும், உள்ளது சிதாகாசமாதலின் சமஸ்த கற்பனு வடிவங்களும் அதுவேயாமெனச் சந்தேகவிபரீதமறப் பலகாற் கண்டு கண்டு தெளியக் கற்பதே கல்வி யாதலின் அனையதாகக் கண்டு படிப்பதேகல்வியெனவும், வாச்சியார்த்தமுதலிய ஏனைய படிப்பெல்லாஞ் சகல கேவலம் அருப்படிப்பாதலின் மற்றெப்படிப்புந் தெண்டப் படிப்பாத் தெளி யெனவுங் கூறினார். இன்னும் அனையதாக்கண்டு படிப்பதே கல்வி யென்றதற்குப் பாராமற் பார்த்தல், கேளாமற் கேட்டல், செய்யாமற் செய்தல், விழியாது விழித்தல், உறங்காது உறங்கல், நினையாது நினைத்தல் முதலிய பொருள்கொள்ளினும் அமையும். நினைவின் உண்மை வடிவங் கண்டவிடத்து உண்டாகும் அற்புதம் இனையவாதலின் அதனையே படிக்கவேண்டுமென்பது கருத்து. (கஙக)

அ-கை.

அக்கல்வியினாலாம் பயன் இனையதெனல்.

இம்முயற்சி மாறா தியற்றிற் சிதாநந்தங்
கம்மித் தறிவுதயங் காணுமே—விம்மி
அறுவானார் பாதத் தறிவிடய முட்கள்
எதுகாலுங் தைக்கா வினி.

(எ-று.) தஸ்மரணையாக வியாபித்தல் உன்னலாகிய இம்முயற்சியை இடைவிடாது செய்துவரில் விடயாநந்தம் இன்னதிசையெனக்

காணுதொழியச் சிதாநந்தம் மேலிட்டு அதுவே யெங்கும் கம்மிக் கொள்ளும்படி ஞானசூரியன் உதயமாகும்; உதயமான பின்னர் அது நாளுக்குநாள் எங்கெங்குந் தானாக வியாபிக்கும்; வியாபித்த பின்னர் அவ்வறிவே வடிவாயினு ரடியி லறியப்படும் விடயமாகிய முட்கள் இனி யெக்காலத்துந் தைக்கா வென வறிதி—எ-று.

ஆநந்தத்தை யன்றி யறிவு வேறின்மையானும், சுட்டற்றுநின்ற விடமே சுகவாரியாதலானும் அச்சுகோததி வடிவாயுள்ள ஞானோதய மே தடையற்ற ஆநந்தமென்பது தோன்றச் சிதாநந்தங் கம்மித்தறி வுதயங் காணுமே யெனவும், அந்தஞான வியாபகவிளக்கமே யகம்புற மாநின்று சர்வமுந் தானாய் விடயத் தாக்கற்று நிற்றலின் விம்மி அது வானூர்பாதத்தறிவிடைய முட்களெதுகாலுந் தைக்காவினியெனவுங் கூறினார். இதுவிடயத்தாக்கற்று நிற்கும்பயனைக் கூறியவாறுகாண்க.

அ-கை.

அப்பயனால் நவநவமாகத் தன்பா லுதிக்கும் அநுபவ விலாசங் கூறுவான் வேண்டி, இக்கவியில் இன்னுஞ் சகத்துக்கு ஆதாரமும், முதற்கருவி துணைக்கருவியும் அதனைவிளக்கும்விளக்கமுமாகிய இவை நன்கு புலப்படுமாறுணர்த்தல்.

எங்ஙனே யாதோ வெதினாலோ வெவ்வொளியால்
அங்ஙனங்ஙன் றோற்று மகிலாண்டம்—அங்ஙனங்ஙன்
காண்பானுட் டத்தாலே காணுந் திரிபின்றிக்
காண்பானை யன்றியுண்டோ காண்.

(எ-து.) அகத்தினும் புறத்தினும் அங்கங்கே பலவிசித்திரமாகத் தோற்றுஞ்சகல அண்டாண்ட சராசரங்கட்கு ஆதாரம் எங்கவிடமோ, அவையாது பொருளோ, அவையுருக்கோடல் எதனாலோ, அவையாவும் அங்கங்கே யின்னதின்னதென விளங்குவது எவ்விளக்கத்தினாலோ, வெனத்தோன்றும் ஐயமறத் தெளியவேண்டில் அங்கங்கேயிற்றைக்

காணுங் காண்பானை நாடும் நாட்டத்தாலே இவையாவும் விபரீதமற விளங்கும். விளங்கியவிடத்துக் காண்பானை யன்றி யவை வேறாகக் காணுமோ, காணுவாதலால் நின்னனுபவத்திற் காணுதி—எ-று.

இருக்குவை நாடும் நாட்டத்தா லன்றி யேனைய நாட்டத்தால் உண்மை விளங்கா தென்பது கருத்து. (கஙரு)

அ-கை.

அணுமுதல் மகத்தீறாகக் காணப்படுவன வனைத்தும் எங்ஙனம் வெளியையன்றி வேறாகவில்லையோ, அங்ஙனம் அறிவையன்றி வெளியும் வேறாகவில்லை யெனல்.

வெளிமயமா முட்புறம்பை வேறாகக் காணில்
வெளிமயக்கே யன்றியிலை வேறே—வெளிமயமும்
இல்லை யறிவன்றி யீங்கிரண்டாக் காட்டவலார்
இல்லையா றுமென் றிரு.

(எ-நு.) வெளியையே யகத்தினும் புறத்தினும் நீக்கமறப்பெற்றுள்ள அனைத்தையு மவ்வெளிக் கன்னியமாகக் காணிலவை வெளியை யன்றித் தாமொரு முதலாகாமையால் உருவெளித் தோற்றம் போல்வதேயன்றி யதார்த்தமாகாவாம் அதுபோல அந்தவெளிமயமும் அறிவையன்றி வேறொரு முதலாகாமையானும், அதனைமுதலாக்கிய யறிவு இது,வெளி இதுவென இரண்டாகக் காட்டிக் கூறவல்லா ரில்லாமையானும் வேறாக வில்லவேயில்லை. இஃதன்றியும் நாமோ உணர்வு வடிவாகையால் நம்மையன்றி யறிவு வேறொருமுதலாகாது. முதலாகாமையான் நம்மை யறிவே வடிவாகக்கண்டு அந்நிலையில் நிற்றி—எ-று.

இதனால் உருவா யருவா யுருவருவாய் நின்றும் நில்லாதது அறிவெனவும், அவ்வறிவே வடிவாய் அவ்வவ் வவத்தைக்கண் நின்று சுக

துக்கங்களைக்கண்டனுபவிப்பது நாமாகையால் நாமும் அறிவெனவுங் கண்டிருக்கவேண்டுமென்பது கருத்து. (கருச)

அ-கை.

அறிவாகிய தன்னை ஆண் பெண் ணாதியாகக் கற்பித்துக் கூறினும் அங்ஙனம் ஆகாதென்பதைத் திருட்டாந்த பூர்வமாகநிரூபித்தல்.

மண்ணுருவை நானீ மனிதாதி தோற்றமென்றும்
பெண்ணா ணலியென்றும் பேதையர்போல்—எண்ணிற்
பிறிதாகா தென்னப் பிரியா வறிவும்
பிறிதாகா தொன்றாப் பிடி.

(எ-து.) மண்வடிவமாகிய சடத்தை நானெனவும், நீயெனவும், மனிதர் மிருக முதலிய தோற்றமெனவும், ஆணெனவும், பெண்ணெனவும், பேடியெனவும் பேதைப்பருவக் கன்னியர்போ லெண்ணினால் அது இக்கற்பனா வடிவமாகுமா? ஆகாவாறுபோன்று பிரிக்கப்பிரிபடாது எங்கணும் ஓர்தன்மைத்தா நிறைந்துள்ள அறிவுந் தன்னை ஆண் பெண்ணாதியாகப் பலவேறு வகைப்படக் கற்பித்துக் கூறினும் அக்கற்பனைக் கிணங்க வேறுபடா தாகலின் அதனையொன்றாகப் பற்றுதி —எ-று.

வீதியில் மண்ணைப் பலவகையாகக் கோலி அதனை யறைவீடு பெருவீடு சிறுவீடெனவும், மண்ணாதியா லியற்றிய பிரதிமைகளை நாயகன் நாயகி யெனவும் மெய்யாகப் பாவித்து விளையாடுபவர் பேதையராதலிற் பேதையர்போ லென்றார். இக்கற்பனைகள் எலா அறிவு வருணாசிரம கற்பனைகட்கு எங்ஙனம் உடன்படுமென்பது அருத்தாபத்தி. கற்பிப்பார்பா லன்றிக் கற்பனைகள் மண்ணுருவுக் கில்லாவாறுபோல அறிவுக்கும் இல்லை யென்பது கருத்து. (கருரு)

அ-கை.

காண்பானாகிய திருக்குவைக் காண்ப தரிதெனல்.

உலகத்தோ டொக்க வுடலு மறையில்
உலகப் பொருளே யுடலம்—அலதில்லை
இவ்விரண்டுங் காணுநா மெங்கே யிருந்தறிவோம்
அவ்விடங்காண் பாரிங் கரிது.

(எ-து.) உலகத்தோடுடலும் ஒருங்கே காணப்பட்டு மறைத லின் அவ்வுடலும் உலகப்பொருளேயன்றி நாமென்றற்கு எது ஒன்று மில்லை. ஆதலின் உடலும் உலகுமாகிய இவ்விரண்டையும் இவ்வாறுக் காண்கின்ற நாம் எங்கே யிருந்தறிகின்றோமோ அவ்விடத்தை யுள்ள படி காண்பவர் இங்கு அருமையாம்—எ-று.

எனவே, உலகமும் உடலும் நமதிருக்கைக்கு இடமன்றென்ப தாயிற்று.

வினா: உடலானது நமதிருக்கைக் கிடமன்றாயின் அதனது சுக துக்க போகம் யாருக்கு ?

விடை: சிதாபாசனுக்கு.

வினா: சிதாபாசன் நாமன்றோ?

விடை: சோபாதிகமாநின்று என்னையான் அறியேன் என்புழிச் சிதாபாசத்துவமும், நிருபாதிகமாநின்று அறியாமையை யறிந்துரைப் புழிச் சிதாபாச நீக்கத்துவமுமா யிருப்பது நாமாதலினானும், இவ்வி ண்டினுட் சிதாபாசத்துவங் கற்பிதவடிவாகவும் சிதாபாசநீக்கத்துவம் யதார்த்த வடிவாகவும் விளங்குதலினானும் அன்றென்க.

வினா: இவ்வேதுக்களால் ஆன்மா ஒன்றா யிருக்கப் பலவாகக் காண்பது என்னை ?

விடை: உபாதி நாட்டத்தால்.

வினா: ஆயின் இடங்கணித்தற்கு அரிதோ? விடை: உருவம் அரு வம் ரூபாரூப முதலிய திரிசியப்பொருளனைத்துங் காண்பானன்றாத லால் அக்காண்பானைக் கண்டாலன்றோ அவனுக் கிடங்கணிக்கலாம் அங்ஙனங் காணக்கூடாதென வறிக. (கருரு)

அ-கை.

அரிதென்றதை வைப்புறுத்தல்.

தான்மாத் திரப்பொருளே தானுவ தன்னியந்தான்
தான்கலந்த தெப்பொருளுந் தான்கலவா—வான்கால்
முதலிலையா லெங்ஙனெனின் மூதறிவைத் தள்ளி
யெதுவுளதென் றெங்கே யிசை.

(எ-று.) காண்பானாகிய தானெனப்படுவது யாதோர் கலப்பின்றி யென்றும் ஒருபடித்தாய்த் தான்மாத்திரமாக நின் றிலங்குவது யாதோ அதுவாம். அன்னியமாவது காண்பானாகிய சைதன்னியங் கலப்புறாத வெளிகாற்று முதலிய பூதாதி யனைத்தும் இன்றாதலால் அச்சைதன்னிய கலப்பகலாத எவ்வகைப்படு பொருளுமாம். இங்ஙன மாயின் எங்ஙனமாமெனின் என்று முளதாய பிரக்ஞா மயத்தைத் தள்ளி யாது எங் குளதெனத் தெரியக் கூறுதி—எ-று.

சடசித்தென்னும் பேதமின்றிச் சுயஞ்சத்தா யையந் திரிபறத் தெளிந்தவிடத்துத் திகழ்வது தானேதானாதலிற் றான்மாத்திரப் பொருளே தானுவதெனவும், அங்ஙனந் தெளியாதவிடத்துத் தனது விகற்ப வடிவாகிய சடசித்துக்கள் தனக்கு அன்னியமாகக் காண்டலின் அன்னியந்தான் றான்கலந்த தெப்பொருளுந் தான்கலவா வான்கால் முதலிலையா லெனவும், அம்சாம்சிகம்போல வேறுபடுத் தறிதற்கரிய தறிவறியாமையாதலின் மூதறிவைத் தள்ளி யெதுவுளதென் றெங்கே யெனவும், அறிந்து சொல்லற் கரிதாதலி னிசையெனவுங் கூறினர். கூறவே, தான்மாத்திர மெனின் முத்தியும், தானுந் தனக்கு அன்னியமுமெனிற் பந்தமுமெனவரும். வரின் இவ்விரு கோளும் ஞானஞ் ஞானக் கற்பிதமாதலின் இவற்றை யகன்றிருப்ப தரிதென்பது பெற்றாம்.

(கஙஎ)

அ-கை.

முன்னர்த் தான்கலந்த தெப்பொருளு மென்றதிற் சிறந்தது அகம்பாவ மாதலால் அவ்வகம்பாவ விளைவுக்கு ஆதாரமும் நிமித்தகாரணமும் அவை போக்கற்கு உபாயமும் எங்ஙனமென்றற்கு உத்தரங் கூறல்.

அறிவா மகத்தி லகம்பாவ மாசவ்
வறிவால் விளைந்த வனர்த்தம்—அறிவாகக்
காணாது கற்றல் கரிமுகத்திற் போக்குவான்
நாணாது கற்பதுபோ லாடு.

(எ-து.) தானல்லாததைத் தானெனவும், தனதல்லாததைத் தனதெனவுந் தொன்றுதொட்டு வரும் அகம்பாவக் குற்றம் நிகரற்ற சைதன்னிய வியாபகத்தில் அந்தச்சைதன்னியங் காரணமாக விளைந்த விபரீதமாம். அவ்விபரீதத்தை அறிவுவடிவாகக் காணில் அங்ஙனே யகலும். அவ்வாறு காண்டற்கு அஞ்சி முயலாது படிப்பால் அஃதகலுமென் றுறுதிகொண்டு, பலதலையாய கலைகளைக் கற்றுக் காலம்போக்கல் எங்ஙனம் இருக்கின்றதெனின் தன்முகத்திற் பூசிக்கொண்ட கரியைப் போக்கக் கருதினோன் நீராலென வகையறியாது அதனைப்போக்கற்குப் பலகாலும் பலநூலும் நாணமின்றிக் கற்கப்புகுந் தாற்போலு மிருக்கின்றதென நீ யுணர்தி—எ-று.

அறிவாமகத்தி லகம்பாவமென்றது வேறிடத்த தன்றென மறுத்தற்கும், மாசென்றது இதுபோலும் பந்தவிளைவுக்கேற்ற விழி கருவியின்றென்றற்கும், அறிவால் விளைந்த வென்றது தனுகரண முதலிய வற்று லென்பாரை விலக்கற்கும், அனர்த்தமென்றது பொருளல்லவற்றைப் பொருளாகக் கோடல் தவிர்தற்குமா மென்க. அறிவாகக் காணாது கற்றலெனவே, ஞானப்பகடிகள் சேட்டையாயிற்று. கரிமுகத்திற் போக்குவார் நாணாது கற்பதுபோலென்ற வுவமை யவுரை யிழிவுபடுத்த வந்தது. (கருஅ)

அ-கை.

சமஸ்தமுஞ் சின்மாத்திரத்தால் ஒன்றென்றால் மனிதாதி தோற்றக் காரணத்தாற் சித்துப் பலவாகக் காண்டற்கு ஏது என்னையென்றற் குத்தரங் கூறல்.

மண்வேடத் தன்றி மனிதாதி சித்துருவால்
நண்ணுமோ பேதந்தா னுடுங்கால்— மண்ணுருவம்
எல்லாமண் ணென்றேபோ லெங்கெந்தச் சித்துருவும்
எல்லாமொன் றென்றே யிரு.

(எ-து.) காட்சிக்குப் புலப்படும் மனிதர் முதலிய அறுவகைச் சராசர வுயிர்த் தோற்றபேதங்கள் பிருதுவியின் விகாரவடிவாயுள்ள தேகவேடபேதத்தாற் பலவாகத் தோற்றுவதேயன்றிச் சைதன்னிய விளக்கநாட்டத்தால் உற்றுணருங்கால் அங்ஙனந் தோற்றுமோ? அஃதெவ்வாறெனின் அத்தேக வடிவனைத்தும் மண்ணாதலால் மண்ணைக் காணுமிடத்து அவ்விகார வேடபேத மொழிந்து மண்மாத்திரமாக விளங்குமாறுபோலச் சைதன்னியப் பிரத்தியட்சங் காரணமாகக் காணுமிடத்து எங்கெந்தச் சித்துபேதமாயுள்ள வுயிர்களுஞ் சைதன்னியமாதலால் அவ்விகார விகற்ப பேதமொழிந்து சைதன்னியமாத்திரமாக விளங்குமாதலால் அனைத்தும் ஏக சைதன்னியமென்றே யதுவாக வனுதினமும் விளங்கிக்கொண்டிரு—எ-று.

எவ்வுயிர்த் தூலவுடலுந் தத்தம் பிராரத்துவமுடிவின்கண் மண்ணாகத் திரியக் காண்டலான் மண்ணுருவ மெல்லாம் மண்ணென்றே யெனவும், எவ்வுயிருந் தனித்தனிச் சிரவணாதிகள் செய்து செய்தவாறு அந்நிலைக்கண் நிற்கிற் பிரகிருதி முடிவின்கண் அவை யனைத்துஞ் சின்மாத்திரமாக விளங்கலால் எங்கெந்த சித்துருவு மெல்லாமொன்றென்றே யெனவுங் கூறினார். (கஙஞ)

அ-கை.

இங்ஙனம் அருளிச்செய்த இந்நிலை துவிதமுதலிய மூன்றனுள் யாதின்பாலதென்றற் குத்தரங் கூறல்.

துவிதமுதன் மூன்றதனுட் சொல்லுமிது யாதத்
துவிதமெனி னிங்ஙனெனச் சொல்ல—தவிர்வஃதுவாம்
இப்படியா நின்றதனை யெப்படியாக் காண்பதெனின்
அப்படியே யப்படியே யாம்.

(எ-து.) துவிதம் அத்துவிதம் விசிட்டாத்துவிதமெனக்கிடந்த மூன்றனுள் இதுகாறுந் தேவரீர் சொல்லிவந்த தியாது? அத்துவிதமென்றிடிலோ திரிகரணங்களாலும் இங்ஙனமாய நிலையதெனச் சொல்லப்படா தொளிரும் பரவஸ்துவாம். இங்ஙனமாக நின்றுளிர் வதை யெங்ஙனங் காண்பதெனின் வேடங்கடோறும் வேடதாரியைக் காணுமாறுபோன்று அந்தந்நிலைக்கண்ணும் அப்படியப்படியாக அச்சைதன்னிய வுண்மைவடிவைக் காணும் உபாயமாம்.—எ-று.

கிஞ்சிக்ஞ சர்வக்ஞ சிதாபாச சீவேசுரரைத் துவிதமெனவும், சர்வக்ஞ பரிபூரண வியாபகத்திற் கிஞ்சிக்ஞ ஏகதேச வியாப்பிய சிதாபாச சீவர்கள் அடங்கியிருக்குமென்பதை விசிட்டாத் துவிதமெனவும், இவ்விரண்டுக்கும் அதிட்டானமாயுள்ள சைதன்னிய ஐக்கியத்தை அத்துவிதமெனவும் பொருள் கோடற்பெற்றதென்பது தோன்றத் துவிதமுதன் மூன்றெனவும், இந்நிலையதென அறியப்படாமையால் இப்படியா நின்றதனை யெப்படியாக் காண்பதெனவும், அஃதெல்லாமாயிருப்பதனுல் அதனை யப்படியப்படிக் காணவேண்டுமாகலின் அப்படியே யப்படியே யாமெனவுங் கூறினர்.

வின: எல்லாமாய் அச்சைதன்னியத்தைக் காண்பது எவ்வாறு?

விடை: கடபட விகற்பபேதமாநின்ற மண்ணையும் நூலையும் நாடுநாட்டத்தில் அக்கடபட விகற்பமிருந்தும் மண்ணும் நூலுமாக விளங்குமாறு போன்று, சமஸ்த விகற்பபேதமா நின்ற சைதன்னிய

த்தை விளக்கிக்கொண்டு அதுவாக நாடுநோட்டத்தில் அச்சமஸ்த விகற்ப பேத மிருந்துஞ் சின்மாத்திரமாக விளங்குமெனவறிக.

வினு: இங்ஙனம் நாடற்குச் சுருதிப் பிரமாணம் யாது?

விடை: "எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்ப தறிவு" என்னும் நாயனார் வாக்காம். (கச௦)

அ-கை.

யாவர்க்குஞ் சைதன்னியம் விளங்குவதும், அது நானெனப் பழகுவதும், அதனையே யெல்லாமாய்க் காண்பதும் அரிதாதலின் இவ்வனுபவங்கள் ஞானநூலையே வாசித்துக்கொண்டிருக்கின் றாமே வலிய வந்தமையாதோ வென்றற் குத்தரங் கூறல்.

அந்தந் தவத்தைகளி லந்தந்த நாமாரென்
றந்தந்த வாறுநின் றுயாமல்—அந்தோ
படித்தாற் குருடறுமோ பார்ப்பார்கண் மெச்சிற்
றொடக்கறுமோ சென்மத் தொகை.

(எ-து.) அவஸ்தாத் திரயங்கடோறும் அந்தந்த அவஸ்தைகளில் அந்தந்த உபாதித்திரய வடிவமாகப் பிரதிபலித்து அவ்வவ் வாகார வடிவே யறியாமையால் நாமெனத் திடங்கொண்டு சனன மரணப் பிரவாகத்தி லின்ப துன்பப் பேரலைகளா லிடைவிடாது மொத்துண்டு தவித்தலின் இத்தவிப்பு தவிர்தற்கு அந்தந்த உபாதி வடிவம் அசத்து சடந் துக்கமாதலின் அவை நாமாகோமே யாயின் அந்தந்த உபாதி வடிவங்களைக் கர்த்ருத்துவமாகக் கண்டு அங்கங்கே இச்சா ஞானக் கிரியைகளைச் செய்கின்ற நாமாரென்று அந்தந்த ஆகாரவடிவாக நின்று சிரவணுதிகளாற் றம்மை யின்னரெனக் காட்ட வல்லாரைக்கொண்டு ஆராய்ந்து தெளியாது, ஐயோ! ஞானநூல்களை மாத்திரந் தாமே வாசித்துக்கொண்டிருக்கிற் றம்மை யின்னரெனக் காணுக் குருட்டுக்கண் அகலுமோ? தம்மைப் பார்ப்பவர்கள் ஞானவானென

மெச்சுவதாற் சனன மரணத் தொகையின் சம்பந்தத் தொடர்பு அவரைவிட் டகலுமோ—எ-று.

எனவே, அவசியம் விசாரித்துத் தெளிய வேண்டுமென்பதாயிற்று.

வினா: அந்தந்தவாறு நின்று ஆயுமாறு எங்ஙனம்?

விடை: சாக்கிராவஸ்தையிற் றோற்றுந் தூலவடிவின் தோல்மேல் நாடும் நாட்டத்தால் அது சுத்தமாகவும் விநோதமாகவும் பிரியமாகவுந் தோற்றும். அத்தோற்றத்தால் அவ்வடிவை அறியாமையால் நாமெனத் திடங்கொண்டு அதுவாவோம். அத்தோல் மூடி வடிவினுள் நின்று புறப்படக் காண்பது மலம், மூத்திரம், புழுப்பூச்சு, சீ, உதிரம், கோழை, தசை, நரம்பு, என்பாதலினானும், இவற்றையன்றித் தனக்கென வேறு சொரூப மில்லாதிருப்பதினானும், இவற்றையே நாடும் நாட்டத்தால் அஃது அசுத்தமாயும் அருவருப்பாயும் வெறுப்பாயுந் தோற்றும். அத்தோற்றத்தாற் றூலவடிவெனத் தோன்றாது. அங்ஙனந்தோற்றாததால் நாமெனத் திடங்கோடற்கு ஓர்வடிவும் இன்றாய் அவாந்தரமாக நிற்பம். அங்ஙன நிற்குஞ் சாதனையில் மாறாது இடையறாது பலகாற் பழகின் அஃதுங் கழல ஞானசானைத் தேடுந் தேட்டமுண்டாம்; அஃதுண்டாகவே, தேட்டந் திரண்ட திருமேனி யாதலின் அக்குருக்கோலம் எதிருறும்; எதிருறவே, கேட்டல், சிந்தித்தல், தெளித லுண்டாம்; அஃதுண்டாகவே, அஞ்ஞானஞ் சந்தேகம் விபரீத மொழிந்து யதார்த்தவடிவாக விளங்குவமென வறிக.

வினா: ஏனைய இரண்டவத்தைக்கண்ணும் இகபரங்களைப் பகுத்துணரத்தக்க கருவி யின்றாகலிற் சூக்கும காரண வுபாதியாகாரமா நின்று நம்மை நா மாராயுமாறு எங்ஙனம்?

விடை: அஞ்ஞான தசையில் நனவிற் றூலவுபாதியை யாமெனக் கண்டபடி யேனை யிரண்டவத்தையாகிய மறதியின்கண்ணும் அவற்றிற்குரிய சூக்கும காரண வுபாதிகள் நாமெனத் தோன்றுமாறு

போன்று ஞானதசையில் நனவின்கண் தனது யதார்த்த வடிவைக் கண்டு அது யாமெனப் பழகும் அனுசந்தானத்தால் ஏனைய அவஸ் தைக் கண்ணும் அவ்வுண்மை வடிவே யாமெனத் தானே விளங்கு மென வறிக. (கசுக)

அ-ளை கூ.

ஆயின் விசாரித்துத் தெளியுமாறு எங்ஙனமெனின்.

நானீ யவனுதி நாடுங்காற் சிற்சோதி
தானே யெவையுமெனச் சாற்றவோ—நீநாடாய்
சித்தைக் களைவதுண்டோ சித்தின் விகற்பமதாற்
சித்தையன்றி யெத்தையெனச் செப்பு.

(எ-து.) உண்மை யாதென விசாரித்துத் தெளியுங்கால் நான், நீ, அவன், அவள், அதுவாகத் தோற்றுவன யாவுஞ் சிற்பிரகாசமாக வே முடியும்; அங்ஙனமிருக்க அச்சிற்பிரகாசமே சமஸ்த சடசித்துக்க ளாகப் பரிணமித்ததெனச் சொல்ல வேண்டுமோ? நீ யிதனைச் சிந்தி த்துணராய். சித்து சடம் மிசிரிம்பித்திருக்க இவற்றுள் எதைக் களைவ தெனிற், பரிபூரண மாதலிற் சித்தை நியதிகளையக் கண்டு கேட்ட துண்டோ? சித்தினது விகற்பத்தைக் களையவேண்டும். சித்தையன்றி விகற்பம் வேறின்றாதலால் சித்தைக் களைவதன்றிச் சித்தைவிட வே றெத்தையெனச் சிந்தித்துச் சொல்லுதி—எ-று.

அறிவு தன்னால் விளைந்த விபரீதக் கருவிகள் முப்பத்தாறினை யும் நியதிகளைவதன்றித் தன்னைத்தானே எங்ஙனம் நியதிகளையுமென் பார் சித்தைக் களைவதுண்டோ வெனவும், சித்தின் விகற்பத்தையெ னிற் சித்தையன்றித் தமக்கென வோர்வடிவின்றாதலிற் சித்தையே யன்றி யெத்தை யெனவுங் கூறினார்.

வினா: முன்னர்ச் சித்தைக் களைவதுண்டோவெனவும், பின்னர் ச்சித்தையே களைவதெனவும் பிறழ்ந்து கூறியதென்னை?

விடை: அறியப்படுவன அறிவுக்கு வெதிருத்தமாகத் தோற்றலினானும், பின்னர் அவையனைத்தும் அறிவாகவே விளங்குதலினானுமென்க.

(கசஉ)

அ-கை.

முன்னர்க்கூறிய நிலைவருமாறு எங்ஙனமென்றற்குத்தரங் கூறல்.

விசுவாதி மூன்றும் விரிகாட்சி மூன்றும்
நிசமன்று மாறுவதா னீக்கி—நிசமான
சித்துசடங் காணவரிற் செப்புநிலை தானமையும்
இத்துறையை யன்றியெங்கு மில்.

(எ-து.) விசுவன் தைசதன் பிராக்ஞனென்னப்பட்ட சித்துவிகற்ப மூன்றும் பலவாறாக விரிந்துள்ள தூலஞ் சாயை பாழென்னப்பட்ட சடவிகற்ப மூன்றும் நிலையின்றி மாறி வருதலான் இவ்விருவிகற்பமும் நிலையல்லனவாம். இங்ஙனம் நிலையல்லனவற்றை நிலையுள்ளனவாகக் கருதும் விகற்ப சிந்தையை யொழித்திவற்றிற்குக் காரணமாயும் யதார்த்தமாயு முள்ள சித்துசட மித்தகையவென வுள்ளவாறு கண்டுணரத்தக்க அனுபவம் வருமாயின், முன்கவியிற்கூறிய சுவானுபவ நிலைதானே வந்தமையும். இந்நிலை வந்தமைதற்கு மார்க்கம் இந்நெறியாலன்றி வேறு எந்நெறியும் எங்கணுங் கண்டிலம்—எ-று.

நெறியை நெறியாலென்றது வேற்றுமை மயக்கம். அனுமகத்தாகத்தோற்றும் பஞ்சபூதவிகற்பங்களைப் பஞ்சபூதமெனல் தோற்றல் மாத்திரமே யன்றி அவை பொருளல்லனவாம், ஆகவே, அங்ஙனந் தோற்றற்குக் காரணமாயுள்ள பஞ்சபூதப்பொருள் வேறிருக்கவேண்டும். அவற்றைச் சுருதி யுத்தி யனுபவத்தால் விசாரித்துத் தெளியுமாறுபோன்று மூன்றவஸ்தைக்கண் தோற்றுஞ் சடவிகற்பக் காட்சிகளையும் அவற்றை அங்கங்கே விகற்ப வுபாதிபேதவடிவாநின்றறியுஞ் சித்துவிகற்பங்களையுஞ் சித்துசடமெனிற் றோற்றல்மாத்திரமேயன்றி அவை பொருளல்லனவாம். அங்ஙனந் தோற்றற்குக் காரணமாயுள்ள

சித்து சடம் வேறிருக்கவேண்டும். அவற்றைச் சுருதியாதிகளால் ஐயந் திரிபற விசாரித்துத் தெளியவேண்டு மென்பது தோன்ற இங்ஙனங் கூறினரென்க. (கசுரு)

அ-கை.

இங்ஙனம் விசாரித்தார்க்கும் விசாரியாதார்க்கும் உறும் பயன் யாதென்றற் குத்தரங் கூறல்.

உடலை யுணர்வானு வுற்றுணராக் கொண்டா
ருடனாசத் தெங்கே யுறுதி—யுடலிருக்குங்
காலத் துணர்வானைக் கண்டிருக்கி லேனிழப்பர்
சாலப் படித்தென்ன தான்.

(எ-து.) மலபாண்ட வுடலை யுணர்வு வடிவாகிய ஆன்மாவென ஆராய்ந் தறியாது அபிமானித்துக் கர்த்ருத்துவமாகக் கொண்டாரது திடஞான மவ்வுடல் நசிக்குங்காலத்து எங்குளது? ஆதலின் அவ்வுடல் தம்மைவிட்டு அகலாதிருக்குங்காலத்தே ஆன்மாவாகிய தன்னைக் காணத்தக்கவாறு அனுதினமுந் தம்முட் கண்டுகொண்டிருக்கப் பெறுவாராயின் உடலைப்போலப் பிராரத்த முடிவில் தம்மை யெங்ஙனங் கையிழப்பர்? இங்ஙனந் தன்னைப் படிக்கும் படிப்பைவிட்டு ஏட்டுப் படிப்பையே மிகக் கற்பதாலாய பயன் என்னை—எ-று.

தானல்லாததைத் தானென் றபிமானித்துத் திடங்கொள்ளினுந் தன்னைவிட்டு அகலுங் காலம் வரும். வராதெனிற் சச்சிதானந்தமாக வேண்டும். ஆகாதெனின் அசத்து சடந் துக்கமாகவேண்டும். அபேதமெனிற் றத்துவ ஆராய்ச்சிக்கண் வேறுபடாம லிருக்கவேண்டும். வேறுபடுவது உண்மை விளங்கற்கு எனின் அவ்வுண்மைக்கு இது வெதிருத்தமாகவேண்டும். ஆயினும் பொருட்பேத மென்னை யெனின் பொருளொன்றாயினும் ஞானகதப் பிரத்தியட்சம் விடயகதப் பிரத்தியட்ச மென்பன வொன்றாகவேண்டும். ஆகாதெனின் அங்ஙனங் காணுங் காட்சியும் வேறுபடும். வேறுபடவே, கண்பானும் வேறுப

டும். வேறுபடவே தனுவும் ஞானதனு அஞ்ஞானதனுவென்று இரு வகைப்படும். படவே, ஒழிதற்பால தஞ்ஞான தனுவெனவும் ஏற்றற் பாலது ஞானதனு வெனவுமாம். ஆகவே, அஞ்ஞானதனு எத்தனை கற்பகால மிருக்கினுந் தனக் கன்னியமாம். ஆதலாற் றன்னைவிட்டு எப்போதாயினும் அகன்றே விடும். இது துணிபாதல்பற்றி யிது வரா முன்னரே தன்னைக்கண்டு தாரூகிவிடிற் சதோதயமாக விளங்குதற்கு ஆனி யெப்போது மின்றென்பது எமது சித்தாந்தமாதலால் இங்ஙனங் கூறியதென்க.

(கசச)

அ-னக.

தன்னை யின்னுனெனக் காணத் தான் சதோதயமாக விளங்கு மென் றிருக்கத் தற்போதங் கெடவேண்டுமென்றது என்னையென்று அஃதுடையாரை நோக்கி யிகழ்ந்து கூறல்.

நானலா நான்மாறு நானேநான் மாறுவதோ
தானறியு மூன்றவத்தைத் தங்குங்கால்—தானிழக்கச்
சாதிப்பாய் சித்தாந்தி தானுவ தேதறியாய்
யாதுக்கு வீடிங் கிசை.

(எ-து.) எவ்வுயிருந் தன்னால் அறியப்பெற்று அனுதினமும் இடைவிடாது மாறுவதாயுள்ள மூன்றவத்தைக் கண்ணும் அங்கங்கே தான் தங்குமிடத்துத் தனித்தனி தன்னறியாமையால் நான் நானென வழங்கப்பெற்ற உபாதித்திரயங்கள் அவத்தைகடோறும் மாறிமாறிக் காணப்படுவனவோ ? அவற்றை நானென்னும் நானே நானாக விளங் குஞ் சைதன்னியம் அங்ஙனம் அங்ஙனமாக மாறிக் காணப்படுகின் றதோ ? இதனை யறியாது தற்போத விழப்பு வரவேண்டுமென மூட வாதத்தாற் றெளிந்தாற்போற் சாதிக்கின்றனை. அங்ஙனஞ் சாதிக்குஞ் சித்தாந்தியே ! தானெனப்படுஞ் சொற்பொருள் இஃதெனக் கண்டு அறிந்திலாய் போலும். அறிந்தாயாயிற் றானென்ப திழந்தவிடத்து

நிரதிசயாநந்த மென்னும் முத்திப்பேறு வேறு எதற்கு? இங்ஙனே நீ யதனைக் கூறுதி—எ-று.

அவத்தைகடோறும் மாறுவதாகத் தோற்றுவது உபாதிகளாம். அவ்வுபாதிகள் அசேதனமுஞ் சடமு மாதலால் எங்ஙனம் போக்கு வரவு முதலிய சேட்டையையும் நானெனனும் அகம்பாவத்தையுஞ் செய்யும்; செய்யாதாதலிற் சைதன்னியமே அவ்வவ் வாகாரமா நின்று இயக்கி யறியவேண்டும். உபாதிகள் மாறினுஞ்சைதன்னியம் அங்ஙனம் மாறாது அங்கங்கது அதுவா நின்று சேட்டித்து அறியுமாறு போன்று பிறவிகடோறும் அதுஅதுவாநின் றியக்கி யறியும். அவ்வாறே ஞானஞ் ஞான தசைக்கண்ணும் அவ்வவ் வவசர நிலையாகிய அஞ்ஞானதனுவாகவும் ஞானதனுவாகவும் நின்று சிற்றின்பத்தையும் பேரின்பத்தையும் அனுபவிக்கும். அச்சைதன்னியத்தை யன்றிச் சிற்றறிவும் பேரறிவும், வேறுண்டாயிருக்குமாயின் அவ்விருவகை யின்பமும் வெவ்வேறென்னலாம். சிற்றறிவும் பேரறிவும் மாறினும் அவற்றிற்கு அதிஷ்டானமாயுள்ள சைதன்னியம் மாறாது. மாறுமெனின் அங்கங்கு அது அதுவாக நின்று சிற்றின்பத்தையும் பேரின்பத்தையும் நின்று அனுபவிப்பது எது? வேறின்றாதலானும், அச்சைதன்னியத்தைவிடத் தானென்றற்குப் பொருள் வேறின்றாதலானும், தானே யெல்லாமாயும் அல்லாததாயும் விளங்கலானும்,

"யானிலா விடமு மில்லை யெனதிடத் திலாததில்லை, தானிகழ் பொருள்வே றில்லை"

யென்று வசிட்டவாக்கிய மிருப்பதினானும், தானே தானாக விளங்கவேண்டுமென் றிருப்பதினானும், அறிவு சிவன், ஆனந்தஞ் சிவம் என்னுமிடத்து இங்கறிவாகவும், அங்கு ஆனந்தமாகவும் விளங்குவது தானெனப் படுவதாதலானும்,

"நானிவன்று னவனென்றே நவின்றறியா தேயுழன்ற நாயினேற்குத், தானமரு நிலையிது வெனக் காட்டு ஞானகுருதேசிகன்,"

என்று உபநிடதம் இருப்பதினாலும் இதனை யறியாது மதிமயக்காற் கூறுவார்போன்று தன்னிழப்பு வரவேண்டுமெனக் கூறுகின்றனை. இஃது என்னைகொலோ நின்கருத் திருந்தவாறு என்றதைக் குறிப்பித்ததென்க. (கசரு)

அ-கை.

இன்னும் அவரைநோக்கி யிகழ்ந்து கூறல்.

அணுமகத்தைக் காட்டோ மகல்விசும்பைத் தள்ளி
கணுகுபந்த மேதென்று நாடோம்—பிணவாயால்
பேச்சிற் சிறந்தோம் பெருவெளியாய் நில்லோமே
சீச்சீயிங் கென்னசெய்தோந் தின்று.

(எ-து.) அணுவாகவும் மகத்தாகவுந் தோற்றும் விடயங்களைச் சர்வபரிபூரணமாக நிறைந்துள்ள சிதாகாயத்தை விலக்கிக் காட்ட வல்லமையில்லேம்; இதனால் எமக்குறும் பந்தம் யாதென நாடற்கு வகையில்லேம்; இங்ஙனமிருக்கப் பிணநாற்றமுள்ள வாயினால் வீண் வழக்கிடும் பேச்சில்யாரினு மிக்கிருக்கின்றனம்; இதனைவிட்டுவிடயங்களனைத்தையுஞ் சிதாகாயமாகக் கரைத்து அவ்வகன்ற வெளியாக நிற்கக் கற்றிலம். இங்ஙனஞ் செய்யாது வயிறுரச் சோற்றையுண்டு இம்மைக்கண் சீச்சீ! என்னவேலை செய்தனம்—எ-று.

எனவே, உடல்கொழுக்கும் வேலைசெய்தன மென்றவாறாயிற்று. சலமே யலை திவலை நுரை குமிழிகளாகத் தோற்றினுஞ் சலத்தைத் தள்ளி யவற்றிற்குத் தமக்கென வேறுபொரு ளுண்டாயிருக்கக் காட்டக் கூடாவாறுபோன்று சராசர உயிர்க ளனைத்துஞ் சிதாகாசமாதலால் அச்சிதாகாசத்தைத் தள்ளிச் சடரூப மாகிய பஞ்சபூதங்களும் அவற்றின் விகற்பங்களுஞ் சித்துரூபமாகிய சீவேசுரர்களும் அவற்றின் பேதங்களுமாகிய இவற்றிற்குத் தமக்கென வேறுபொரு ளுண்டாயிருக்கக் காட்டக் கூடாதாதலினாலும், அவ்விடயங்கள் சமட்டி

வியட்டியாகத் தோற்றலின்றும் இங்ஙனங் கூறியதென்க. சிதாகாயத்தைவிடப் பந்த மிஃதெனப் பகுத்துத் தெளியச் சத்தியற்றதாம் முத்தி யிஃதெனத் தெளிந்து உய்யுமா றின்றென்பது கருத்து. அகண்ட பரிபூரணமாக விளங்குஞ் சிதாகாயத்தைக் காணும் முறைப்படி கண்டு அதிற் சகல கற்பிதங்களையுங் கரைக்கும் வகை தெரிந்து கரைத்து அதுவாக நின்று அப்பெருவாயாற் பேசாமற் பேசில் அரியாப் பிரமாதிகளுந் தமித்தற் செலாது ஐயந் திரிபறத் தனிக்கச் செய்யும் ஆதலின் அச்சுத்த வாயாற் பேசக் கற்க முயலா திவ்வாறு வெறும் பேச்சாற் பேசத் துணியிற் றனக்குங்கேட்போர்க்கும் எங்ஙனம் ஐயந் திரிபறு மென்பது தோன்றப் பிணவாயாற் பேச்சிற் சிறந்தோ மென்றார்.

(கஎ·அ)

அ·௯௯.

அறிவுவடிவாகிய நாமே யனைத்திற்குஞ் சாட்சியாமெனக் கூறல்.

உருவருவ மேனை யுபயமுநா மாகில்
திரிவிதமு மெய்யென்றல் தீர்வாம்—இருகோளும்
மூன்றவத்தை யன்றியிலை மூன்றுநமிற் காண்பதனால்
சான்றுநமை யன்றியுண்டோ தான்.

(எ-று.) ஆன்மகோடிகளுக்கு நாமெனத் தோற்றுந் தூலவடிவமுஞ் சூனியவடிவமுஞ் சாயாவடிவமுமாகிய இம்மூன்று வடிவமும் நமது சொரூபமாகுமாயின் அத்திரிவித வடிவங்களும் உண்மை வடிவமென மதஸ்தர்கள் கூறுவது தீர்ப்பாம். தீர்ப்பெனக் கொள்ளின் உபாதித்திரயங்களை நாமென்றும் யதார்த்தமென்றுங் கொள்ளும் இவ்விருவகைக் கொள்கைகளுஞ் சாக்கிர முதலிய மூன்றவத்தையைவிட வேருகவில்லை. இம்மூன்றவத்தைகளும் நம்மிடத்திற் கண்டு கண்டு மறைவதனால் இவைகட்கெல்லாஞ் சாட்சியாக நின்று விளங்குவது நம்மைத்தவிர வேறுளதோ? இல்லை—எ-று.

உபாதித்திரயங்கள் நாமாகாதவிடத்து அவைகள் எங்ஙனம் மெய்யெனப்படும்? இவற்றை நாமென்றதும், இவைகள் நமக்குக் காணப்படுமென்றதும் அந்தந்த அவத்தை மட்டேயன்றி வேறின்றாதலின் இருகோளும் மூன்றவத்தை யன்றியிலை யெனவும், அம்மூன்றவத்தைகளுந் தனித்தனிக் காணப்படுவது நமக்காதலின் மூன்று நமிற் காணிலெனவும், அங்ஙனங் காணப்படுவதை யங்கங்கே யறிவு வடிவா யிருந்து அவைகள் தோற்றி மறையினும் நாமங்ஙன மாகாது அவற்றிற்கு விலட்சணமாயிருந் ததிதலிற் சான்றுநமை யன்றியுண்டோ வெனவுங் கூறினார். கூறவே, உபாதித்திரயக் காட்சிகளுக்கு அவத்தைகளும் அவ்வவத்தைகளுக்குநாமும் ஆதாரமானவாறுபோன்று நமக்காதாரம் இன்றெனவும், நம்மையொத்த மெய்வடிவம் வேறில்லவே யில்லையெனவும், மெய்வடிவம்போலக் காணப்படுவன அனைத்தும் நம்மையன்றித் தமக்கென வேறுபொரு ளில்லாமையால் தோற்றல் மாத்திரப் பொருளெனவும், அவற்றை மெய்ப்பொருளெனக் கருதி நம்பிக்கைவைத்தலாலாய பயன் துக்கமேயன்றி யெட்டுணையும் இன்பம் இன்றென்பதற்குச் சாட்சி நாமேயாதலின் எங்கணும் நாமே பொருளாவ மெனக்கருதி நம்மை இலட்சியிக்க வேண்டுமெனவும் பொருளமையப் பெற்றாம். (கசஎ)

அ-கை.

அவத்தை முதலிய யாவும் இங்ஙன நின்றாற் பொய்யாக விளங்குமெனக் கூறல்.

அவத்தைமய மாயினுநா மாகாவா றெந்தப்
பவத்தின்மய மாயினுநாம் பற்றேம்—அவத்தைதொறும்
உள்ளதுபோ லெப்பிறப்பி லும்முள்ள நம்மைநாம்
உள்ளபடி கண்டாலெங் கேது.

(எ-து.) எந்தெந்த அவத்தைகள் எந்தெந்தக் கணத்தில் எந்தெந்தவாறாகத் தோற்றுமோ அந்தந்தக் கணத்தில் அந்தந்த மயமாக

நாமாயினும் அவைகள் மாறி மாறித் தோற்றுமாறு போன்று மாறேம் ஆகையால் நாமவை யாகோம். அதுபோல எந்தெந்தப் பிறவிகள் வரினும் அந்தந்த மயமாவோம். அந்தந்த மயமாயினும் அவைகள் அழியினும் நாமழியே மாதலின் அவையாகோம். அவத்தைதோறும் நாமுள்ளவாறுபோன்று பிறவிகடோறும் மாறு தழியாதுள்ள நம்மை நாமுள்ளபடி காண வேண்டுமோறு சாணில் இக் கற்பனைகள் அனைத்தும் எத்திசைக்கண் தலைகாட்டும் நீயே இதனைக் கண்டு சொல்லுதி —எ-று.

சைதன்னிய வடிவமாகிய நம்மிடத்தில் நம்மால் விகற்பித் தெழுந்து நம்மை மூடப்பெற்ற நமதறியாமையாகிய அவித்தை யொன்றுள்ளளவும் எண்ணிறந்த பிறவிகள்வரும். அப்பிறவிகள் ஒவ்வொன்றினுள் அவத்தாத்திரயங்கள் மிதமின்றிவரும். வரினும் அவை நிலைநிற்பன வன்றுதலின் இவற்றிற்கு ஆதாரமாகச் சதோதயமா நின்றுள்ள நம்மை யுள்ளபடி யுள்ளங்கை நெல்லிக்கனிபோல் நாம் காணின் நமது சொரூபமாகவே யனைத்தும் விளங்குமென்பதுகருத்து. (கசுஅ)

அ-கை.

சகல கற்பிதங்களும் நம்மால் விளைந்தது எவ்வாறென்றற்கு உத்தரங் கூறல்.

நம்மைச் சகத்தாக்கி நம்மைநாம் பார்க்கின்றோம்
நம்மைச் சுயமாக்கி நம்மையே—செம்மையாப்
பார்ப்பதுபோ லாதலினாற் பார்ப்பானும் பார்வையுடன்
பார்ப்பனவு மன்னியமோ பார்.

(எ-து.) சைதன்னிய வடிவாய் நிறைந்துள்ள நம்மை நாமே சகத்துவடிவமாகக் கற்பித்து நம்மையே நாம் பார்க்கின்றனம். அஃது எவ்வாறெனின் நம்மை நாமே சிரவணாதிகளால் நமது சுயம்பு வடிவமாக்கி நிர்விகாரமாக நம்மைநாம் பார்ப்பதுபோலும். ஆதலின் நம்மை

யன்றிக் காண்பான், காட்சி, காணும்பொரு ளென்பன இம்மூன்றும் வேறா யுள்ளனவோ? நீயே சிந்தித்துக் காணுதி—எ-று.

எனவே, நம்மாலேயே நமது கற்பிதங்க ளொழிந்து சுயமாக விளங்குவமாயின் நம்மாலேயே நமது கற்பிதங்கள் விளைந்து விகாரியாவேனோ மென்றதற்கு ஐயமின்றென்பது பெற்றாம். இதற்கு உதாரணம்.

பாடுதுறை.

"தன்னால் விளையுஞ் சகசீ வபரந்
தன்னா லழியுந் தனதாம் விழியால்
என்னா லெலைனயென் னிலெனக் கருளும்
அன்னே யடியே னபய மபயம்"

என்பதனாற் காண்க. அருளேஞயத்திற் சகல பொருள்களும் ஐயந்திரிபின்றி விளங்குமாறுபோல ஞானேஞயத்தில் தத்துவங்களின் நிலை ஐயந்திரிபற விளங்குமேயன்றி வேறோர் தந்திரத்தால் விளங்காதாகையால் இதனை முன்னர் விரைந்து செய்யவேண்டுமென்பது எமது துணிபு. (கசக)

அ-கை.

இங்ஙனஞ் சுவானுபவ நிலையைக் கற்றுப் பயிலுமாறு முயலவகை தேடாது வாதிடுவோரை நோக்கி யிகழ்ந்து கூறல்.

தெரிவெங்குந் தள்ளிச் செகத்திதெனக் காட்டோம்
தெரிவே செகத்தென்றுஞ் செப்போம்—பெருவாயீர்
தேருமா றெங்ஙன் றெளியாக்காற் கத்தபமாம்
சாருங் கதியென்ன தான்.

(எ-று.) அகம்புறத்தில் ஸ்புரிக்கும் பிரக்ஞாசொரூப வியாபகத்தின் இலேசமாகிய ஞெப்தியை யொதுக்கி அகம்புறத்தில் எங்குஞ் சாயையாகவுந் தூலமாகவுந் தடித்துக்காட்டுஞ் சகசொரூபம் இஃது

எனத் துணிந்து காட்ட வகையில்லேம். அஃதன்றியும் ஞெப்தியே சகசொரூபமெனச் சொல்லவு மாட்டோம். இங்ஙனமிருக்கக் குதர்க்கஞ்செய்வதிற் பெருவாயை யுடையீர் ! யாம் தெளிந்துய்யுமாறெங்ஙனம்? அங்ஙனந் தெளியாதொழியின் விவேகத்தாற் கழுதைபோல்வம். தேகபோகத்திலேயே நமது கருத்தையெல்லாஞ் சேடமின்றிச் செலுத்தி யிம்மையை விடைய விநோதமாக ஒழித்துவிடுவெமாயின் இங்ஙனம் அவலமாக வொழித்துவிட்ட நமக்கு மறுமைக்கண்சாருங் கதியாவது என்னையோ !—எ-று.

சகத்து வேறுண்டெனப் பிரமாதியரானுங் காட்டப்படாமையிற் றெரிவெங்குந் தள்ளிச் செகத்திதெனக் காட்டோ மெனவும், ஞெப்தி யின்றாயபோதுஞ் செகத் துண்டாயிருத்தலின் தெரிவே செகத்தென்றுஞ் செப்போமெனவும், வீண் வழக்காற் பயனின்றாதலின் பெருவாயீர் எனவும், இவ்வீண்வழக்கால் யாஞர் எனக் கேட்டல் சிந்தித்தல் தெளிதல்செய்ய வராமையின் தேருமாறெங்ஙனெனவும், இங்ஙனந் தெளியாவிடத்து நிரதிசயாநந்தவாழ் வின்றாதலின் சாருங் கதி என்னதானெனவுங் கூறிஞர். (கரு௦)

அ-கை.

ஆயின் உய்யுமாறுதான் எங்ஙனமென்றற் குத்தரங் கூறல்.

அகம்புறமாக் காணு மறிவுதனைக் காணில்
அகம்புறமொன் றின்றி யறிவாய்த்—திகழுமால்
ஒன்றன்றி யில்லை யுளவெல்லாங் கானனீர்
என்றே திடங்கொண் டிரு.

(எ-து.) அகமாகவும் புறமாகவு நின்று அது அதுவாகத் தோற்றும் ஞெப்திரூபமாகிய ஸ்புரணவடிவை யுள்ளவாறு காணப்பெறுவராயின் அகம்புற மென்பதி லொன்று மின்றிச் சுத்தசைதன்னியமாத்திரமாகவே விளங்குவர். ஆதலாலங்ஙனம் விளங்கும் ஏக சைதன்னிய

த்தை யன்றிச் சுசாதிகமுதலிய பரிச்சின்ன பேதங்கள் வேறில்லவே யில்லை. உண்டாகத் தோற்றுவனவெல்லாங் கானனீர் போல்வனவா மெனச் சுவானுபூதிநிலையிற்றிடங்கொண்டு ஒருபடித்தாய் நில்— எ-று.

உள்ளவாறு காண்டலாவது, நிர்விகாரமாகக் காண்டலையும், ஒருபடித்தாநில்லென்றது சைதன்னியம் நின்றபடி நில்லென்பதையுமாம். சைதன்னியமே யுபாதித்திரயமாக ஸ்புரித்தலின் அந்தஸ்புரண வடிவையன்றி யுபாதித்திரயமும் அவற்றிற்கு அகம்புறமும் அவ்வகம் புறத்திற் றோற்றுவனவும் அத்தோற்றஞ் சமட்டி வியட்டியாக நிற்பனவும் வேறின்றாதலின் அதனையே காணவேண்டுமென்ற விட்டலக்கணைப்படி இலட்சியிக்க வேண்டுமாதலின் அகம்புறமாக் காணு மறிவு தனைக் காணிலெனவும், கண்டளவில் தனுத் தடிப்புக் கரையும், கரையவே அத்தடிப்பாலாய அகம் புறமுதலிய சகல கற்பிதங்களும் அருணோதய அந்தகாரம்போலாம். ஆகவே அச்சைதன்னியந் தான்மாத்திரமாக விளங்குமென்பது தோன்ற அகம் புறமொன் றின்றி அறிவாய்த் திகழுமெனவும், அங்ஙனம் விளங்குவது ஏகமாக நிற்றலின் ஒன்றன்றி யில்லையெனவும், ஆதாரமான சூரியனைக் கண்டவிடத்து ஆதேய சல சூரியர்களிருந்து மில்லாததுபோலாம். அதுபோல யதார்த்த சைதன்னியம் அந்தர்முகத்தில் விளங்கிய விடத்துக் கற்பித சைதன்னியங்கள் பகிர்முகத்தி லிருந்து மில்லாததாய் முடியுமாதலின் உளவெல்லாங் கானனீரெனவுங் கூறினரென்க. (கரு௧)

அ-கை.

சைதன்னியமே அனைத்துமாகப் பரிணமித்ததெனக் கூறுவதனால் அனைத்துஞ் சைதன்னியமாக வேண்டுமேயென்றதை மறுத்துக் கூறல்.

அனைத்து மறிவாகா வாகு மறிவீ
தெனைத்தவிர வில்லதுபோல் யானுந்—தனைத்தானே
யொக்குமறி வன்றியிலை யுண்மையீ தன்றெனிலோ
ஒக்குமா றுத்திக்கிங் கோது.

(எ-து.) அறிவினது கற்பிதங்க ளனைத்தும் அறிவாகாவாம். ஆனால் அறிவே சகல கற்பிதங்களு மாகப் பரிணமித்ததெனக் கூறப் படுவ துண்மையேயாம். இதுநிற்க, இங்ஙனமா விளங்குஞ் சைதன்னி யம் என்னைத் தவிர இல்லாததுபோல் யானுந் தனக்கு நிகரின்றி விள ங்கும் அச்சைதன்னியத்தை யன்றி வேறல இது யதார்த்தமாம். இது யதார்த்தமாகாதெனக் கூறிடிலோ அஃது எமதுத்திக் கொத்து இருக்கும் வண்ணம் உரைக்க வல்லையாயின் இங்ஙனே சொல்லுதி —எ-று.

மண்ணாலாலாய கடபட விகற்பங்கள் மண்ணா லாகாவாறுபோ ன்று அறிவாலாய சகல கற்பித வடிவங்களும் அறிவாகா வென்பார் அனைத்து மறிவாகா வெனவும், அறிவினது விகற்ப மனைத்துமாதலின் அறிவே யனைத்துமா மென்பார் ஆகுமறிவெனவும், அறிவே நான், நானே அறிவாமென்பது திண்ணமாதலின் ஈதெனைத்தவிர வில்லது போல் யானுந் தனைத்தானே யொக்கு மறிவன்றியிலை யுண்மையென வுங் கூறினர். (கஙஉ)

அ-கை.

இங்ஙனம் விளங்குஞ் சைதன்னியம் அவத்தாத்திரயாதிகள்போல் மாறுவதின்றோ என்றற் குத்தரங் கூறல்.

மூன்றவத்தை யன்றியிலை மூன்றவத்தாங் காட்சிகளும்
மூன்றவத்தைக் காண்பதுவு மூதறிவில்—சான்றவ்
வறிவன்றி மூன்றுமிலை யவ்வாறெங் கில்லை
அறிவுங்கண் டிங்கே யறை.

(எ-து) மூன்றவத்தைக்கண்ணுங் காணப்படுங்காட்சிகள் அம் மூன்றவத்தையைவிட வேறில்லை; அம் மூன்றவத்தைகளுங் காணப் படுவதோதொல்லறிவின்கணுதலாற் சாட்சியாகவிளங்கும்அவ்வறிவை யன்றி யவ் வவத்தாத்திரயங்கள் வேறில்லை; அவ்வாறே யவ்வறிவும்

எவ்வவத்தைக்கண் ணில்லை. இதனை நினது அனுபவத்திற் கண்டு இங்ஙனே யெமக்குச் சொல்லுதி—எ-று.

எனவே, தூலஞ் சாயை சூனிய மென்பனவாகக் காணுங் காட்சிகள் மூன்றவத்தைகளிலும், அம்மூன்றவத்தைகள் ஒன்றி லொன்று இல்லாமல் மாறி மாறித் தோற்றுவது அறிவிலு மாயின் அவ்வறிவு இல்லாவிடம் எங்குளது? இன்முதலிற் சமஸ்தமும் அறிவு வியாபகத்தி லென்பது பெற்றும். (கருரு)

அ-கை.

இவ்வாறுள்ள சைதன்னியத்தை நான் என்றது ஆக்கியது எவர் செய லென்றற் குத்தரங் கூறல்.

அறிவுருவ நாமிருக்க வன்னியம தாக்கல்
பிறர்செயலோ நஞ்செயலோ பேசில்—பிறர்செயலன்
றில்லா வுலகை யிலதென்று பார்த்திருக்கில்
அல்லாநான் வாராத தால்.

(எ-கு.) சதோதயமாக விளங்கும் அறிவு வடிவமாக நாமுள்ள படியிருக்க, நம்மை அன்னிய வடிவமாக்கிய செயல் பிறர்மாட்டதோ, நம்மாட்டதோவென் றையமுற்றுக் கேட்கின் பிறர் மாட்டதன்று, நம்மாட்டதேயாம். அஃது யாதெனின், தனக்கென வோர் பொரு ளில்லாத உலகை யில்லாததாகப் பார்த்துக்கொண் டிருக்க வல்லனு யின் அவனுக்கு நானல்லாத நான் அங்ஙனே வாராதொழியு மாதலால் —எ-று.

நமது யதார்த்த வடிவமாகிய சைதன்னிய வடிவமாக்காது அதற்கு எதிராயுள்ள விகற்ப வடிவமாக்கியது எவர் செயலென்பார் அறிவுருவ நாமிருக்க வன்னியம தாக்கல் பிறர்செயலோ நஞ்செயலோ வெனவும், அஃதீசுர கற்பிதமன்று, சீவகற்பித மென்பார் பிறர்செய லன்றெனவும், சைதன்னிய வியாபகத்திற் றோற்றல்மாத்திர மாகக்

காணப்படுஞ் சகத்தை யுண்மையென நாடு நாட்டத்தைவிட்டுஅதற்கு ஆதாரமான சைதன்னியத்தை விளக்கிக்கொண்டு அதனையே நாடும் நாட்டத்தாலுலகம் மறையும், அது மறையவே, தூல தனுவும் மறையும், அது மறையவே, சூக்கும காரண தனுக்கள் மறையும், அதுமறையவே, ஞான தனு மாத்திரமாக விளங்கும் ஆதலின் இல்லா உலகையிலதென்று பார்த்திருக்கி லல்லாநான் வாராததாலெனவுங் கூறினர். கூறவே, சீவனது ஞானனுட்டான முயற்சியாற் சகல கற்பிதங்களும் நசித்தல் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கலால் அவற்றின் விளைவும் இச்சீவனது அஞ்ஞானனுட்டான முயற்சியா லுண்டாயிற்றென்பது குறிப்பிக்கப் பெற்றும்.

வினு: இங்ஙனங் கூறுவது வேத சம்மதந்தானே?

விடை: வேத சம்மதமேயா மென்க.

வினு: அங்ஙனங் கூறும் வேத சம்மதவாக்கியம் யாது ?

விடை; "என்னைத் தவிரமற்றிங் கேதுமில்லை யென்றணை பொன்னைத் தவிரவிலாப் பூடணம்போல்"

என்பதினுனும்,

"தானலா தொன்று தன்னைத் தானெனக் கருதிக் கொண்டே யானெலாஞ் செய்தே னென்னும்"

என்பதினுனும்,

"பொருளல் லவற்றைப் பொருளென் றுணரும் மருளானும் மாணுப் பிறப்பு"

என்பதினுனும்,

"ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின் வானம் நணிய துடைத்து"

என்பதினுனும்,

"சீவனெவ் வறிவினாலே தெரிவுறு மதுப தார்த்தந்
தாவுறும் விவிதமான சங்கற்ப விகற்ப மூற்று
மேவிய மயக்கந் தன்னால் விரிந்தநீ ரலையா மாபோற்
பூவல யங்களாகிப் பொலிந்தது புகன்ற சீவன்"

என்பதினாலும்,

"பன்னுகா ரணமொன் றில்லை படைக்குமுன் படைக்க வேண்டு
மென்னுலீ லையினாற் றானே யியைந்தகா ரணம தாகி
முன்னுறு பொதுவாங் காட்சி மொய்ப்பொருட் டிரள்க ளாகித்
தன்னுளே சகமாய்க் காற்றுட் சலனம்போ லறிவுட் டங்கும்"

என்பதினாலுங் காண்க.

வினா: இங்ஙனம் இருக்கவும்

"பெண்ணா ணலியாய்ப் பிறந்துவளர்ந் தேயழியு
மெண்ணாத பேத மியல்பின்றிப் - பண்ணுங்கால்
காரணகர்த் தாவொருவ னுண்டவனைக் காட்டுநூல்
ஆரணமு மாகமமு மாம்"

என்ற தென்னை?

விடை: தேகமே ஆன்மா, போகமே முத்தியென மயங்கி மேலெ ழுஞ் சிந்தைக் கிடமின்றி அவற்றின்கண்ணேயே சுழல்வுற் றழுந்திய ஆன்மகோடிக ளுய்யும்பொருட்டத்தேக போகங்களைப் பண்ணுவதற் குச் சீவர்கள் அகர்த்தாவாதலானும், இரப்போர்போன்று ஏற்று அனு பவிக்கப் பாத்திரர்களாதலானும் அவற்றைப் பண்ணுதற்குக் கர்த்ருத் துவமாகவும் அச்சீவர்கள் வினைக்குத் தக்கபடி யவற்றைக் கொடுப்பி த்துப் புசிப்பித்துத் தொலைப்பிப்பதற்குத் தாதாவாகவும் மேலொருவ னிருக்கவேண்டுமென்றது அந்நிலைச் சீவர்கள் அத்தேக போக சிந்தை யை அவனை நாடி வேண்டற் கென்க.

வினு: தேகபோக சிந்தை மேன்மேலும் பெருக்கற் கிடமாயிற்றே யன்றி இதனுற் பயனென்னை ?

விடை: இவற்றைக் கொடுப்பித்துப் புசிப்பித்துத் தொலைப்பிப்ப தற்கு மேல் ஒருவன் உண்டென்கிற இவ்வெண்ணமாவது வந்ததே அதுதான் முன்னிலும் மிக்க பயனென்க.

வினு: இவ்வெண்ணமாவது வரவேண்டு மென்றது கர்த்தாவை நோக்கி அருந்தவஞ்செய்து தாம் அவாவிய தேக போகங்களையே யனுபவிக்கத்தானே வேத சம்மதம் ?

விடை: இஃதன்று, கருத்து வேறு. அதாவது ஆன்மாக்கள்தாம் இனி யடைய அவாவிய பெருங் காமியார்த்தத்தை வேண்டித் தமக்கு இப்போது கிடைத்திருக்கிற பிராரத்துவபோகத்தில் வலிய வெறுப்பு வைத்து வனத்திற் சென்று அரியதவத்தை நெடுங்காலம் இராப் பக லின்றிச் செய்து அப்போகத்தை யடைவர். அடையினும் அடைந்த வுடனுயினும் இடையிலாயினும் முன்னைய வருத்த மறந்து செருக்காதி யுற்றுச் சாப முதலியவற்றுல் அப்பலனை யிழப்பர். இதனுல் முயற்சி கோடிபங்கிற் பலன் வீசம் பங்காயினும் இல்லை யென்னும் உணர்வு வரும். வரவே, அற்பமுயற்சி அற்பகாலஞ் செய்து திட்ப நுட்பமா யுள்ள மாளாப் பயனை மாளாக் கால மிரண்டறச் சுகிக்கத் தக்க முயற்சி யாதென்று ஐயுற்று ஆப்தரால் நிட்காமியத்தவமெனக் கேட்டு அவ்வாறு இயற்றி அத்தவ மேலீட்டாற் சாதன சதுட்டய முற்று அதனுல் ஞானுசானைத் தேடி அச்சந்நிதியிற் சிரவணுதிக ளால் ஐயந் திரிபற்று ஏகமாக விளங்க வரும். இங்ஙனம் வரச்செய் வதே அதன் கருத்தென்க. (கரு௪)

அ-கை.

கற்பிதமாயும் உண்மையாயு முள்ள அகம்பாவந் தானுகவும் அல் லாததாகவும் விளங்குகின்றதெனல்.

அனைத்துமொன்று நானாத லப்பாலா ராயின்
அனைத்துமே நானாத லப்பால்—இனைத்தாக
நானென்ப தேதகுவே நானாத லிம்மூன்றுந்
தானன்றி யுண்டில்லை தான்.

(எ-து.) சமஸ்த கற்பிதங்களாகிய அணு மகத்தென்பவற்றுள் அணுக்களுள் ஒவ்வொன்றைப் பிறவிகடோறும் நான் நான் எனப் பிரதிபலித்தலும், அது சலித்த பின்னர்ச் சமஸ்தமுமாகிய விராட்டு வடிவமே நானெனப் பிரதிபலித்தலும், அதில் எய்த்த பின்னர் இவ் வாறு நானல்லவற்றை யெல்லாம் நானென்று அபிமானித்துச் சலித்தது எவ்வறிவோ அவ்வறிவே சிரவணாதிகளால் ஐயந்திரிபறத் தெளிந்து நானெனக் களங்கமின்றி அதுவாக விளங்கலுமாகிய இம்மூவித சைதன்னியமுந் தானென்னும் அசிபதார்த்தத்தைத் தவிர உண்டெனலும் இன்றெனலுமாம்—எ-று.

தான் அசை. தூல சூக்கும காரணமாயுள்ள சமட்டிவியட்டி வடிவுகளிற் றனித்தனி வியட்டிகளில் ஒவ்வொரு வடிவை நானெனச் சனித்தலின் அனைத்து மொன்று நானாத லெனவும், தனித்தனி வியட்டி வடிவம் நானென மயங்கலாற் சனன மரணமும் அதனாற் சுகதுக்கமு மிடைவிடாது வரும். இங்ஙனம் வருதலைத் தவிர்தல் சமட்டி வடிவம் நானென மிக்க தவப் பெருக்கா லானவிடத்து ஆதலின் எனக் கருதி அது நானாகுதல் திண்ணமாதல்பற்றி அப்பாலாராயின் அனைத்துமே நானாதலெனவும், முன்னையதினும் இது மகத்தேனுந் திரிசியமாதலால் இஃதும் நமதுருவன்றெனக் கழன்று இங்ஙனமாக நின்ற எவ்வித நானும் யாதுபொருளெனச் சுருதி குரு சுவானுபவத்தால் ஐயந்திரிபறக் கண்ட அக்கணமே அது நானாதலின் இனைத்தாக நானென்பதேதகுவே நானாதலெனவும், இம்மூன்றும் மாறினுந் தான் என்பது அங்கங்கே சாட்சியாக நின்று அவை போல மாறாது அவற்றை யறிதலால் தானன்றி யுண்டெனவும், தான் விலட்சணமான

போது அவை யுண்டாயுஞ் சலட்சணமான போது அவை யின்றாயு மிருத்தல் எவர்க்கும் அனுபவமாதலினானும், தானுண்டாயின் இம் மூன்று முண்டாயும் தானில்லையாயின் இவை யின்றாயு மிருப்பது பிரத்தியட்சமாதலினானும் தானன்றி யில்லையெனவுங் கூறக் கிடந்த வாறு காண்க. இதனால் தானே இங்ஙனமாதலும் ஆகாது விளங்கலும் தனது வினோத சத்தியென்பது பெற்றாம். இதுகாறும் ப்ரக்ஞைக்குச் சக சீவ பரம் அன்னியம்போற் றோற்றினும் விசாரித்துத் தெளியு மிடத்துத் தானாக விளங்குவதைப் பற்பல வேதுக்களா லுணர்த்திய தென்பது கருத்து. (கடுரு)

அ-கை.

இனிப் பிரக்ஞானமே பிரமமென்றது எவ்வாறென்று மாணாக் கன் வினாதல்.

அனைத்துந்தா னன்றா யனைத்துந்தா னாகத்
தினைத்துணையு மையமின்றித் தேர்ந்தேன்—தனக்குநிகர்
தானாகும் ப்ரக்ஞானந் தானே பிரமமெனல்
ஆனா வமிர்தே! யறை.

(எ-து.) விகாரத்தாற் சமஸ்த கற்பிதங்களுந் தானல்லாததாயும் தன்னைத் தவிரச் சமஸ்தத்திற்கும் பொருள் வேறின்றாதலால் தானே சமஸ்தமுமாயும் ப்ரக்ஞானம் விளங்குமென்பதைத் தேவரீரால் ஐயந் தினைத்துணையு மின்றித் தெளியப் பெற்றேன். இனி, மேல் கீழ் ஒப்பு இன்றித் தானே தானாக விளங்கும் ப்ரக்ஞானமே பிரமமெனக் கூறி அதின் உண்மையை யான் தெளியும் வண்ணம் யாதினாலுங் கெடாது என்றும் ஒருபடித்தாக விளங்கும் ஞானமிர்தக் கடலாகிய ஆசிரியரே! இங்ஙனே தெரித்தருடி—எ-று.

உருவம் அருவம் உருவாருவம் என்னுஞ் சடமும், கிஞ்சிக்ஞ சர் வக்ஞத்துவராகிய சீவேசுரரென்னுஞ் சித்தும் சயம்பு வடிவமன்று

ஆதலால் அனைத்துந் தானன்றாய் எனவும், இவை யனைத்தும் ஞெப்தியுள்ளபோ துண்டாய் இன்றாயபோ தின்றாயிருத்த லுண்மை யாதலினானும், இவை யனைத்தும் ஞெப்தியி லுதித் தொடுங்குவதி னானும் அனைத்துந் தானாக வெனவும், அபரிச்சின்ன வஸ்துவென் பது தோன்றத் தனக்கு நிகர் தானாகும் பிரக்ஞான மெனவுங் கூறி னார். இதனாற் பிரக்ஞானத்தை விளக்கியதுபோலப் பிரமத்தையும் விளக்க வேண்டுமென்பது அமையக் கிடந்தவாறு காண்க. (கருசு)

அ-கை.

அதற் குத்தரங் கூறுவான் வேண்டி இக்கவியில் இந்நிலையதாய அநுபவம் வாய்க்கிற் பிரமமாகு மெனல்.

ப்ரக்ஞான நீயாகிற் ப்ரம்மமெனல் வேறில்லை
ப்ரக்ஞான மாகாயேற் ப்ரம்மமல—ப்ரக்ஞானம்
நானென் றேபழக நாடுகவென் றான்குரவன்
ஆனலெவ் வண்ண மறை.

(எ-து.) அனைத்துஞ் சின்மாத்திரமாக விளங்கப்பெற்ற ப்ரக்ஞா னவடிவாக நீ விளங்குவையாயின், பிரமமென்பது நின்னையன்றி வே றுளதாகக் காணப்படுவதில்லை. இவ்வாறன்றி நீ ப்ரக்ஞான வடிவாக விளங்கக் கல்லாது அதற்கு வெதிருத்த வடிவாகவே யறிவின்மையால் விளங்குவையாயின் பிரமசொரூப நீ யாகுதியல்ல; அங்ஙன மாதற்கு யாது இயற்றவேண்டுவதெனின் ப்ரக்ஞான வடிவை ஐயந் திரிபறக் கண்டு கண்டு இது நான் இது நானென்று இராப்பக லின்றி யிடைவி டாது பழகுதற்கு நாடுதி யென்று ஆசிரியர் கூற, அதற்கு மாணாக்கன் அவ்வாறாயின் அங்ஙனம் பழகு நெறி எவ்வாறு? அதனைத் தெரித் தருடி—எ-று.

யுத்தி அநுபவத்தா லன்றிச் சுருதியால் மாத்திரம் நானே பிரம மெனச் சொல்லாலும் நினைவாலும் இறுமாந்து இருத்தலைத் தவிர்தி யென்பார் ப்ரக்ஞானம் நீயாகிற் ப்ரம்மமெனல் வேறில்லை யெனவும்,

கற்பனையின்றிப் ப்ரக்ஞான வடிவா விளங்காவிடத்துப் பிரமசொரூப மாதல்கூடாதாதலிற்ப்ரக்ஞான மாகாயேற்பிரமமலவெனவும்; அநாதி தொட்டு உபாதி வடிவங்களையே நானெனப் பலகற்பம் பழகிவந்த தால் நானென்பதற்கு லட்சியார்த்தானுபவம் உபாதிவடிவா விளங்கு மாறுபோல யதார்த்த வடிவமாகிய ப்ரக்ஞான விளக்கத்தைக் கண்டு அது நான் அது நானாகச் சின்னாட் பழகி வருவதால் நானென்பதற்கு இலட்சியார்த்தானுபவஞ் சைதன்னிய வடிவாக விளங்குதற்கு ஐயஞ் சிறிதேனு மின்றாமையின் ப்ரக்ஞானம் நானென்றே பழக நாடுக வெனவுங் கூறியவாறு காண்க. இதனாற் ப்ரக்ஞான வடிவாக விளங்க முயலுதி யென்றவா றாயிற்று.

வினா: எண்ணிறந்த கற்பகோடி காலம் யானல்லாதவற்றை யா னெனப் பழகிவந்த மயக்கஞ் சின்னாள் யதார்த்த வடிவை நானெனக் கண்டு பழகுவதால் அற்று யதார்த்த வடிவம் நானாக விளங்குமா?

விடை: குலாலனுக்குப் பலநாள் வேலை, தடிகாரனுக்கு ஓர்விநா டி வேலையென்றாற்போ லமையுமென வறிக.

வினா: இச்செய்யுளி லில்லாத கால வரையறையை யுரையிற் கூறியது யாதுபற்றி?

விடை: இம்மையிற்றானே யிந் நிரதிசயானந்தானுபவ நிலையைக் காணுதி யென்பது தோன்ற ப்ரக்ஞான நீயாகிற் பிரமமெனல் வேறி ல்லை, ப்ரக்ஞான மாகாயேற் பிரமமல வென்பதினாற் காண்க. (கஙஎ)

அ-ஸை.

அவ்வனுபவம் வாய்த்தற்குப் பழகுநெறி எங்ஙன மென்றாற் குத் தரங் கூறல்.

உபாதிகுண நாட்ட மொழிந்தறிவே நானென்
றுபாதிநா னென்பவெலா மோங்கா—தபாவமதாப்
பல்காற் பழகப் பழக வதுவாகை
ஒல்காது தன்னிலையி னுற்று.

(எ-து.) உபாதித் திரயங்களையுஞ் சாத்துவிகமுதலிய குணத்திரயங்களையும் நானென்னும் நாட்டமொழிந்து, தொன்றுதொட்டு அறுதியாகச் சனனங்கடோறும் வந்த உபாதித்திரயங்களே நானெனக் கொண்ட மிக்க திடபாவ மனைத்துந் தலையெடுக்காது பொய்ப்பட்டொழிய இமைப்போதும் ஓய்வின்றி யிடைவிடாது சைதன்னியத்தையே கண்டு இது நான் இது நானெனப் பலகால் அவித்தையொழியுமளவும் பழகப் பழக அச்சைதன்னிய வடிவாகவே விளங்குவை, சோர்வின்றித் தன்னிலையிற் றான் கலங்காது நின்று—எ-று.

இம்மையிற்றானே யுபாதி குண நாட்ட மொழிந்து சைதன்னிய நாட்டமே மேலிட மேலிட அதனாற் றொன்றுதொட்டு வந்த கற்பனை அகங்கார மனைத்துந் தொலையுமென்பது துணிபாதலின் உபாதி நானென்பவெலா மோங்கா தபாவமதா வென்றார். உபாதி நாட்டத்திற் பழகி அதுவானாற்போலச் சைதன்னிய நாட்டத்திற் பழகி அதுவாக வேண்டு மென்பது கருத்து. (கடுஅ)

அ-கை.

அது நானென்னும் அனுபவநிலை வாய்க்கிற் பிரமமாவ தன்று; நான் அது வென்னும் அனுபவநிலையும் வாய்க்கவேண்டுமெனல்.

நானவ தேதென்று நாடுங்காற் சிற்சோதி
யான வமிர்தா லதுநானும்—ஆனாற்போல்
நானதுவா மென்னுநிலை நண்ணிற் பிரமமதாம்
ஆனதுவே முத்தியென்ப தாம்.

(எ-து.) யானெனப்படுவ தியாது பொருளென நிட்டையிற் சிந்திக்குமிடத்து உதயமாவது சிற்பிரகாசமாகிய கெடாத ஞானமிர்தமாதலால் அதனைக் கண்டு கண்டு பழக அது நானாக விளங்கும். இங்ஙனம் அது நானாக விளங்கினதுபோல நான் அதுவாமென்னும் நிலையும் பின்னர் வாய்க்கும். வாய்க்குமாயின் அந்நிலையதே பிரமமெனப்

படுவதாம். அங்ஙன மாயதே நிரதிசயாநந்த வாழ்வாம். அந்நிரதிசயா நந்த வாழ்வாக விளங்குவதே முத்தியெனப்படுவதாம்—எ-று.

சிற்பிரகாசம் விளங்குவது பொறி கரணங்க ளொடுக்கியவிடத் தாதலால் நிட்டையையும், முத்தியென்பதற்கு வேறுபொரு ளில்லா மையால் நிரதிசயாநந்தத்தையும் வருவிக்கப்பட்டது. அது நானகா விடத்து நான் அதுவாகேன். ஆகாவிடத்துப் பிரமமென்பது நினைப்பு மாத்திரமாகவுஞ் சொன்மாத்திரமாகவும் முடியும். முடியவே, நிரதிச யாநந்த வாழ்வுஞ் சொல்லாநந்தமாக முடியும். முடியவே, விடயாநந் தப் பெருக்கே மேலிட்டுச் சனனமரணப் பிரவாகத்தில் அழுத்தும். ஆதலின் இங்ஙனங் கூறப்பட்டது. (கருகூ)

அ-கை.

இங்ஙனமாய நிலை வாய்த்தற்கு முன்னர் இப்பிறவி நீங்கின் யா தாகுமோ வென்றற் குத்தரங் கூறல்.

அதுநானு நானதுவா வாதற்குட் சன்மம்
இதுபோயி னென்செய்வ னெந்தாய்!—அதுகேட்கிற்
சிற்சொருப நாட்டஞ் சிதையாமை நின்கடமை
அற்பமகத் தாயினென்ன வாம்.

(எ-து.) அது நானுகவும், நான் அதுவாகவும் விளங்கும் அனு பவநிலை வாய்த்தற்கு முன்னரே இப்பிறவி நீங்குமாயின் யாது புரி வன், எனது ஞானத் தந்தையே! யென்று அதனைக் கேட்பையாயின் நினது கடமை சிற்பிரகாச நாட்டம் மாறும விருப்பதே. அங்ஙனம் மாறும விருக்குமிடத்து அணுவாகவேனும் மகத்தாகவேனும் எச்சன னம் வாய்க்கினும் அதனுல் நினக்கு என்ன ஆனி? ஒன்றுமில்லை யாத லால்—எ-று.

தன்னைச் சிற்பிரகாசவடிவாகக் கண்டுகொண் டிருக்கையில் தா னுதிப்பதும் மரிப்பதுந் தனக்கில்லாமையானும், அதுபற்றி யுண்டாஞ் சனன மரண பய மில்லாமையானும் அற்ப மகத்தாயின் என்ன

வாமென்றார். இதனாற் சிற்பிரகாச வடிவாக விளங்குவை யாயின் உனக்கு என் சனன மரண விசார மென்பதாயிற்று. (சகூ)

அ-கை.

அப்பயம் நீங்க இன்னமுந் திடமூறுத்தல்.

இந்நிலைதான் முற்றளவு மெப்பிறப்பு மானிடமே
அன்னியந்தா னுற்றிடினு மந்நிலைதான்—என்னவிதத்
தேனுமனி தத்தன்மை யெய்திமெல்ல மெல்லப்போய்
மோனநிலை யாக்கு முதிர்ந்து.

(எ-து.) இங்ஙனமாய சுவானுபவநிலை நிறைவேறுமளவுந் தனக்கு வந்தடையும் எப்பிறப்பும் மானிடப் பிறப்பேயாம். இஃதன்றியோர்கால் இடையிடையே அன்னியமாயுள்ள சனனம் வாய்க்கினும் அச்சுவானுபவ நிலையானது எந்த விதத்தாலாயினும் உத்தமமான மானிடத்தன்மை யுற்றுப் பையப்பையச் சென்று பிறவிகடோறும் அணுவணுவாகப் பெருகிப் பெருகி முதிர்ந்து மோனநிலைய தாக்கிவிடும்—எ-று.

உடம்பினின்று உயிர் போங்காலத்துச் சங்கற்பத்து அவாத்தடிப்பு எங்ஙனமாயதோ அங்ஙனஞ் சனிக்குமென்ற துண்மையாதல்பற்றி அவரவர் வழிபடு தெய்வத்தின்பாற் சிந்தையை அத்தருணத்தில் வைக்க முயலுதியென்று எச்சமயத்தரும் போதிக்கிறார்கள் ஆதலின் எந்நிலையதேனும் மரணவாதனையிற் கலங்கும். அங்ஙனங் கலங்கப் பழையவாதனை வரும். அதுவர அவ்வினத்துள் யாதொன்றாகவாவது அவாவவேண்டி வரும். அதுவர அக்கணத்தில் உயிர் பிரியின் அதுவாகச் சனித்து விட்டகுறையை முடிக்கும் ஆதலின் அன்னியந்தானுற்றிடினு மென்றார். இதனாற் சுவானுபவநிலையை விடாது முயலுதியென்றவாறாயிற்று. (கசுக)

அ-கை.

அத்திடமுறற்கின்னமும் பந்தம் விடுதியென் றிரண்டா வகுத்து அவை யிந்நிலையவெனக் கூறல்.

பந்தம் விடுதி பகர்கன்ம மோரிரண்டாம்
பந்தமித்தை யேபலனுப் பண்ணுமே—அந்த
விடுதிசத்தைச் சத்தாக்கி மீண்டுபிற வாமல்
சடசித்தைத் தானுக்குந் தான்.

(எ-து.) இன்னமுந் திடமுறுத்துவான் வேண்டி ஆன்மாக்களா லியற்றப்படுங் கன்மம் பந்தமெனவும் விடுதியெனவும் இரண்டு பாகுபாடுள்ளனவாக நிற்கும். இவற்றுள் பந்தமெனப்படுவது மித்தையாயுள்ளனவற்றையே பலரூபமாக அனுபவிக்கப் பண்ணும்; மற்றக் கன்மமாகிய விடுதியெனப்படுவது மெய்யை மெய்யாக விளங்கச்செய்து மறுபடியும் பிறவாமலிருக்கும்படி சடஞ் சித்தென்னும் இரண்டு விபரீத கற்பிதங்களைத் தன்மயம தாக்கிவிடும்—எ-று. தானென்பதசைநிலை.

மித்தையென்பது பொருளல்லவற்றைப் பொருளாகக் கோடல் அதாவது அனாத்மாவாகிய உபாதித் திரயங்களை யாத்மாவெனவும், பிரிய வடிவ மல்லாதவற்றைப் பிரிய வடிவமெனவும், திரிபுடி யல்லவற்றைத் திரிபுடியெனவும், திணை பால் இடமல்லாதவற்றைத் திணைபால் இடமெனவும், பெயர் வினை யல்லாதவற்றைப் பெயர் வினையெனவும் மயங்கி வழங்கல். இம்மயக்கம் அறுமளவும் இவற்றையே கர்த்ருத்துவ போக்த்ருத்துவமாகக் கொண்டு இடைவிடாது ஆன்மாக்கள் சனனமரணப் பிரவாகந் தவிராது அவற்றிற் பந்தப்படுதலின் அம்மயக்கத்தைப் பந்தமெனவும், அம்மயக்கத்தை யெதிரிட்டு நோக்கி யதனைக் களைதற்குரிய சாதனங்கள் இயற்றுதல் முதல் நிரதிசயானந்தாகார மாகுமளவுஞ் சமஸ்த கற்பிதங்களும் விடுமாதலால் அவ்விடுதியை விடுதியெனவும் பொருள்படக் கூறியவாறு காண்க. சடசித்து

பேதங்க ளிறந்து தன்மயமாக விளங்குவதே முத்தியாதலால் இதனி னும் மிக்கநிலை வேறு இன்றென்பது கருத்து. இதனாற் பந்தம் விடுதி யெனப்படுங் கன்மங்களின் நிலை யினைய வென்பதாயிற்று. (கசுஉ)

அ-கை.

இவ்விரண்டு கன்மமும் அற்றிருக்கும் நெறி யாதென்றற்குத் தரங் கூறல்.

இவ்விரண்டு கன்மமுந்தா னென்னாலென் றேயுணர்ந்தேன்
இவ்விரண்டு மற்றிருப்ப தெந்நெறியால்—அவ்வழிதான்
யாதென்னிற் சத்தசத்தின் யாதின்பாற் போக்கொழியில்
ஈதொழிய வேறொன் றிலை.

(எ-று.) மேற்கூறிய இரண்டு கன்மமும் உண்டாவது எனது அவாவின் முயற்சியினாலேயே யென்று ஸ்திரமாகத் தெரிந்துகொண் டேன். இங்ஙனந் தெரிந்துகொண்ட இவ்விரண்டு கன்மமும் அற்றி ருப்பது எந்நெறியாலோ அந்நெறிச் செல்லும் முறையா தெனக் கேட்கிற் சத்தசத்தென்னும் இவ் விரண்டினுள் யாதின்பா லாயினுஞ் சென்று அவ்வவ் வாகாரமாதலைத் தவிர்ந்து நிற்பையாயின் அஃதே அந் நெறியதாகும். இங்ஙனம் ஒழிந்த தந்திரத்தை யன்றி வேறோர் தந்திரம் எங்கணு மில்லை—எ-று.

தத்துவக் கூட்டங்க ளனைத்தும் ஒருங்கே நசித்து என தருவ மானது என்னாலாதலின் எனது யதார்த்த வடிவினின்றுந் தத்துவக் கூட்டங்க ளாகப் பிறழ்ந்ததும் என்னா லாதலே யென்பது அருத்தா பத்தி. இவ்விரண்டுந் தன்னை நோக்குங்காற் கற்பிதமாக முடியுமாத லிற் சத்தசத்தின் யாதின்பாற் போக்கொழியி லென்றார்.

வினா: சத்தைப்போல் அசத்தாமோ ?

விடை: ஆகாதென்க.

வினா: அசத்தைப்போற் சத்தையுங் கருதி அணுகாது இருப்பா யென்றது என்னை ?

விடை: சத்தைக்காட்டி அசத்தை விலக்குதல்போலத் தன்னைக் காட்டிச் சத்தை விலக்குவது சாம்பிரதாய நெறியாதல்பற்றி யென்க.

அ-கை.

சலியாது நிற்கவேண்டு மெனல்.

சலியாது நிற்றியெனிற் றானே தானுவை
சலிக்கிலறி யாமையே தானாய்—அலைத்துரும்பின்
மொத்துண் டலைவை முறையறிந்து நிற்றியெனிற்
சித்தஞ் சலியாது தேர்.

(எ-து.) ஏகதேசமாக நின்று சலியாது வியாபக விளக்கமாக நின்று பரிபூரணமாக விளங்குவையாயின் தானே தானாக விளங்குவை. அங்ஙனமாகாது புடைபெயரில் அறியாமையே தானாகப் பரிணமித்து அலையில் அகப்பட்ட துரும்புபோலச் சுகதுக்கத்தில் மொத்துண்டு அலைவை. ஆதலின் முறையா நெறியறிந்து கலங்காது நிற்க வல்லையாயிற் சித்தஞ் சலியாமற் சித்திரதீபம்போன் றொளிருமெனத் தெளிந்து கொள்ளுதி—எ-று.

தனது பரிபூரண திருட்டியை விடாது தான் விருத்தி, பரிணாமம், ஆரம்பம், விவர்த்தம் என்னும் நான்கு பிரகாரமாகத் தோற்றலை மெய்யெனக் கண்டு புடைபெயர்தலைத் தவிர்க வென்பார் சலியாது நிற்றி யெனவும், அங்ஙனந் தவிர்ந்தவிடத்து வேறாகாரமாதற் கிடமின்றித் தன்மயமாய் விளங்குதற்கு ஐயமின்றாதலிற் றானே தானுவை யெனவுங் கூறினார். இதனாற் றன்னைச் சமஸ்த கற்பிதங்களி னின்றும் வேறுபடுத்தி விளக்கிய விளக்கமே அக்கற்பனைகளாமென ஐயந்திரிபற இருவகை நிட்டையானு முணர்த்தத்தகும் அனுக்கிரக சாம்பிரதாய வொழுங்கைத் தழுவி நில்லென்பதாயிற்று. (கருச)

அ-கை.

என்றும் ஒருபடித்தா யிருக்கு நிலையது இனைய தெனல்.

முறையாவ தென்னவெனின் மூதறிவைக் காண
அறியாமை போல வறிவும்—வறிதேகத்
தானேதா னாகத் தனைத்தான்கண் டேயிருத்தல்
ஆன நிலையிதுவே யாம்.

(எ-து.) முறையென்று முன்னருரைத்ததின் கருத்து யாதெனக் கேட்கிற் கேட்டல் சிந்தித்தல் தெளித லென்னும் ஏதுக்களாலென்றும் பழமையாயுள்ள அறிவின் உண்மை வடிவைக் கண்டவளவில் அறியாமை எங்ஙனம் நீங்குமோ அதுபோல அறிவுந் தன்னைக் காட்டிற் றன்னாற் பயனின்றி விலகும். விலக, அப்போது தானே தானாக விளங்கும். அங்ஙனம் விளங்குந் தன்னைத்தான் கண்டுகொண்டிருத்தலே கெடாதநிலை யிதுவெனப்படும்—எ-று.

தீர்ந்தநிலை இதுவாமெனக் குறிப்பிக்க அங்ஙனங் கூறியவாறுயிற்று. (கசரு)

அ-கை.

இவ்வாறு தீர்ந்த நிலையைப் பிரதிவாதிப்பது வேதாந்தமாதலால் அதனை யுள்ளவாறு விசாரித்துத் தெளிந்த வேதாந்தியின் மகிமையை வியந்து புகழ்தல்.

எல்லாஞ் சிவமெனற்கு மெல்லாநா னென்றற்கும்
எல்லா மலவெனற்கு மீங்கெவரின்—வல்லான்கேள்
வேதாந்தம் போலியல வேதாந்தி யேகண்டாய்
போதாந்த முங்கழலப் புக்கு.

(எ-து.) உபநிடதார்த்தத்தை மெய்ப்பட எவர்க்கும் புலப்படுத்துவான் வேண்டிச் சர்வமும் பிரமமென்றற்கும், சர்வமும் நானேயென்றற்கும், சர்வமும் அல்லவென்றற்கும் ஞானநந்தாதீதமுங் கற்

பிதமெனக் கழலவெருவாமல் வெளிப்பட்டு இங்கு எவரினும் மிக்க வல்லவனுவானைக் கேளுதி ; வேதாந்தப்போலி யாவாரல்லர். மெய்யுணர்வுணர்ந்த வேதாந்தியே யெனக் காணுதி—எ-று.

அநிர்த சட துக்கமாயுள்ளவற்றை யெல்லாம் அபேதகாரண காரிய வாதத்தால் வஸ்துபரிசோதனை செய்யுமிடத்துப் பூர்வபட்ச சித்தாந்தமாக்கி அவற்றின் முடிவிலும் இடையிலும் முதலிலும் அவற்றைச் சின்மாத்திரமாக்கிக் காட்டுதலின் எல்லாஞ் சிவமெனற்கெனவும், தன்னை யன்றி யறிவும், அறிவை யன்றிச் சங்கற்பமுஞ், சங்கற்பமன்றிச் சமஷ்டி வியஷ்டி தோற்றமும், அத்தோற்றத்தை யன்றி யெழுவகைப் பிறப்பும், அவ் வெழுவகைப் பிறப்பை யன்றி ஊர்வன நடப்பன பறப்பன இருப்பனவும், இவற்றையன்றி ஆண் பெண் அலி யென்பனவும், இவற்றை யன்றிக் காமவெகுளி மயக்கமும்,இவற்றை யன்றி மனைவியாதிகளும் கிரகக் கிராமாதிகளும் தனதானியாதிகளும் சுக துக்காதிகளு மில்லையாதலின் இவை யாவுந் தனது சொரூபமெனவும், அன்றெனத் தடுக்கில் ஆமெனவும், சுருதியாதிகளால் வைப்புறுத்தத் தகும் ஞானனுபவத் திராணி இருத்தல் பற்றி யெல்லா நானென்றற்கு எனவும், பொன்னுலாய பணி யனைத்தும் பொன்னேயினும் கற்பிதவடிவங்கள் பொன்னின் யதார்த்தவடி வன்றாதல் போல ஞப்தி பிரியத்தாலாய செகமுதலியவை ஞப்தி பிரியமயமாயினும் மண்ணாதி பிரகிருதி ஈறாயுள்ள விகாரவடிவங்கள் சைதன்னிய வடிவாகா ஆதலின் எல்லாமலவெனற்கு எனவும், சுருதி யுத்தி யனுபவத்துக்கு முரணாக நடிக்கும் வேதாந்திகளை வேதாந்தப்போலி யெனவும், ஞாஞேதயம் ஆநந்தம் ஆநந்தாதீதம் சர்வசாட்சி என்னும் அனுபவம் ஒன்றன்பின் ஒன்றாக உதித்தபின்னர் இங்ஙனமாய் இப்போது இருக்கின்றா மென்னும் நிலையும் வாசனையாதலின் அதுவும் நசிக்கவேண்டுவது பற்றி போதாந்தமுங் கழல எனவும் கூறியவாறு காண்க. இதனால் அனுபவ மொன்றில்லாத வேதாந்திக ளெல்லாம்

போலிவேதாந்திக ளெனவும், தன்னனுபவத்தைச் சுருதி யுத்திகளிற் காட்ட வல்லவன் யதார்த்த வேதாந்தி யெனவும் பொருள்படுமாறு காண்க. (கசுசு)

அ-கை.

நின்போன்ற மகான்களைப்போல அறிவீனச் சமயவான்களும் பிறப்பில்லையென்றும் உண்டென்றுங் கூறுமாறு தெளிந்துகொள்ளுவான் வேண்டி அதனை யாசிரியரிடத்தில் தெரிவிக்கத் தொடங்கல்.

ஐயமெலா நீக்கியெனை யாண்ட பெருமானே
மெய்யனே நின்னையன்றி வேறில்லை—வையும்
பிறப்பிலையுண் டென்பதற்குப் பேதையரு நின்போல்
இறுத்தறனைச் செப்புவன்யா னிங்கு.

(எ-து.) சகல சந்தேகங்களையும் போக்கி யடியேனை யோர் பொருளாகத் தடுத்தாட்கொண்ட எமது பெருமானே! மெய்யை விளக்க எழுந்தருளிவந்த மெய்யனே! உன்னைத்தவிர வருத்துகின்ற பிறப்பில்லை யென்றும் உண்டென்றும் பிரதிவாதிப்பதற்கு வேறொருவரும் எங்கணும் இல்லவேயில்லை. இங்ஙனமிருக்கத் தன்னை உணராச் சமயிகளாகிய பேதையரும் உன்னைப்போலச் சொல்லும் விதத்தை யான் இங்கு சொல்லுவன் கேட்டருடி—எ-று.

ஞாயத்தால் பிறப்பில்லை யென்றும் உண்டென்றும் முழுதுஞ் சாதிக்க வகைதெரியாததை வேதத்தின்மேல் ஏற்றி வேதஞ் சொல்லவில்லை யெனக் கூறும் அறிவிலிகளாதலின் பேதையரு மென்றார். நின்போல் இறுத்தறனைச் செப்புவன்யா னிங்கென்றதனால்

“கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி, தானு மதுவாகப் பாவித்துத்-தானுந்தன், பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே, கல்லாதான் கற்ற கவி” என்னும் பொருளைப் புறம்போக்கார் என்பதைக் குறிப்பாற் கொண்டாம். (கசுஎ)

அ-கை.

இதுமுதல் ஒன்பது கவியானும் அங்ஙனந் தெரிவித்தலாலாம் வினு விடைகள் இனைய எனக் கூறல்.

இப்பிறவி முன்பின் னிலையென்பர் சென்மமெனல்
எப்படிநா னேற்பதெனி லீங்கிதுகேள்—இப்பிறவி
வந்தவகை யெந்தவகை மாளாத்தே வாலென்னில்
இந்தவகை யாலவையு மெண்.

(எ-து.) அவர்கள் இப்பிறவிக்கு முன்னும் பின்னும் சென்மமென்பது இல்லவேயில்லை யெனக் கூறுவர், அதனை யான் எங்ஙனம் ஏற்பதென்றலோ? அவர்கள் சொல்லும் விதத்தை யான் கூற இங்கிதனைக் கேளுதி. அஃதெவ்வாறெனின் இப்பிறவிக்கு முன் பின் பிறவி யில்லாமற் போனாற் போகட்டும். இப்பிறவி வந்தவாறு எந்த விதமென்று அவரைக் கேட்கின் அவர்கள் சொல்லுவது: அழியாத கடவுளினு லென்பர். இங்ஙனங் கூறில் இவ்வாறே அவையுங் கொடுப்பாரென்று எண்ணுதி யென்று யாங்கூற—எ-று.

கடவுளால் இச்செனனம் வந்ததென்றால் அவராலேயே முன் பின் பிறவிகள் வரச் சந்தேகமில்லை யென்பதைக் குறிப்பித்தது அருத்தாபத்தி. இதனால் அவர் தன திட்டப்படி இப்பிறவியைத் தந்ததெனின் அவையும் அவரிட்டப்படியா மென்பது விளங்கப்பெற்றும். பெறவே செனனங்கட்கு அவரிட்டம் காரணமாயிற்று. (கசுஅ)

அ-கை. இ-து.

முன்பிறப்புண் டென்ப மொழியிலின்ன னாளென்று
நன்கிப் பிறவிதனி னுமறியில்—தன்னை
இனையனெனக் கேவலத்தி லின்னான்முன் னென்பம்
அனையதரி தேலிதுவு மற்று.

(எ-து.) அதற் கவர்கள் முற்பிறப்புற்றது நாமாதலால் முற்பிறப்புற்ற நான் இன்ன நான் என்று இப்போதறிந்து மொழியவல்லையாயின் முற்பிறப்புண்டு எனத் தடையின்றிக் கூறுதும் என்பர். அதற்கு யான் இப்பிறவியிற்முனே நல்லுறக்கமாகிய கேவலத்தில் தன்னை இன்னுனென நன்குணர்ந்து உணர்த்த வல்லமாயின் முற்பிறப்பில் இன்ன நானெனக் கூறுது மெனக் கேட்க, அதற்கு அவர்கள் அதனைச் சொல்லுதல் யாவர்க்கும் அரிதெனக் கூற அதற்கு யாமும் அங்ஙனம் அஃதரிதாகில் முற்பிறப்பில் இன்னுனெனக் கூறுதல் இதுவும் அத்தகைய தாகுமெனக் கூற—எ-று.

இந்தப் பிறப்பொன்றிலேயே கேவலங்கடோறு மின்ன நானென்றும் இத்தோற்றத்தான் என்றும் ஆண் பெண் அலி யென்பவற்றுள் இத்தகைய னென்றும் இன்ன வருணத்தா னென்றும் இன்ன ஆசிரமத்தா னென்றும் இத்திறத்தா னென்றும் உணரப்படாதபோது முன் செனனத்தில் இத்தகையன் நீநானென்று எப்படி உணர்த்தத் தகுமென்பார் இங்ஙனங் கூறினுரென்று உய்த்துணர்ந்து கொள்க.

வினு: இப்பிறப்புக்கு முற்பிறப்பு கேவலத்தைப்போ லாமோ?

விடை: ஆம்.

வினு: ஓரவஸ்தாக்காட்சி அவ் வவஸ்தை உதித்ததுமுதல் ஒடுங்கு மளவும் காணப்பட்டு மற்ருேர் அவஸ்தையின்கண் தோற்றப் படாதேனும் விழித்தவிடத்து ஏனைய இரண்டவஸ்தாக் காட்சிகளையும் நிதானித்துச் சிறிதாவது சொல்லக்கூடியதா யிருக்க முன்பிறப்பு இனையதென நிதானித்துச் சிறிதாவது சொல்லக்கூடாத தென்னை?

விடை: அங்ஙன முணர்ந்தறிவித்தல் திரிகால ஞானம் பெற்றவிடத் தன்றிக் கூடாது.

வினு: அவ்வாறேன் கூடாது?

விடை: ஏனைய விரண்டவஸ்தைகளில் இன்ன நானு யிருந்தேனென்று சாக்கிரத்தில் உணர்த்தும் தர்ம்மம் பிறவிக்கு உரித்தாதல்

போல முன்பின் பிறவிகளின் நிலையை உணர்த்துந் தர்ம்மம் திரிகால ஞானத்திற்கு உரித்தாமாதலின்.

வினு: அந்த ஞானம் பிறவி சம்பந்தத்துக்கு அன்னிய மன்றாய் இருக்க உயிர்கட்கு இன்றாயது என்னை ?

விடை: பிறவிசம்பந்த மாயினும் அது வாய்ந்தற்குரிய தவமியற் றாதவிடத் தெங்ஙனம் வாய்க்கும்.

வினு: இங்ஙனம் கூறியதா லென்ன அர்த்த மாயிற்று ?

விடை: திரிகாலஞான முள்ளபோது மில்லாதபோதும் முன் னும் பின்னும் பிறவிக ளுண்டென்பது ஸ்திரமாமெனப் பொருள் படுமாறு காண்க. (கரு௬)

அ-கை. இ-து.

படைப்பவரா தாமென்னிற் பட்சபாத மேனே
படைப்பவரா திட்டமென்பர் பார்க்கில்—மடத்தன்மை
ஆனல் விதிவிலக்கா லாவதென்னை தக்கபலன்
தானே தருமென்பர் தாம்.

(எ-து.) முன்னர்க் கூறியவாறே சிருட்டித்தல் கடவுள் செய்கை யாமெனக் கூறில் ஒருவரை உயர்த்தியும் ஒருவரைத் தாழ்த்தியும் படைக்கும் பட்சபாதத்தன்மை யிவருக்கு வருதற் கேதென்னையோ? என அவரைக் கேட்கில் அங்ஙனம் படைத்தல் அவரதிட்டமா மெ னக் கூறுவர்: அவ்வாறு கூறுவதை யுய்த்துணரு மிடத்து அஃது மிக்க மடத்தன்மையாம். எங்ஙன மெனின் இங்ஙனம் படைத்தல் அவரதிட்டமானல் அவர் வாக்கியமாகிய விதிவிலக்கை நம்பித் தழுவி மிக்க பயபத்தியால் இயற்றுவதாலாய பயன் என்னையோ எனக் கே ட்கில் அதற்கு அவர்கள் அது தானே அவரவர் முயற்சியளவுக்குத் தக்க பலனைத் தந்தே விடுமெனக் கூறுவர்—எ-று.

முன்னும் பின்னும் இப்போதும் உயர்வு தாழ்வாகப் படைப்பது அவரிட்டமானல் அவர் வாக்கியத்தைத் தழுவி நடப்பதாலாய பய

னென்னை யென்ற வினாவிற்குத் தக்க விடை இன்றாமையின் மடத் தன்மை யெனப்பட்டது.

வினா: சில சமயிகள் இப்போது படைக்கப்பட்டு இருக்கிற தனு வாதி நான்கு மவரது இட்டத்தால் எனவும், இனி வருவது அவரவர் முயற்சியா லெனவும் கூறுதல் தக்க தன்றோ ?

விடை: இனித் தனுவாதிகள் வருதற்கு அவரவர் முயற்சியே காரணமாயின் இப்போது வந்திருக்கிற தனுவாதிகட்கு அவரவர் முய ற்சியே காரணம் எனக் கூறவேண்டும். இங்ஙனம் கூறாவிடத்துக் காரணபேத வழுவாம்.

வினா: இங்ஙனம் கூறுவது அவரவர் வேதமன்றோ?

விடை: முன்பின் பிறழ்ந்து கூறுவது வேதமன்று.

வினா: இது கடவுள் வாக்கிய மன்றோ?

விடை: கிஞ்சிக்ஞ சிதாபாச சீவர்கள் ஓர் நூல் இயற்றப்புகில் முன் பின் தழுவி நோக்கிச் சொல்லுதல் அவர்கட்கு உண்டாயிருக் கச் சர்வக்ஞத்துவ முதலிய உயர்குணங்களை உடையவருக்கா இல்லா திருக்கும்; இஃது அவர் வாக்குமன்று கற்றுணர்ந்தோர் வாக்குமன்று கல்லாத மடையனும் இங்ஙனங் கூறான் ஆகையால் இதனை வேத மென்போர்க்கெல்லாம் நரகமேயன்றி மேல் கதியெனலில்லையாகும்.()

அ-கை. இ-து.

வினை தருவ தாயின் வினையேதிங் காதி
அனைய தரி தாமே லறையேல்—வினை முதலென்
றெப்படி தான் சொல்வதெனி னீங்குணர்த்தல் ஞானியன்றிச்
செப்பவல்லா ரில்லையெனத் தேர்.

(எ-து.) அவரவர் வினை யவரவர்க்குத் தக்கபலனைத் தருவதா னால் அனாதியில் வினைவருவதற் கிங்கு ஏதென்னையோ எனக் கேட் கில் அதற்கவர்க ளதனைச் சொல்லுதல் யாவர்க்கும் அரிதாகுமென்பர்.

இங்ஙன மரிதாளுல் பிறப்பு நன்மை தீமை யென்பவைகளுக்கு விளை காரணமென்ளுது இருக்கவேண்டும். அங்ஙனங் கூறினுல் எங்ஙனந் தான் கூறுவதோ? எனின், இவ்வாருனவைகளை இங்குணர்த்தி நாட்டத்தக்கவன் ஞானியேயன்றி யிதனை நாட்டவல்லவர் வேறுளரோ? இல்லையெனத் தெளிதி—எ-று.

வேதாகம புராண இதிகாச கீதைகளுக்கு உயிர்ப்பானது எது வோ அதனைத் தீரத் தெளிந்தவன் ஞானி யாதலால் அவ னொருவனுக்கேயன்றி யேனையோர்க்கு எல்லாஞ் சொல்லுந்திறம் இன்ருதல் பற்றி யீங்குணர்த்தல் ஞானியன்றிச் செப்ப வல்லா ரில்லை யெனத் தேரென்ருர். (கஎக)

அ-கை. இ-து.

இயற்கைசில ரென்ப ரியற்கையோ வீடு
செயற்கையெனி லற்ருஞ் செகத்தும்—மயக்கொழிக
இம்மூன்றும் விட்டிருப்ப ரிவ்வழக்கா லென்னசிலர்
தம்மாலே தாங்கெடுவர் தான்.

(எ-து.) இதுபற்றிச் சிலர் இவற்றை அலையாதிகள்போல் இயற்கை யென்பர் அங்ஙனங் கூறில் வீடு இயற்கை யாகுமா? செயற்கை யெனின், செகத்தும் அத்தன்மைத்தாகும்; ஆதலின், அங்ஙனமாகக் கொள்ளு மயக்க மனைத்தும் விட்டொழிக. இங்ஙனமாய வழக்கினுல் கடவுள் வினை சுபாவமென்னும் இம்மூன்றையும் சிலர் விட்டிருப்பர் என்று மாணுக்கன் கூற, விடுவராயில் தம்மாலேயே தாங்கள் கெட்டுப் போவார்களென வறிக—எ-று.

தான் அசை. கடவுள் உண்டென்று ஏற்காவிடில் பயபத்தியும், வினை யுண்டென்று ஏற்காவிடின் விதிவிலக்கும், சுபாவமென்று ஏற்காவிடில் நிர்ச்சிந்தையும் இல்லாமற்போம்; இல்லாமற்போகவே தேகமே யாத்மா போகமே முத்தியெனவும், கண்டதே காட்சி கொண்டதே கோலமெனவும் திடங்கொண்டு கண்டபடி நடந்து உயிர்க்குறுதி யிழப்பர் ஆதலின் தம்மாலே தாம் கெடுவரென்ருர். (கஎஉ)

அ-கை. இ-து.

எப்படிதான் சொல்லினுமிங் கேற்றற் கிழுக்கென்றால்
எப்படிதா னுய்யும்வகை யென்றாலோ—செப்புவன்கேள்
எல்லாஞ் சரியல்ல வெல்லாஞ் சரியாகும்
நல்லா யவசரத்தா னுடு.

(எ-து.) எவ்வாறு கூறிடினும் இங்கு அவற்றை யேற்றற்குத் தடையா யுள்ள குற்றங்கள் இன்னின்னவா மெனக் கூறின் உய்யும் வகைதான் எங்ஙனே? எனக் கேட்டிடிலோ அதற்கு யான் கூறுவதைக் கேளுதி. இப்பிறப் புண்டென்பதைப் பற்றிக் கூறிய அனைத்துஞ் சரியல்லன வாகவு மிருக்கும் சரியாகவு மிருக்கும் நற்குணமுள்ள மாணாக்கனே, அந்தந்த அவசரத்தாலெனக் கண்டுணர்தி—எ-று.

தனக் கன்னியமான வடிவைத் தானென்ற அவசரத்தில் பிறப் புண்டெனவும், தன்னைத் தவிர சடசித்துக்கள் வேறு பொருளாகக் காணாது தானாக விளங்கும் அவசரத்தில் பிறப்பில்லை யெனவும், வியஷ்டி உபாதி குணந் தொழிற்குக் கர்த்தா சீவ னுண்டாயிருத்தல் பற்றிச் சமஷ்டி உபாதி குணந் தொழிற்குக் கர்த்தா ஈசுரன் உண்டாயிருக்கவேண்டு மென்னும் அவசரத்தில் கடவு ளுண்டெனவும், அவத்தைகளும் அவ்வவத்தாக் காட்சிகளும் அவரவர் சங்கற்பிக்கும் சங்கற்ப வடிவங்களும் அதுபற்றி யுண்டாம் வாசனை வடிவங்களும் பாவாபாவங்களும் சடமாதலினானும் கண்டு கண்டு மறைவதினானும் இவற்றைத் திரிசியமென்றும் இவற்றை அங்கங்கேயிருந்து அந்தந்த அவசரத்தில் அறிதலினானும் அவைபோல் மாறாததினானும் இதனைத் திருக்கென்றும் கொள்ளப்படும் அவசரத்தில் இவ்விரண்டைத் தவிர வேறில்லாமையால் கடவு ளில்லையெனவும், திருக்குவைக் கடவுளென்றாலோ? இங்ஙனங் கணிப்பவன் சிந்தித்தபோது உண்டாயும் சிந்தியாதவிடத்து இவனுக்கு இன்றாயும் காணப்பட்டு மறையும். இங்ஙனமாய தர்மம் திரிசியத்துக்கு ஆதலால் இதுவும் திரிசியமெனப்படும். சிந்

தனை யாதாகத் தடித்ததோ அக்கணம் அவனுக்கு அஃதுண்டாயும் மற்றவை யின்றாயும் இங்ஙனம் மாறுவதால் சிவம் இன்றாயது அன்றெனிலோ? சிந்தனையைத் தள்ளிச் சுசு சிவ பரம் இன்றென்பதும் உண்டென்பதுமான விசாரம் யார்பாலும் காணுமையால் அஃதுடன்பாடன்று. அஃது சிந்தனாதீத மெனிலோ? அச்சிந்தனாதீதயாக விளங்குவது தானே யன்றி வேறின்மையால் அஃது யதார்த்தமன்று. இது நிற்க. தனுகரண புவனபோகங்கள் எழுவகைத் தோற்றச் சராசர உயிர்கட்கு ஒக்க இருக்கினும் ஒவ்வொரு தோற்ற உயிரும் தத்தமக்குள் பற்பலவாக இந்நான்கால் மிதமின்றிப் பேதித் திருப்பதையும், தேகபோக கன்ம அபிமானங்கள் ஒருயிருக் குள்ளவாறு மற்றோர் உயிருக்கு இல்லாததையும், உண்டெனின் காலம் நியதிமுதலியவை இல்லாமற் போகவேண்டும். அங்ஙனம் இல்லாமற்போக வில்லையே ஆதலின், உய்த்துணருமிடத்து ஒவ்வோர் உயிருக்கும் கன்ம முள்ளவும் தேகபோக அபிமானமிருக்கு மாதலினானும், அக்கன்மம் நீங்கிய விடத்து இம்மூன்று மில்லா திருப்பதைப் பிரத்தியட்சமாய் இறப்பாரிடத்துக் கண்டு வருவதினானும், கன்மம் சடமு மசேதனமுமாய் இருப்பினும் இராகாதிகளை விட்டு இருக்குமுயற்சி சுகத்தையும், அவற்றை விளைவிக்கு முயற்சி துக்கத்தையும், அரச னாக்கினைக்கு அடங்கு முயற்சி சுகத்தையும்,அடங்கா முயற்சி துக்கத்தையும் தருதற்கேதுவாதல் போல இதுவும் ஏதுவாதற்கு ஐயமின்றாதலினானும் இக்கன்மம் இருவகைப்படும். அவற்றுள் உயிர் அவாவிய வண்ணம் பலன் தருவது பிராரத்துவ கன்மமெனவும், தராதது மறுமைக்கு வித்தாகிய சஞ்சித கன்மமெனவும், சான்றோரால் வழங்கப்பட்டு இப்பிறப்பில் நிறைவேறாத அவா மறுபிறப்பையும் முற்பிறப்பில் நிறைவேறாத அவா இப்பிறப்பையும் தந்தே வருதலினானும் இங்ஙனம் தருவது வினையாதலின் இவ்வவசரத்தில் வினையுண்டெனவும்; பிரக்ஞா சொரூபம் தன்னையே தேகாதி பிரபஞ்சங்களாக்கித் தனக்கன்னியமாகக் கண்டு களிப்பதே யன்றி வேறின்மையானும், அங்ஙனம் வேறாகக் காண்பதையெல்லாம்

தனித்தனி விசாரித்துப் பார்க்குமிடத்துச் சமஸ்தமுஞ் சின்மாத்திர மாகவே விளங்குதலினாலும், இவ்வாறுள்ள பிரக்ஞா சொரூபத்திற்குப் பிரவிர்த்தி நிவிர்த்தி யுள்ளதுபோல் காண்டலே யன்றி யுண்மையாய் இல்லாமையினாலும், இவ்வவசரத்தில் வினை யின்றெனவும், பிறக்கிறதும் இறக்கிறதும் சுகதுக்கத்தை மாறி மாறி அனுபவிக்கிறதும் சகத்துக் காணப்படுகிறதும் காணும விருப்பதும் அதனை யறிகிறதும் அறியாம விருப்பதும் இதனைத் தெளிவதும் தெளியாம விருப்பதும் எழுவகைத் தோற்றத்துள் ஒன்றாகிறதும் ஆகாம விருப்பது மாகிய இவைகள் மாயாவாழ்வு ஆதலினாலும் இங்ஙன மிருத்தல் இதனுக்கு என்றுஞ் சுபாவ மாதலினாலும் சுபாவத்தை விசாரித்தலால் பயனின்றாமையானும் எனக் கண்டு நிர்ச்சிந்தையா நிற்கும் அவசரத்தில் சுபாவமெனவும், சுபாவமெனக் கொள்ளின் கண்டவற்றை யெல்லாம் அவாவுதலும் அவ் வவாவுதலால் இச்சா ஞானக் கிரியைக ளிடைவிடாது இயற்றுதலும் அங்ஙனம் இயற்றுதலால் தனதெண்ணம் கைகூடில் சுகித்தலும் கூடாவிடத்துத் துக்கித்தலும் இல்லா திருக்கவேண்டும்; அங்ஙன மில்லாமற் போகவில்லையே. ஆதலின், இவ்வவசரத்தில் சுபாவம் அன்றெனவும் பொருள் தோன்றக் கிடத்தலின் அவசரத்தா றென்றார். இங்ஙனமாய நிலையெல்லாம் மகான்களுக்கே யன்றி யேனையோர்க்குத் தெரியா தென்பது கருத்து. (௭௩)

அ-கை. இ-து.

ஆன்மாப் பிறந்திறக்க வாரேனுங் கண்டதுண்டோ
ஆன்மாப் பிறக்கினன்றோ வாங்கிறக்கும்—ஆன்மா
அகண்டமதா லீதெல்லா மாபாச மென்னின்
புகுந்துவரக் காண்போம் புகல்.

(எ-து.) இன்னும் ஆசிரியர் ஆன்மாவானது பிறக்கவும் இறக்கவும் ஆராவது கண்டதுண்டோ? இஃதன்றியும் ஆன்மாவானது எங்கேயாவது பிறந்தா லல்லவா அங்கே யிறக்கும் அது பரிபூரண வஸ்து

ஆதலால் இவ்விரு தர்மத்தையும் அதன்மேல் ஏற்றிச் சொல்லு மீதெல்லாம் ஆபாச வசனமே யன்றி வேறல்ல எனக் கூற, அதற்கு மாணுக்கன் அங்ஙனமாயின் ஆன்மாவானது உடல்தோறும் புகுந்து அதில் சுக துக்கத்தால் தத்தளித்துப் பின்னர் அதில் நின்று வெளிப்பட யாவருங் கண்டுகொண்டு இருக்கிறோமே யிங்ஙனம் இருக்க எங்ஙனம் இல்லையெனக் கூறுவது அதனைத் தெரித்தருடி—எ-று.

ஆன்மாக்கட்கு லட்சியார்த்தம் உபாதித்திரயமாதலால் ஆன்மாப் பிறந்திறக்க வாரேனுங் கண்டதுண்டோ? எனவும், பந்த கன்மத்தால் உபாதிகள் செனிக்கவும் விடுதி கன்மத்தால் அவை நசிக்கவும் தொன்று தொட்டு வழங்கி வருதலால் ஆன்மாப் பிறக்கின்றோவாங்கிறக்குமெனவும், திரிகரணங்களாலும் ஆன்மா இன்னளவினது எனக் கணிக்கப் படாமையால் ஆன்மா வகண்டமதாலெனவும், ஏற்றற் குடன்படாத உபாதி குணங்களை ஆன்மாவுக்கு ஏற்றிச் சொல்லுவன எல்லாம் விவர்த்தம் ஆகலின் ஈதெல்லா மாபாச மெனவும், ஓர் குடம்பையுள் நின்றுடுவோன் புறம்போந்த விடத்து அக்குடம்பை புடை பெயர்ச்சியும் உணர்தலும் இன்றி வறிது கிடக்குமாறுபோன்று ஆன்மாவும் உடலும் இங்ஙனமிருப்பதை யாமனைவரும் கண்டு வருதலின் புகுந்துவரக் காண்போ மெனவும், இதனை மறுப்பது யாவர்க்கு மரிதாதலின் புகலெனவும் கூறினார். (கஎச)

அ-கை. இ-து.

நீர்விழுந்து தத்தளிப்பா னேரில் கதிரவன்மேல்
கார்நுழைந்தே யோடுங் கதிர்மதியென்—றோர்ந்துத்
துணரார்போற் கூறே லுபாதிநாட் டத்தால்
உணர்வுநாட் டத்தை யொழித்து.

(எ-து.) ஆன்மா உடல்தோறும் பிரவேசித்தலும் அதில் நின்று சுகதுக்கத்தால் மொத்துண்ணலும் அவ்வுடல் விட்டுப் புறம்புகுதலும்

எனக் கூறுதல் எங்ஙன மிருக்கின்ற தெனின், நிகரற்ற சூரியன் சலத்தில் விழுந்து தத்தளிக்கிறு னென்றும், சோடச கலைகளை யுடைய சந்திரன் ஆகாயத்தில் மேகங்களில் நுழைந்து நுழைந்து விரைவாய் ஓடுகிறு னென்றும் ஆராய்ந்து உற்றுணராதார் கூறுமாறுபோலும். அவர்போல் நீயும் ஆன்மாவை நாடு நாட்டத்தை விட்டொழித் துபாதியை நாடு நாட்டத்தா லங்ஙனங் கூறு தொழிக—எ-று.

சலத்தில் தோற்றுவது பிரதிவிம்ப சூரிய னென்று அறியாதார் சூரியன் நீரில் தவறி விழுந்து தத்தளிக்கிறு னெனவும், உற்று நோக்காததற்கு முன்னே மேக ஓட்டமென் றறியாதார் சந்திரன் விரைவில் மேகங்களில் நுழைந் து நுழைந் தோடுகிறு னெனவுங் கூறும் உபமானம் தோற்றல் மாத்திரமே யன்றி யுண்மை யாகாது என்பதைக் குறிப்பிக்க நின்றது. நம்மை நா முற்றுப் பாராத தோடமே யன்றி வேறு இன்றென்பது கருத்து. இதற்குப் பிரமாணம்.

"நம்மைநாம், உற்றுப்பா ராதிருந்தோ மல்லா லொருக்காலும் இற்றுப்போ ஞேமோ வியாம்" என்னும் சொரூப சாரத்தாற் காண்க.

அ-கை. இ-து.

உடலிலக்கா லன்றி யுயிரிலக்கிற் காணு
துடலன் றுயிரதனு லோதில்—உடற்னக்கோ
சென்மமெனி லன்றதற்குஞ் சித்துகலப் பின்றியக்கால்
சென்மமெதற் கிப்போது செப்பு.

(எ-து.) ஆன்மா உடல்தோறும் புகுந்துவரக் காணப்படுகிறது மெய்யே ஆயினும் அது தேக லட்சியத்தா லன்றித் தேகி லட்சியத்தால் அங்ஙனங் காணப்படாது. இங்ஙனம் காணப்படும் பிராந்தி தேகத்தினலன்று தேகியா லெனக் கூறின் அதுநிற்க. ஆன்மா பரிபூரணமாதலால் பிறவி அதனுக்கு அன்று உடலுக்கோ? எனில், சித்தாகிய

ஆன்மா சம்பந்தப் படாவிடத்து உடலுக்கு மன்று. ஆதலில் சென்ம மெதற்கெனக் கூறுவது? இப்போது சொல்லுதி—எ-று.

பிராந்தி விளைவுக்குக் கர்த்தா சித்தாதலின் உயிரதனுலெனவும், சித்து சம்பந்தத்தால் சுக்கில சுரோணிதம் உருக்கோடலும் அவ்வுரு வளர்தலும் கருக்குழிநின்று வெளிப்படலும் வாலப்பருவம் குமாரப் பருவம் வயோதிகப்பருவங்களை அவ்வுரு நிரைநிரையே அடைதலும் உண்மையாதலை விளக்கச் சுக்கில சுரோணித முருக்கோடல் முதல் வயோதிகம் ஈறுக்கிடந்த பருவங்களினும் எந்தக் கணத்தேனும் பிரா ரத்த முடிந்த விடத்துச் சித்துசம்பந்த நீங்கும்; நீங்கவே அவ்வுரு மாறிப்போம். அங்ஙனம் போதலை யாவருங் கண்டுகொண்டு வரும் பிரத்தியட்சப் பிரமாணம் ஒன்றே போதுமான சாட்சியாதலால் அன் றதற்குஞ் சித்துகலப் பின்றியக்கா லெனவும், பிறப்பு ஆன்மாவுக்கெ னிலோ? என்று மொருபடித்தாய்ப் பரிபூரணமாய் விளங்கி நிற்றலிற் பொருந்தாது. உபாதியுடல் மூன்றனுள் தூலத்துக்கெனிலோ? அசே தனமுஞ் சடமுமாதலிற் பொருந்தாது. சூக்கும தனுவுக்கெனிலோ? அபஞ்சீகிருத பஞ்சமகா பூதத்தை யன்றித் தனித்தனித் தனக்கென ஓர் வடிவ மில்லாமையானும், உண்டெனினும் சித்து சம்பந்த மின் றியவிடத்து இயங்கக் கூடாமையானும் பொருந்தாது. காரணதனு வாகிய அவித்தைக் கெனிலோ? வித்தையை யன்றித் தனக்கெனச் சொரூப மொன் றில்லாததினானும், உண்டெனின் நாட்டபேதத்தை யன்றிப் பொருள் பேதம் உண்டாயிருக்க யாவராலேனுங் காட்டக் கூடாததினானும் பொருந்தாது. இது பற்றிச் சென்ம மெதற்கு இப் போது செப்பெனவுங் கூறினர். இதனாற் பிறப்பு உண்டானு லன் றோ இன்னதெனக் கணிக்கலா மென்பதாயிற்று. (௧எ௬)

அ-கை.

முன்னர் ஒன்பது கவியானும் முடிந்த சித்தாந்தத்தை வைப் புறுத்தல்.

தனுமூன்று மன்றாகுந் தன்விகற்ப மன்றி
அனுமானத் தன்றுண்மை யாகும்—தனையாயின்
பாம்பும் பழுதையும்போற் பார்வைபே தத்தாலாம்
நாம்புகலம் வேறுளதா நாடு.

(எ-து.) முன்னர்க் கூறிய சித்தாந்தத்தை நிலைநிறுத்துவான் வேண்டிச் செனிப்பது ஆன்மாவுமன்று, அவ்வான்மாவின் விகற்பமன்றி உபாதித் திரயமுமன்று. இங்ஙனமாதலை யறிவது அனுமானத்தன்று யதார்த்தமாகும். இங்ஙனங் கூறியது விளங்காவிடத்துத் தானுவது இந்நிலையமெதனச் சிரவணாதிகளால் ஐயந் திரிபற ஆராய்ந்து தெளியவேண்டும்; அங்ஙனந் தெளியின் தானென்பதும் தனது விகற்பமென்பதும் பாம்பும் பழுதையும்போல நாட்ட பேதத்தாலாம். இவ்வாறன்றித் தானென்பதின் நின்று விகற்பத்துக்குப் பொருள் வேறு உளதாக யாம் கூறுதுமல்லம் அதனை யுன்னுதி—எ-று.

தனுமூன்று மன்றாகுந் தன் விகற்பமன்றி யென்றதனால் தானே தானாக விளங்கும் சைதன்னியத்தைத் தவிர விகற்பமும் விகற்பத்தைத் தவிர உபாதித்திரயங்களும் இல்லாமற் போயினும் உபாதித்திரயத்திற்குக் காரணங் கடபடத்திற்கு மண்ணும் நூலும்போல விகற்பமாதலால் அதற்கே பிறவியென்பதையும்; விகற்ப மொன்று உள்ளளவும் காரணதேகமும், அக்காரண தேகமொன்று உள்ளளவும் அனந்தசூக்கும தேகமும், அச்சூக்குமதனு ஒன்றுள்ளளவும் அனந்த தூலதனுவும் உண்டாமென்பதையும்; அனுமானத்தன் றுண்மையாகுமென்றதனால் உள்ளதைச் சொல்வதை அனுமானத்தினாலல்ல பிரத்தியட்சத்தினால் அறியலாமென்பதையும்; தனையாயின் பாம்பும் பழுதையும் போற் பார்வைபேதத்தாலாம் நாம்புகலம் வேறுளதா நாடென்றதனால் பழுதையைத் தவிரப் பாம்பென்பது இல்லாதிருந்தும் முன்னருண்டாயதுபோல் காணப்பட்டுப் பின்னர் இல்லாமற் போயது நாட்டபேதமே யன்றிப் பொருள்பேதம் இல்லாவாறுபோல ஆன்மாவை

யன்றி விகற்பம் இல்லாதிருந்தும் முன்னருண்டாயதுபோல் காணப்பட்டுப் பின்னர் இல்லாமற்போயது நாட்ட பேதமே யன்றிப் பொருள் பேதம் இல்லாமையால் பிறப்பதும் இறப்பதும் உள்ளதுபோல் தோற்றுவதே யன்றி யதார்த்தமாய் இல்லை யென்பதையும் உய்த்துணர்க. இதனால் பிறப்பது ஆன்மாவுமன்று அதைத்தவிர வேறில்லாமையால் அன்னியமும் அன்றென்பதாயிற்று. (கஎஎ)

அ-கை.

சற்குருநாதனை நோக்கி நின்னைச் சதாகாலமும் யானகலா திருக்குமாறு எங்ஙனமெனல்.

அந்தந் தவத்தைமட்டு மந்தந்தக் காட்சிகள்போல்
அந்தந்த சென்மமட்டு மாகுமே—அந்தந்தக்
காட்சிகளி னீயாகிற் கண்டிருப்ப தெவ்வாறு
மாட்சியுள சற்குருவே வந்து.

(எ-து.) அவத்தைதோறும் காணப்பட்ட அந்தந்தக் காட்சிகள் அந்தந்த அவத்தைமட்டே யல்லாமல் வேறல்ல; அதுபோலச் சனனங்கள் தோறும் காணப்பட்ட காட்சிகள் அந்தந்தச் சனனமட்டே யன்றி வேறல்லவாம். இங்ஙனமிருக்கச் சனனங்கள் தோறுங் காணப்பட்ட காட்சிகளில் நீயுமொன்றாய் இருப்பையாயின் நின்னைச் சற்குருநாதனெனக் கண்டு நின்பால் அடியேன்வந் தகலாதிருக்குநெறி யெங்ஙனம்? மாட்சிமைதங்கிய சற்குருநாதனாகி எழுந்தருளிய எனது கர்த்தனே! அதனைத் தெரித்தருடி—எ-று.

ஓரவத்தாக்காட்சி மற்றோர் அவத்தைக்கண் காணப்படாதது போல ஓர் சனனக்காட்சி மற்றோர் சனனத்தில் காணப்படாதாதலின் அந்தந்தவத்தைமட்டு மந்தந்தக் காட்சிகள்போ லந்தந்த சென்மமட்டு மாகுமே யந்தந்தக் காட்சிகளெனவும், குருக்கோலமாக வந்த மானிட வடிவம் மறைந்தவிடத்து எங்ஙனம் காண்பனென்பது தோன்ற நீயா

றிற் கண்டிருப்ப தெவ்வாறெனவும், கிருத கிர்த்தியம், தூக்காபாவம், சர்வகாமாப்திகம், பிராப்தி பிராப்பியமாதிய குணங்களுடையோராத லின் மாட்சியுள சற்குருவே யெனவுங் கூறினர். (௧எஅ)

அ-கை.

அதற்குத்தரங் கூறல்.

எங்கெங் தவத்தையினு மென்னையக லாக்காணின்
அந்தந்த சென்மத்து மவ்வாறும்—இந்தவகை
கற்பிதமு முண்மையுமாக் காணிரண்டா மெல்லையுறில்
எற்பிரியா யென்று மிருந்து.

(எ-து.) எவ்வெவ் வவத்தைக்கண்ணும் என்னை விடாமல் கண்டுகொண்டிருக்க வல்லையாயின் அந்த அந்தப் பிறவிக்கண்ணும் அவ்வாறே காணப் பெறலாகும். இங்ஙனங் காணப்படும்வகை கற்பிதமும் உண்மையுமென இரண்டாம். இவற்றுள் இரண்டாம் வகையாகிய உண்மைநிலை யெல்லைக்கண் தங்கில் எப்பிறவிக்கண்ணும் என்னுடன் இருந்து என்னைவிட்டுச் சதாகாலமும் அகலாதிருப்பை—எ-று.

தூலாதி கற்பித வடிவைக் காணாது யதார்த்த வடிவைக் கண்டு கொண்டிருக்க வல்லையாயின் அது நின்னைவிட்டும் நீ யதைவிட்டும் பேதியா திருப்பை யென்பது கருத்து. (௧எ௯)

அ-கை.

ஞானசிரியருக்குப் பிரதி யுபகார மென்னை யன்றி வேறு இன்றெனல்.

சிதாகாய மாஞ்சோதி சிற்பரத்தில் வாழ்ந்து
சதாகாலு மேயிருக்கத் தந்தாய்—பிதாப்போல
உன்னையிவண் கைம்மா றுவக்கவெங்குங் கண்டிலன்யான்
என்னையன்றி யெம்பெருமா னின்று.

(எ-து.) சிதாகாய மென்னுஞ் சோதி மயமாகிய சிற்பர வாழ்வில் சதாகாலமும் விக்கினமின்றித் தானே தானாக வாழ்ந்துகொண்டிருக்கப் பிதாவைப்போல் உன்னை யிங்குதந்தனை நீ களிக்கச் செய்யும் பிரதி யுபகாரம் என்னையன்றி யெமது கர்த்தனே! இப்போது யான் எங்கணுங் கண்டிலன்—எ-று.

வினா: ஆண்டானடிமைக் கண்ணேனும் குருசீட பாரம்பரைக் கண்ணேனும் உன்னைத் தந்தாய் என்னைத் தந்தேனென வழங்குவதன் கருத்தென்னை?

விடை: ஆண்டானும் குருவும் நிரதிசயானந்தமே தானாக விளங்கலின் இதனை யுன்னை யெனவும், அடிமையும் சீடனும் அறிவிலர் ஆதலினானும், நிருபாதிகம் சோபாதிகம் தத்ருமம் குடும்பமெனக் கிடந்த நானென்னு மகங்கார நான்கனுள் அப்பக்குவத்திற்கு உரித்தாயுள்ள நிருபாதிகமே தானெனச் சேட்டித்து நிற்றலானும் இதனை என்னையெனவும் கொள்ளுவதே முக்கிய கருத்தாமென்க.

வினா: எச்சமயத்தார் கருத்து மிதுதானோ?

விடை: ஐயந் திரிபறு ஏழைகளாதலின் இக்கருத் தவர்கட்கே தென்க.

வினா: ஆறு லெவர்கட்கோ?

விடை: பூதாகாயத்தின்கண் நவ நவ மாகத் தோற்று மனேக அண்டங்களில் ஒன்றாகிய பிருதிவி அண்டமெனப்படு மிப்பூமியில் ஐந்து கண்டங்களுண்டு. அவற்றுள் ஒன்றாகிய ஆசியா கண்டத்தில் உள்ள பதினான்கு தேசத்தி லொன்றாகிய வடக்கி லிமய மலையையும், மேற்கிலரேபியாக் கடலையும், தெற்கி லிந்து சமுத்திரத்தையும், கிழக்கில் பங்காளக் குடாக்கடலையும் பர்மாவையு மெல்லையாகக் கொண்டு பெற்ற இந்து தேசத்தில் நான்குவேத அபிமானிகளாய் சமயிகள் பலருள்ளும் மிக்குயர்ந்துள்ள வேதாந்தப் போலிய ரல்லாத உண்மை ஞானிகட்கென்க.

வினா: வேதாந்தப் போலிகட்கும் உண்மை ஞானிகட்கும் பேதமென்னை?

விடை: சாத்திரம் வேடம் மகிமை ஒழுக்கம் தந்திரம் விதி விலக்கு முதலியவற்றின்கண் மாத்திரஞ் சிந்தைவைத்து வேதாந்தியரெனப்படுவோர் வேதாந்தப் போலியரெனவும், இவற்றின்பால் சிந்தையுடையார்போல் காட்டிச் சித்தார்த்த போதகத்தின்பால் தங்களிச்சாஞானக் கிரியைகள் இமைப்போதும் மாறாது நிகழ்த்துவோர் உண்மை ஞானியரெனவுங் கொள்க. (க௭0)

அ-கை.

ஞானசானை நோக்கி நின்னை யொப்பாரெங்கணு மில்லையெனல்.

பசுபதி பாசப் பகுதியறு நாயேற்
கசிபதத்தா லேகமென வாக்கி—நிசபதத்தைக்
காட்டித் திரிபுடிதான் காணா தெனையெங்குங்
காட்டியநிற் கொப்பாரில் காண்.

(எ-று.) பசு பதி பாசமெனப்படும் பாகுபா டறாது தியங்கிய நாய்போன்ற எனக்கு அம்மூன்றையும் அசிபதத்தினால் ஏக சைதன்யமாக்கி நிசபதமாவது இனையதென அதனுண்மை நிலையைப் பிரத்தியட்சமாக விளக்கிச் சித்துத்திரிபுடி சடத்திரிபுடி யென்பவற்றுள் எத்திரிபுடியேனும் தலைகாட்டாது ஒளிக்க என்னை யெப்பொருட் கண்ணும் எப்பதவிக்கண்ணும் காட்டிய உனக்கொப்பாவா ரெங்கணுமில்லை—எ-று.

அனுமானத்தா லன்றிப் பிரத்தியட்சமாக வஸ்து பரிசோதனை செய்து காட்டவல்லவர் இல்லாததினால் மூன்றென்னும் மயக்கம் எங்ஙனம் நீங்கும்? நீங்காததினால் பசுபதி பாசப்பகுதியறு நாயேற்கெனவும், சீவனையன்றிச் சீவகற்பிதமும் ஈசனையன்றி யீசுர கற்பிதமும் இல்லாமையால் இவ்விரண்டு கற்பிதத்தையும் சீவேசுரானுக்குள்

ஒடுக்கி யிருப்பது சிவேசுரர் ஆதலால் அவரது உபாதிகுணந் தொழி லால் அவரைக் கணிப்பது தவிர்ந்து அவரது யதார்த்த வடிவம் யா தென வஸ்து பரிசோதனை செய்யுமிடத்துச் சித்தாக முடியும் முடி யவே சித்துப் பெரிதுஞ் சிறிது மல்லாததால் இங்ஙனம் தோற்றுவது உபாதிமுதலிய மூன்றுமலன்றி யதார்த்தமா யில்லைவே யில்லையென் னும் பொருள்படும் படவே யிருப்பது ஏக சைதன்னியமெனவும், பல வென்பதைப்பற்றி ஏகமென்பது வந்தது பலவென்பது தோற்றல் மா த்திரமும் சொல்மாத்திரமுமாக முடியில் ஏகமென்பதும் தோற்றல் மாத்திரமும் சொல் மாத்திரமுமாக முடியுமென்பதற்கு ஐயஞ் சிறிதே னுமின்றித் தான்மாத்திரமாக மிஞ்சிநிற்கச் செய்வது அசிபத மாத நின் அசிபதத்தால் ஏகமெனவாக்கி யெனவும், தானுவது நிரதிசயா னந்தமாதலா லதனை நிசபதத்தைக் காட்டியெனவும், அங்ஙனம் விள க்கிய விடத்துச் சமஸ்தமும் தானாக விளங்கலின் திரிபுடிதான் காணு தெனையெங்குங் காட்டியெனவுங் கூறினர். (கஅக)

அ-கை.

சமஸ்தமும் தானாக விளங்கினு மோரோர்கால் எவ்வுயிரு முபாதி வடிவாகக் காணப்படும் அதனால் அவை பலவாகும் அப்பலவாதலை நானாகவும், சகபேதங்களைத் தானாகவுங் காணுமா றெங்ஙனமென வினவல்.

எவ்வுயிரும் வேடத்தா லீங்குபல வாக்காண்டார்
அவ்வுயிரை யொன்று யனுதினமும்—செவ்விதா
நானாகக் காண்பதெங்ங னுடுஞ் சகவிகற்பம்
தானாகக் காண்பதெங்ஙன் றன்.

(எ-து.) தேவரீர் கூறிய நிலையினிற்புழி ஓரோர்கால் பழக்கத் தால் சராசரமாயுள்ள எவ்வகைப்பட்ட உயிரும் உபாதித் திரய வேட த்தால் இங்கே பலவாகக் காணப்படுவர். இவ்வாறு காணப்படு முயி

ரை யேகமாகவும் நானாகவும் சதாகாலமும் சந்தேக விபரீதமறக் காணுமா றெங்ஙனம்? இஃதன்றியும் பலவேறு விகற்ப வடிவாகக் காணப்படுஞ் சகபேதங்களைத் தானாகவும் காணுமா றெங்ஙனம்? அதனைத் தெரித்தருடி—எ-று.

தான் - அசை. சுவானுபவம் வந்தவிடத்தும் பழக்கத்தால் முன் போலத் தோற்றலின் இங்ஙனம் வினவினனென்க. (கஅ௨)

அ-கை.

அதற்குத்தரங்கூறல்.

நீயாகுஞ் சிற்சோதி நீயகலாக் கண்டிருக்கில்
நீயாக வெவ்வுயிரு நின்றிலங்கும்—ஓயாமல்
எவ்வுலகு மென்னபொரு ளென்றுற்றுத் தேர்ந்தக்கால்
எவ்வுலகுந் தானாகு மிங்கு.

(எ-து.) நீயெனப்படும் சிற்பிரகாசவடிவை நீ கணப்போதேனும் மாறாது கண்டுகொண்டிருக்க வல்லையாயின் சமஸ்தவுயிரும் பேதியாது நினது சொரூபமாகவே சதோதயமாக நின்று விளங்கும். இவ்வாறே திரிசியமாக ஓர்கால் காணப்படும் எவ்வுலகும் என்ன பதார்த்தமெனத் தனித்தனிக் காரண காரியம் காரண காரியமாகப் பகுத்தவ்வவற்றிற்கு ஆதி மத்தியாந்தங்களை உற்றுநின் றுன்னித் தெளிந்தவிடத்து எவ்வுலகமும் தனக்கன்னியமாகக் காணப்படாமல் தானாகவே விளங்கும்—எ-று.

நினது யதார்த்தசொரூபம் யாதெனத் தடத்த விலக்கணையால் ஆராயுமிடத்துச் சேடித்து விளங்குவது சிற்பிரகாசமாதலால் நீயாகுஞ் சிற்சோதியெனவும், அந்நாட்டத்தா லெவ்வுயிருஞ் சிற்பிரகாசமாகத் தன்னைப்போல் காணுமாதலின் நீயகலாக் கண்டிருக்கில் நீயாக வெவ்வுயிரு நின்றிலங்குமெனவும், பலவேறு விகார வடிவாகத் தோற்றியக் கண்ணும் அதனது யதார்த்த வடிவத்தை உற்றுத் தீரவிசாரி

த்த விடத்துத் தன்னையன்றி வேறாகாமையால் ஓயாம லெவ்வுலகு மென்னபொருளென் றுற்றுத் தேர்ந்தக்கா லெவ்வுலகுந் தானாகுமிங் கெனவும் கூறியவாறு காண்க. உலகமு முயிருஞ் சிற்சோதியாமென் றற் குதாரணம்.

வாசிட்டம் "உலகெது நாமாரென்ன வுற்றுநின் றுணருமட்டும், கலகமார் பிறவி மோகங் கங்குல்போல் மூடி நிற்கும், அலகிலா வுலகும் யாமு மழிவில்சிற் சோதி யன்றே" என்பதனாற் காண்க. இதனால் உலகமு முயிரும் சிற்பிரகாசமாதலால் தெளிந்தாருக் கவ்வாறு விளங்கு மென்பதாயிற்று. (௧௮௧)

அ-கை.

சகத்தை யுற்றுப்பார்க்குமா றெங்ஙனமென்றற் குத்தரங் கூறல்.

உற்றுநின்று பார்ப்பதெங்ஙனோ யாப்பல் பேதமதால்
சற்றுங் கலங்காது தான்கருவி—இற்றதெனக்
காணளவு மொவ்வொன்றாக் கண்டாய வல்லையெனின்
காணுலக நீயாகுங் காண்.

(எ-து.) தேவரீர் உலகத்தை யுற்றுநின்று பார்க்கவேண்டுமெனக் கூறினீர். இவ்வுலகம் நானாவிதமான விகாரவடிவாய் ஓயாமற் காண்டலால் எங்ஙனமுற்றுப் பார்ப்பேனெனக் கேட்கின் சற்றுஞ்சித்தங் கலங்காது சகத்திற்குரிய காரண காரியங்கள் பலவற்றிற்கு மேல் காரியப் படுத்தப்படாது நின்றகாரணம் இனையதெனத் தான்கண்டு தெளியுமட்டும் ஒவ்வொன்றாகக் கண்டு கண்டு பரிசோதித்து ஆராய்ந் துணர்தற்கு வல்லையாயின் இப்போதுனக்கன்னியமாகக் காணப்படு முலகம் உனது சொரூபமாக விளங்குவதைக் காணுதி—எ-று.

சகத்தென்பது பலவாறு விகாரவகைப்பட்ட வடிவமாதலின் தன்னை இன்ன வடிவின தெனத் தான் புலப்படும் அறிவால் கணிக்கப்படாது. நவநவமான விநோதக் காட்சிகளாகக் காணப்பட்டு

அலையில் சருகுபோன்று அவ்வறிவைக் கணப்போதேனும் நிலைக்காது அலைத்தலானும், அதனால் அலைத யறியு மறிவுதன்னை யின்ன வடிவின தென விசாரித்துத் தெளியும் தெளிவு தன்பா லில்லாததினா லதனை மெய்யெனக் கருதும் மயக்கம் வரும். அம்மயக்கத்தால் காம வெகுளிகள் இடைவிடாது சகடக்கால்போல் கணப்போதேனும் நிலையாது மாறிமாறி வரும். அதுவரவே இச்சா ஞானக் கிரியைகளும் அதுபற்றி ராகத் துவேஷாதிகளும் அதுபற்றிச் சனனமரணங்களும் வந்துகொண்டே யிருக்கும். இங்ஙனமாகச் செய்யத்தக்கது இச் சகத்தாதலினானும் இச்சகத்தை உற்றுப் பார்ப்பது சான்றோர் வழிப்பாட்டினால் அன்றிக் கூடாததால் அம்முறையே விசாரித்துத் தெளியென்பது தோன்ற இங்ஙனம் கூறினாரென்க. இதனால் அன்னிய மென்பது இல்லாமற்போக விசாரித்துத் தெளிதி யென்பதாயிற்று. (கஅச)

அ-கை.

ஞானச்செருக்கு மகல வேண்டுமெனல்.

ஒன்றுபத்து நூறுமுத லோயா தனைத்துலகும் [க்
வென்றேனெ னுஞ்செருக்கு மெல்லப்போய்—நின்றவெனை
காத்திடுவ னென்பான்போற் காத்திடுக நின்னையென்றும்
ஆற்றலிதற் கொப்பின் றறி.

(எ-று.) சுத்த வீரனொருவன் ஆரம்பத்தில் ஒருவனையும் பின்னர் பதின்மரையும் அதின் பின்னர் நூற்றுவரையும் அதின் பின்னர் ஆயிரவரையும் அதின் பின்னர் பதினாயிரவரையும் அதின் பின்னர் நூறாயிரவரென்னும் லட்சஞ் சேனையும் அதின் பின்னர் இம்முறையே கோடி சங்கம் பதுமம் மகாபதும முதலிய எண்ணிறந்த சேனைகளையுஞ் சமஸ்த உலகங்களையும் தாமதியாதும் பின்னிடையாதுஞ் செயித் திங்ஙனஞ் செயித்தே னென்னுஞ் செருக்கும் முன்னர் வளர்ந்த வாறு நாளுக்கு நாள் மெல்ல மெல்லக் குறைந்துபோய் நின்ற

என்னை மாத்திரம் இனிக் காத்துக்கொள்ளுவேனெனக் கூறுவான் போன்று, சமஸ்த கற்பிதங்களையும் வென்றங்ஙனம் வென்ற உன்னை மாத்திரஞ் சதாகாலமும் யாதொன்றானுஞ் சலிக்கப்படாது பாது காத்திடுக. அங்ஙனம் இயற்றலாலாய வல்லமைக்கு எங்கணும் நிகரில் லாமையைத் தெரிந்து கொள்ளுதி—எ-று.

சிலம்பவித்தை வில்வித்தை முதலியவற்றில் மிகத்தேர்ந்த சுத்த வீரன் ஆவானொருவன் முன்னர்த்தன்னை யொப்பாரில்லாமற் போக வேண்டுமென்னுங் கருத்துத் தனக்குண்டாமாகையால் அதுபற்றி மேற்கூறிய முறைப்படி மாறாய எவ்வுலகத்தாரையு மஞ்சாமல் கீழ்ப் படுத்தி யினித் தனக்கு நிகரில்லாமையால் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்னுங் கருத்துப் பின்னருண்டாம்; ஆகையால் அது பற்றி மலை காடு மதில் கடல் என்னும் நான்கரணை யமைத்து அவற்றையும் மீறியவிடத்துத் தன் வித்தையால் தன்னைச் சேதமின் றிக் காத்துக் கொள்ளுவான் போன்று சுருதி யுத்தி யனுபவத்துக் கொத்தோர்தல் அவ்வாறுடன்பட்டு ஒழுகல் முதலிய தன்னிலக்கண த்தில் மிகத் தேர்ந்து சுத்த வீரத்துவத்தை அடையத்தக்க ஞானவா னொருவன் முன்னர்த் தானாகிய ஆன்மாவுக்குச் சுசாதிக சித்துபேதங் கள் தன்னையன்றி யில்லாமற் போகவேண்டுமென்னுங் கருத்துத் தன க்குண்டாம்; ஆகையால் அதுபற்றித் தனக்கு மாறாய தூலமுதல் பிர கிருதி யீறாக்கிடந் தவற்றை முறைப்படி யஞ்சாமற் கோறலான் அவ ற்றிற்குத் தலைவராய அஞ்ஞன் மோகனாகிய சத்துருக்களைத் தலைகா ட்டாதொடுக்கி அங்ஙன மொடுக்கியக்கண் தனக்கு நிகரென்பது ஒன் றின்றித் தான்மாத்திர நிற்றலான் இனித் தன்னைப் பாதுகாத்துக்கொ ள்ள வேண்டுமென்னுங் கருத்துப் பின்னர் உண்டாமாகையால் அது பற்றி வஸ்துபரிசோதனை பூர்வபட்சமாகாமை அகம்புறக் கோறல் நிதானம் எனப்படும் நான்கரண் அமைத்து அவற்றையும் மீறியக்கண் ணும் எல்லாமாயல்லவுமாய்க் காணும் தன்னை யகலாமையென்னும் வித்தையால் தன்னைச் சேதமின்றிக் காத்துக் கொள்ளுவானாகையால்

நீயும் அவன்போன்று காத்திடுக? என்பதிக்கவியின் கருத்து. இதனுல் அனைத்தும் தானெனக் கண்டு அவை தானுக விளங்குமளவும் அவற்றைத் தனக் கன்னியமெனக் கருதுவதால் அவை தனது வியாபகத்தில் எங்கெங்காயினும் கற்பிதமாகவேனும் வாசனையாகவேனும் தடிக்குந்தோறும் தாமதியாது தனது சிற்பிரகாச நாட்டத்தால் அங்கங்கு அவற்றை நீறுபடுத்திச் சின்மாத்திர மாக்கிக்கொண்டு வரும் அனுபவமிருத்தலால் வெல்லுதலும், இங்ஙனமாய ஞானுனு சந்தான முயற்சியால் அனைத்தும் தானுக அடிக்கடி அங்கங்கே பலகாலும் கண்டுகொண்டு வருதலினுனும் இங்ஙனம் வருதலால் தானே யனைத்துமெனத் திடஞானம் மெல்ல மெல்ல எழுமாதலினுனும் அங்ஙனம் எழுதலால் சந்தேக விபரீதம் இனித் தலையெடுக்காது நசிக்கத் தான்மாத்திரம் மிஞ்சிநிற்கும்; அங்ஙனம் மிஞ்சிநிற்றல் எவ்விடத்தினும் எப்பொருட்கண்ணும் தானும் தன்னிடத்தில் சமஸ்தமுமாய்க் காணச்செய்யும் அனுபவ மிருத்தலால் தற்காப்புமெனப் பொருள்படுமாறுகாண்க. வெல்லுதற்குதாரணம்.

வாசிட்டம்.

"எந்த வெந்த வாதனைக ளிதயத் தெழுந்த வவையெல்லாம்
அந்த வந்த விடத்தழிக்கி லவையே மாயைக் கழிவாகும்
முந்த போக பேதமெனு மொழிந்த விருவா தனைவிட்டு
வந்த பாவா பாவங்கள் மாற்றி விகற்ப மறமகிழ்வாய்"

எனவும், தற்காப்புக் குதாரணம்.

சொரூபசாரம்.

"சங்கற்ப சாலச் சகத்தோற் றரவெல்லாம்
இங்கற்ப மென்று திழிவரோ-பங்கமற
இம்மை மறுமை யிரண்டிடத்து மப்பாலும்
தம்மையன்றிக் காணு தவர்."

எனவுங் கூறியவற்றுலுணர்க. (கஅரு)

அ-கை.

பந்தவீடு விளைவு யாதினுலென்றற் குத்தரங்கூறல்.

சித்தக் கலக்கஞ் சிந்தையா விபரீதம்
சித்தத் தெளிவு சிவமாகும்—இத்தைப்
பலபலவாச் சொல்வர் பரிபாக மல்லார்
கலங்காது சித்தநிலை காண்.

(எ-து.) நான் நீ அவன் அவள் அதுவாகத் தோற்றுவன அனைத்தும் வேறன்று சித்தங் கலங்குங் கலக்கமே யழியாத விபரீத மாதலால் அவை விபரீதமெனப்படும். ஆனல் சித்தத் தெளிவோ எனில் சித்தத்தெளிவு சிவமெனப்படும். இங்ஙன மிருக்க இந்தச் சித்தக்கலக்கத்தை இருவினையொப்பும் மலபரிபாகமுமமையும் பாத்திர ரல்லாதார் வெவ்வேறு பொருள்படப் பற்பல விதமாகக் கூறுவர். ஆதலின் நீ யாதொன்றுனும் கலங்காது சித்திர தீபம்போல் நின்று சித்தத்தினது உண்மைநிலை இஃதெனக் கண்டு தெளிதி—எ-று.

இங்கே சித்தமென்றது அறிவு.சித்துபேதஞ் சடபேத மெனப்படுவன அனைத்தும் சித்தத்துக்கு மாறுகக்காண்டலின் இவை சித்த விகற்பம் அன்றெனப் புறக்கணிப்பாரை மறுத்தற்குச் சித்தக் கலக்கஞ் சிதையா விபரீதமெனவும், சித்தத்துக் கிரண்டாம் பதார்த்தமாக ஆநந்தமாகவும், அதீதமாகவும், சகளமாகவும்; நிட்களமாகவும் நிற்குநிலை சிவமென்பாரை மறுக்கச் சித்தத்தெளிவு சிவமாகுமெனவும்,யாதோர் சுடுதியினும், யாதோ ரபாயத்தினும், மூர்ச்சை மரணத்தினும், இன்னும் பலவான ஏதுக்களினும் கலங்குங் கலக்கத்தை யெல்லாஞ் சித்தக்கலக்க மெனினும் உண்மைநிலை யிஃதென்று அவர் காணுததால் அஃதெமக்கு இங்கு உடன்பாடு அன்றென்பார் இத்தைப் பலபலவாச் சொல்வர் பரிபாக மல்லாரெனவும், இங்ஙனங் கூறி யவற்றுள் யாது உண்மையென நீ கண்டு தெளியாவிடத்து மயக்கம் நின்னை விட்டகலாது அகலாவிடில் காம வெகுளி வயப்பட்டுச் செனன மரணத்தால்

மாறுது மொத்துண்டு துன்பக்கடலி லாழ்வை யாதலின் கலங்காது சித்தநிலை காணெனவுங் கூறினார். இன்னுஞ் சித்தத்தெளிவைச் சாக்கிர மெனவும், கல்வித் தேர்ச்சியெனவும், சாத்திரத் தேர்ச்சியெனவும், மூடத்தேர்ச்சி யெனவும்,இன்னு மிதுபோன்று வருவனவற்றையெல்லாம் அவற்றிற்குத் தக்க தேர்ச்சியெனவும் கூறுவர் கூறினும் அவித்தை யருததால் அவற்றை யன்றென்க.

வினா: சித்தக் கலக்கமென்ற தென்னை?

விடை: அறிவு சலித்ததாகக் காண்டல்.

வினா: அதனை விளங்கக் கூறாவிடிற் பதவுரையால் யாது பயன்?

விடை: பதவுரையை முன்னர்க் கூறியன்றோ பின்னர் அதன் கருத்து விளங்கக் கூறவேண்டு மென்க.

வினா: ஆயி னதன் கருத்தென்னை?

விடை: பிரதிபிம்போதி, அவிச்சின்னோபாதி, அத்தியாசோபாதி யெனக்கிடந்த மூன்றுந் தோன்றி மறைதற்கு ஆதாரமா நின்றுள்ள சைதன்னியம் அவ்வவ்வுபாதி வயப்பட்டதாகக் காண்டலென வறிக.

வினா: யதார்த்த மன்றோ?

விடை: கலக்கம் தெளிவு தம்முள் மாறியவிடத்தும் இங்ஙனம் மாறுதற் காதாரமா நின்றுள்ளது சைதன்னியம் ஆதலால் யதார்த்த மன்றென வறிக. (கஅரு)

அ-கை.

ஞான பாதத்திற் கூறப்படும் விதிவிலக்காவ தினையதெனல்.

விதிவிலக்கிங் கல்லவற்றை மெய்யாமென் றெண்ணி
மதிமயக்காற் செய்திழப்ப மாந்தர்—அதுகேளாய்
நானுவ தின்னதென நாடியது வாழ்யலா
நூானை நானென்ன லோ.

(எ-நு.) ஞானபாதத்திற் கூறப்படும் விதிவிலக்கல்லாதவற்றை விதிவிலக்காமெனக்கருதி மக்கட்பேறினராகிய யாம் புத்திமயக்கால்

அவற்றைச் செய்து வாணாளை யெல்லாம் வீணாக்குதும். அதாவது இனையதெனை யான் சொல்லக் கேளுதி. விதியாவது: நானெனப் படும்பொருள் இனையதெனச் சுருதி யுத்தி யனுபவத்துக் கொத்துச் சிரவணாதிகளால் ஆராய்ந்து தெளிந்து அதனைக்கண்டு அது நான் அதுநானென முயலுதல். விலக்காவது: அங்ஙனம் முயலாது மாமிச பாண்டமாகிய தூலவடிவைக்கண்டு நானெனென முயலுதல். இங்ஙனம் தூலவடிவைக்கண்டு நானெனென முயலுதல் தானே நமது கடமை யிதனைச் சொல்லுதி—எ-று.

இங்கென்றது ஞானபாதத்தை. விதியை விலக்காகவும், விலக்கை விதியாகவுங் கொள்ளுதல் புத்தியீனத்தாலாதலின் மதிமயக்கா லெனவும், ஞானவானெனத் தம்மைக் கருதி வருணாசிரம விதிவிலக்கைத் தழுவி மாமாயையைக் களையாததால் செய்திழப்பமெனவுங் கூறினார். இதனால் ஞானபாத விதியை யறிந்து செய்யவேண்டுமென் பதாயிற்று. (கூஎ)

அ-கை.

சங்கற்ப மினையதெனவும், அஃதிருவகையாவ தினையதெனவும், அவ்விருவகையு மாபாசமெனவுங் கூறல்.

சங்கற்ப மேபந்தஞ் சங்கற்ப மேவீடு
தங்கட் புடைபெயர்ச்சி தானாகும்—சங்கற்பம்
விண்ணசையிற் றனசையும் வீணாகுந் தோற்றமதால்
கண்ணாகிற் பூரணமாக் காண்.

(எ-து.) பந்தம் வீடெனப்பட்டவை யிரண்டோ அல்லது ஒன்றே யிரண்டாயிற்றோ எனத் தானே யாசங்கித்து ஒன்றே இரண்டா மெனக் கூறுவான் வேண்டிச் சங்கற்பமே பந்தமெனப்படுவதும் அச் சங்கற்பமே வீடெனப் படுவதுமாம். ஆயின் சங்கற்பமாவது பரிபூர ணமான ஆன்ம வியாபகத்திலெழும் சலன சத்தியாம். நீக்கமற நிறைந்துள்ள ஆகாயம் அசையுமாயின் அவ்வாறு நிறைந்துள்ள ஆன்

மாவு மசையும் அது கூடாதெனின் இதுவுங் கூடாது. ஆதலின் அங்ஙனங் கூறுவது தோற்றல் மாத்திரப் பொருளாதலின் விவர்த்தமாகும். நீ பரிபூரண நாட்ட முடையையாயின் இதனைக் காணுதி—எ-று.

தனது பரிபூரண நாட்ட இழப்பே உபாதித்திரய எழுச்சிக் காதாரமாதலானும் அவ்வெழுச்சியே சகல விபரீதங்கட்கு ஆதாரமாதலானும் மலமய மாக்கித் தன்னை யின்றா னெனக் காணத் தலையெடுக்கா தழுத்தத் தக்கதற் கேதுவாதலினானும் இந்நாட்டவிழப்பு அசுத்த சங்கற்ப மென்பது தோன்றச் சங்கற்பமே பந்தமெனவும், இவ்விபரீதங்களில் மொத்துண்டலால் சகிக்கப்படாது இக்கற்பனைகள் விரிந்தவாறு ஒன்றிலொன்றொடுக்கித் தன்னைக்காணச் செய்வதும் இந்நாட்ட விழப்பாதலால் இது சுத்த சங்கற்பமென்பது தோன்றச் சங்கற்பமே வீடெனவும், அகண்டா கண்டமன்றிய தன்னை யகண்டமாகக் காண்டலுஞ் சேட்டையாதலால் இஃதே சங்கற்பமென்பது தோன்றத் தங்கட் புடைபெயர்ச்சி தானாகுஞ் சங்கற்பமெனவும், தன்னை யன்றி யகண்டாகண்ட மின்றாதலால் புடைபெயர்ச்சியும் ஆபாசமென்பது உவமையாற்றோன்ற விண்ணசையிற் றானசையும் வீணாகுந் தோற்றமதாலெனவும், நீ பரிபூரணமாக விளங்குவையாயின் இங்ஙனங் கூறிய அனைத்தும் மெய்யாக விளங்குமென்பது தோன்றக் கண்ணாகிற் பூரணமாக் காணெனவுங் கூறியவாறு காண்க. இதனால் சுத்த சங்கற்பமும் அசுத்த சங்கற்பமுங் கற்பிதமென்றவாறாயிற்று. (கஅஅ)

அ-கை.

பந்தமும் வீடுஞ் சிவச்செயலா லெனல்.

தூலநம தன்றாகத் தூலநா மென்றதென்னை
சீலன் செயலென்னிற் செப்பக்கேள்—தூலபந்தம்
சீவர்க் கிடர்செய்யுந் திர வகற்றிவிலை
சிவச் செயலாத் தெளி.

(எ-து.) ஸ்தூலவுடல் நமதெதார்த்த வடிவமல்லாதிருக்க அதி னை அபிமானித்து நாமாகத் திடங்கொள்வது என்னையெனச் சமய வான்களைக் கேட்கில் அதற்கு அவர்கள் நிர்மல சொரூபியாகிய கடவு ளினது செயலெனக் கூறுவர்; இங்ஙனங் கூறில் மறுமொழியாக யான் சொல்வதைக் கேளுதி. தூலவுடலை நாமெனை அபிமானிக்கும் பந்தம் அங்ஙனம் அபிமானிக்குஞ் சீவர்கட்கே மாளாத்துயரை யிடை விடாது தந்துகொண்டே யிருக்கும். அச்சீவர்கள் அப்பந்தத்தைச் சிறிது சிறிதாக ஞானனுட்டானத்தால் முழுதுங் களையின் துன்பமெ ன்பது சிறிதேனும் அவர்கட்கு இல்லாமற்போகும். ஆதலின் கடவுள் செயலன்று சீவச்செயலெனச் சிறிது ஐயமின்றித் தெளிதி— எ-று.

சீவச்செயலு மீசுரச்செயலும் இன்னின்ன அளவினதென்று அவற்றின் எல்லை தெரியாதார் தெரிந்தார்போல் கூறுமடமையைத் தெரிவிப்பான் வேண்டிச் சிலன் செயலென்னி லெனவும், யானெனை தல்லவற்றை யா னெனதெனக் கொள்ளும் அகம்பாவந் தன்னால் விளைந்த தாதலின் தன்னாலேயே கெடுமென்பது திண்ணமாதல் பற் றிச் சீவச்செயலாத் தெளியெனவுங் கூறினரென்க. தூலாதி சமஸ்த காட்சிகள் தோற்றுதலும் அங்ஙனம் தோற்றுதலை மெய்யென்றறிவு அங்கங்கறிதலுமாகிய இவ்விரண்டு பேதமே நிரந்தரமுமா யிருக்க இத னை யெச்சமயத்தருங் கல்வியின் மிக்குச் சிறப்புற்றனர் ஆயினும் அறி யாது அஸ்திபாரமில்லாச் சுவர்போலப் பற்பலவாக மேலே கற்பித் துச் சொல்லுஞ் சீவவாத மீசுரவாதமும் அதுபற்றி வந்த பாவா பாவ மும் பதவிபேதமும் அறிவின் மயக்காதலால் சீவகற்பித மெனப்பட் டது. இதனால் உணர்தல் பந்தமுத்திக் கேதுவாதலால் உணர்தல் நா ட்டந் தவிராதிருக்க வேண்டுமென்ப தாயிற்று. (௧அ௧)

அ-கை.

திரிவித காண்டமாகக் காணப்படுவதுஞ் சீவச்செயலெனல்.

சீவச் செயருன் றிரிவிதமாக் காணுமது
தாவுபோ கத்தவிப்புத் தானடிமை—சீவ
பரங்கழற விம்மூன்றும் பக்குவத்த தாகும்
உரனுடையோய் வேறன் றுணர்.

(எ-து.) சீவச்செயலானது மூன்று விதமாகக் காணப்படும். அது விடயங்களிலேயே மனந்தாவத்தக்க போசம் வேண்டி யிடைவிடாது தவித்தலும், தனு கரண புவன போகங்களைக் கொடுப்பித்துப் புசிப்பித்துத் தொலைப்பிப்பதற் கோர் கர்த்தா இருக்க வேண்டுமெனக் கருதி அவரை ஆண்டானுகவும் தன்னை யடிமையாகவும் கொள்ளுதலும், கூடஸ்த பிரம பேத நீங்குதலுமாம். இம்மூன்று விதச் சேட்டையும் அந்தந்தப் பக்குவத்திற்குத் தக்கதா யுதிப்பதாம். ஆதலின் அறிவிற் சிறந்த மாணுக்கனே! இச்செயல் ஈசன் செயலன்றென நினது அகத்திற் சிந்தித் துணர்தி—எ-று.

தாவ மென்றதனல் மனதும், தான் அடிமை யென்றதனல் ஆண்டானும், உணரென்றதனல் அகமும் வருவிக்கப்பட்டன. தாவு போகத்தவிப்பு கர்ம காண்டமெனவும், தானடிமை பத்திகாண்டமெனவும், சீவபரங் கழறல் ஞான காண்டமெனவும் பொருள் படுமாறுகாண்க. இம்மூன்று விளைவுஞ் சீவர்களால் ஆதலின் இவை யொழிவுஞ் சீவர்களாலெனக்கருதி வேத மிங்ஙனம் விதித்ததென்க.

அ-கை.

சமஸ்தமுமாக விளங்குதல் நீயே யெனல்.

நீயே சராசரமு நீயே சகபரமும்
நீயே சதசத்து நீயாகும்—மாயாத
சச்சிதா நந்தமெலாந் தானென் பதுநீயே
மிச்சமதி னீயே மிசை.

(எ-து.) சரா சரமா யிருப்பதுவும் நீயே, சகபரமாயிருப்பதுவும் நீயே, சதசத்தாக விளங்குவதுவும் நீயே, அழியாத சச்சிதாநந்த முதலியவாகக் கூறப்படுங் குணங்க ளனைத்து நீயே, தானே தானாக விளங்கப்படுவதும் நீயே, நியதிகளைந்து சேடிக்கப் படுவதின்மேலுஞ் சேடித்து விளங்குவதும் நீயே யென்றுணர்தி—எ-று.

அஞ்ஞான தசையிலும் ஞானதசையிலும் நீ யாது யாதாக நிற்குங் கோலமோ அதுவதுவாக நினக்கு அயலிடம் அனைத்தும் விளங்குமென்பது தோன்ற நீயே சராசரமு நீயே சகபரமு நீயே சதசத்து நீயாகு மாயாத சச்சிதாநந்த மெலாந் தானென்பது நீயேயெனவும், திரிகரணங்களானும் நீ யின்ன வடிவமெனக் கணிக்கப்படாத வஸ்துவென்பது தோன்ற மிச்சமதி னீயே மிசையெனவுங் கூறியவாறு காண்க. இதனல் நீயே சமஸ்தமுமெனப் பொருள்படப் பெற்றும்.

அ-கை.

சமஸ்தமு நீயாதலின் நீ யிங்ஙன மிருக்க வேண்டுமெனல்.

அனந்தமாக் காணு மறிவறியா மைப்பேர்
தனந்தமிலா நின்ெறாளிருஞ் சத்தென்—றனந்தலின்கண்
தானேதா னாகத் தனித்துச் சுகித்திடுக
ஞானு கரனுக நன்கு.

(எ-து.) அனந்த விதமாகக் காணப்படும் அறிவறியாமை யென்னும் நாமங்கள் தனது ஆதி அந்தமின்றிச் சதோதயமாக நின்றொளிரும் சத்தேயெனக் கண்டு நனவிற் சுழுத்திக்கண் ஞானவடிவாகவும் தானே தானாகவும் சந்தேக விபரீதமின்றித் தனித்து நிரதிசயாநந்த வாழ்விற் சுகித்திருக்கக் கடவை—எ-று.

பஞ்சபூத வடிவு இன்னதெனத் தெளியாமை அறியாமையும் தெளிதல் அறிவும், அவற்றின் விகார வ்டிவங்களை மெய்யெனக்காண்

டல் அறியாமையும், நிலை யல்லனவாகக் காண்டல் அறிவும், இவற்றை யாண் பெண் அலியாகக் காண்டல் அறியாமையும், பஞ்ச பூதமாகக் காண்டல் அறிவும், பூத மைந்தாகக் காண்டல் அறியாமையும், அனைத்தும் வெளியாகக் காண்டல் அறிவும், உடற்றூய்மை யறியாமையும், மனத்தூய்மை யறிவும், உடற்றூய்மையன்மை யறியாமையும், தூய்மை யறிவும், தத்தம் மதக்கொள்கை அவரவர்க்கு அறிவும், மாறுதல் அறியாமையும், தத்துவ வாராய்ச்சிக்கண் பூர்வபட்ச மாக்கற்கு ஏதுவாய நிலையை நிலையதாகக்கோடல் அறியாமையும், நிலையை நிலையாகக் கோடல் அறிவுமென இன்னும் பலவகைப்பட் டிருத்தலின் அனந்தமதாக் காணு மறி வறியாமைப் பேறெனவும், இவ் வறி வறியாமை பேதங்களனைத்தும் தனது சத்தாமாத்திரம் விளங்கலின் தனந்தமிலா நின்றொளிருஞ் சத்தெனவும், தூங்காமற் றூங்கு நிலையாதலின் அனந்தலின்கண் ணெனவும், அங்ஙனம் நிற்கும் நிலை அபரிச்சின்னம் ஆதலின் தானே தானாகத் தனித்தெனவும், வேறாகாரமாகா தென்பார் ஞானா கரனாகவெனவுங் கூறியவாறு காண்க. இதனால் தான் நிற்குநிலை யினையதென்று அறிவித்தவா றாயிற்று. (ககூஉ)

அ-கை.

இங்ஙன மருளிச்செய்த ஆசிரியரை நோக்கி யின்ன மொரு சந்தேக முண்டெனல்.

இவ்வாறு சொன்னநிலை யெல்லா நினதகத்தில்
செவ்விதாக் கண்டுகண்டு தேர்ந்திடுக—எவ்விதத்தும்
சந்தேக மின்றியென்ற சற்குருவை யின்னமொரு
சந்தேக முண்டென்றான் றான்.

(எ-து.) இங்ஙனமாக யான் கூறிப்போந்த சுவானுபவ நிலையனைத்தும் நினது அகத்தின்கண் எவ்விதத்தேனும் ஐயஞ் சிறிதேனுந் தோற்றுதல் இன்றிச் செவ்வையாகச் சமாதியின்பால் கண்டு கண்டு

சுருதி யுத்தி யனுபவத்துக் கொத்துத் தெளிந்து கொள்ளுவாயாக என்று கூறிய ஆசிரியரை நோக்கி எமது கர்த்தனே! இன்னமொரு சந்தேக முண்டென்று சொல்லினன் மாணக்க னெனப்படுவோன் —எ-று.

தானென்னு முண்மை வடிவம் புலப்படுதற்கு அனந்தமாகக் கூறிய நிலைகள் இவையாதலால் இவ்வாறு சொன்ன நிலையெல்லா மெனவும், செகத்துச் சாயையாகத் தோற்றினும் மயக்கு மாதலால் செவ்விதாக் கண்டு கண்டெனவும், தெளியா விடத்து முன்போல விபரீதத்துக் கிடமாதலின் தேர்ந்திடுக எவ்விதத்துஞ் சந்தேகமின்றி யெனவுங் கூறியவாறு காண்க. (கககூ)

அ-கை.

தேவரீர் முடிவாகக் கூறிய நிலை மனோவாக்குக் காயங்களுக்கு அகோசரமாதலால் அதனை மக்களுயிர்கட்கு உணர்த்துமா றெங்ஙன மென மாணக்கன் வினவல்.

என்று மொருபடித்தா யெல்லாமா யல்லவுமாய்த்
துன்று குணகுணங்க டோயாதாய்—நின்ற
சுயநிலையைக் கேட்போர்க்குச் சொல்லுமா றெங்ஙன்
துயரில்கோ மானேநீ சொல்.

(எ-ரு.) எப்போது மொருதன்மைத் தாகியும், சமஸ்தமுமாகி யும் அல்லாததாகியும், நிறைந்த சச்சிதானந்தமுதலிய குணங்கள் கல ப்புற்றுங் கலவாததாகியும் விளங்காநின்ற சுவானுபவமாயுள்ள யதார் த்தநிலையைக் காதலுற்றுக் கேட்கும் மக்களுயிர்கட்குத் தெரிவிக்கும் வகை யெங்ஙனம் துக்கமற்று விளங்காநின்ற எனது ஆசிரிய மூர்த் தமே! நீ யதனை விளங்கத் தெரித்தருடி—எ-று.

ஞாணஞ்ஞானங்கள் மாறினும் அவற்றோடு மாறாது அவற்றிற்கு ஆதாரமா நிற்றலின் என்றும் ஒருபடித்தா யெனவும், எந்நிலைக்கண்

னுங் காணப்படுவன அனைத்துந் தனது கற்பித வடிவ மாதலானும், தன்னைவிட் டகலாததானும் எல்லாமா யெனவும், கடபடபேதங்கள் மண்ணாலலாயினும் மண்ணாலாகாவாறு போன்று சமஸ்த கற்பித வடிவங்களும் தன்னாலாயினுந் தானாகாவாகலின் அல்லவுமா யென வும், பாவாபாவமனைத்தும் அசத்தாதி குணமுடையதென்று அதனை நீக்குதற்கும் வஸ்துநிலை யினையதெனத் தெரிந்து அதனை யடைதற் கும் சச்சிதாநந்தமுதலிய குணங்களை விதித்ததே யன்றித் தனக் கல் லாமையானும், பாவாபாவ முதலியவற்றிற்குரிய அசத்தாதி குணங் கள் தன்பால் கலப்புற்று நிற்பினும் தானங்ஙனம் ஆகாது விலட்சண மாக நிற்றலினானும் துன்று குணகுணங்க டோயாதா யெனவுங் கூறி யவாறு காண்க. இதனால் இன்ன நிலையதெனக் கணித்தற்கரிய வஸ் துவை யெங்ஙனம் பிறருக் குணர்த்துவனென்ப தாயிற்று. (௧௧௪)

அ-கை.

அதனை யுணர்த்துவான்வேண்டி ஞானம் யதார்த்தம் போலியென் றிருவகையதாக்கி முன்னர்ப் பக்குவநான்கிற்கு ஏற்கச் சொல்லத் தகும் யதார்த்த ஞானத்தை யுணர்த்தப்புகுவேனென் றாசிரியர்கூறல்.

அணுவுக் கணுவா யகம்புறமா யன்றாய்ப்
பணற்கரிதாய் நின்றவொன்றைப் பற்றி—உணர்த்தரிது
பக்குவநான் கேற்கப் பகருநிலை செப்புவன்கேள்
மிக்ககவ னத்தால் விழைந்து.

(எ-து.) பரமாணுவுக்குப் பரமாணுவாகியும், அகமாகியும், புற மாகியும், இங்ஙனமல்லாததாகியும், சிருட்டிக்கப்படாததாகியும் விளங் காநின்ற ஏக சைதன்னியத்தைப்பற்றி யொருவர்க்கு உணர்த்துதற்கு அரிதாகும். ஆயினும் மகான்களால் ஏற்படுத்திய பக்குவ நான்கினுக் கும் இயையச் சொல்லத்தகு நிலைகளின் தாரதம்மியம் இன்னின்ன விதமென்று யான் கூறுவன் அதனை மிக்க சாக்கிரதையோடு விருப் புற்றுக் கேளுதி—எ-று.

பண்ணற்கரிதென்பதைப் பணற்கரிதென்றது "ஒருமொழி மூவ ழிக் குறைதலு மனைத்தே" என்னும் விதியா லமைந்த இடைக்குறை. ஆராய்வானை யன்றிப் பரமாணுவு மில்லாததினால் அணுவுக்கணுவா யெனவும், சைதன்னியத்தை யன்றி யகம்புற மில்லாததால் அகம் புறமா யெனவும், உபாதிபற்றியன்றித் தனக்கு அகம்புறம் இன்றாத லால் அன்றாயெனவும், ஏகதேச மன்றாதலால் பணற்கரிதாயெனவுங் கூறினார். பக்குவ நான்காவன: மந்தம் - மந்தரதரம்-தீவரம்-தீவரதர மென்பன. (கசகரு)

அ-கை.

பக்குவம் நான்கேற்கப் பகருநிலை நான்கனுள் இக்கவியி லிரண் டைக் கூறல்.

நீயாயு நானாயு நின்றநிலை யீதென்க
தோயாதேன் மூன்றவத்தைத் தோன்றுமிடம்—ஓயாமல்
யாதென்று பாரென்க யானலேன் செய்யவெனின்
ஓதிடுசு விங்கிதனை யோர்ந்து.

(எ-து.) நீயாகியும் நானாகியும் நின்றநிலை யாதோ அதனை யிஃ தென்று நேரே காட்டிடுகே? அஃது அவனது உளத்தில் படியாதாகின் சாக்கிராதி மூன்றவத்தைகளுந் தோன்றி மறைதற்கு ஆதாரமாயுள்ள இடம் யாதென்று இடைவிடாமல் அதனை யுற்றுப்பாரென்று போதி த்திடுகே? இவ்வரிய தொழிலைச் செய்வதற்கு யான் சக்தியுடையே னல்லன் என்பனாயின் இனி யான் இங்கு சொல்லப்புகும் இத் தந்திர த்தையேனும் நினதகத்தில் உய்த்துணர்ந்து சொல்லுக?—எ-று.

நீயாயும் நானாயும் நின்றநிலை யீதென்கவென்றது: அபரிச்சின்ன சுத்த சைதன்னிய விளக்கத்தையும், மூன்றவத்தைத் தோன்றுமிட மென்றது: அதனது வியாபகத்தையு மென்க.

வினு: சாக்கிரத்தில் தூலவடிவையும், சொப்பனத்தில் போலிவடிவையும், சுழுத்தியில் சூனியவடிவையும் அங்கங்கு இருவரும் நீயாயும் நானுயும் பிரத்தியட்சமாகக் கண்டு நிரந்தரம் அனுபவிக்க நின்றநிலை யிவையாதலால் இவற்றையே நீயாயும் நானுயும் நின்றநிலை யென்னுத தென்னை?

விடை: சடமாதலால் கூடாத தென்க.

வினு: அங்ஙனநின்ற நிலை பிராணனென்று லென்னை?

விடை: அதுவும் சடமாதலின் கூடாது.

வினு: சடப்பிராணன், சித்துப்பிராண னென்பவற்றுள் சித்துப்ராணன் என்று லென்னை?

விடை: சித்தென்றுல் சைதன்னியம், பிராணனென்றுல் வாயு, இவ்விரண்டமிசமுங் கலப்புற்றதென்றுல் சடசித்து, "ஒற்றுமை நயத்தி னென்றெனத் தோன்றினும் வேற்றுமை நயத்தின் வேறு முடலுயிர்" என்றுற்போல அச்சடசித்தும் இங்ஙனம் அமையுமாதலின் பின்னமாம் அப்பின்ன மிரண்டினுள் நீயாயு நானுயும் நின்ற நிலை யிஃதெனத் துணிவுபடுத்தாததால் இஃதுடன்பா டன்றென்க.

வினு: ஆயின் மனமென்போமா?

விடை: சித்தாயின் தன்னை யறியவேண்டும், சடமாயின் தனக்கயலானவற்றை யறியாதிருக்கவேண்டும் அப்படியில்லையே யாதலால் சித்து சடமென்னும் பின்னப்பொருள் அபின்னமாகத் தோற்றில் அது பொருளாகுமா? ஆகாதாதலின் அஃது முடன்பா டன்றென்க.

வினு: புத்தியென்றுல் விரோதமென்னை?

விடை: இதுவு முன்னையதுபோ லாமென் றுணர்க.

வினு: விருப்பு வெறுப்பில்லாத ஆநந்த மென்று லென்னை?

விடை: விருப்பு வெறுப்புள்ளபோது அந்நிலையதான ஆநந்தமில்லை யவ்வானந்த மில்லாததால் நீ நான் என்ப தில்லாமற் போயி

ற்ளுே? போகவில்லையே போகாதபோது நீ நாளுக நின்றநிலை யில்லா மற் போயிற்ளுே? ஆதலின் இஃது முடன்பா டன்றென்க.

வினு: ஆளுல் மற் றெந்நிலையதோ?

விடை: கூடஸ்த பிரம வயிக்கிய நிலையதென வறிக.

வினு: இங்கே வியாபக மென்ற தெந்நிலையதோ?

விடை: மூன்றவத்தையுந் தோன்றுவது தனது வியாபகத்திலா தலால் தான் என்னும் நிலையாமென்க.

வினு: ஈசுர வியாபக மென்ன லாகாதோ?

விடை: இங்கே தன்னை விளக்கு விக்கவந்த அவசர மாதலால் கூடாதென்க. (கஙரு)

அ-கை.

மற்றிரண்டையுங் கூறல்.

நினைவு கனவுகளி னீயாகக் காண்டல்
அனையதெது பாரென்க வஞ்சில்—நினையாது
சும்மா விருவென்க தூக்கப் படாபாரம்
அம்மா வெனிலொன் றதை.

(எ-நு.) நினைவினுங் கனவினு நீயாகக் காணப்படுகின்றதே அத் தகையதாய பொருள் யாது அதனைச் சிந்தித்துப் பாரென்று சொல் லுக. அதனையுஞ் செய்தற்கு அஞ்சுவளுகில் யாதொன்றுஞ் சிந்தியா மற் சும்மா இருவெனக் கூறுக. அஃதுஞ் சுமக்கப் படாதபார மம்மா எனக் கூறில் மேல் ஓர் தந்திரத்தைச் சொல்லுதி—எ-று.

எடுத்த பிறவிக் குரிய தூலவடிவம்போன்று நினைவு கனவுகளில் நடித்து நீயாகக் காணப்படுவது உபாதி வடிவன்ருதலின் நினைவுகன வுகளி னீயாகக் காண்ட லனையதெது பாரெனவும், சராசரங்களில் ஒன்றையேனும் நினையாது சும்மாவிருவென்பார் நினையாது சும்மா விருவெனவுங் கூறிஞர்.

வினா: நனவில் என்றது நினைவு கனவுகளி லென்ற தென்னை?

விடை: நனவில் நீயாகக் காண்டல் பஞ்சபூத காரியமாகிய தூல வுடலென்று உணர்த்த வேண்டுவ தின்று. நினைவு கனவுகளினீயாகக் காணும் வடிவங்களுக்குக் காரண வகைகளு மாதாரமுந் தெரியாததி னானும், அது தெரிந்தா லதனை நானென அபிமானிக்கும் நீ யினைய னென நினக்குப் புலப்படு மென்பதினானுமென்க. இதுகாறும் பக்குவ நான்கிற் கியைய யதார்த்த ஞானத்தை உணர்த்துமுறைமை இனைய எனக் கூறிய வாறு காண்க. (கசுஎ)

அ-கை.

போலி ஞான மென்றது இனைய தெனவும், அது பக்குவ நான் கிற்கியைய உணர்த்துவ தெனவும் கருதி இக்கவியில் தந்திரம் நான்க னுள் ஒன்றை யுணர்த்தல்.

ஞானமுறை யீதாகு ஞானம்போற் சொல்லுமுறை
தானுநான் காகுமதைச் சாற்றக்கேள்—ஊனுதி
தத்துவமெல் லாமகற்றிச் சச்சிதா நந்தசிவம்
இத்தகைய தாமென்க விங்கு.

(எ-து.) யதார்த்த ஞானமார்க்க மிப்போது சொல்லிக்கொண்டு வந்ததாம். ஞானம்போற் சொல்லப்படும் போலிஞான மார்க்கமும் பக் குவத்தால் நான்கு விதமாகுமதனை யான் சொல்லக்கேளுதி. தூலாதி பிரகிருதி யீறுக்கிடந்த தத்துவமனைத்தும் பொருளல்லவெனக் களை ந்து சச்சிதாநந்த சொரூபமாக விளங்கும் சிவ மித்தன்மைத்தாமென இங்கே விளங்கக் கூறுதி—எ-று.

சச்சிதா நந்தசிவ மித்தகைய தாமென்க விங்கென்றது: எம்ம தத்தரும் போலிசச்சிதாநந்தத்தை யதார்த்த சச்சிதாநந்தமெனக் கல் விச் செருக்கால் மெய்யுணர்ந்த ஞானிகள் மொழியை இலக்காகக்

கொள்ளா வாறுபோன்று கொண்டு தத்த மதிமயக்கால் சிவமல்லாத தைச் சிவமாகக் கோடலைத் தவிர்தற்கென்க. இதனால் முன்னர்த் தத்துவங்களை நியதிகளைந்து சிவத்தைத் தரிசிப்பிக்க வேண்டு மென்பதாயிற்று. (௧௧௮)

அ-கை.

அது புலப்படா விடத் ததற்குக் கீழாய தந்திரமுணர்த்த வேண்டு மென்ப தினைய தெனல்.

அறிதற் கரிதே லகண்டமதா யெங்கும்
நிறைந்தபரி பூரணமா நெஞ்சுள்—உறைந்திருக்கப்
பாவனைதான் செய்யென்க பாவித்தற் கொண்ணாதேல்
ஆவதுமே லொன்றுண் டறை.

(எ-து.) அஃதறிதற் கரிதாகக் காணப்படுமாயின் அச்சிவமெங்கணும் அகண்டமாக நிறைந்துள்ள பரிபூரண சொரூபமா யகத்திருத்தலை வேண்டிப் பூரண பாவனை யாயினுஞ் செய்யென் றோதுக. அங்ஙனம் பாவித்தற்குங் கூடாதாயின் அதற்கும் கீழாகச் சொல்லப்படும் தந்திர மேலொன்றுண்டு அதனைச் சொல்லுதி—எ-று.

சிவம் அகண்ட பரிபூரண மெனச் சுருதியாலேனும் கேள்வியாலேனும் தெரிந்த விடத்தும் குருவருளால் அன்றி விளங்காதாதலால் இங்ஙன முபதேசிக்க வேண்டுமென்க.

வினா: இங்ஙனம் தானே பாவித்தால் விளங்காததற் கேதென்னை?

விடை: அங்ஙனம் விளங்குதற் கேதுவான தந்திரம் தன்பால் இல்லாமையா லென்க.

வினா: அத்தந்திரம் ஆசிரியர்பா லுறிப்ப தெவ்வகைசாத்திலோ?

விடை: மாணாக்கனுக் காசிரியரிடத் தடங்காப் பயபத்தி மேவிட்டவிடத் தென்க.

வினு: இம் முறையா லன்றிச் சான்ருே ராணையும் தள்ளித் தாமே போதக கர்த்தாவாக இதனைப் போதிப்ப தென்னை?

விடை: கல்விச் செருக்காலும், மடமை மேலீட்டாலும் தெரிந் தார்போற் போதிப்பதன்றித் தாமிப்பயனை யடைதற் கன்றெனக.

வினு: ஆயின் தமக்குப் பயனுகக் கருதிய தென்னை?

விடை: புகழ் வெற்றி வைராக்கியம் மகான்களுக் கடங்காமை ஞாயமின்றித் தான் பிடித்தது சாதித்தல் அற்பக் களிப்பு முதலிய வற்றையெனக.

வினு: இவற்ருல் தமக் கென்னை?

விடை: இவை முன்னர்த் தமக்கு இனியனபோல்காட்டிப் பின் னர் நிரையத்துள் தள்ளுவதுதாமெனக.

வினு: அஃதெங்ஙனம்?

விடை: விக்கிரக ஆராதனை சம்மதத்தைக் காருண்ணியத்தால் நிவிர்த்திக்கவல்ல, அடத்தாலாதலின் நிரையமே யெனக.

வினு: அடமென்பதை யாதினு லறியலாம்?

விடை: அவர்கள் வசனத்தா லெனக.

வினு: அவ்வசனம் யாது?

விடை: விக்கிரகங்கள் சீவ சிருஷ்டி யாதலின் வணங்கக்கூடா தென்பது.

வினு: அது ஞாய மன்ருே?

விடை: வணங்கத்தக்க தின்னதென்று தெளிந்த விடத்தன்ருே இவற்றை நிக்கிரகிக்க வேண்டியது? ஆதலால் ஞாய மன்றெனக.

வினு: எவ் வெவ்வுலகத்திலும் சிருஷ்டி திதி சங்காரம் நடத்தல் பற்றிப் பரிபூரண வஸ்து வெனக்கொண்டு இவற்றை நிக்கிரகிக்கப் புகுந்ததால் ஞாய மென்ருே லென்னை?

விடை: பரிபூரண இலக்கணம் நாட்டப்புகில் அதற்குத் தடையாயுள்ள சந்தேகங்களை ஞாயத்தால் நிவிர்த்தித்துக் காலதேச வஸ்து பரிச்சேதமின்றி உணர்த்தத் தரும் வல்லமையேனும் பெரியர்பால் அடுத்துச் சந்தேக விபரீதமறக் கேட்கத்தகும் வணக்கம் உடைமையேனும் தன்பால் இல்லாமல் இரண்டொரு ஞாயம் கற்றுக்கொண்டு பரிபூரணம் நாட்டப்புகில் அப்பால் வருங் கண்டனைகளுக்கு ஞாயஞ் சொல்லத் தெரியாமல் ஈதெல்லாம் வாயாடித்தன மென்பதுதானோ ஞாயம்? அல்லவென உணர்க. இஃதன்றியும் சீவகற்பிதம் விக்கிரகமெனின் ஈசுர கற்பிதமாகிய மண் கல் பொன் வெள்ளி செம்பு மரமுதலிய வற்றைத் தள்ளிச் சீவ கற்பிதத்திற்குப் பொருள் வேறாகக் காட்டவேண்டும். கரசரணாதிய விகாரமெனின், முதலைத் தள்ளிக் காட்டவேண்டும். அபின்னமெனின் இயற்கையா யிருக்கவேண்டும். அபின்னம்போல் காணப்படுவதெனின், அபேத காரண காரியமாக வேண்டும். அன்றெனின் காரியப்படுதற்கு முதற்காரணம் வேறுபட்டே யிருக்கவேண்டும். இராதெனின் அருச்சனை முதலிய வழிபாடனைத்தும் ஈசுர கற்பிதமாகிய மண் முதலியவற்றிற்கு ஆகுமாதலால் அங்ஙனங் கூறுதொழிக. தெய்வம் உருவ மன்றெனின் ஆகாய முதலிய அருவம் தெய்வமாக வேண்டும். அசேதனமும் சடமும் ஆதலால் அஃதாகாதெனின் உருவம் தெய்வ மன்றென்னுது வாய் பொத்திக்கொண்டிருக்கவேண்டும். ஆதலின் தெரியாததைத் தமக்குத் தெரிந்ததுபோல் வாதித்தல் அடமெனவறிக.

வினா: ஆயின் விக்கிரக முதலியவை தெய்வம் அல்லா திருக்கத் தெய்வமென்று ஆராதிக்க ஆதியில் நாட்டினோரது கருத்தென்னை?

விடை: காரண காரியங்கள் கடந்த தம்மைக் காரண காரியங்களில் ஒன்றாகக் கண்டு அனுபவிக்கத்தக்க பக்குவமுள்ள ஆன்மாக்கள் காரண காரியங்கள் கடந்த சிவத்தைக் காரண காரியங்கள் கடந்து எங்ஙனம் ஆராதிப்பரெனக் கருதிச் சிவத்திற்கு ஆதி காரணம் மாயையும் அந்தக்காரியம் உருவமும் ஆதலால் இவர்களும் தமக் காதி

காரணமாகிய அவித்தைக்கு அந்தக்காரியமாகிய தூல வுருவை நானென்று அபிமானித்து அதற்குச்செய்யும் உபசாரம் அனைத்தாலாய பயன் தனக்காதல்போலச் சிவம் உருவமென்றுண்மையாகப் பாவித்து அவ்வுருவத்திற்குச் செய்யும் ஆராதனை முதலிய சோடச உபசாரத்தால் ஆயபயன் சிவத்திற்காமென்பது கருத்தென்க.

வினா: விக்கிரக மாகிய உருவம் சிவமாகுமா?

விடை: சிவத்னை யன்றி வேறன்றாதலால் சிவமென வறிக.

வினா: அஃதெங்ஙனம்?

விடை: சிவ கற்பிதமாகிய விக்கிரகம் ஈசுரகற்பித மாகிய கல் செம்பு பொன் முதலியவற்றிற்கும், இந்தக்கல் முதலிய உருக்கள் அருவமாகிய வெற்ற வெளிக்கும், இந்த வெற்றவெளி யெங்கணும் நிறைந்துள்ள சிருஷ்டியாதிய செயலுக்கும், இந்தச் சிருஷ்டியாதிய செயல் சர்வக்ஞத்துவம் சர்வேந்திரியாமித்துவம் சர்வேசுரத்துவம் முதலிய குண வியாபகத்துக்கும், அந்தக் குண வியாபகம் பகவானுக்கும் அபின்னமாகவும் தத்தமக்குரிய காரணங்களை யன்றிக் காரியங்கள் தமக்கு வேறுபொருளின்றித் தோற்றல் மாத்திரப் பொருளாகியும் இருத்தலால் எல்லாம் சிவ சொரூப மென்றறிக. (கசுசு)

அ-கை.

அதுவும் புலப்படாவிடத்து அதற்கும் கீழாய தந்திரம் இரண்டையும் இக் கவியிற் கூறல்.

மானதபூ சைக்குரிமை மாறாது செய்யென்க
ஆனதுவுஞ் செய்தற் கரிதாகில்—ஈனமிலா
மூர்த்திதலந் தீர்த்த முறையாகச் செய்யென்க
பேர்த்திடிலென் செய்வோம்யாம் பின்.

(எ-து.) யாதானு மோர் மூர்த்தத்தை மனதில் பாவித்து அதற்காராதனை முதலிய சோடச உபசாரங்கள் இயற்றத் தகுவனவற்றை

யங்கேதானே யிடைவிடா தியற்றிடுகவெனக் கூறுக. அத்தகைய தான மானத பூசனையையும் இயற்றுதற்கு அரிதெனக் காணுமாயின் குற்றமில்லாத மூர்த்தி தலம் தீர்த்தங்களை யவற்றிற்குரிய விதிப்படி யாராதித்தல் முதலியவற்றைச் செய்யெனக் கூறிடுக. அஃதும் தவிரு மாயின் பின்னர் யாம் யாது புரிவம்—எ-று.

யாதானும் ஒருபாசனு மூர்த்தத்தைத் தன்மனதில் பாவித்து அவ்விடத்திற்றானே யதனை யெழுந்தருள வைத்துப் பூசனை நைவேத் திய ஆராதனை முதலிய உபசாரங்களைப் பாவனையாக இயற்றித் துதி முதலியவற்றைச் செய்தல் மானதபூசை யெனவும், அன்பருக்காகப் பலவேறு வடிவாகப் பகவானெழுந்தருளி அங்கங்கே வந்த கோலங் களை மூர்த்தியெனவும், இக்கோலங்கள் தங்கி யற்புதங்க ளியற்றிய புண்ணிய விடங்கட்குத் தலமெனவும், ஒவ்வோர் புண்ணியங் கருதி யுபரதி வைராக்கியத்தால் அவரவ ரழைப்பித்த நதிகட்குத் தீர்த்தமெ னவும் பொருள்படக் கூறியவாறு காண்க.

வினா: மானத பூசையால் யாது பயன்?

விடை: செய்து முடியுமள வாயினும் மனது புறம் புகாமையே பயனு மென்க.

வினா: விடயத்தைப்போல் இதுவும் திரிபுடியும் இச்சா ஞானக் கிரியையும் உடைய தன்றோ?

விடை: உடையதேனும் இராகத் துவேஷாதிகட்கு இடந் தரா மையானும் பகவானிடத்துப் பயபத்தி மிகப் பெருகுதலினானு மஃது ஆகா தென்க.

வினா: மூர்த்தியாலாம் பயனென்னை?

விடை: அன்பர்களுக்காக நடித்த மூர்த்திகளது திவ்விய புண் ணிய சரித்திரங்களைச் சாம்பிரதாயப்படி விசாரித்து நன்கு தெளிந்து அம் மூர்த்திகளைச் சென்று தொழுந்தோறும் அன்பும் ஆராமையும் பெருகுதலே பயனு மென்க.

வினா: தலத்தா லாம் பய னென்னை?

விடை: தலத்தின் மகிமையை நன்குணர்ந்து அவ்விடங்களிலே செல்லுந்தோறும் அன்பும் வியப்பு முள்ளத் தெழுதலே பயனுமென்க.

வினா: தீர்த்தத்தா லாம் பயனென்னை?

விடை: அவற்றின் மகத்துவத்தைத் தெரிந்து அந்தந்த நதிக்கண் செல்லுந்தோறு மன்பும் வியப்பு முள்ளத்தெழுந் தக்கணத்தே மூழ்க ச்செய்து அகக்களிப் புண்டாகுதலே பயனுமென்க. (உ00)

அ-கை.

ஞானப் போலி மார்க்கம் நான்கிற்கும் அபாத்திரமான விடத்து அதற்கும் கீழாய நிலைகள் நான்கினுள் இங்கே மூன்றினைக்கூறுதல்.

உருவாக வேனு மொழிந்தருவா யேனும்
பெருகுமன்பாற் பூசனையைப் பேணித்—திருகறநின்
றர்ச்சிக்கச் செய்க வஃதுஞ்செய் யொண்ணாதேல்
விர்த்திக்கச் செய்விரத மிக்கு.

(எ-து.) இஷ்டலிங்க முதலிய வுருவமாக வாயினும் அது கூடா விடத்துச் சாமானியமா யருவமாக வாயினும் மிக்க அன்பால் பூசிக்க விரும்பித் திரிகரணங்களும் மாறுபடா தொத்துநின்று ஆராதிக்கச் செய்திடுகே? அதுவும் செய்தற்கு முடியாதாகில் சஷ்டி முதலிய விரத ங்கள் மேலுமேலும் வளர அதனை முயல்வதற்குத் தூண்டுகே?—எ-று.

சாலக்கிராமம் கணேசன் முருகன் சபாபதி முதலிய சிறிய விக்கி ரகங்களை அவரவர்கள் செய்து தங்கள் தங்கள் கிரகங்களில் வைத்துக் கொண்டு தினந்தோறும் அவற்றைப் பூசியாமல் நீரேனும் பட்சணை செய்யார். இஃதன்றியும் யாத்திரை சென்ற விடத்தும் அதனை எடுத் துக்கொண்டு அங்கணும் அவ்வாறே செல்வர். அதுபோல நீயும் செய் வித்திடுகே. பிறர் மெச்ச வாவது, விசேஷண உண்டிக் காவது, தேகா ந்தத்தில் இன்ன பலன் தருமென்பதைப் பற்றியாவது விரதம் தவி

ராது இருக்கச் செய்க. டம்பத்துக் காவ திவ்வாறு செய்விக்கில் அது தானே மெல்ல மெல்லப் பின்னர்ச் சிவபெருமான்பால் பயபத்தியை விளைவிக்கும். ஆதலின் இவ்வாறு கூறினு ரென்க. (உ௦க)

அ|-ளைக.

எனைய தொன்றினையுங் கூறல்.

அதுவு மியற்றற் கரிதாகி லன்பர்
புதுமைச ரிதஞ்செவியிற் போக—இதுசெய்க
ஆகாதேற் கெட்டொழிவ ராகமெல்லக் கூட்டிப்போய்ச்
சாகா நிலையதனைத் தா.

(எ-து.) அவ்விரதம் இயற்றற் கரிதெனக் காணப்படுமாயின், தொண்டு செய்து பேறுபெற்ற அடியார்களின் அற்புதமான திவ்விய சரித்திரம் அவர் செவியில் புகத்தக்க தந்திர மாகிய இதனை யெவ்விதத் தானும் செய்திடுக? இஃதும் கூடாததாகக் காணப்பட்டுக் கை விட்டு விடுவையாயின் யாதுக்கு முதவாமல் கெட்டு நாச முறுவார்கள். ஆதலின் அவர்கள் அறி நிவிராராகத் தக்கதாக மெல்ல மெல்லக் கூட்டிக் கொண்டுபோய் எந் நிலைகட்கும் மேலாய் நின்றுள்ள அழியா நிலை எதுவோ அதனைத் தந்திடுக—எ-று.

அனுதினமும் அன்பரது திருத் தொண்டுப் பேற்றை யவரவா கேட்கச் செய்வித்தலால் அவ்வாறே யாமும் திருத்தொண்டு செய்து உய்யலாமென் றெண்ணம் வரும். அது வர அவ்வாறு இயற்றி யன்பு பெருக அதில் அழுந்துவார்கள். ஆதலின் அன்பர் புதுமை சரிதஞ் செவியிற் போக இதுசெய்க வெனவும், அவரவரிட்டத்தின்படி நீயும் சென்று அங்கங் குள்ள குற்றம் அவரவர் எற்சத்தரும் அசைசா மறிந் துணர்த்தி யதற்கு மேலாய நிலை யுணர்த்துந்தோறு மவ்வாறு தாமத மின்றிச் செல்லுவ ரென்பது திண்ணை மாதல்பற்றி ஆக மெல்லக் கூட்டிப்போய்ச் சாகா நிலை யதனைத் தாவெனவுங் கூறினார். (உ௦உ)

அ-கை.

இதுகாறும் போதிக்குமாறு இங்ஙனமென் றுணர்த்திய ஆசிரியரை நோக்கி மன மடங்கு நிலையும் யான் நிற்கும் நிலையும் எவ்வாறு என்ற மாணாக்கனுக் குத்தரங் கூறல்.

மனமடங்சச் செய்யும் வழியாதென் றேற்றில்
கனயோக மோரிரண்டாற் காண்க—தினமுநான்
எவ்வா றிருப்பதெனி னென்னைநினை யொன்றாக்கும்
ஒவ்வா நிலைநின் றொளிர்.

(எ-து.) போதிக்கும் மார்க்கம் அனைத்தும் உணர்த்திய ஆசிரியரை நோக்கி ஐயனே! மனம் நசிக்கத்தக்க நிலை யாதெனக் கேட்க அதற்கு ஆசிரியர் மகத்தான யோக மார்க்கம் இரண்டினால் அந்நிலையைத் தெரிந்து கொள்ளுதி? என, ஆயின் யான் அனுதினமும் நிற்குமாறு எங்ஙனம்? எனக் கேட்கில் நான் நீ யென்பது இரண்டின்றி யொன்றாக்கத் தக்க நிகரற்ற நிலைக்கண் நின்று விளங்குதி—எ-று.

யோக மிரண்டாவன: கிரியாயோகம், ஞானயோக மென்பன. கிரியாயோக மென்பது: மனதைப் பிராண பந்தனம் செய்து குண்டலி சத்திபால் நெடுங்காலம் சலியாது நிறுத்தல். ஞானயோக மென்பது: கிரியாயோக அனுஷ்டான பலத்தால் அம்மனதை யிங்ஙனமாய் உழைப்புக ளின்றிச் சிரவண முதல் சாட்சாத்காரம் இறுதியாக்கிடந்த ஐந்நிலையும் ஐயந் திரிபற விசாரித்துத் தெளிவதனால் சின்மாத்திர மாக்கிப் பேதியாது தனது சொரூபமாக விளங்கச்செய்தல் நான் நீ யென்பதின்றி முன்னரே ஏகமா யிருப்பதால் பின்னரும் ஏக மாக்கும் சைதன்னிய மென்பது தோன்ற என்னை நினை யொன்றாக்கு மொவ்வா நிலை யென்றார். (உ0௬)

அ-கை.

ஞானமார்க்க மிரண்டென்றதற்கு உண்டாய பேதம் இனையதாலெனல்.

ஞானமிரண் டென்பானே னறியச் சொல்லுமெனத்
தானன் னியஞானந் தானாகும்—ஞானம்
இதிலுண்மை பின்னையதா மீங்கிரண்ட தின்றால்
மதிநுட்பத் தாலே மதி.

(எ-து.) ஞானமார்க்கம் இரண்டெனக் கூறியது யாதுகாரணம் பற்றி? அக்காரண நயத்தை யான் தெரிந்து கொள்ளுமாறு தேவரீர் விளங்கச் சொல்லுமென்று மாணக்கன் வினவ அதற் காசிரியர் தான் அன்னிய ஞானமெனவும், தானாகும் ஞானமெனவுங் கூறுப. இங்ஙனம் கூறிய இரண்டினுள் பின்னையது யதார்த்த ஞானமாம். யாதினாலெனின் இங்கே தனக் கன்னியமென்னும் இரண்டாம் வஸ்து இல்லாததினாலே இதனை நினது அதிசூக்கும மதியால் மதித்திடுக— எ-று.

இதிலுண்மை பின்னையதா மீங்கிரண்ட தின்றுவென்றதனால் அறிவு சீவன், ஆனந்தம் சிவம் எனப் பொருள்கொண்டு அறிவே ஆனந்தம், ஆனந்தமே அறிவென்று ஐக்கியமாக்க வகை தெரியாதார் சமுத்திரத்தில் மூழ்கிய கடம் சமுத்திரமாகா வாறுபோன்று சிவாநந்தக் கடலில் மூழ்கிய அறிவாகிய சீவன் சிவானந்த மாகாமலும் தற்சொரூபம் விளங்காமலும் மக்கள சுழுத்திபோல் துவிதமறாது நிற்கும் நிலையை ஞானமென்பர். இது ஞானமாகுமா? இஃதன்றியும், சக சீவ பரமனாதி நித்தியமெனவும், இவை கற்பித மன்றெனவுங் கூறுவர். இவை யதார்த்த மாகுமா? அதனை ஞானமெனவும், இதனை யதார்த்தமெனவும் ஞாயத்துக்கு விரோதமின்றி நாடும் நாட்டவகை தெரியாதார்க்கு வெட்கமின்றிப் பிதற்றும் வாயேன்? அதனை ஞான மெனின் பந்ததசையில் தற்போதம் கண்டம் மருள் சுகதுக்கம் மக்களனைத்தும் ஆனந்தாதீதம் எனப்படு மிவை ஞான மாகு மாயின் விடுதி தசையில் தற்போத வொழிவு பரை அருள் ஆனந்தம் ஆனந்தாதீதம் எனப்படு மிவை ஞானமாகும். அது ஞான மாகா தெனின் இதுவும் ஞான

மாகாது. எங்ஙன மெனின் பந்த தசையில் தற்போதம் முதலிய வற்றை அறிவு விலட்சணமாக நின்று அவற்ருேடு போக்கு வரத் தின்றி யறியுமாறு போன்று தற்போதவொழிவு முதலியவற்றை விடு திதசையில் அவற்றிற்கு விலட்சணமாக நின் றறிதலானும், ஞானம் இரண்டு தசையினுமுள்ள தாதலினுனும் பொருந்தாது. அறிவென் பதும் ஆனந்த மென்பதும் தானன்றி யில்லாமையினுனும், அறிவும் ஆனந்தமும் தானுகாமையானும் இது பற்றி யுண்மை ஞானமெனப் பட்டது. அறிவானந்தத்தின் ஐக்கியமே தானுதலால் தானுவ தினைய தென் றுய்த்துணர்க. (உ0ச)

அ-கை.

ஆசிரியரது உண்மை நிலைக்கு வியந்து அவரைப் பணிந் துருகல்.

என்ருன் றிருவடியி லெவ்வங்க மும்பட வீழ்ந்
தொன்ருகி யன்ருகி யுள்ளொளியாய்—நின்றவனைக்
கண்டதவ மென்னென்ருன் கைகூப்பி நின்றுருகி
அண்டாண்ட முங்கடந்த வன்.

(எ-து.) இவ்வண்ணம் சுருதி யுத்தி யனுபவங்கள் ஒன்றுக்கொன்று முரணு தொத்து நிற்கும் முடிவாய நிலை யினையதென் றுணர்த்திய ஆசிரியரது திருவடியில் தனது அவயவமுழுதும் நிலத்தில் படக் கீழே விழுந்து ஏகமாகியும் அல்லாததாகியும் எவ்வுயிர்க் குள்ளும் சுயம்பிரகாச மாகியும் விளங்காநின்ற உனது சொரூபத்தைத் தெரிசித்த எனது தவம் என்ன தவமோ யானறிகிலெனெனக் கைகுவித் தெழுந்து நின்று மனதுருகித் துதித்தனன் அண்டாண்டமுதலிய அனைத்தையும் கடந்து சொப்பிரகாசமாக விளங்கிய மாணுக்கன்—எ-று.

சமஸ்தமும் தானுக விளங்கலின் ஒன்ருகி யெனவும், சமஸ்தத்திற்கும் விலட்சணமாக நின்று அததுவாக விளங்கலின் அன்ருகியெனவும், எவ்வுயிர்க் குள்ளும் நீக்கமற நின்று இலங்கும் சிற்பிரகாசமே

ஆசிரியர் ஆதலின் உள்ளொளியா யெனவும், ஆசிரியர் அநுக்கிரக முறைமைப்படி வழுவாது நின்று அனுட்டித்துத் தெளிந்தோன் மாணாக்கன் ஆதலால் அண்டாண்டமுங் கடந்தவ னெனவுங் கூறினர்.

அ-கை.

அங்ஙனந் தெளிந்த மாணாக்கனுக்கு ஞான பட்டாபிடேகஞ் செய்தல்.

உடலாதி கொண்டிடுங் குயர்ஞான பீடத்
தடிசூட்டி யொப்பின் றமர்த்தித்—கடிதகற்றுந்
தானுருஞ் செங்கோலைத் தந்துமுத்தி யாள்கவென
மோனாநந் தச்செல்வ மூழ்த்தி.

(எ-று.) இங்கே யுடல் பொருளாவி யென்னு மூன்றையுந் தனமாகக்கொண்டு கற்பனை கடந்த மேலான ஞான பீடத்தின்கண் தனது திருவடியை முடியாகச் சூட்டி எங்ஙனும் சமான மின்றி யிருத்தி மோக நதியைக் கடிதகற்றுந் தானென்னும் செங்கோலைக் கொடுத்து நிரதிசயானந்த மென்னும் முத்தி யுலகத்தை யாளுக? என்று மோனானந்தமென்னுஞ் செல்வத்தில் மூழ்குவித்தான்—எ-று.

உடல் பொருளாவியின்கண் சிந்தை தவிர்த்தலால் உடலாதி கொண்டிடுங் கெனவும், மற்ற பீடமெல்லா மாறுவதாதலால் உயர்ஞான பீடமெனவும், ஏனைய முடியெல்லாந் தவிர்வதாதலால் அடிசூட்டி யெனவும், அன்னிய மின்றாதலால் ஒப்பின் றமர்த்தி யெனவும், அவிவானந்தங்களைக் கடவாதது தானாதலால் அதனைச் செங்கோலெனவும், இங்கே செல்வம் மோனானந்த மாதலால் மோனானந்தச் செல்வமூழ்த்தி எனவும் கூறியவாறு காண்க.

(உ0௬)

அ-கை.

ஞான பட்டாபிடேகம் செய்த பின்னர் மாணாக்கனை நோக்கி நினது சுவானுபவத்தைச் சொல்லுக வெனல்.

மூன்றவத்தை தானு முறைகாணுங் காட்சிகளும்
மூன்றிடமு நின்னிலையு முன்கண்ட — ஆன்றநிலை
தன்னை யுணர்த்திடுக சற்புத்தி ராவென்றான்
தன்னையெங்குங் கண்டிடுமே வான்றான்.

(எ-து.) நன வாதிய மூன்றவத்தா நிலையினையும், நிரைநிரையே யவற்றில் காணப்படும் காட்சிகளையும், அஞ்ஞானம் ஞானம் தான் என்னு மிம் மூன்றிடத்தையும், நினது யதார்த்த நிலையினையும், நீ பிரத்தியட்சமாகக் கண்ட சிறந்த சுவானுபவ நிலையினையும் தெரிவித்திடுக? சற்புத்திரனே யெனக் கேட்டனன் தன்னை யெவ்விடத்தும் காண்போனாகிய ஞானாசாரியன் — எ-று.

இவ்வைந்து நிலையு நினக்குப் புலப்பட்டதா என்று யானறியச் சொல்லுக? என்ப தறி வினா. இதனால் நீ யிதுகாறும் கேட்டுத் தெளிந்தது இவ்வைந்தாதலால் இவ்வைந்தில் அவத்தை காட்சி இடம் நின்னிலை யென்னு மிந் நான்கும் வாச்சியார்த்த மெனவும், முன்கண்ட ஆன்றநிலை யென்னு மிவ்வொன்றும் லட்சியார்த்தமெனவும் பொருள் படக் கூறியவாறு காண்க. (உ௦எ)

அ|-ரை.

அதனை நின் சந்நிதியில் நின்னருளாற் சொல்லுவேனெனல்.

நீகாட்டக் கண்ட நிகரில் சுவானுபவ
ஏகாந்த சுத்தபுத்த விந்நிலையை — நீகேட்கில்
அன்னதனைச் சொல்லுவன்யா னையாநின் சந்நிதியில்
உன்னதரு ளாலிங் குவந்து.

(எ-து.) இருந்தபடி யிருப்பதை நீகாட்ட அவ்வா றச்சைக்ஞை வழித்தா யானும் கண்ட ஒப்பற்ற சுவானுபவமாகிய ஏகாந்தமாகியும், சுத்தமாகியும், புத்தமாகியும் இருக்கின்ற இந்நிலையினைத் தேவரீர் சொ

ல்லுக? என்று கேட்டபடியால் அத்தன்மையான நிலையை ஐயனே! நின் சந்நிதியில் நினது அருள்கொண்டு இங்கே மிகவும் களிப்புற்று யான் சொல்லுவன் — எ-று.

மும்மலங்க ளில்லாமையாற் சுத்தமெனவும், புதியதுபோல் தோற்றலின் புத்தமெனவுங் கூறப்பட்டது. (உ௦அ)

அ-ஷை.

சாக்கிரமாவ திணையதெனல்.

தானாகும் பூரணத்திற் றன்புரண மேயனைத்தாய்த்
தானே யதிலொன்று தானாகித் — தானே
பொறிகரண மாகிப் புறங்கண் டியற்றல்
செறிசாக் கிரத்தின் றிசை.

(எ-து.) தானாகிய பரிபூரண சொரூபத்தில் எழுந்த தனது ஸ்புரண வடிவமே பாஞ்சபூத முதலிய சமஷ்டி வடிவாகத் தடித்து அங்ஙனம் தடித்த தானே அச் சமஷ்டி வடிவில் ஏகதேசமான ஓர் வடிவைத் தானாகப் பாவித்து அதுவாகி யிங்ஙனம் சமஷ்டி வியஷ்டியாகத்தடித்த தானே கரணேந்திரியங்களாகி யிவற்றைத் தானாகக் காணாது தனக் கன்னியமாகக் கண்டு இச்சா ஞானக் கிரியைக ளியற்றுவது தான் விர்த்திகள் மயமான சாக்கிர திசையாம் — எ-று.

சாக்கிரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம் மூர்ச்சை மரணம் எனக் கிடந்த இவ் வேழவத்தைகளும் தோன்றி மறைதற்கு ஆதாரமாயும் அவற்றிற்கு விலட்சணமாயும் சாட்சியாயும் அங்கங்கிருந்த வண்ண மிருந்து என்று மொருபடித்தாய்ச் சலியாது சட சித்தாயும் அன்றாயும் நின்றொளிர்வது எச் சைதன்னியமோ அச் சைதன்னியமே தானாதலால் தானாகும் பூரணத்திலெனவும், சமுத்திர அகண்ட வியாபகத்தில் எழுந்த ஓரதிசூக்கும நீர்த் துளிபோன்று தனது வியாபகத்தில் தன் மறதியால் எழுந்தது ஞெப்தியாதலால் அதனைத்

தன்புரண மெனவும், அனுதினமும் தோற்றி மறைவது ஞெப்திக்குக் காரணமாகிய சைதன்னியமு மன்று காரியமாகிய திரிசிய பேதங்களு மன்று ஆதலின் அனைத்தும் ஞெப்தியா மென்பது பற்றித் தன் புரண மே யனைத்தா யெனவும், அங்ஙனம் சமஷ்டி வடிவாகப் பரிணமித்த ஞெப்தியே வியஷ்டி வடிவிலொன்றாகிய ஓர் தனுவை யானென் றபி மானித்தலால் தானே யதிலொன்று தானாகி யெனவும், இங்ஙனம் சமஷ்டி வியஷ்டி வடிவாகிய சடரூப மாகப் பரிணமித்த ஞெப்தியே சித்து ரூபமாகிய கரணேந்திரிய மாக அவற்றை யறிதற்கு விகாரித்து நிற்றலால் பொறி கரணமாகி யெனவும், திரிசியமாகப் பரிணமித்த லும் அவற்றை யறிதற்குச் சித்துரூபமாக விகாரித்தலும் தானெனக் காணாது அன்னிய மாகக் காண்டலானும் இச்சா ஞானக் கிரியைகள் இயற்றலானும் புறங்கண்டு இயற்றலெனவும் கூறினார். இதனால் சாக் கிரமென்பது இனையதென்பதாயிற்று. (உ0௧)

அ-கை.

சொப்பனமுஞ் சுழுத்தியு மினையவெனல்.

கூத்தொழிந்த காலத்துங் கூத்தாகக் காண்பதுபோல்
தோற்றுகின்ற காட்சியெலாஞ் சொப்பனமாம்—தோற்றுவ
தின்றிடத்து நாட்டம்போ னேராகத் தோற்றமெது [தும்
அன்றோ சுழுத்தியென்ப தாம்.

(எ-து.) ஓர் களரியின்கண் ஆடும் கூத்து நின்றகாலத்தும் கூத்து போல் தாளம் மத்தளம் இனிய மிடற்றோசை யாக அசதியில் இசைத் துத் தோற்றுமாறு போன்று புத்திபூர்வமாகத் தடித்த ஞெப்திக் கசதி பிறந்தவிடத்து அபுத்தி பூர்வமாக நனவில் தசேந்திரிய நடனம்போல் நடிக்கும் தோற்ற மனைத்தும் சொப்பன மெனப்படுவதாம். அவ்விரு வகைத் தோற்றமும் ஒய்ந்த விடத்துப் பலன் இழந்த நாட்டத்துக்குக் களரி பாழே பலனாகத் தோற்றுமாறு போன்று நனவு கனாத் தோற் றம் ஒய்ந்தவிடத்து அவற்றை நாடிய நாட்டத்துக்கு அப்போது நேரா

கத் தோற்றுகின்ற தோற்றம் பாழாதலால் அப்பாழன்றோ சுழுத்தி யெனப்படுவதாம்—எ-று.

நனவில் சமஷ்டி வியஷ்டி ரூபமாகத் தடித்துழன்ற ஜெப்திக்கு அசதி தோன்றிய விடத்து வாசனையாக நனவைப்போல் நடிக்கக் காண்பது சொப்பன மெனவும், அஃதும் ஒய்ந்த விடத்துத் திரியம் சின்ன மன்றுதலால் பாழைச் சுழுத்தியெனவுப் பொருள்படக் கூறிய வாறு காண்க. (உக௦)

அ-ஸை௬.

மேல் நிறுத்த முறையான் அம்மூன் றவத்தையினும் காணும் காட்சிகளையும், மூன்றிடத்தையு முணர்த்தல்.

தூலமாய்ச் சாயையாய்ச் சூனியமா யெவ்வுயிர்க்கும்
சாலப் புலப்படுத லுன்காட்சி—மேலிறுக்க
அஞ்ஞான ஞான மகலாத்தான் மூவிடமாம்
மெய்ஞ்ஞா னிகளுரைப்பர் மேல்.

(எ-து.) மூன் றவத்தைக் கண்ணும் தூலவடிவாயும் சாயாவடி வாயும் பாழ்வடிவாயும் எவ்வகைப்பட்ட உயிர்கட்கும் விடாமல் அறு தினமும் காணப்படுவது காட்சி யெனப்படுவதாம். கற்பிதம் யதார் த்தம் சுபாவ மென்பவற்றிற்கு அஞ்ஞானம் ஞானம் இவ்விரண்டொ த்தும் அவற்றைப்போல் அகலாத தான் என்கின்ற விம் மூன்று மேற்கூறிய ஆதாரமாயுள்ள விடமாம். இதனை மெய்ஞ்ஞானிகளுட சிறந்ததாகச் சொல்லுவர்—எ-று.

மெய்ஞ்ஞானிகளு மென்ற உயர்வு சிறப்பும்மை யெஞ்சிநின்றது. அஞ்ஞானம் ஞானமகலாத் தான் மூவிடமாம் என்றதனால் இன்னவற் றிற்கெனப் புலப்படுதற்குக் கற்பிதம் யதார்த்தம் சுபாவமென வரு வித்தாம். பொருளல்லவற்றைப் பொருளாகக் கோடல் கற்பிதம். அக் கற்பிதம் அஞ்ஞானம் உள்ளளவும் நிலைத்திருக்கும். ஆதலின் கற்பிதத்

திற்கு ஆதாரம் அஞ்ஞான மெனவும், பொருளைப் பொருளாகக் கோடல் யதார்த்தம். அவ்யதார்த்தம் ஞான முள்ளளவும் நிலைத்திருக்கும். ஆதலின் யதார்த்தத்திற்கு ஆதாரம் ஞான மெனவும், ஞாஞஞ்ஞான மகன்று இருத்தல் சுபாவம். அச்சுபாவம் தானென்பது உள்ளளவும் நிலைத்திருக்கும். ஆதலின் சுபாவத்திற்கு ஆதாரம் தானெனவுமாம்.

வினு: அஞ்ஞானம் ஞானம் சுபாவம் என்னும் இம்மூன்றும் உள்ளபோதும் இல்லாதபோதும் தானென்பது இல்லாதிருக்கவில்லையே இங்ஙனம் இருக்கத் தானென்பது உள்ளளவும் சுபாவம் நிலைத்திருக்கும் என்றதென்னை?

விடை: தானென்பது யாரு திருக்கினும் தானே தானாக விளங்குகின்றே மென்னும் ஸ்புரணை யெல்லாமா யல்லவுமா யிருத்தலால் அந்த ஸ்புரணைக் கிது சுபாவமாம். இந்தச் சுபாவ மிங்ஙனமா யுள்ள ஸ்புரணை யுள்ளளவு மிருக்குமென்பது திண்ண மாதல்பற்றிக் கூறினு மென்க. (உ௧௧)

அ-கை.

தன தாத்தும நிலையினையும், பிரத்தியட்ச ஞாஞனுபவ நிலையினையு முணர்த்தல்.

திரிபுடியா யன்ருய்த் திகழ்வதுவே யென்றன்
மருவுநிலை யீதாகு மாசற்—றொருகோடி
சூரியர்போ லெங்குஞ் சுடர்விட் டொளிருசுக
வாரிதியாய் நின்றேன் வழிந்து.

(எ-று.) ஞாதுரு ஞான ஞேயமெனப்படும் திரிபுடியாயும் அல்லாததாயும் விளங்குகின்றது எதுவோ அதுவே உண்மையா யுள்ள எனது சொரூபமாம். யாதோர் களங்கமின்றிக் கோடி சூரியப் பிரகாசம்போல உபாதிரகிதமாக எங்கணும் ஞானகிரணங்களை வீசி விளங்குகின்ற ஆனந்த சமுத்திரமாகக் கரைகடந்து நின்றனன்—எ-று.

சடமாகவேனும் சித்தாகவேனும் திரிபுடியாகக் காணப்படுவதும் காணப்படாம லிருப்பதும் சைதன்னியமாதலால் திரிபுடியா யன்று ய்த் திகழ்வதுவே யெனவும், அச்சைதன்னியமே நானெனப்படும் எனது சொரூபமென்பார் என்றன் மருவுநிலை யீதாகுமெனவும், யான் கண்ட பிரத்தியட்ச சுவானுபவ சாட்சாத்காரநிலை இஃதென உணர்த்தினான் என்பார் மாசற் றொருகோடி சூரியர்போ லெங்கும் சுடர்விட் டொளிருசுக வாரிதியாய் நின்றேன் வழிந்தெனவும் கூறியவாறு காண்க. இதனால் நானெனப்படுவது இனைய தெனவும், அதனைக் கண்ட பிரத்தியட்ச சுத்த சாம்பிராச்சியநிலை யிஃதெனவும் பொருள் படுமாறு காண்க. (உகஉ)

அ-கை.

இன்னும் தனது சுவானுபவ நிலையினை யுணர்த்துவான் வேண்டி யிக்கவியி லிப்போது பஞ்சவிடயங்களை யனுபவிக்குமுறை யிவ்வா றெனல்.

ஐயுணர்வுக் கவ்விடய மன்னியம தாயிருந்தேன்
ஐயுணர்வே யவ்விடய மாவமர்ந்தேன்—ஐயுணர்வாய்
எவ்விடய முங்காண்பே னென்னையினி யென்செய்யும்
அவ்வவ் விடத்தொளிர்வ தால்.

(எ-து.) சுரோத்திரம் தொக்கு சட்சு சிங்குவை ஆக்கிராணமெனக் கிடந்த ஐந்தறிவுக்கு மவ்வவ் விடயமாகிய ஒலியாதி யைந்து மன்னியமானதாக எண்ணி யலைந்துகொண் டிருந்தேன். இப்போ தவ்வைந்துணர்வே அவ்வவ் விடயமாமெனச் சுருதி யுத்தி யனுபவத்தாலையந் திரிபறத் தெளிந் தலைவற் றமைதியானேன். இனி யவ் வைய றிவாக எந்தெந்த விடயங்களையும் மயக்கமின்றிக் காண்பேன் அங்ஙனங் காணப்புகின் எவ்விடயமு மென்னை யினி யென்ன செய்யும். அங்கங்கு மதனுவாக நின்று அதது நானாகாமல் சொப்பிரகாசமாக விளங்குவதால்—எ-று.

உபாதி குணங் தொழிலைத்தள்ளிப் பஞ்சேந்திரியமென்னு முணர்வை லட்சியார்த்தமென நாடும் நாட்டம் பெருமையா லையுணர்வுக் கவ்விடய மன்னியமதா யிருந்தேனெனவும், இப்போ திவ்வைந்தில் ஒவ்வொன்றையும் சுருதி யுத்தி யனுபவத்தால் விசாரித்துத் தெளிந்த விடத்துச் சத்த முதலியவாகப் பிரதிபலித்தலும், அதுகாரணமாக மெய்யெனக் கருதி இச்சாஞானக் கிரியைகளியற்றலும், அதுகாரணமாக யெழுஞ் சுகதுக்கத்தில் இடையறாது மொத்துண்ணலு மின்றிச் சிதாகாச வடிவமானதைக் குறிப்பித்தற் கையுணர்வே யவ்விடயமா வமர்ந்தேனெனவும், விடயநாட்டத்தைத் தவிர்ந்து இனி ஐயுணர்வை நாடு நாட்டத்தி லிவ்வையுணர்வும் ஏக பரிபூரணமான வியாபக விளக்கமாக விளங்கும்; அவ்விளக்கமாக யானிற்புழி எவ்விடயமும் அதுவாக விளங்கும்; அதனால் ஐயுணர்வாக எவ்விடயமுங் காண்பேனெனவும், அங்ஙனம் விளங்குமிடத் தெவ்வெவ்விடயங்க ளெங்கெங் கெவ்வெவ் வண்ணமாகத் தோற்றினுஞ் சின்மாத்திரமாக நின்று அததுவாக விளங்கலால் அவற்றாற் கலங்கேனென்பது தோன்ற என்னை யினி யென் செய்யு மவ்வவ்விடத் தொளிர்வதா லெனவுங் கூறினார். இதனால் சத்தமுதலிய பஞ்சவிடயங்களுக் கஞ்சேனென்பதாயிற்று. (உகரு)

அ-கை.

மனதைச் சின்மாத்திரமாகக் காண்கின்றேனெனல்.

அகம்புறமா நின்றங் கததுவாத் தோற்றும்
அகமா மனத்தை யறியின்—தகுமுருவம்
இல்லாது சத்தே யினையதுவா மென்றுணர
வல்லேனை யென்செய்யும் வந்து.

(எ-து.) அகமாகவும் புறமாகவு நின்று அங்கங்கே யததுவாகத் தோற்றுகின்ற அகமெனப்படுமனதை யாராயுமிடத்துத் தனக்கென்று ஓர் வடிவமின்றித் தனதெதார்த்த வடிவமாகிய சத்தே யித்தன்மையதாகக் காணப்படுவதாமெனச் சுருதி யுத்தி யனுபவத்தால் ஐயந்திரி

பறத்தெளிய வல்லனுன என்னை யிம்மனம் வந்து இனி யென்ன செய்யும்?— எ-று.

அகம்புறமின்றிய தனக் குபாதியா லகம்புறம்போற் காணப்படுவதாயுள்ள இவ்வீரிடத்ததாக நின்று தூலமாகவும் சாயையாகவும் பரிணமிப்பதை மன மென்பார்கள். அது யாது வடிவ மென்று ஆராய்ந்தவிடத்தல்லது மயக்கந் தெளியாமையால் அகம்புறமா நின்றங் கதந்வாத தோற்று மகமா மனத்தை யறியினெனவும், அங்ஙனம்பரிணமிப்பது அகண்டபரிபூரணமான தனது ஞெப்தியென்றையமின்றிக் கண்டவிடத்து அது வசத்தாகேனென்பது தோன்றத் தருமுருவ மில்லாதுசத்தே யினையதுவா மென்றுணர வல்லேனை யென்செய்யும் வந்தெனவுங் கூறினுர். இதனுல் பஞ்சேந்திரியங்கட்கும் நாயகமாகிய மனதின்வயப்படாநெறி யிங்ஙன மென் றுணர்ந்தே னென்பதாயிற்று. (உகசு)

அ-கை.

ஒவ்வோர் விடயத்தினும் மூன்றவத்தை யபிமானிகளுடன் தன்னையுங் காட்டுவேனெனல்.

நானறிவா னந்தமதாற் றுன்விடயா னந்தமதாம்
தானவத்தை யாதியெனல் சாற்றவோ—யானிதனை
ஒவ்வோர் விடயத்து மொவ்வொன்றுக் காட்டிடுவன்
செவ்விதாக் காண்பவர்க்குச் சென்று.

(எ-து.) மகா வாக்கியத்தி னிச்சயார்த்த பரமாகிய தானெனப்படுவது அறிவானந்த மாகுமாயின் அது விடயானந்த மாக விகாரப்படும். இங்ஙன மிருக்கத் தானென்ப தவத்தாத்திரய முபாதித்திரய மபிமானத்திரய முதலியனவு மாகத் திரியுமென்பதைச் சொல்லவேண்டுமோ? தானே யமையுமாதலின் சொல்லவேண்டுவ தின்று. தானென்ப இங்ஙனமாயிருப்பதை யான் ஒவ்வோர் விடயத்தினும் மேற்குறித்தவற்றை யொவ்வொன்றாக யாவர்க்கும் விளக்குவன்; நன்றாக விளக்கிக்கொள்ள வேண்டுமென்னுஞ் சிரத்தையுடையோர்க்கு அவர்பால் யானே சென்று—எ-று.

அறிவானந்தத்திற்கு மேலும் விடயானந்தத்திற்குக் கீழுமான நிலை வேறின் றாதலானும், விடயானந்தத்தைக் கெடுக்க அறிவானந்த நிலையைக் குறித்ததே யன்றி யதுவே சித்தாந்தமன்று. இவ்விரண்டும் மாறினும் இவற்றிற்கு ஆதாரமான தான் அங்ஙனம் மாறாமல் என்றும் ஒரு தன்மைத்தா யுயர்வு கீழொப்பின்றி நிற்றலானும், தானே தானாக வேண்டுமென்பது சித்தாந்த மெனக் குறிப்பிக்கத் தானறிவானந்தமு மாற்றான் விடயானந்தமதா மெனவும், தன்னையன்றி யவத்தையாதிகள் வேறில்லாமையால் தானவத்தை யாதியெனல் சாற்றவேோஎனவும், சித்துப்பொருளில் யாதொன்றிலேனும் சடப்பொருளில் யாதொன்றிலேனும் தன்னையும் தனது கற்பிதங்களையும் பழுதறக் காட்ட வல்லனானே னென்பது தோன்ற யானிதனை யொவ்வோர் விடயத்து மொவ்வொன்றாக் காட்டிடுவ னெனவும், அதி தீவரருக்கே யன்றி யேனையோருக் கன்றென்பது தோன்றச் செவ்விதாக் காண்பவர்க்குச் சென்றெனவும் கூறினா ரென்க. இதனால் இங்ஙனமாதற்கு வல்லனானேன் நினதருளா லென்பதாயிற்று.

வினா: ஒவ்வோர் விடயத்தும் ஒவ்வொன்றாக் காட்டிடுவனென்ற தெவ்வாறு?

விடை: கண்ணுக் கதி சூக்கும கருவிகளால் அதி நுட்பப் பொருளாக யாதோர் சடப்பொருள் தோற்றளவும் அதனைச் சாக்கிரமெனவும், தூலவடிவெனவும், அப்பால் அனுமானத்தால் ஆராயின் அஃததி சூக்கும வடிவாகக் கருத்துக்குப் புலப்படுமாறும் அதனைச் சொப்பனமெனவும், சாயாவடிவெனவும், அப்பால் வெளியைத் தன்பால் பெறாத வியற்கையாயுள்ள பரமாணுவும் எங்ஙனு மில்லையென விசாரணையால் தெளிந்தவிடத்து உள்ளது சூனியமாதலானும், அது கண்ணுக்கும் கருத்துக்கும் புலப்படா அவிச்சின்னமாதலானும், இச்சாஞானக் கிரியைகள் எழற்பால தன்றாமையானும், அவ்வாறாய நிலையுள்ளளவும் அதனைச் சுழுத்தியெனவும், காரணதனுவெனவும், அங்ஙனம் சூனியமென அறியவந்த அறிவு உள்ளளவும் அதனைத் துரியமெனவும், அக்க

ணம் விருத்தி யொழிவாதலானும் அவ்விருத்தி யொழிவில் உதிப்பது ஆனந்தமாதலானும், அவ்வானந்தமேலிடுவது சுகசமாதலினானும், அம் மேலீட்டில் அறிவு சுகாகாரமாகத் திரிதலானும் அதனைத் துரியாதீத மெனவும் கண்டு அப்பால் இத்தனையுமாநின்றது யாதெனை உற்றுநின் றழித் தானென விளங்கும்; ஆதலின் இவ்வாறே ஒவ்வொன்றையும் பரிசோதித் தறியவேண்டுமெனவறிக. (உ௫௫)

அ-கை.

அஞ்ஞானமுறைகளனைத்தையும் நினதருளா லகன்றேனெனல்.

இந்தநான் முன்னிருந்த தெந்தநான் பின்னுவ
தெந்தநா னென்றஞ்சு மேக்கமற்றேன் — அந்தோ
பொருளல் லவற்றைப் பொருளென் றுணரும்
மருளகன்றே னின்னருளால் வந்து.

(எ-து.) இப்பிறவியி லறியாமையால் வழங்கப்படும் இந்த நானு க்கு முற்பட்ட பிறவியில் வழங்கப்பட் டிருந்தது எந்த நானெனவும் இப்பிறவிக்குப் பிற்பட்டு வழங்கப்புகுவ தெந்த நானெனவும் தெரியா மையால் பிறவிக்கஞ்சும் நடுக்கமற்றேன். ஐயோ! இஃதன்றியும் சைத ன்னியத்தை யன்றித் தமக்கென வேறுபொருள் கோடலைத் தவிர்த்த சகசீவ பரமென்னும் கற்பனை வடிவங்களை யுண்மைப் பொருளென் றறியும் மயக்கத்தின் நின்றும் நீங்கினேன். அடியேன் நின் சந்நிதியில் வந்து உனதருட் பிரவாகத்தால் — எ-று.

இப்பிறவிக்கு முற்பட்ட பிறவிகளும் பிற்படும் பிறவிகளும் வந் தனுகற்கு ஏற்றவினை இயற்றவும் அவற்றை யானென்று அபிமானித் திழக்கவும் வல்ல கர்த்தா இப்பிறவிக்கு வேறன்றுதலால் இப்பிறவியிற் றானே யந்தக் கர்த்தாவாகிய என்னை யுள்ளபடி கண்டதினாலும், எப்போதும் இருந்தபடியே யிருக்கின்றே னென்னும் திடஞானம் தந்ததினாலும் ஞானக் களிப்பால் மிக்காறுயினன் என்பது தோன்ற இந்த நான் முன்னிருந்த தெந்தநான் பின்னுவ தெந்தநான் என்றஞ் சும் ஏக்கமற்றேனெனவும், தோற்றுவதை யெல்லா முண்மைவடிவ

மெனக் காணும் காட்சி தவிர்ந்தேன் என்பது தோன்றப் பொருளல்லவற்றைப் பொருளென்றுணரும் மருளகன்றேன் எனவுங் கூறிய வாறு காண்க.

(உகசா)

அ-கை.

கற்பித நாட்டத்தானும் உண்மை நாட்டத்தானுமாம் பயன் இனைய வெனல்.

உபாதிநாட் டத்தா லொழியா தலைவாம்
உபாதிதவிர் நாட்டத்தா லோய்வாம்—அபாயமதை
இன்பமென வாழ்வோர்க்கு மீதொழிந்தோர் தங்கட்கும்
இன்புருவச் சிற்சோதி யிங்கு.

(எ-து.) ஆனந்தவடிவமான சிற்பிரகாசமானது இங்கே நம்பிக்கைக்கு அபாயம் தரத்தக்கதையே சுகசொரூபமெனக் கருதி வாழும் அறிவினருக்கும், உபாதியே யகம்பாவமென நாடும் நாட்டத்தால் விடாத இவ்வபாயத்தைத் துன்புருவெனத் தவிர்ந்தோர்க்கும், உபாதியே யின் புருவமென நாடும் நாட்டத்தால் கவலையதாகவும், சைதன்னியமே யகம்பாவமென நாடும் நாட்டத்தால் நிர்ச்சிந்தையதாகவும் விளங்கும்—எ-று.

உள்ளது சைதன்னிய மெனக் கண்டு அஃதாயினோர்க்குச் சிந்தை பிறழ்த லின்றிச் சர்வமும் தானாக விளங்கலின் அமைதியும், அங்ஙன மாகாதார்க்குச் சர்வமும் பேதித்து விளங்கலின் தவிப்பு மெனக் குறிப்பித்தற்கு இங்ஙனங் கூறினாரென்க.

வினா: சிற்சோதியே யலைவெனவும், ஓய் வெனவுங் கூறுவதற்கு ஏதென்னை?

விடை: சிற்சோதி யன்றிப் பிரதிபிம்போபாதியும் அவிச்சின்னோபாதியு மில்லாமைபற்றி யென்க.

(உகஎ)

அ-கை.

யானே யஞ்ஞானத்தால் பகைவனுகவும், ஞானத்தால் மித்துரு வாகவும் ஆனவிதத்தை நின்னால் உணர்ந்தே னென்று ஆசிரியரை வியந்து புகழ்தல்.

நானே பகைநண்பன் ஞானஞ்ஞா னப்பகுப்பால்
நானே யதுவதுவாய் நண்ணுவதும்—நானே
இருவகையல் லாததுவு மின்னபடி காணத்
தருமுன் னருளென்ன தான்.

(எ-து.) யானெனத் தகுவது யாதோ அதுவே நான், அந்த நானே ஞானஞ்ஞானப் பகுப்பினால் சத்துரு மித்துருவா யிருப்பதும், நானே சமஸ்த விடயமாகப் பரிணமித்திருப்பதும், இஃதன்றி நானே சத்துரு மித்திரு என்னும் இவ்விரண்டு பேதமும் தவிர்ந்திருப்பது மெனத் தெரியாத எனக்கு இன்னபடியென்று யான் காணும்படி தந்தருளிய நினதருளின் மகிமை யெத்தன்மைத்தோ யான் சொல்ல அறிகிலன்—எ-று.

பகிர்முகமானதும் பல விகார வடிவாகப் பரிணமிப்பதும் அவற்றைச் சத்தியமெனக் கொள்வதும் நான் நீ யவன் அவள் அதுவாகப் பேதிப்பதும் விருப்பு வெறுப் புருவாக்கலும் சிலவற்றில் பந்தப்படுத லும் சிலவற்றில் பந்தப்படா தன்னியம்போல் காண்டலும் அவத்தாத்திரயம் அபிமானத் திரயம் பிறவிகோடலும் நானுதலால் பகையெனவும், இவற்றால் வருவது துன்பமே யன்றி யெட்டுணையு மின்பமென்ப தின்றெனக் காண்டலும், அவற்றை விலக்கற்கு ஏதுவாய ஞான சாதன மியற்றிப் புறம் போக்கித் தன்மய மாக்குவதும் நானுதலால் நண்பனெனவும், அறிவறி யாமையாக நிற்பதும் அவை தவிர்ந்து தானே தானாக நிற்பதும் நானுதலால் ஞானஞ்ஞானப் பகுப்பெனவும் இருவகை யல்லாததுவு நானே யெனவும் கூறியவாறு காண்க. இதனால் கணந்தோறும் இடைவிடாது ஒன்றை அவாவுவதும் அதனை

மறுப்பதும் நாணுதல்போலப் பொருளல்லவற்றைப் பொருளாகக் கோடலும் பொருளைப் பொருளாகக் கோடலும் நாணுதலால் வேறு கோடல் தவிர்க என்பதாயிற்று. (உகஅ)

அ-கை.

பந்த முத்திக் கேதுவாதல் சிந்தனை யாதலால் அதனை வயப்படுத்தும் நெறி யிங்ஙனமெனல்.

சிந்தனையே பந்தமதாஞ் சிந்தனையே முத்தியதாம்
சிந்தனைபோக் கேசுழுத்தி சைப்பிரண்டாம்—எந்தவிதத்
தாலுணரி னுங்கோல்போற் சாயா திருத்தனலன்
சாலவுணர்ந் தேனின்று தான்.

(எ-து.) ஆன்மாக்கள் சிந்திக்குஞ் சிந்தனையே பந்தமாகவும்,முத்தியாகவு மிருக்கும். அச்சிந்தனை யொழிவே மக்கன சுழுத்தி நனவிற் சுழுத்தி யெனக் கூறப்படு மிரண்டாம். இதுபற்றி யெந்தெந்த விதத்தால் ஆராய்ச்சி செய்யினும் வேறின்று. ஆதலின் தராசுக்கோல்போல் ஓர்பக்கமும் சாயாதிருத்தல் எல்லா நன்மைக்கும் மேலான நன்மையாம். இதனை நின தருளால் மிகத் தெளிந்துணர்ந்தே னிப்போது— எ - று.

தான்-அசை. அதோமுகத்தில் சிந்தனை யுள்ளபோ தெல்லாம் பிரதிபிம்போபாதியும், அஃது அடங்கியபோ தெல்லாம் ஆவிச்சின்னோபாதியும், ஊர்த்த முகத்திற் சிந்தனையுள்ளபோதெல்லாம் சமாதி கூடுதலும், அதில் மனோவிகற்ப நீங்கலும், அந்தகாரம் தோற்றலும், அதனை ஞான திருட்டியாற் கெடுத்தலும், பிரகாசம் தோற்றலும், அதனைச் சுயம்பிரகாசத்தாற் கெடுத்தலும், அது நழுவிய பின்னர்ச் சுழுத்தி தோற்றலும், அதனை நனவிற் சுழுத்தியாற் கெடுத்தலும், அந்நனவிற் சுழுத்தியின் பின்னர்ச் சூனியாகாய போதம் தோற்றலும், அதனைச் சிதாகாயத்தாற் கெடுத்தலும், அச்சிதாகாயத்திற்குப் பின்னர் மூலாங்கார மோகந் தோற்றலும், அதனைப் பரிபூரண திருட்டியாற் கெடுத்தலும், அச் சிந்தனை யடங்கிய போதெல்லாம் யதார்த்தம் ரகசியம்

அறுதி ஒடுக்கம் மோனமாக நிற்றலும் ஆதலின் இவ்விரண்டு நகையையும் கடந்த விடத் தென்பது தோன்றக் கோல்போற் சாயாதிருத்தல் நலனென்றார். இங்கே நலனென்றது நிரதிசயாநந்த வாழ்வை. இதனால் எச்சிந்தனைவசத்து மாகாதிருக்க வேண்டுமென்பது பெற்றாம்.()

அ-கை.

எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருளை மெய்ப்பொருளதாக்கி நிற்றல்.

எவ்வெவ் விகாரமதா யெங்கெங்கே தோற்றிடினும்
அவ்வவ் விகாரமதை யாங்காங்கே—ஒவ்வொன்றாய்ச்
சிற்சொரூப மாக்கிச் சிதாகாய மாநிற்பன்
கற்பனைக ளென்செய்யுங் கண்டு.

(எ-து.) பூர்வ வாசனையால் சைதன்னியம் எவ்வெவ் விகார வடிவாய் எங்கெங்கே தோற்றினாலும் அந்தந்த விகார வடிவங்களை அங்கங்கே ஒவ்வொன்றாக ஞான விளக்கத்தால் சிற்சொரூபமாகக் கரைத்துச் சிதாகாச வடிவமாக விளங்கி நிற்பன். இங்ஙனம் நிற்குமென்னைக் கண்டு கற்பனைகள் அனைத்து மொருங்கே கூடி யென்ன செய்யும்?—எ-று.

எவ்வெவ் விகாரமதா யெங்செங்கே தோற்றிடினு மென்றதனால் தூல மாகவேனும் சாயை யாகவேனும் ஞானனுபவக் காட்சிகளாகவேனும் தத்தமக்குள் பற்பல விநோத பேதங்களாக நவநவமாய்ப் பூதாகாயம், மனாகாயம், அவிச்சின்னாகாயம், சூனியாகாயம், தற்போதாகாயம், நிர்மலாகாயம், நிரூபாதிகாகாயம், சொப்பிரகாசாகாயம், சிவப்பிரகாசாகாயம், அத்துவிதாகாயம், சிதாகாயம், ததாகாராகாயம் என்னுமிடங்களில் அந்தந்த நிலைக்குத் தக்கவாறு உதிப்பனவும்; அவ்வவ் விகாரமதை யாங்காங்கே யொவ்வொன்றாய்ச் சிற்சொரூபமாக்கிச் சிதாகாயமா நிற்பனென்றதனால் சிதாகாயத்திற்கு வெதிருத்தமாகக் காணப்படும் ஞானஞ்ஞானக் காட்சிகள் அனைத்தையும் அந்தந்த

நிலைக்கண் சிற்சொரூபமாக்கி மீண்டும் சிதாகாயமாக விளங்கச்செய்து திரிபுடியற்றுத் தானும் சிதாகாயமாதலு மெனப் பொருளமையப் பெற்றும். இதனை வியாவும் சின்மாத்திரமாகக் கண்டு கரைக்குமா றிங்ஙனமென்ற வாறாயிற்று. (உ௨௦)

அ-கை.

சங்கற்பமுதலிய மூன்றி லொன்றேனு முதித்தற்கிடங் கொடேனெனல்.

சங்கற்ப வேட்கையொடு சாற்றுமனு சந்தானம்
இங்கற்ப முங்கோடற் கில்லையால்—எங்கெங்கும்
தானன்றி வேறொன்று சாரப் பொருள்காணேன்
ஆனந்த மேயறிவ தாய்.

(எ-து.) சங்கற்பமும் வேட்கையுடன் சொல்லப்பட்ட அனுசந்தானமு மெனக்கிடந்த மூன்றனுள் இங்கற்பமுங் கொள்ளுதற் கிடமில்லை. ஆனந்தமே அறிவாயும், அறிவே ஆனந்தமாயும் நிற்றலின் தானன்றித் தனக்கன்னிய மொன்றுண்டாகப் பொருள் கண்டிலன் எவ்வெவ் விடத்தும்—எ-று.

ஆல் அசை. ஓர் காரியத்தை இன்னின்ன வாறு இயற்றக் கருதிச் செய்யாநிற்றல் சங்கற்பமெனவும், இங்ஙனம் எனக்குண்டாகுக என்றெண்ணி யதற்குரிய சாதனங்களை மாத்திர மியற்றல் வேட்கையெனவும், தனக் கமையாக்கணத்து முன் னனுபவித்த சுகபோகத்தைக் கருதல் அனுசந்தான மெனவும் பெயர் கொள்ளுமாறு காண்க. இதனால் எச் சனனமும் இவ்வா றாதலின் இவற்றிற்காகச் சிந்தைவைத்து அவலமாதலைப் பிரத்தியட்சமாகக் கண்டுகொண்டொருதலினாலும், இங்ஙனம் வைக்கா திருக்கின் துன்பமாகா இன்ப மாதலினாலும் இம் மூன்றையும் விடுக்கவேண்டு மென்பதாயிற்று. (உ௨௧)

அ-கை.

சுவானுபவ திடத்தால் பிறவிக்கு அஞ்சேனெனல்.

எவ்வுயிரு மெத்தனுவு மின்றிச் சரிப்பதில்லை
எவ்வெவ் வுடனீங்கி னென்றிடினும்—அவ்வவ்
வயத்ததனாற் போன்றவெனை மாறாது கண்டேன்
பயப்படேன் முன்போற் பதைத்து.

(எ-து) தேவர் முதலிய எவ்வகைப்பட்ட உயிரும் பிறவிகள் தோறும் தத்தம் வினை காரணமாக வாய்க்கும் தனுவளவாக நின்று அதனை யானென அபிமானித்து அவ்வவ் வயப்படுவதினால் பிராரத்த முடிவுதோறும் எந்தெந்த தனுவும் நீங்கிவிடுமெனச் சான்றோர் கூறிடினும் மூலப் பிரகிருதி நசிக்குமளவும் அவை தூலாதிமூன்றனுள் எந்தத் தனுவாக நின்றாவது சுகிக்கச் சரிக்கவேண்டுமேயன்றி யெத்தனுவு மின்றிச் சரிப்பதே கிடையாது. அவ் வுயிர்போன்று சரிப்பவனாகிய என்னை இப்பிறவியில் இன்னவடிவினன் என உள்ளபடி யெவ்வவத்தையிலும் மாறாதுகண்டேன்; ஆதலின் முன்போல் பிறவிக்குத் துடிதுடித்துப் பயப்படேன்—எ-று.

எவ்வுயிரு மெத்தனுவு மின்றிச் சரிப்பதில்லை; எவ்வெவ் வுடனீங்கி னென்றிடினும் அவ்வவ் வயத்ததனா லென்றதனால் பஞ்சபூதாம்சையோக மெனவும், மல மூத்திரப் புழுக்கட்கும் பசிநோய் காமநோய்கட்கும் காமவெகுளி மயக்கங்கட்கும் ஏற்ற பாத்திரமெனவும், வாத பித்த சிலேட்டும அதிகாரிகட் குரிய இல்லிடமெனவும், அறுதனக் கிரவலொதுக்கிட மெனவும், என்பு மாமிச நரம்பாதிசளாவிய ற்றிய கூடெனவும், ஆன்ம யாத்திரை சத்திர மெனவும், பிறப்புப் பிணி மூப்புச் சாக்காட்டிற் கேற்ற சாதனைக் கருவி யெனவும், போலி தேகியெனவும், வினைக் கீடாக அந்தச் சுழல்காற்றுச் சருகெனவும், அநித்த சட துக்கத்த தெனவும், சுக துக்க போக கருவி யெனவும், இமைகால நட்பின தெனவும், நம்பிக்கைத் துரோகி யெனவும், ஆன்மாவை மறைக்கத்தக்க திரையெனவும், மெய்ப்போலி யெனவும், காலன் அணுகற்பால தெனவும், அவல மாக்கற் கேற்றதெனவும்,

இன்னு மிவைபோல்வ தெனவு முய்த்துணராதார் இவற்றை அங்சமா யுள்ள தூலதனுவையே யானெனக் கோடலன்றி யதன்மயமாய் நிற்ற லானும். அனுபவ வளவையா லன்றி வேதாகம வளவையான்மாத்திர முய்த்துணரினும் யதார்த்த நானைக் காணாமையானும், அந்தந்த பிரா ரத்த நீக்கந்தோறும் அவாக் கெடாமையானும், அவாத் தனுவைக் கொடுத்தே தீருமென்பதினானும், இன்னு மிதுபோன்ற வேதுக்களானும் எவ்வுயிரு மெத்தனுவும் இன்றி யியங்கா தென்பதூஉம்; போன்ற வெனை மாறுது கண்டேன் பயப்படேன் முன்போல் பதைத் தென்ற தனுல் இங்ஙனமாய தூலதனுவை மாத்திரமல்ல, சூக்கும காரணங்க ளையு மொருங்கே சுருதி யுத்தி யனுபவத்தா லாராய்ந்து களைந்து யதார் த்த நானைக் காண்டலினானும், யான் எழுவினும் அது காந்தம்போல் வலித்தலானும், நித்திய திருத்தியை இமையிற்றுனே தருதலானும், யாதும் சின்மயமாகக் கரைதலானும், என்னையன்றி யன்னிய மின்று கலானும், யானே யனைத் தாதலானும், யானென்னும் ஞானவடிவு உபாதி ரகித சாக்ஷாத்கார அகண்ட பரிபூரண மாதலினாலும், அது நான், நான் அது வானதினானும், பிரவிர்த்தி நிவிர்த்திக்கிட மின்று மையானும் எங்ஙனம் செனிப்பேனென்பதூஉம் பொருள் படுமாறு காண்க. இதனுல் எத்தனுவுமின்றிச் சுகிப்பேனென்பதாயிற்று. (உஉஉ)

அ-கை.

எவ் வவதியும் எனை யணுகா தெனல்.

சிவனென வெல்லோருஞ் செப்பிப் பொருள்காணுர்
அவதுசை தன்னியமே யாயுங்கால்—ஓவறநின்
றென்றுணர்ந்தே னுக்கவதி யெவ்வாறிங் கென்செய்யும்
ஒன்றுமுண ரார்போ லுவந்து.

(எ-து.) நினது அருளுருவாகாது கற்றுணர்ந்தோர் அனைவரும் சிவன் சிவனென்று சொல்லி அதனுண்மைவடிவைக் காணு தவலமா யினர். யானோ நினதருள்கொண்டு சிவனவது யாது பொருளென்று இடைவிடாது இருவகைச் சமாதிக்கண்ணும் உய்த்துணருமிடத்துச்

எவ்வுயிரு மெத்தனுவு மின்றிச் சரிப்பதில்லை
எவ்வெவ் வுடனீங்கி னென்றிடினும்—அவ்வவ்
வயத்ததனாற் போன்றவெனை மாறாது கண்டேன்
பயப்படேன் முன்போற் பதைத்து.

(எ-து) தேவர் முதலிய எவ்வகைப்பட்ட உயிரும் பிறவிகள் தோறும் தத்தம் வினை காரணமாக வாய்க்கும் தனுவளவாக நின்று அதனை யானென அபிமானித்து அவ்வவ் வயப்படுவதினால் பிராரத்த முடிவுதோறும் எந்தெந்த தனுவும் நீங்கிவிடுமெனச் சான்றோர் கூறிடினும் மூலப் பிரகிருதி நசிக்குமளவும் அவை நாலாதிமூன்றனுள் எந்தத் தனுவாக நின்றாவது சுகிக்கச் சரிக்கவேண்டுமேயன்றி யெத்தனுவு மின்றிச் சரிப்பதே கிடையாது. அவ் வுயிர்போன்று சரிப்பவனாகிய என்னை இப்பிறவியில் இன்னவடிவினன் என உள்ளபடி யெவ்வவத்தையிலும் மாறாதுகண்டேன்; ஆதலின் முன்போல் பிறவிக்குத் துடிதுடித்துப் பயப்படேன்—எ-று.

எவ்வுயிரு மெத்தனுவு மின்றிச் சரிப்பதில்லை; எவ்வெவ் வுடனீங்கி னென்றிடினும் அவ்வவ் வயத்ததனா லென்றதனால் பஞ்சபூதாம்சகையோக மெனவும், மல மூத்திரப் புழுக்கட்கும் பசிநோய் காமநோய்கட்கும் காமவெகுளி மயக்கங்கட்கும் ஏற்ற பாத்திரமெனவும், வாத பித்த சிலேட்டும அதிகாரிகட் குரிய இல்லிடமெனவும், அநுதனக் கிரவ லொதுக்கிட மெனவும், என்பு மாமிச நரம்பாதிசளா லியற்றிய கூடெனவும், ஆன்ம யாத்திரை சத்திர மெனவும், பிறப்புப் பிணி மூப்புச் சாக்காட்டிற் கேற்ற சாதனக் கருவி யெனவும், போலி தேகியெனவும், வினைக் கீடாக அந்தச் சுழல்காற்றுச் சருகெனவும், அநித்த சட துக்கத்த தெனவும், சுக துக்க போக கருவி யெனவும், இமைகால நட்பின தெனவும், நம்பிக்கைத் துரோகி யெனவும், ஆன்மாவை மறைக்கத்தக்க திரையெனவும், மெய்ப்போலி யெனவும், காலன் அணுகற்பால தெனவும், அவல மாக்கற் கேற்றதெனவும்,

இன்னு மிவைபோல்வ தெனவு முய்த்துணராதார் இவற்றை அங்சமாயுள்ள தூலதனுவையே யானெனக் கோடலன்றி யதன்மயமாய் நிற்றலானும். அனுபவ வளவையா லன்றி வேதாகம வளவையான்மாத்திர முய்த்துணரினும் யதார்த்த நானைக் காணுமையானும், அந்தந்த பிராரத்த நீக்கந்தோறும் அவாக் கெடாமையானும், அவாத் தனுவைக் கொடுத்தே தீருமென்பதினுனும், இன்னு மிதுபோன்ற வேதுக்களானும் எவ்வுயிரு மெத்தனுவும் இன்றி யியங்கா தென்பதூஉம்; போன்றவெனை மாறுது கண்டேன் பயப்படேன் முன்போல் பதைத் தென்றதனுல் இங்ஙனமாய தூலதனுவை மாத்திரமல்ல, சூக்கும காரணங்களாயு மொருங்கே சுருதி யுத்தி யனுபவத்தா லாராய்ந்து களைந்து யதார்த்த நானைக் காண்டலினுனும், யான் எழுவினும் அது காந்தம்போல் வலித்தலானும், நித்திய திருத்தியை இமையிற்றுனே தருதலானும், யாதும் சின்மயமாகக் கரைதலானும், என்னையன்றி யன்னிய மின்றுதலானும், யானே யனைத் தாதலானும், யானென்னும் ஞானவடிவு உபாதி ரகித சாக்ஷாத்காரி அகண்ட பரிபூரண மாதலினுலும், அது நான், நான் அது வானதினுனும், பிரவிர்த்தி நிவிர்த்திக்கிட மின்றுமையானும் எங்ஙனம் செனிப்பேனென்பதூஉம் பொருள் படுமாறு காண்க. இதனுல் எத்தனுவுமின்றிச் சுகிப்பேனென்பதாயிற்று. (உஉஉ)

அ-கை.

எவ் வவதியும் எனை யணுகா தெனல்.

சிவனென வெல்லோருஞ் செப்பிப் பொருள்காணுர்
அவனுசை தன்னியமே யாயுங்கால்—ஓவற நின்
றென்றுணர்ந்தே னுக்கவதி யெவ்வாறிங் கென்செய்யும்
ஒன்றுமுணரார்போ லுவந்து.

(எ-று.) நின்னது அருளுருவாகாது கற்றுணர்ந்தோர் அனைவரும் சிவன் சிவனென்று சொல்லி அதனுண்மைவடிவைக் காணு தவலமாயினர். யானே நினதருள்கொண்டு சிவனுவது யாது பொருளென்று இடைவிடாது இருவகைச் சமாதிக்கண்ணும் உய்த்துணருமிடத்துச்

சைதன்னியமே இங்ஙனமாயதெனத் தெளிந்தேன். இவ்வாறு தெளிந்த எனக்கு அவதியெல்லாம் ஒருங்கேகூடி யென்னவிதமாக நின்று இங்கே யாது வருத்தம் புரியும்? அந்தஅவதி யொன்று முணரா ரிடத்தாக் களித்துச் சென்று வருத்துமாறுபோன்று—எ-று.

அன்னமயம் பிராணமயம் மனோமயம் விக்ஞானமயம் ஆனந்தமயமெனப்படு மிவ்வைந்தனுள் ஒவ்வொன்றைத் தத்த மறிக் கெட்டியவாறு ஆன்மா வென்போர் அங்ஙனங் கூறுவதால் திரிபுடித் தோடம் வருமெனவும், அனுபவத்துக்கு முரணாகுமெனவும், யதார்த்த ஞானானந்த சுகபோத முண்டாகா தெனவும், அறி வறியாமைச் சேதெனவும் எங்ஙன முணர்வர்? ஆதலின் செப்பிப் பொருள் காணார் என்றார். எனவே, அவதி யவரை யெங்ஙனம் விடுமென்பதாயிற்று. இவ் வைந்தையும் கோச மென்றது மறைத்தலை. மறைத்தலை யேற்றற் பாலது ஆன்மா, ஆதலின் அவை யான்மா வன்று. கோசமென்றது அவ்வைந்தையும் ஆன்மாவெனின் தூலவுடல் தனக் கன்னியத்தை யறியாதேனும் தன்னை யறியவேண்டும்; அங்ஙன மறியா தனினும், பிராணனும் கன்மேந்திரியமும் தமக் கன்னியத்தை யறியாதேனும் தம்மை யறியவேண்டும்; அங்ஙன மறியா தனினும், மனமும் கன்மேந்திரியமும் தமக் கன்னியத்தை யறிவதுபோலத் தம்மையு மறியவேண்டும்; அங்ஙன மறியா தனினும், புத்தியும் ஞானேந்திரியமும் தமக்கன்னியத்தை யறிவதுபோலத் தம்மையும் அறியவேண்டும்; அங்ஙனம் அறியாதனினும், அவித்தையானந்தந் தனக்கன்னியத்தை யறியாதேனும் தன்னையாவதறியவேண்டும்; அங்ஙனம் அறியாதனினும் ஆன்மா அன்று. இதனால் சீவன் இனையன் எனக் கண்ட எனக்கு அவதி யின்றென்பதாயிற்று. (உஉ௯.)

அ-கை.

சமஸ்தமும் எனது சொரூபமே யெனல்.

எங்கெங்கே தோண்டிடினு மேகவெளி யொன்றேபோல்
எங்கெங் கெதையாயி னென்னுருவே—அங்கங்கும்

காணாத குற்றமே காணுமதை யென்சொல்கேன்
பூணப் படிவெளிபோற் பொங்கி.

(எ-து.) எங்கெந்த இடங்களில் தோன்றினாலும் அங்கங்கும் வெளியே யன்றி வேறில்லை. அந்தவெளி பேதியா துபாதியால் பேதித்ததுபோல் காணப்படினும் நீக்கமில்லாமையால் ஏகத்துவமே. அங்ஙனம் ஏகத்துவமான வெளி யெங்கணு மொருதன்மைத்தா நிற்றலால் ஒன்றேயாமாறு போல எங்கெந்த விடத்து எங்கெந்தப் பொருளை அறிவால் காரண காரியவகை யேதுவாகக் கொண்டு பூர்வபட்ச சித்தாந்த வகையால் ஆராயு மிடத்துச் சமஸ்தமும் எனது சொரூபமே. அங்கங்கும் இவ்வாறு ஆய்ந்துணராத குற்றமே யன்றி வஸ்து குற்றமன்று. இங்ஙன மிருக்க, எங்கணும் தானாக விளங்கு மதின் நிலையை யென்ன வென்று சொல்லுவேன்? அயல்வெளியை யளக்க இடங்கொடாதபடி வெளிபோல் ததாகாரமாக நிறைந்து—எ-று.

எனவே தானென்பதும் அதுவென்பதும் இன்றென்பது பெற்றாம். எங்ஙன மெனின் படிவெளியைக் கொட்டுதற்கும் அயல்வெளியை யளத்தற்கும் இடமின்றாதல்போலத் தன்னைப் புறப்படுத்தற்குந் தன்னால் கண்ட சுவானுபவங்களை யெடுத்து அளவைகளால் சொல்லுதற்கும் தன்னையன்றி வேறிட மின்றாதலாலென்க.

வினா: அங்ஙன மாயின் வேத மாதா கர்ம்ம காண்ட முதலிய மூன்றின் நிலைகளைப் பலவாறாகப் புலப்படுதற் கேற்றவாறு எடுத்துச் சொல்லவில்லையா?

விடை: அவாங் மனோ கோசரமாகு மளவும் கூறினதே யன்றி அப்பால் எட்டாமையால் மவுனமாயிற்று என்னுங் கருத்துத்தோன்ற வாக்குக் கெட்டாதென்றதென்க.

வினா: அவாங் மனோகோசரமாவ தென்னை?

விடை: தான் என்பதும் அறிவானந்த மென்பதும் இன்றி நிற்கும் நிலையையெனவறிக. (உஉ௪)

அ-கை.

தனது உண்மை நிலை யிஃதென விசாரித்துத் தெளியாதார்க்கு வாயேனென அவரை யிகழ்ந்து கூறல்.

கடவுளே யுண்மையெனக் கட்டுரைப்ப தன்றிக்
கடபடமெய் யாமயக்கைக் காணார்—உடலளவே
நானென்றார் வைதுணரார் நாட்டம்வா யென்னிருந்தும்
மானிடரா யிவ்வுலகில் வந்து.

(எ-து.) கடவுளே யுண்மையான வஸ்து வெனத் திரயாகச் சாதிப்பதே யல்லாமல் கடபடமாகிய விடயங்கள் தனது கற்பித மெனவும், அன்னிய மெனவு மவற்றின் மயக்கை யுய்த்துணர்ந்து தெளியாதார் இவ்வுலகின்கண் மானிடராக வந்து உடலளவே நானென்றது சைதன்னிய வளவே தானெனத் திடக்ஞானப் பிரத்தியட்ச முடைய மகான்களைக் கண்டபடியே வைது, கண் வாய் முதலிய உணர்தற் கருவிகள் யாதிருந்தும் உணரத் தக்கவைகளை யுணரார்; இவரிருந்தும் யாதுபயன்?—எ-று.

எனவே மானிட விலங்கின ரென்ப தாயிற்று. என்னை? மானிட வடிவத்தா லொத்துள ராயினும் தன்னை யுணராமையால் விலங்கின ரென்றும். இவரிருந்தும் யாது பயனென்றது நடைப்பிணமாதலை. இதனை விவரைக் காணவும் கருதவும் கூடாதென்பதாயிற்று. (௨௨)

அ-கை.

ஞான தனுவுக் கொப்பாய தனு எங்கணு மில்லையெனல்.

உடல்பின்னு நானெவ் வுடலன்றி நில்லா
துடலளவ தானுணர்வ தொவ்வா—மடமைக்குச்
சத்தாதி யேகமதாற் றனுகு முத்தமர்கட்
கித்தனுப்போ லெங்கு மிலை.

(எ-து.) நானென்பது யாதோ அது எடுத்தவுடல் நீங்கிய பின்னரும் உடலளவாக முன்னர் மயங்கி நிற்றலால் எந்தவுடல் எடுத்

தாவது அந்த மயமாக நிற்பதே யன்றி மூல வசங்கார மடமையால் தனித்துத் தானே தானாக நில்லாது. அந்த நான் உணர்வு மயமாய்ப் பின்ன ரெவ்வுடல் நீங்கினும் அவ்வா றாகாது. சத்துச் சித் தானந்த முதலிய குணங்கள் ஏகத்துவமாக விளங்கலால் அசத்தாதி பேதகுணங்களை அங்கமாக உடைய அறியாமைக்கு நிகராகாது. ஆதலின் அறிவே தானாகவிளங்கு முத்தமராகிய மகான்களுக்கு இந்த ஞானதனுவைப்போ லொப்பாய தனு எங்கணு மில்லை—எ-று.

அறியாமை சச்சிதா னந்த முதலிய குணங்களை யேலாது. எற்கு யெனின் ஏகத்துவ மாகாது; ஆகா விடத்துத் தானே யசத்தாதி குணத்ததாம். ஆதலின் உணர்வ தொவ்வா மடமைக்குச் சத்தாதி யேகமதா லெனவும், இங்ஙனமாய ஞானத்தைத் தனுவாகக்கொள்ளின் போக்குவரத் தின்றாய பரிபூரண சொரூப மாக்கலால் இத் தனுப்போல் எங்குமில்லையெனவுங் கூறினார்.

வினா: அறியாமைக்குச் சச்சிதா னந்த மேகத்துவ மாகாதென்றதெங்ஙனம்?

விடை: தேகமிருத்தலால் சத்தெனக் கொள்ளில் தேகியாலன்றித் தேகம் தன்னைத்தான் அறிய வேண்டும்; அறியாததால் சத்துக்குச் சித்து அன்னிய மெனவும், தேகமே யானந்த மெனக் கொள்ளின் தேகி யல்லாமலு மன்னிய உடல் தழுவாமலும் சுகிக்கவேண்டும். அங்ஙன மில்லாமையால் தேகத்துக் கானந்த மன்னிய மெனவும், இது போன்ற காரணத்தால் மற்றவையு மிங்ஙன மன்னிய மெனவும் பொருள் படுமாறு காண்க. (உஉசு)

அ-கை.

விதிவிலக்கைத் தழுவி நடத்தலால் மகான்களலர் என்பாரை யிகழ்ந்து கூறல்.

தள்ளினு முள்ளத்துத் தள்ளார் புறத்தறிஞர்
எள்ளா விதிவிலக்கை யேட்டறிஞர்—உள்ளதனைக்

காணாது செய்தழியுங் காரணத்தா லீதறியார்
நாணாது பேசுவதென் னோ.

(எ-து.) பிரத்தியட்ச ஞானிகள் யாவரானும் இகழப்படாத விதிவிலக்கை யிவற்றாலாய பய னொன்று மிலையெனத் தமது சித்தத்தின்கண் ஒழிக்கினும் எட்டு ஞானிக ளுள்ளவாறு கண்டுணர வேண்டியதைக் காண வேண்டியவாறு கண்டுணராத மகான்களைப்போல நடித்துக் கெடுவரென்னும் காரணத்தால் அவற்றைப் புறம்பில் யாவருங்காணத் தள்ளாது தழுவி நடப்பர். இங்ஙன மிருக்க, இதனையறியாதார் விதிவிலக்கை யநுசரிப்போர் ஞானிக ளலரென வெட்கமின்றி நாவினால் பேசுவது என்ன மடமை!—எ-று.

எட்டுஞானிக ளென்றது சொல் லாணந்திகளே. சமஸ்தமும் சின்மாத்திர மாகவும், சிற் பிரதிபலன மாகவும், தோற்றன் மாத்திரப் பொருளாகவும், தனக்கெனச் சொரூப மொன்றில்லாத தாகவும் விளங்குவதைத் தம துள்ளத்தின்கண் கண்டிருப்பதால் தள்ளினு முள்ளத் தென்றார்.

வி: அகத்தில் ஏலாத விதிவிலக்குப் புறத்தில் எங்ஙன மேற்கும்?

விடை: காருணியத்தாலெனவறிக.

வி: சித்தங் கலங்காதோ?

விடை: தன்னையன்றி வேறில்லாமையா லங்ஙனமாகாதென வறிக. (௨௨௮)

அ-கை.

பொய்யை மெய்யெனக் கற்ற பிரபல பண்டிதரைப்போல மூடரைக் கண்டிலேனெனல்.

பொய்யுலகை மெய்யென்ற புண்ணியர்போல் மூடர்களை
ஐயையோ கண்டிலன்யான் ஞர்க்குரைப்பேன்—மெய்யை

அறிவாரில் லாததினு லத்திப்பூத் தாற்போல்
நெறிவந்த நின்போல நின்று.

(எ-று.) தனக்கெனச் சொரூபமொன் றில்லாத பொய்யுலகை மெய்யெனக் கருதி இச்சா ஞானக் கிரியைக ளியற்றும் புண்ணிய வான்களைப் போல மூடர்களை யான் எங்கணும் கண்டிலன். அத்தி மரம் பூத்தாற்போன்று அருமையான நெறியோடு வந்த தேவரீரைப் போல இப்பொய்யுலகில் நின்று யதார்த்தமானது இஃதென் றறிவார் இல்லாததினால் இந்தச் சுவானுபவ நிலையை யார்பால் எடுத்துச் சொல்லுவன்—எ-று.

எனவே பொய்யைக் கேட்டும் கண்டும் முகர்ந்தும் நுகர்ந்தும் ருசித்தும் பரிசித்தும் போகித்தும் நினைத்தும் மறந்தும் விருப்புற்றும் வெறுப்புற்றும் அறிந்தும் அறியாதும் இன்னும் இதுபோல்வன வற்றை இயற்றியும் உறங்கியும் விழித்தும் இருப்பதே மெய்க்குச் சுபாவ மெனவும், மணற்சோற்றில் கல்லாய்வது போலச் சுத்தம் குற்றமிவை யெனவும், இதனால் குற்றம் செய்பவரைப் பாவிகளெனவும், சுத்தம் செய்பவரைப் புண்ணிய ரெனவும் தத்தம் மதக் கோட்பாட்டுக் கேற்ற வாறு கூறுவதே கற்றுணர்ந்த அவிவேகிகள் கடமையென்ப தாயிற்று.

வினா: கற்றுணர்ந் தவரை யிங்ஙனங் கூறலாமோ?

விடை: அறிபடு பொருளை யறி வெனவும், அறிவானு மறிவும் பேத மெனவும், அங்ஙனம் நாட்டுதற்கு வகை தெரியாததால் நம்பு எனவும், அகர்த்தாவைக் கர்த்தாவாகக் காணலாமா வென்பாரை மகா தெரிந்தவ னெனவும் பிதற்றுவதுதானே கற்றுணர்ந்தார் லட்சணம் ஆதலின் கூறலாமென வறிக.

வினா: அவர்கட்கு வருத்தம் வராதோ?

விடை: ஞாயம் காரணமாகக் குற்றம் விதிக்கப் பெற்றவனுக்கு வந்த மனோ வருத்தத்தைப் பற்றி யென்ன செய்யலா மென வறிக.()

அ-ஸைங.

இனி யெந்த நாளாவனோ என்னும் பயந் தவிர்த்தே னெனல்.

எந்தெந்த யோனிதனி லெந்தெத் துருவாகி
எந்தெந்த நாளாகி யீங்குற்றேன்—இந்நாள்
இவ்வா றெதுவாவே னென்னும் பயந்தவிர்த்தேன்
ஒவ்வா நிலையதனை யுற்று.

(எ-று.) இதுகாறு மெந்தெந்த யோனிகளி லெந்தெந்த உருவாகி யெந்தெந்த நாளாகியிருந் திங்கே யுருக்கொண்டு வந்தே னிவ்வாறே இந்தநாளுக்குப் பின் எந்தநாள் ஆவேனோ என்னும் பயந்தவிர்த்தனன்; சமான மின்றிய சுவானுபவ நிலையினை யடைந்து—எ-று.

சுவானுபவ நிலையை யுற்றதனால் பயந் தெளிந்தே னென்றது; தேவகதி முதலிய நாற்கதிகளும் தனது வியாபகத்தி லெனவும், தன்னை யன்றி வேறன்றெனவும், இரண்டற்று விளங்குகின்ற தெனவும் காணப்படும் பிரத்தியட்ச சுயம்பிரகாச சுவானுபவத்தை விளக்குதற்கு. கருக்குழி யுறாத தனுவின்றுதல் பற்றி யுருவாகி யென்றார். யோனிவகை: சராயுஜம் அண்டஜம் சுவேதசம் உற்பீஜம் என்பன.

வினா: கறந்தபால் முலைப்புகா வாறு போன்று பிறந்தயோனி வழித்தாய் மீண்டும் தனுப் புகாதிருக்க எவ்வாறு பிறக்கும்?

விடை: தனுப் புகாவேனும் அவ் வாகாரத்ததாதலின் அவ் வவா செனியாதிருக்க வேண்டும். அங்ஙன மின்றாதலான் "அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந் தவாஅப் பிறப்பீனும் வித்து" எனப்பட்ட தென்க.

வினா: இஃது சுருதி சம்மத மாதலின், இதுபோல யுத்திக்கு மொத்திருக்குமா றுணர்த்தவேண்டும்?

விடை: இப்பிறவியில் அவாவை யொருங்கே தள்ளின் இம்மைக் கண்ணே இச்சா ஞானக் கிரியைக ளெழவேண்டும். அங்ஙனம் இல்லா

மையால் இப்பிறவிபோல எந்தப் பிறவியும் யோனிவழித்தாய் வருமென வறிக. (உஉ௯)

அ-கை.

தானேதானாகு நிலையில் குருசீடனென்பதைக் கண்டிலேனெனல்.

நானென்ப தேதென்று நானுன்னும் போதெல்லாம்
தானாகுஞ் சிற்சொரூபந் தான்விளங்க—ஊனாதி
அன்னியமல் லாதிருக்க வாண்ட பெருமானே!
என்னையுனை யென்றுரைப்ப தெங்கு.

(எ-து.) எந்தெந்தகணத்தில் யானுவதியாது யானுவதியாதென யானுன்னும் சடிதிகளில் எல்லாம் தானேதானாக விளங்குஞ் சிற்சொரூபமானது நிகரின்றி சொலிக்கும். அங்ஙனம் சொலியாநிற்புழி மாமிசபிண்டமாகிய தேகமுதலிய சகல சடதோற்றங்களும் சித்துபேதங்களும் அபரிச்சின்ன மாம்படித் தடுத்தாட்கொண்ட குருநாதனாகிய எமது கர்த்தனே! இங்ஙனமாய நிலையில் என்னையென்று முன்னையென்று முரைக்குமா றெங்ஙனம்?—எ-று.

ஊனென்பதை தேகமென்றது காரணவாகுபெயர். பூர்வவாசனை மறைக்கு மாதலின் நானுன்னும் போதெல்லா மெனவும், அறிவறியாமை பேதம் கடந்ததாதலின் ஊனாதி யன்னிய மல்லாதிருக்க எனவும், அடிமை கூடஸ்தனும், ஆண்டான் பிரமமு மாதலின் என்னையுனை யெனவும், கூடஸ்தனே பிரமம், பிரமமே கூடஸ்தனை அசிபத வைக்கிய மென்பது தோன்ற என்றுரைப்ப தெங்கு எனவுங் கூறினார். கூறவே மோனநிலை யென்ப தாயிற்று. இதனால் இரண்டற்று விளங்குகின்றே னென்ப த்ருத்தாபத்தியால் தோன்றக் கிடந்தமை காண்க. (உ௩௦

அ-கை.

சைதன்னியத்துக் கன்னிய மின்மைதலால் சித்தளவு சடமெனவும், சடமளவு சித்தெனவு மெங்ஙனங் கூறத்துணிவே னெனல்.

அறிவளவோ வேனை யனைத்தளவோ சித்தென்
றறியி னொருபக்க மாகும்—பிறிதுண்டேல்
ஆகாய மன்னியம்போ லாகுமிதை யென்சொல்கேன்
நீகாட்டு முண்மைநெறி நின்று.

(எ-நு.) திருக்களவோ திரிசியம் திரிசியவளவோ திருக்கெனச் சுருதி யுத்தி யனுபவத்தால் ஆராயுமிடத்துத் திருக்குவையன்றி அன்னியமாகிய திரிசியம் வேறாக உண்டா யிருக்குமாயின் யாதானுமோர் பக்கம் தீர்மானிக்கப்படும். யாதுபோ லாகுமெனில் ஆகாயமும் அதற்கன்னியமும்போ லாகும். இதனை யென்னவென்று சொல்லுவன் சற்குருநாதனே! தேவரீர் விளக்கிய யதார்த்த நிலைக்கண் நின்று—எ-று.

நான்கு பூதத்திற்கு மாதாரமா யுள்ள ஆகாயம் பிளவுபட்டுப் பேதித்தாற்போல் கடத்தில் நிறைவாகக் காணப்படும் ஆகாயமளவு கடமாயின் அதுபோலச் சமஸ்த கற்பனைகட்கும் ஆதாரமாயுள்ள சுத்த சைதன்னியம் பிளவுபட்டுப் பேதித்தாற்போல் தேகத்தில் நிறைவாகக் காணப்படுஞ் சைதன்னியவளவு தேக மென்னலாம். ஈரமேனும் உட்டணமேனும் ஒட்டிடையில் காற்றுற் சென் றூடுமுழுதும் வியாபிக்கின்றதற் கோடுமுழுவதும் தொண்டியா யிருக்கவேண்டும். அங்ஙன மின்றெனின் வியாபியா திருக்கவேண்டும். வியாபித்தலின் ஆகாயம் பிளவுபடாது என்று மொருதன்மைத்தா நிற்றலின் ஆகாயமளவு கடமாகாதெனின் அதுபோலப் பரிசத்தின்மேற்படு மின்பமேனும் துன்பமேனு மென்பாதிக ளிடையில் கரணேந்திரியங்களாற் சென்று தேக முழுவதும் வியாபிக்கின்றதற்குத் தேகமுழுவதும் சிதாகாயந்தொண்டியா யிருக்கவேண்டும். அங்ஙன மின்றெனின் வியாபியாதிருக்கவேண்டும். வியாபித்தலின் சிதாகாயம் பிளவுபடாதுஎன் றுமொருதன்மைத்தா நிற்றலின் சிதாகாயமளவு தேகமாகாதென்னலாம். இங்ஙனமன்றிக்கடவளவே யாகாயமெனின் காரண காரியவகையால் ஆராயுமிடத்துக் கடத்துக்கெனச் சொரூபமொன் றிருக்கவேண்டும். தோற்றல்

மாத்திர மன்றி இல்லாமையால் எங்ஙனம் தூலமளவு சிதாகாயமென்னலாம். இங்ஙனமாய நிலையைக்கணிப்பது அரிதாதலின் இதையென் சொல்கே னென்றார். அதுவாக நின்று அதனை யாராயவேண்டுமாதலின் நீகாட்டு முண்மைநெறி நின்றெனப்பட்டது. இதனால் சமஸ்த கற்பிதமும் சைதன்னியத்தை யன்றி வேறில்லாமையானும், வேறுளதாகத் தோற்றுவதுபற்றியன்றோ சைதன்னியத்துக்களவு கணிக்கலாயிற்று. அக் கணிப்பு ஆராய்ச்சிக்கண் பூர்வபட்சப் படுத்தலினானும் இங்ஙனங் கூறலாயிற் றெனவறிக.

(உகூக)

அ-கை.

நினது அருளுருவ மாகாதவர் எங்ஙனந் தேர்வரெனல்.

எல்லா மிலையுண் டிங் கெல்லாம் பொருளல்ல
எல்லாஞ் சடமசட மின்பமல—எல்லாம்
எனதுருவன் றாயிருப்ப தெவ்வாறு தேர்வர்
நினதருள்கொள் ளாதவர்க ணின்று.

(எ-று.) இங்கே சமஸ்தமு மில்லை, சமஸ்தமு முண்டு, சமஸ்தமும் பொருள், சமஸ்தமும் பொருளல்ல, சமஸ்தமுஞ் சடம், சமஸ்தமுஞ் சித்து, சமஸ்தமு மின்புருவம், சமஸ்தமுந் துன்புருவம், சமஸ்தமுமெனது சொரூபம், சமஸ்தமு மெனது சொரூபமல்ல. இங்ஙனமா யிருப்பதை நினதருளுருவ மாகாதா ரெங்ஙனந் தெளிவர்? நிற்கத்தகு நிலையில் நின்று—எ-று.

தமக்கெனச் சொரூப மொன்றில்லாமையால், எல்லாமிலையெனவும், அகம்மமதை தோன்றற் கியைந்தமையின் எல்லா முண்டெனவும், சுகதுக்கத்தைத் தருதற்குப் பொருளா யிருத்தலின் எல்லாம் பொருளெனவும், தன்னையன்றி வேறில்லாமையால் எல்லாம் பொருளல்லவெனவும், தம்மை யின்ன பொருளென் றுணராமையால் எல்லாஞ் சடமெனவும், சமஸ்தமுஞ் சின்மாத்திரமாக விளங்கலின் எல்லாம்

அசடமெனவும், அங்ஙனஞ் சமஸ்தமுஞ் சின்மாத்திரமாக விளங்குழிச் சுகதுக்கமின்றித் தற்பிரிய வடிவமாக நிற்றலின் எல்லாம் இன்பமெனவும், தான் வேறாயவிடத்துச் சமஸ்தமு முண்டாய்த் துன்பம் இன்பமாகத் திரிந்து காட்டலின் எல்லாமின்பமலவெனவும், என்னைத் தவிர வேறுண்டாகக் காணாமையால் எல்லாம் எனதுருவெனவும், அங்ஙனங் காணுதற்கு முன்னர் வேறாயிருத்தலின் எல்லாம் எனது உருவன்றாய் எனவுங் கூறியவாறு காண்க.

வினா: இங்ஙனமாதற் கேதென்னையோ?

விடை: தான்றானுஞ்ஞானமாகத் திரிதலேயதுவாமெனவறிக.

வினா: எங்ஙனம்?

விடை: தான் ஆலாகார மாகும்போது சமஸ்தமும் ஆலமாகவும், சாயாகாரமாகும்போது சமஸ்தமும் சாயையாகவும், சூனியாகாரமாகும்போது சமஸ்தமும் சூனியமாகவும், சிற்பிரகாசாகாரமாகும்போது சமஸ்தமும் சிற்பிரகாசமாகவும் விளங்குமெனவறிக. (௨௬௨)

அ-கை.

அறிபடுபொருளையு மறிவையு மறிதற்குச் சாதனமாயுள்ள துணைக்கருவி யிணையவெனக் கூறல்.

துணைக்கருவி நிட்டை சுயவறிவுக் கேனை
துணைக்கருவி மற்றவைக்குத் தொந்தம்—பிணக்காகில்
எல்லாங் குளறுபடி யேகவறி வைக்காண
வல்லான் றிருத்தாண் மலர்.

(எ-று.) சுயவறிவை யுள்ளவாறு தெரிந்துகொள்வதற்குத் தொந்தமாயுள்ள துணைக்கருவியாவது: சொரூபநிட்டை, சகசநிட்டையாம். அறிவுக்கு வெதிருத்தமான மற்றவற்றை யறிதற்குத் தொந்தமாயுள்ள துணைக்கருவியாவது: நிட்டையல்லாத மற்றவைகளாம். இம்முறை

வழுவுமாயின் சமஸ்தமும் மிசிரிம்பித்துக் குளறுபடியாக மாறிவிடும். எங்கும் பரிபூரணமாக நிறைந்துள்ள ஏக சைதன்னியத்தை யுள்ள வாறு காணவேண்டுமாயின் எல்லாம் வல்ல ஞானாசிரியனது திருவடி மலரா லன்றி வேறொன்றாற் கூடாது—எ-று.

நிட்டை யிருதிறத்ததாம். அவை: கிரியாநிட்டை, ஞானநிட்டை யென்பன. கிரியாநிட்டை: ரேசக பூரகஞ்செய்து விருத்திகளடங்கச்செய்வது. ஞானநிட்டை: அறிபடுபொருளனைத்தையுமறியும் அறிவை நாடுவதும், அங்ஙனம் நாடு நாட்டத்தால் சமஸ்தமும் சின்மாத்திரமாக விளங்கித்தானே தானாதலுமாம். இந்த ஞானநிட்டை: சொரூபநிட்டை, சகசநிட்டையென இரண்டாம். சொரூபநிட்டை: அறிவை விளக்கிக்கொள்வது. சகசநிட்டை: அங்ஙனம் விளங்கிய விளக்கத்தால் அறிவுக்கு வெதிருத்தமாகக் காணப்படுவன அனைத்தையும் அறிவாகக் கரைத்துத் தானு மதுவாதல். அறிவை நாடும் நாட்டமொழிந்த ஏனைய நாட்டமனைத்தும் திரிசியநாட்டமாதலானும், அந்நாட்டத்துக்குத் திரிசியவாராய்ச்சி முடிவின்கண் ஒன்றுந் தோன்றாமையானும், அங்ஙனம் தோன்றாமையும் திரிசியமெனப்படுமாதலினானும், அந்தத் திரிசியமாகிய சூனியத்தை யன்றி வேறு காண்டற்கும் அறிந்தார் சொல்வதை ஏற்றற்கும் கல்வி யகங்காரந் தடுப்பதினானும், அவ்வாறான சூனியம் நிர்ச்சிந்தைக்கும் மக்களானந்தப் பெருக்கிற்கும் ஆதாரமாதலினானும், அதுவே பொருளெனக்கொண்டு நானே பிரமமெனக் கெடுவர்; ஆதலின் அவர்பற்றிய தது முறையன்றெனத் தெரிவிப்பான் வேண்டி யிங்ஙனங் கூறினாரென்க. (உகங)

அ-கை.

வேதாந்த சிரவணத்தா லாம்பயன் இனையதெனவும், அதனைத் தவிர்வதா லாம்பயன் இனையதெனவுங் கூறல்.

கேள்வியுறிற் சாந்தமதாங் கிட்டாக கலகத்தால்
கேள்வியுறில் ராகாதி கிட்டுவரே—கோள்குறியில்

தானாகும் பூரணத்தின் சத்தியமதாக்கண்டேன்
ஊனோடுந் தன்னருளை யுற்று.

(எ-நு.) உள்ளபடி சுவானுபவ நிலையினையுடையோர்பா லடுக்குமாறு அடுத்துச் சுருதியாதிகளை ஐயந் திரிபறக் கேட்குமாறு கேட்கில் ராகத்துவேஷாதிகளறுவார். அறுவதனால் சலனங்களுண்டாகாவாம். உண்டாகாததால் என்று முபசாந்த நிலையதாகும். இங்ஙனமன்றி மேற் கூறியவாறு சிரவணஞ் செய்யாவிடில், ராகத்துவேஷாதிகள் வந்தெங் கணும் வியாபிப்பர். வியாபிப்பதால் சலனங்கள் மிகும். மிகுவதால் உபசாந்தநிலை சித்தித்து முடியாது. (இங்ஙனமாவது யாதிடத்தெனின்) மதஸ்தர்கள் நிச்சயிக்குங் கொள்கைகளையும், யோகிகள் குறிக்குங் குறிகளையும் சற்றுந் தன்பால் ஏற்றலில்லாது தானே தானாக விளங்கும் பரிபூரண ஆன்ம வியாபகத்தினாதலின் இவற்றை நினைதருள் பெற்று இவ்வுலகத்தின்கண்ணே மாமிசதேகமிருக்கும்போதே பிரத்தியட்சமாகக் கண்டனன்—எ-று.

அடுக்குமா றடுத்தலாவது: மனோவாக்குக் காயங்களால் வேறுபடாமல் மகானைச் சிவசொரூபமாகக் கண்டு மிக்க பயபத்தியோடு வழிபாடியற்றல். கேட்குமாறு கேட்டல்: பிரபலநூல்களி லொன்றை முன்னர் யுத்திக்கொத்தவாறு கேட்டலும், பின்னர் மனனத்துக்கொத்தவாறு கேட்டலும், அதின் பின்னர் நிதித்தியாசனத்துக் கொத்தவாறு கேட்டுத் தெளிதலுமாம். இவ்வாறு செய்யாவிடின் பயன்படாதென்பது கருத்து. உடலிருக்கும்போதே நிரதிசயானந்த வாழ்வடைந்தே னென்பதற் குதாரணம்: சிவஞானபோதம்

"எட்டிலறி வின்றியிறை தன்னிலறி வின்றியிவ் வுடம்பினுடனே வீட்டி லுறைவானையினி வீடுபெறு மென்பது விளம்பு நிலமே" என்பதினாலும், குறள்

"இன்ப மிடையறா தீண்டு மவாவென்னுந், துன்பத்துட் டுன்பங் கெடின்" என்பதினாலும், கைவல்லிய நவநீதம்

"சித்துநா னிறைந்தோ னென்ற திடமற வாதிருந்தா, லெத்தனை யெண்ணி னாலு மேதுசெய் தாலு மென்ன, நித்திரை தெளிந்த பின்னர் நிற்கின்ற கனவைப் போல, அத்தனை யும்பொய் தானே யானந்த வடிவா னானே" என்பதினாலுங் காண்க. (உ௬௪)

அ-கை.

ஏனையவற்றைப்போல ஞானம் நம்பிக்கையன்று பிரத்தியட்சமா மெனல்.

கண்ணுங் கருத்துங் கணந்தோறுங் காண்பனவும்
நண்ணுமேற் சிற்சோதி நாம்பிழைத்தம்—கண்ணுடையார்
என்பதனைக் கண்டுணர்ந்தே னிங்ஙனே நம்புதலன்
றுன்கடைக்கண் ணாலின் றுவந்து.

(எ-று.) கண்ணுக்குங் கருத்திற்குங் கணந்தோறும் இடைவிடாமற் காணப்படுவன அனைத்தும் சுயஞ்சைதன்னியமாக விளங்குமாயின் யாம் பிழைத்தனமென ஞானக்கண்ணுடைய மகான்கள் கூறுவதை இம்மையிற்றானே யிப்போது உனது கிருபா கடாட்சத்தினால் அகமகிழ்ந்து பிரத்தியட்சமாகக் கண்டு தெளிந்தனன். ஆதலின் மற்றவற்றைப்போல ஞானம் நம்பிக்கையில் சேர்க்கப்படுவதன்று—எ-று.

ஞானதனுவானா லன்றே அனைத்தும் சிற்பிரகாசமாக விளங்குமென்பது தோன்றக் கண்ணுங் கருத்துங் கணந்தோறுங் காண்பனவும் நண்ணுமேற் சிற்சோதி யெனவும், எத்தனை யெண்ணினும் யாது கருமம் இயற்றினும் அத்தனையும் தனது சொரூபமாக விளங்கலினாலும், அங்ஙனம் விளங்கலால் சதாகாலமும் சுகசொரூபமா யிருத்தலாலும், இருபற்றி நாம்பிழைத்த மெனவும், இவ்வாறாய அனுபவம் மகான்களுக்குமேயன்றி வேறல்ல என்பதுதோன்றக் கண்ணுடையா ரென்பதனைக் கண்டுணர்ந்தே னெனவும், எனது அகம்பாவத்தால் அல்லவென்பது தோன்ற, உன் கடைக்கண்ணா லெனவும், மற்றப் பத

விகளைப்போல மறுமைக்கண் அன்றென்பதை விளக்க இங்ஙனே யெனவும், ஞானமொழிந்த ஏனையவற்றின் முயற்சிக்குப் பலன் மறுமைக்கண் வாய்க்குமென்னும் சுருதி வாக்கியத்தை நம்புதல் போல்வதன்று; இம்மைக்கண்ணே யுள்ளங்கை நெல்லிக்கனிபோன்று பிரத்தியட்சமாக அனுபவிக்கச் செய்வது ஞானமாதலால் நம்புதலன்றெனவுங் கூறினார். இதனால் மேல்வரும் ஞானபலத்தை இம்மையிற்றானே கண்டு தெளியவேண்டுமென்பதாயிற்று.

வினா: ஏன்?

விடை: மேல்வருமோ? வராதோ? என்னும் ஐயத்தை யிப்போதே யகற்றவேண்டுமென்பதுபற்றி யென்க. (௨௯)

அ-கை.

நிட்காம தவத்தா லன்றி யேனைய எத்திறத்தானும் ஞானம் வாய்க்காதெனல்.

எண்ணளவை யானுமெனை யேயுண்மை யென்றுணரக்
கண்ணளித்த சீமானே காரணனே—நுண்ணுணர்வோ
ராயினுநிட் காமத் தரியதவத் தீதடைவர்
தாயெனவுற் றான்குருவைச் சார்ந்து.

(எ-து.) வேதங்களால் கணிக்கப்பெற்ற அஷ்டவிதப் பிரமாணத்தினும் சகசீவ பரமென்பவற்றுள் உண்மைப் பொருளாவது யானே யென்று ஐயந்திரிபறத் தெளிய எனக்கு ஞானக்கண்ணளித்து முத்தியுலகிற்குச் சீமானே! சமஸ்தத்திற்குங் காரணமாகின்ற எனது பரமாசிரியரே! அதி சூக்கும அறிவினராயினும் அனந்த சென்மத்தியற்றிய நிட்காமதவத்தா லன்றி இந்த யதார்த்த ஞானத்தை யடையார். அவ்வாறு அரிய தவத்தா லவர் இதனை யடைவதும் காருண்ணியத்தால் தாய்போல் கிடைப்பவனாகிய ஞானாசிரியனைச் சரணடைந்து—எ-று.

பிரமாண மெட்டாவன: பிரத்தியட்சம்-அனுமானம்-உவமை-சத்தம்-அருத்தாபத்தி-அபாவம்-ஐதீகம்-சம்பவமென்பன. அவை உள்ளபடி காண்டல் பிரத்தியட்சம். புகையைக் கண்டு நெருப்புண்டெனல் அனுமானம். மரை பசுப்போலென லுவமை. பெரியோர் வாய்ச்சொல் சத்தம். பகலுண்ணான் பருத்திருப்பதால் இரவிற் கரந்துண்பானென்றுணர்தல் அருத்தாபத்தி. முன் பின் இடை யென்று மில்லையெனல் அபாவம். இம்மரத்தின்கண் பேய் உண்டெனல் ஐதீகம். ஆயிரத்தில் நூறுண்டெனல் சம்பவம். விடயகதம்-ஞானகத மென்னும் பிரத்தியட்ச மிரண்டினுள் விடயகதம்: அறிவுக்கு வெதிருத்தமாகக் காணப்படுவன வனைத்தும். இவை யன்னியமாகக் காணப்படினும் ஆராய்வுழி அறிவையன்றித் தமக்கெனச் சொரூபமொன் றில்லாமையானும், இவை தோற்றுவதும் மறைவதும் அறிவிலாதலானும், அவ்வறிவே நானாதலானும், அவ் விடயகத மென்னையன்றி யில்லாமையானும் யானே யுண்மைப் பொருளாயிற்று. ஞானகதம்: ஞானனுபவத்தில் நவ நவமாகக் காணப்படுவனவாகிய விஞ்ஞைதக் காட்சிக ளனைத்தும். இவை யுன்னியமாகக் காணப்படினுந் தாமே நிஸ்தரங்கம்போல முடியுமாதலானும், அங்ஙனம் முடிவது சொப்பிரகாச மேலீட்டி லாதலானும், அம்மேலீ டடங்குவது ஆனந்தாதீதத்தி லாதலானும், அவ்வானந்தாதீதந் தொடுக்கஞ் சுபாவத்தி லாதலானும், அச் சுபாவம் நானாதலானும், என்னையன்றிச் சுபாவம் வேறில்லாமையானும், இங்ஙனமாய ஞானகதப் பிரத்தியட்சம் எனக்கு முன் பின் இல்லாமையானும் யானே யுண்மைப்பொருளாயிற்று. அனுமானம் இருவகைப்படும். அவை: தோற்றவனுமானம்-யதார்த்தவனுமானமென்பன. தோற்றவனுமானம்: வெண்மாசு, நீராவிபோல்வன. யதார்த்தவனுமானம்: புகை, மணம் போல்வன. வெண்மாசும், நீராவியுங் கண்டு இவை புகையாமெனக் கருதி அக்கினி யிருக்குமெனக் கொள்ளுமாறுபோன்று தனக்கெனச் சொரூபமொன் றில்லாத உலகை யுளதாகக் கருதிக் கர்த்தா இருக்க வேண்டுமெனக் கோடல் தோற்றவனுமானம்.

காரியமாகிய புகையையும் மணம் வீசுதலையுங் கண்டு காரணமாகிய நெருப்பும் பூங்காவனமு முண்டெனக் கொள்ளின், உண்மையாயிருக்குமாறு போன்று காரியமாகிய சுகதுக்க போகத்தைக் கண்டு காரணமாகிய போகி யுண்டெனக்கொள்ளின் உண்மையாயிருத்தல் யதார்த்தவனுமானம். இவ் யதார்த்த வனுமானம்: முறை, முரண் என இருவகைப்படும். அவற்றுள் முறையாவது: அக்கினி யுண்டாயின் புகையுண்டெனவும், அக்கினி யின்றாயின் புகை யின்றெனவும் கொள்ளுமாறுபோன்று சிதாபாச னுண்டாயின் போகமும், இன்றாயின் அஃது இன்மையு மெனக்கோடல். முரணாவது: புகையுள்ளபோது மில்லாதபோதும் அக்கினி யிருக்குமாறுபோன்று போகம் உள்ளபோது மில்லாதபோதும் ஆன்மா இருக்குமெனக் கோடல். இங்ஙனம் கூறிய இவ்விருவகை யனுமானமு மெனக்கு முன் பின் இல்லாமையானும், சைதன்னிய வடிவமாகிய நானே யென்று மிருத்தலானும் யானே யுண்மைப் பொருளாயிற்று. உவமானம்: அலைதாடியின்றிய பசுவைப் போல மரை இருக்குமெனக் கூறுமாறுபோன்று சடமன்றிய நித்தமான ஆகாயம்போல நிர்விகார சுத்தசைதன்னிய மிருக்குமெனச் சான்றோரால் கூறப்படுவது. மரை இன்னதெனக் காணா இத்தகைத்தாய பசுவை உவமித்தாற்போல ஆன்ம சைதன்னியமாகிய தான் இந்நிலையதெனத் தன்னைக்காணா இத்திறத்ததாய ஆகாயத்தை யுவமை கூறினதே யன்றி வேறு நோக்கன்றாமையானும், இவ் வுவமைக்கு முன்னும் பின்னும் யான் இருத்தலானும் யானே யுண்மைப்பொருளாயிற்று. சத்தப்பிரமாணம்: பெரியோர் வாய்ச்சொல்லாகிய சுருதி. அஃது அற்பசுருதி, பிரபலசுருதி யெனவிரண்டாம். அவற்றுள் அற்பசுருதி: தானல்லாததைத் தானெனக்கோடலைத் தடுவதல்போலக் காட்டி விலக்கக் கன்மம், பக்தி யென்னு மிரண்டையும் ஒன்றன்பின் ஒன்றாகப் பக்குவத்திற்கு இயையப் பிரதிவாதித்தல். பிரபலசுருதி: தன்னைத் தானென உள்ளவாறு காணக்கோடலை யாதோர் விக்கினமின்றி நிறைவேற்றற்கேற்ற ஞானவிசாரணைத்திறத்தை ஞாயத்தால்

பிரதிவாதித்தல். இங்ஙனமாய இவ்விருதிறத்ததுஞ் சத்தமாயினும் அச் சத்தத்தால் சத்துக்கள் தமது அபிப்பிராயங்களைப் பிறர்க்கு விளக்க ஆதலை வாச்சியப் பிரயோகமாகவும், செய்யுட் பிரயோகமாகவும் வகுத்தனர். இந்நிலையதாய சத்தப்பிரமாண மென்றால் அறியப்படுதலினானும், எவ்வினை புணர்த்தற்குத் தக்க துணைக்கருவி யாயினும் எனக்கு முன் பின் இல்லாமையானும் யானே யுண்மைப்பொருளாயிற்று. அருத்தாபத்தி: தின்றிய உடலாளி யென்பான் உடலின் பூரிப்பு இரவிற் கரந்துண்டதனைக் குறிப்பிக்க நின்றாற் போலச் சமஸ்தமும் என்பால் எற்றிலை யென்பான் உணர்வின் பூரிப்பு இவனறியாமல் இவன் அவித்தையிற் கரந்தேற்பதைக் குறிப்பிக்க நிற்பது. இங்ஙனங் கொள்ளுங் கொள்கை யெனது தற்பிரமாதலினானும், என்னையன்றி யில்லாமையானும் யானே யுண்மைப் பொருளாயிற்று. அபாவம்: முன் பின் இடை யென்று மில்லையெனச் சசவிஷாண வந்தியாபுத்திர ககனாரவிந்தத்தைப் பிரதிவாதிப்பதுபோல அறிவுக்கு விருத்தமாகக்காணப்படுஞ் சகலபாமனைத்தும் இந்நான்கு காலத்தினும் இல்லையெனப் பிரதிவாதிப்பது. இந்நெறித்தாய அபாவம் அறிவே வடிவாயுள்ள எனக்கு முன்பின் னில்லாமையானும், என்னையன்றி வேறல்லாமையானும், யானே யுண்மைப் பொருளாயிற்று. ஐதீகம், இம்மரத்தின்கண் பேயுளது என்றாற்போல இவ்வசத்தின்கண் சத்துளதெனச் சாதிப்பது. இத்தன்மைத்தாய ஐதிகம் சத்துவடிவாயுள்ள என்னையன்றி வேறில்லாமையானும் எனக்கு முன்பின் இல்லாமையானும் யானே உண்மைப் பொருளாயிற்று. சம்பவம்: ஆயிரத்தில் நூறுண்டு என்றாற்போலப் பிரமத்தில் கூடஸ்தனுண்டென்றும், நூறுமயத்தையன்றி யாயிரத்திற்குப் பொருள் வேறின்றாய வாறுபோலக் கூடஸ்த மயத்தையன்றிப் பிரமத்திற்குப் பொருள் வேறின்றென்றும் வாதித்தல். இவ்வழித்தாய சம்பவம் என்றால் கணிக்கப் படுவதினானும், என்னையன்றி வேறல்லாமையானும், எனக்கு முன்பின் இல்லாமையானும் யானே யுண்மைப்பொருளாயிற்று. இதனால் யாவராயினுங் குருவருளால் தன்னைத் தானறியவேண்டு மென்பதாயிற்று. (உ௩௯)

அ-௯௩.

இந்நூலைக் கேட்குமாறு கேட்கில் உண்டாம் பயன் இதுவே யெனல்.

கற்பவற்றைக் கற்றுக் கடை இந்நூல் முன்னுகராம்
கற்பனையில் லாக்குருமுன் கற்பரேல்—அற்பமும்வே
றின்றிச் சுகித்திருப்ப ரேகாந்த னென்றுமவ
னன்றென்று மாமென்று மாய்.

(எ-து.) கற்கத்தகும் ஆரியம் திராவிடம் முதலிய பாஷைகளையும், கணிதம், ஆயுள், ஜோதிஷம், சங்கீதம், ஆயுதப்பயிற்சி முதலிய விஷயங்களையும் முறைமுறைக் கற்றுணர்ந்த பின்னர் ஆத்துமார்த்தத்திற்குரிய நூல் இதுவாகலின் இந்நூலைச் சுருதி யுக்தி யநுபவத்துடனே சற்முறையே தனித்தனி முன்னுகராம் கற்பித ரகிதமான ஞாநாசிரியர் முன்னிலையில் ஒருவன் கற்றுணர்ந்து தெளிய வல்லனாயின் அவன் சிறிதும் தனக்கன்னியமென்ப தின்றி நிரதிசயானந்த வாழ்வில் சுகித்திருப்பன். ஏகம் அத்விதமெனத் தன்பால் கற்பிக்காமல் சமஸ்தமுந் தானென்றெனவும், தானே சமஸ்தமு மாமெனவும் விளக்குவதாம்—எ-று.

சுருதி பூர்வகமாகவும், யுக்தி பூர்வகமாகவும், அநுபவ பூர்வகமாகவு மிங்ஙனம் முன்னுகராம் விசாரித்துத் தெளியவேண்டு மாதலின் முன்னுகரங் கற்றுணரி லெனவும், இவ்வாறு தானே தெளியக் கூடாததுபற்றிக் கற்பனையில் லாக்குருமுன் எனவுங் கூறினார். இதனால் இந்நூலை விசாரித்துத் தெளிதலா லாம்பய னிதுவேயென்பதாயிற்று.

அ-௯௪.

இந்நூற் புகழ்மை யிதுவே யெனல்.

தானல் லவற்றைத் தனதுருவென் றென்றுமுயிர்
தானின்ன தென்றுணர்ந்து தானுறுதற்—கானவகை

செப்புவதா லிந்நூற் றிறந்தெரிந்தார் துக்கமுறார்
இப்புதுமை போலெங் கிலே.

(எ-று.) தானல்லாத வடிவ மனைத்தையும் தனது யதார்த்த வடிவமெனக் கருதி யுழலுஞ் சீவர்களில் சிறந்த மக்களுயிர் தானென்பது இனையதெனெ உள்ளவாறு கண்டுணர்ந்து கற்பனைவடிவங்கள் கழன்று தானேதானாதற் கேற்றவகை யனைத்தையும் இந்நூல் பிரதிவாதிப்பதால் இதில் கூறப்படும் ஞானதிறத்தையெல்லாம் சந்தேக விபரீத மற வாசித்துத் தெளிந்த உத்தமர்கள் சனன மரண துக்கமடையார். ஆதலின் இப் புதுமையைப்போல் புதுமை யெங்குளது? எங்கனும் இல்லை—எ-று.

உயிரெனப் பொதுப்படக் கூறினுரேனும் தானென்பதைச் சிந்தித்துத் தெளியற்பாலது மக்களுயிராதலால் உயிரை மக்களுயிரென்றும். இந்நூல் திறமாவது: யாதினுல் துக்கம் விளைதற்பாலதோ அதனை விளக்குவித்தல். அதாவது எவ்வுயிர்களும் பிரக்ஞா சொரூபம் ஆதலால் அதனுக்கு வெதிருத்தமாகக் காணப்படுவன அனைத்தையும் பிரக்ஞாசொரூபமாக ஞாயத்தால் விளக்கல். இதனுல் இந்நூல் துக்கமறுக்கத்தக்க மகிமையுடைய தென்பதாயிற்று. (உ௯அ)

அ-ரை.

இங்ஙன மையந் திரிபறுத் தாண்ட குருநாதனை வியந்து வாழ்த்தல்.

அறிவே திருக்கிங் கறிபொருளே மாயை
அறிவுக் கயலன் றறிவன்—றறிபொருடான்
என்றுணர்த்தி யாண்ட விறைவன் கழல்வாழ்க!
என்றனைப்போல் வார்க்கருள விங்கு.

(எ று.) முன்னர் எம்மதச் சம்மதங்களும் தலைசாயச் சைதன்னியமே திருக்கெனவும், அச் சைதன்னியத்தால் அறியப்படுவனவா

கிய சகல கற்பிதங்களுமே திரிசிய மெனவுங் கூறிப் பின்னர் அத்திருக்கு திரிசியம் இரண்டன்று ஒன்றேயெனச் சுருதியாதிகட்கு ஒக்கக் காட்டுவான் வேண்டித் திரிசியம் திருக்குவுக்கு மட்கடம் போன்று அபேதமா யிருத்தலின் அன்னியமு மன்று. கடபேதங்கள் மண்ணாலாயினும் அவை மண்வடிவ மாகாவாறுபோன்று அத்திரிசிய பேதங்கள் திருக்கினாலாயினும் அவை திருக்குவடிவ மாகா ஆகலின் உன்னியமு மன்றெனத் தெளிவுபெற எனக்குத் தெரிவித்து ஆட்கொண்ட குருநாதனது திருவடிகள் பல்லாண்டு பல்லாண்டு வாழ்க்கடவது ! இவ்வுலகின்கண் என்போன்று வரும் அடியார்களுக் கனுக்கிரகிப் பான் வேண்டி—எ-று.

அன்னியமெனில் துவிதமும், உன்னியமெனில் விசிட்டாத்துவிதமும் ஆதலின் அறிவுக் கயலன் றறியன் றறிபொருடா னென்றார்.()

அ-லக.

இந்தக் கிரந்தகர்த்தா தனக்கு நாமமிட்டாரையும், அதனை விளக்கினவரையும் வியந்து புகழ்தல்.

சச்சிதா னந்தமெனத் தாய்தந் தையரிட்டார்
அச்சிதனை யேற்குமெனு மாரணங்கள்—மெச்சுகுரு
காட்டினா னென்னிடத்திற் கண்டே னதுவாக
நாட்டுமிதி லார்பெரியர் நாடு.

(எ-து.) சச்சிதானந்தமென்று தாய் தந்தையர் எனக்குப் பெயரிட்டார்கள். இத்தன்மையானபெயரை ஆன்மா ஏற்குமென்று வேதாகமங்கள் முறையிடும். இந் நாமத்திற்குரிய இலக்கணங்களை மகான்களால் மெச்சத்தக்க எனதுஞானாசிரியன் என்னிடத்திலிருக்கக் காட்டினன். அங்ஙனங் காட்டியதை உள்ளவாறு யான் அதுவாகும்படி கண்டனன். ஆதலின் இங்ஙனம் நாட்டிய இதில் யார்சிறந்தவராவார் நீயே யிதனை நாடுதி—எ-று. (உ௪௦)

திருச்சிற்றம்பலம்.

திருக்குதிரிசியவிவேகம் மூலமும் உரையும்

முற்றிற்று.